

# டிஜிட்டல் குடியுரிமை

## கருவிக்கோவை



# டிஜிட்டல் குடியுரிமை
## கருவிக்கோவை

## பதிப்பு

முதலாவது பிரசுரிப்பு: மார்ச் 2020

பிரசுரித்தவர்கள்:
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவின் **(NCEASL)**
மைனர்மட்டர்ஸினால் **(MinorMatters)** பிரசுரிக்கப்பட்டது.

இணையம்: **www.minormatters.org**

நிதி உதவி:
இலங்கை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்
http://www.lk.undp.org/

நூலாசிரியர்: நாலக்க குணவர்தன

செயல் திட்ட ஒருங்கிணைப்பு:

யாமினி ரவீந்திரன், சட்ட மற்றும் ஆலோசனை பணிப்பாளர்
ஷலோமி டானியல், சட்ட மற்றும் ஆலோசனை ஒருங்கிணைப்பாளர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு
அக்ஷனா பலிகவதன, ஊடக திட்டமிடல் அலுவலகர், சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழு

அட்டைப்பட வடிவமைப்பு: சஞ்சயன் அரியாதுரை

பக்க ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்பு: சேனல் ஜேசுடியன்

Commons Attribution-ShareAlike 3.0 IGO (CC-BY-SA 3.0 IGO) license
எனும் திறந்த அனுமதி மூலமாக இப்பிரசுரிப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.
http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/

பொறுப்புத் துறப்பு:
இப் பிரசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மற்றும் கருத்து என்பவை பங்களிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியரால் வெளிப்படுத்தபட்டவை. அது இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசே'க ஐக்கியத்துவம் கூட்டணியினுடையதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு இவ்வமைப்பு பொறுப்புக்கூறாது.

## ஒப்புகை

முன்னர் சிலோன் மறுபிரவேச கூட்டுறவு என அழைக்கப்பட்ட இலங்கை தேசிய சுவிசே'க ஐக்கியத்துவம் 1952 இல் உருவாக்கப்பட்டது.

NCEASL இன் சமய சுதந்திரம் மற்றும் சமூகநீதி ஆணைக்குழுவின் குறிக்கோளாக அமைவது, ஆலோசனை வழங்கல் மற்றும் பரப்புரை, ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தல், பயிற்சி அளித்தல் கல்வி ஊட்டல் என்பவற்றின் மூலம் இலங்கையிலுள்ள அனைவரினதும் மத சுதந்திரத்தினை மேம்படுத்துதல் ஆகும். மேலதிகமாக அடிமட்ட சமூகத்திடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் அரச திட்டமிடல் கருத்தாக்கத்தில் ஈடுபடுதல் மூலமும் மறுசீரமைப்பு மற்றும் இடைக்கால நீதி முன்னெடுப்புக்களில்; இவ் ஆணைக்குழு ஈடுபடுகிறது.

இப் பிரசுரத்தின் ஒரு பகுதியானது இலங்கையில், விசேடமாக இளைஞர்களிடையே பொறுப்பு உடையதும் மற்றும் நெறிமுறையான டிஜிட்டல் குடிமகன்களை வளர்ப்பதற்கு தேவையான பயிற்சி மற்றும் விழிப்புணர்வை கட்டியெழுப்பும் NCEASL இன் முன்னெடுப்புகளை கொண்டுள்ளது.

NCEASL ஆனது, தமது நேரத்தையும் நிபுணத்துவத்தையும் அற்பணித்த இப் பிரசுரத்தின் பல்வேறுபட்ட கூறுகளை அமுலாக்கம் செய்வதற்கு தீவிரமாக பங்களிப்பு செய்த பின்வரும் நபர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. இக்கருவி தொகுப்பினை வரையும் வேலை குழுவினை தலைமை தாங்கி, டிஜிட்டல் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு எனும் தலையங்கத்தில் விசேடமாக பங்களிப்பு செய்ததற்காகவும் வெவ்வேறு அத்தியாயங்களை ஒப்பிட்டு தொகுப்பித்து மற்றும் இச்செயற்திட்டத்தினை ஒட்டுமொத்தமாக மேற்பார்வை செய்து வழிநடாத்தியமைக்காக நாலக்க குணவர்தனவிற்கு NCEASL நன்றிக்கடன்பட்டுள்ளது. டிஜிட்டல் உரிமைகள் மற்றும் கடமைகள், இணையத்தள மிரட்டலில் இருந்து பாதுகாத்தல் மற்றும் அவற்றை தடுத்தல், டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் ஈடுபாடு என்பவற்றின் பல்வேறு பகுதிகளை உருவாக்கி பங்களிப்பு செய்த வேலைக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களான சரண்யா சேகரம், அமாலினி டி சாய்ரா, பூர்ணிமா மீகம்மான மற்றும் பெனிஸ்லஸ் து'ான் என்பவர்களை பெரிதும் NCEASL பாராட்டுகிறது.

இம்முயர்ச்சிக்கு அனுசரணை வழங்கிய இலங்கை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துக்கு(UNDP) NCEASL தனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றது

தனது விலை மதிக்கமுடியாத ஆதரவு மற்றும் வழிகாட்டலை வழங்கிய NCEASL இன் பொது செயலாளரான தேசமானிய கொட்.்.ப்ரீ யோகராஜாவுக்கும், யாமினி ரவீந்திரன் (சட்டத்தரணி), சலோமி டேனியல் (சட்டத்தரணி), அக்ீனா பலிக வதன மற்றும் மைக் கேப்ரியல் என்பவர்களை உள்ளடக்கிய NCEASL இன் ஒருங்கிணைப்பு குழுவிற்கும் விசேட நன்றிகளை தெரிவிக்கின்றது.

இலங்கையின் டிஜிட்டல் மாற்றமானது பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இது 1980களில் தனிப்பட்ட கணனிகள், அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் உள்நுழைந்த காலங்களில் ஆரம்பமாகியது. இது கையடக்கத் தொலைபேசிகள் அறிமுகமாகிய 1989 இன் பின்னரும் வணிக இணைய சேவைகள் அறிமுகமாகிய 1995 இன் பின்னரும் தனது வேகத்தை துரிதப்படுத்தியது. தெற்காசியாவிலேயே தொலைத் தொடர்புத் துறையை தாராளமயப்படுத்திய முதலாவது நாடாக இலங்கை உள்ளது.

இன்று மிக அதிகமாக பயன்படுத்தப்படும் டிஜிட்டல் சாதனமாக திறன்பேசி (smartphone) உள்ளது. ஆகக் குறைந்தது 5 பில்லியன் அலகுகளாவது பயன்படுத்தப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. கல்வி மற்றும் வணிக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மடிக்கணினிகள், மேசைக் கணணிகள் மற்றும் கணனி டேப்லெட்டுகளின் எண்ணிக்கைகள் அதிகரித்து வருகின்றன. 2018 இன் ஆரம்பங்களில் 21 மில்லியன் இலங்கை மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தொடர்ச்சியாக இணையத்தை பாவித்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் (80% வீதத்துக்கு மேற்பட்டவர்கள்) கைபேசியின் மூலமாகவும் முதன்மையாக திறன்பேசி மூலமாகவும் (smartphones) வலையமைப்பில் இணைகின்றனர்.[1]

தற்போது சமூகம் மிகவும் சிக்கலான மற்றும் கூர்ந்து கவனிக்க வேண்டிய பிந்தைய இணைப்பு (post-connectivity) சவால்களின் தொகுப்புகளை எதிர்நோக்குகிறது. இது டிஜிட்டல் கல்வி அறிவினை மேம்படுத்தல்: உள்நாட்டுக்கு பொருத்தமான உள்ளடக்கங்களை அதிகரித்தல்: வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் பயன்பாடுகளில் பொருத்தமான தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல்: டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் வலையமைப்பின் பயன்பாடுகளில் பால் வேற்றுமைகளை சுட்டிக் காட்டுதல்: தனிநபர்களின் தனியுரிமைகளை பாதுகாப்பதுடன் ஒன்லைன் தகவல் பாதுகாப்பு: தனிநபர் மட்டத்திலும் நிறுவனம் மட்டத்திலும் சைபர் பாதுகாப்பினை அதிகரித்தல்: மின் கண்காணிப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.[2]

அரசாங்கமும் சமூகமும் இவற்றுக்கும் மற்றும் ஏனைய சவால்களுக்கும் எவ்வாறு பதில் அளிக்கின்றனர் என்பதைப் பொறுத்து எவ்வாறான தகவல் சமூகத்தில் நாங்கள் வளர்கிறோம் என்பதை தீர்மானிக்கலாம். திட்டங்களை உருவாக்குபவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் துறை தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் என்பவர்களுக்கு பலவகையான பிரகாசமான தெரிவுகளை செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

டிஜிட்டல் சந்தர்ப்பங்களை அதிகப்படுத்துவதற்கும் டிஜிட்டல் மாற்றங்களால் ஏற்படும் பாதகமான விளைவுகளை குறைப்பதற்குமான ஒரு முக்கிய தந்திரோபாயமாக டிஜிட்டல் குடியுரிமையை மேம்படுத்தல் அமைகிறது. ஒரு "டிஜிட்டல் குடிமகன்" என்பது சமூக அரசியல் மற்றும் அரசாங்கத்தில் ஈடுபடுவதற்கு தகவலையும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் ஒருவரை குறிக்கின்றது. டிஜிட்டல் குடியுரிமை என்பது தொழில் நுட்ப பயன்பாட்டின் போது பொருத்தமான கடமை உணர்வுடன் கூடிய நடத்தையுடனான நியமம் என வரைவிலக்கணப்படுத்தலாம்.[3]

அத்துடன் ஆய்வாளர்களாலும் அரசியல் பிரச்சாரங்களின் போதும் பெரிய தகவல்களை நெறி முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதன் மூலமும் (அல்லது சட்ட முறையற்ற விதத்தில்), தொழிநுட்ப ஜாம்பவான்கள் தனியுரிமை மீறப்படுதலை தொடர்ந்தும் இலங்கையிலும் சுற்றியுள்ள உலகிலும் டிஜிட்டல் இடைவெளியானது அதிகரித்துவரும் அச்சுறுத்தல்களுக்கும் கண்காணிப்புக்கும் உள்ளாகியுள்ளது. அதிலும் குறிப்பாக இலங்கை, சிறுபான்மையினருக்கு எதிரான நிஜவுலக கிளர்ச்சிகள் மற்றும் வெறுக்கும் குழுக்கள் உருவாகுவதற்கு காரணமான சமூக ஊடகத்தினால் உருவாக்கப்படும் சிறுபான்மையினருக்கு எதிரான உணர்ச்சிகளை தூண்டுவதற்கு பயன்படும் உணர்வுகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் கையாண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயத்தை மேற்கோள் காட்டி இப்பிரசுரமானது சிறந்த, புத்தி சாதுரியமான மற்றும் மேலும் நெறிமுறையான ஒன்லைன் தெரிவுகளை செய்வதற்கு இளம் சமுதாயத்தினரை ஊக்குவித்து வலுப்படுத்துவதன் மூலம் இவ்வாறான வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களை அடையாளப்படுத்துவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. இது அவர்களின் டிஜிட்டல் வலை தளத்தில் சுதந்திரமாகவும் செயற்திறனுடனும் ஈடுபடுவதற்கான உரிமையை வலியுறுத்துவதுடன் அதேநேரத்தில் சமுதாயத்தின் மீதுள்ள தனிநபர்களின் பொறுப்புணர்வையும் வலியுறுத்துகின்றது. இது 18 தொடக்கம் 30 வரையான வயதுடைய வாசகர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையில் இளம் சமுதாயத்தினரிடையே சமூக பொறுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அவர்களின் எதிர்கால கண்டுபிடிப்புகளை கருத்தில் கொள்ளும் அவ்வகையான இளம் சமூகத்தினருடன் ஈடுபடும் தொழில் செய்யும் எவரேனும் ஒருவருக்கு இது ஒரு விலை மதிக்க முடியாத கருவியாக திகழும்.

[1] Telecommunication Regulatory Commission of Sri Lanka, Statics as of September 2019: http://www.trc.gov.lk/images/pdf/Stats_Sep2019.pdf
[2] Digital Transformation in Sri Lanka: Opportunities and Challenges in Pursuit of Liberal Policies. By Nalaka Gunawardene. Friedrich Naumann Foundation (FNF) for Freedom, Sri Lanka. 2014. https://goo.gl/J8KpCL
[3] For a detailed discussion, see: http://www.digitalcitizenship.net/

# உள்ளடக்கம்


டிஜிட்டல் குடியுரிமை — அறிமுகம் ... vii

டிஜிட்டல் குடியுரிமை கருவி பற்றிய விளக்கம் ... xi

டிஜிட்டல் குடியுரிமை கருவி — தொகுப்பு செயல்முறை ... xiii

பகுதி 1 — டிஜிட்டல் உரிமைகளும் கடமைகளும் ... 1

பகுதி 2 — டிஜிட்டல் தொடர்பாடல் ... 37

பகுதி 3 — டிஜிட்டல் பாதுகாப்பினை மேம்படுத்தல் ... 65

பகுதி 4 — டிஜிட்டல் அவதானத்தை ஊக்கப்படுத்தல் ... 89

பகுதி 5 — டிஜிட்டல் நல்வாழ்வை வளர்த்தல் ... 115

பகுதி 6 — டிஜிட்டல் அறிவினை அதிகரித்தல் ... 135

பகுதி 7 — டிஜிட்டல் செயல் முனைவு ... 157




## டிஜிட்டல் குடியுரிமை: அறிமுகம்

நாம் தற்போது டிஜிட்டல் மாற்றத்தின் மத்தியில் உள்ளோம். அதாவது அன்றாட வாழ்வில், தொழிலில், ஓய்வு நேரங்களில், வியாபாரங்களில் மற்றும் அரசியல் செயற்பாடுகள் என்பவற்றின் பல்வேறு பகுதிகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்துள்ளோம். எமது தனிப்பட்ட மற்றும் பொது செயற்பாடுகள் டிஜிட்டல் கருவிகள் மூலமும் வலைத்தளங்களின் மூலமும் கொண்டு நடத்துவது அதிகரித்த வண்ணம் உள்ளது.

இது பல புதிய வாய்ப்புகளை உருவாக்குவதுடன் பல புதிய அச்சுறுத்தல்களையும் கொண்டு வந்துள்ளது- உதாரணமாக தனியுரிமை மீறுதல், மின் கண்காணிப்பு, ஒன்லைன் துன்புறுத்தல் போன்றவை. டிஜிட்டல் குடியுரிமையானது இப்புதிய யதார்த்தத்தை சமாளித்து பாதகமான விளைவுகளைக் குறைத்து உகந்த சிறந்த பயன்களை அனைவரும் பெற்றுக்கொள்வதற்கான அணுகுமுறையாக காணப்படுகிறது. டிஜிட்டல் குடியுரிமையின் சாராம்சமானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் (ICTs, இதுவே டிஜிட்டல் சாதனம் மற்றும் சேவைகளுக்கான சொல்லாக உள்ளது) பாவனையின் போது தனியார் மற்றும் சமூக நடத்தைகளில் கடமையுணர்வுடன் பங்கேற்பதனை உள்ளடக்கியுள்ளது.

பொதுவாகப் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் குடியுரிமையின் ஒரு வரைவிலக்கணம் "தொழில்நுட்ப பாவனையின் போதான பொருத்தமான நெறிமுறையான கடமை உணர்வுடன் கூடிய நடத்தை" என்பதை உள்ளடக்கியுள்ளது.4

இது டிஜிட்டல் குடியுரிமை என்றோ அல்லது டிஜிட்டல் ஆரோக்கியம் என்றோ அல்லது டிஜிட்டல் நெறிமுறை என்றோ எவ்வாறு அழைக்கப்பட்டாலும் இதன் முக்கிய கருப்பொருள் எல்லாவற்றுக்கும் பொதுவானதே: அது நாம் டிஜிட்டல் கருவிகளை பாவிக்கும் பொழுது எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதும் ஒன்லைனில் மற்றவர்களுடன் எவ்வாறு உறவாடுகிறோம் என்பதையே குறிக்கின்றது.

முதன்முதலில் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் படிப்படியாக உலகளாவிய வலை (World Wide Web) உருவாகிய 1990 களின் நடு காலப்பகுதியிலேயே டிஜிட்டல் குடியுரிமை என்ற யோசனை உருவாகியது. இது ஆரம்பத்தில் ஒன்று திரண்ட குடிமகன் நடத்தை மூலமாக பொது நன்மைக்காக வலையமைப்பை பயன்படுத்துதல் என விவரிக்கப்பட்டது.

4 For a detailed discussion, see: http://www.digitalcitizenship.net/

காலப்போக்கில் டிஜிட்டல் குடியுரிமை தொடர்பான எமது விளக்கம் விரிவாக்கப்பட்டு மேலும் அது அத்தியாவசியமாகிறது. தற்போது இது பின்வருவன போன்ற முக்கிய கருப்பொருட்களை உள்ளடக்கியுள்ளது.

- தனிப்பட்டவர்கள் டிஜிட்டல் உபகரணங்களை பாவிக்கும் பொழுது தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ளல்
- ஒன்லைனில் பாவனையாளர்கள் தமது செயற்பாடுகளுக்கு தனிப்பட்ட பொறுப்புடைமை ஏற்றுக்கொள்ளல்
- இணையத்தை பாதுகாத்து பராமரிப்பதுடன் அது அனைவருக்கும் திறந்து வைத்தல்˙அத்துடன்
- இவ் இலக்குகளை அடைவதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளை வழிகாட்டி அளவுகோலாக பயன்படுத்துதல்.

டிஜிட்டல் குடியுரிமையை டிஜிட்டல் மற்றும் ஒன்லைன் பிரிவுகளில் இயங்கும் குடியுரிமையை விரிவுபடுத்துவதற்கான எண்ணமாகவும் நோக்கலாம்.

சுறுசுறுப்பான குடியுரிமை என்பது மக்கள் தமது உள்ளூர் சமூகங்களில் எல்லா மட்டங்களிலும், கிராமங்களில் இருந்து நகரங்களுக்கும் நகரங்களிலிருந்து தேசிய மட்ட நடவடிக்கைகளிலும் பொது நன்மைக்காக ஈடுபடுதலைக் குறிக்கும். இது வீதியை சுத்தம் செய்யும் ஒரு சிறு சிரமதானமாகவோ அல்லது ஜனநாயக பகுதிகளையும் பங்களிப்புகளையும் இளம் மக்களுக்கு கொண்டுசெல்லும் ஒரு கற்பித்தல் முறையாகவோ இருக்கலாம்.

இயங்கும் இயங்கும் குடியுரிமையானது அரசியல், சமூக, கலாசார மற்றும் தனியார் நன்மைகளை பெற்றுத் தருகின்றது. இயங்கும் குடியிருப்பின் பல்வேறு பண்புகள் சிறந்த டிஜிட்டல் குடியுரிமையின் பண்புகளுடன் சமமாக பிரயோகிக்கப்படக்கூடியவை. தமது எல்லா செயல்பாடுகளுக்கும் பொறுப்புடமையுடனும் நெறி முறையுடன் இருப்பதற்குமான தேவையே இயங்கும் இயங்கும் குடியுரிமைக்கு டிஜிட்டல் குடியிருக்கும் உள்ள பொதுவான பண்பாகும்.

டிஜிட்டல் குடியுரிமை என்பது டிஜிட்டல் கல்வியுடன் தொடர்புபட்டிருந்தாலும் அவை இரண்டும் வெவ்வேறு கருப்பொருட்கள் ஆகும் . அவற்றின் வேறுபாட்டை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

டிஜிட்டல் கல்வியறிவு- “தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தை பயன்படுத்தி உள்ளீடுகளை தேடுதல், மதிப்பீடு செய்தல், பயன்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் உருவாக்குதல்” என வரைவிலக்கணப்படுத்தலாம். இவை பெரும்பாலும் திறன் மற்றும் தேர்ச்சியை நோக்குகின்றன. இவை நிச்சயமாக முக்கியமானதும் அவசியமானதும்தான் எனினும் இவை ஒரு பலமான நெறிமுறையான அமைப்பிலும் தனிப்பட்ட பொறுப்புடைமை எண்ணத்திலும் வடிவமைக்கப்பட வேண்டும்.

நாம் ஒரு சாதாரண உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். டிஜிட்டல் அறிவுடைய ஒரு நபர் சமூக ஊடகத்தில் எவ்வாறு ஒரு விடயம் தொடர்பாக கருத்து தெரிவிப்பது (commenting), அதை அனுப்புவது (posting) மற்றும் அதைப் பகிர்ந்தளிப்பது (sharing) என அறிந்திருப்பார். எனினும் அவள் வெறுக்கத்தக்க பேச்சு அல்லது பிழையான தகவல் என்பவற்றை உள்ளடக்கிய விமர்சனமற்ற ஒரு விடயத்தை பகிர்வதால் ஏற்படக்கூடிய பாரிய விளைவுகளை பற்றி முற்றுமுழுதாக அறிந்திருக்கமாட்டாள் (அல்லது கவலைப்படமாட்டாள்).

மற்றுமொரு சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் திறன் கொண்ட ஒருவர் உண்மையில் வெறுப்பை ஏற்படுத்தத்தக்க அல்லது சோடிக்கப்பட்ட ஒரு விடயத்தை உருவாக்கி அதை சமூக ஊடகத்தில் வெளியிடலாம் (பெரும்பாலும் பொய்யான கணக்கிலிருந்து). உச்சகட்ட சமூக அல்லது அரசியல் பதற்றங்களின் போது அவர்களில் சிலர் சமூக ஊடகங்களில "நெருப்பைக் கொளுத்திப் போட்டு" அது உடல் வன்முறைக்கு இட்டுசெல்லலாம்.

மேற்குறிப்பிட்ட இரண்டு உதாரணங்களிலும் பாவனையாளர்களுக்கு டிஜிட்டல் அறிவு இருந்த போதிலும் அவர்களுக்கு டிஜிட்டல் நெறிமுறை மற்றும் கடமையுணர்வு போதுமானவரை இல்லை. டிஜிட்டல் குடியுரிமையானது பாவனையாளர்களுக்கு கடமை உணர்வின் முக்கிய பகுதிகளை சேர்த்துக் கொள்வதற்கும் எச்சரிக்கையாக இருப்பதற்கும் அவர்கள் செய்யும் டிஜிட்டல் செயற்பாடுகளில் நெறிமுறையை பேணுவதற்கும் உதவியாக இருக்கும். சமூகம் என்ற வகையில் நாம் டிஜிட்டல் கல்வியையும் டிஜிட்டல் குடியுரிமையையும் ஒரே பாதையில் ஊக்குவித்தல் அவசியம்.

ஒன்லைன் அல்லது டிஜிட்டல் உலகமானது ஆ.ஃப்லைன் அல்லது உண்மையான உலகத்துடன் தெளிவற்ற விதத்தில் தொடர்பு கொண்டுள்ளது. உண்மையில் 4 மில்லியன் மனிதர்களுக்கு மேலதிகமானவர்கள் தற்சமயம் இணையத்தை பாவித்துக் கொண்டிருக்கின்றனர்--இவை இரண்டையும் பிரிக்க முடியாது. நாம் ஒன்லைனில் என்ன செய்கிறோம் என்பதும் அவற்றை எவ்வாறு செய்கிறோம் என்பதும் எம்மிலும் எமது நிஜ வாழ்க்கையிலும் சமூக வலைதளங்களிலும் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதனாலேயே டிஜிட்டல் குடியுரிமை இருபத்தியோராம் நூற்றாண்டில் பொருத்தமான தலைப்பாகவும் முக்கிய அம்சமாகவும் இருக்கின்றது.

# டிஜிட்டல் குடியுரிமை அர்ப்பணிப்பு

டிஜிட்டல் குடியுரிமை என்பது இன்றைய மாணவர்களுக்கும் நாளைய தலைவர்களுக்கும் முக்கிய ஆற்றலாக உள்ளது. கீழ் இருக்கும் 5 தேர்ச்சிகள் வேண்டாம் என்பவற்றிலிருந்து வேண்டும் என கலந்துரையாடல்களை இடம் மாற்றுகின்றன.

உள்ளடக்குதல்: நான் காதுகொடுத்துக் கேட்பதற்கும், பல்வேறுபட்ட கோணங்களை விளங்கிக் கொள்வதற்கும், ஒன்லைனில் மற்றவர்களோடு மரியாதையோடும் பரிதாபத்தோடும் உறவாடுவதற்கும் தயாராக உள்ளேன்.

தகவல் அளித்தல்: டிஜிட்டல் ஊடகம் மற்றும் சமூக வெளியீடுகள் (மூளவள) என்பவற்றின் உண்மைத்தன்மையையும், வேறுபட்ட கோணங்களையும் செல்லுபடியாகும் தன்மையையும் ஆராய்கின்றேன்.

ஈடுபாடு: குடியல் ஈடுபாடுகளுக்கும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கும் மெய் மற்றும் மெய்நிகர் ஆகிய இரு சமூகங்களுக்கும் சிறந்த பலமாக இருப்பதற்கும் நான் டிஜிட்டல் சேனல்களை பயன்படுத்துகிறேன்.

சமநிலை பேணல்: ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன்களின் போது எனது நேரத்திற்கும் செயற்பாடுகளுக்கும் எவ்வாறு முக்கியத்துவம் கொடுப்பது என்பது தொடர்பில் நான் அறியப்பட்ட தீர்மானங்களை எடுக்கின்றேன்.

எச்சரிக்கை: நான் எனது ஒன்லைன் செயற்பாடுகள் தொடர்பாகவும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பாகவும் ஏனைய ஒன்லைன் இருப்பவர்களே எவ்வாறு பாதுகாப்பதற்கு இடம் வழங்குவது என்பது தொடர்பாகவும் நான் அறிந்துள்ளேன்.

## இந்த டிஜிட்டல் குடியுரிமை கருவிக்கோவை பற்றிய விபரம்

டிஜிட்டல் குடியுரிமை கருவி என்பது உள்ளூர் சமூக பொருளாதார யாதார்த்தம், தொழில்நுட்ப தழுவல் முறைகள், சமூக நடத்தைகள், மற்றும் ஏனைய விடயங்களை கணக்கில் எடுக்கும் அதே சமயம் டிஜிட்டல் குடியுரிமையுடன் தொடர்புபட்ட முக்கிய கருதுகோள்களை அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

குறிப்பாக இளம் சமுதாயத்தினரிடையே ஆ∴ப்லைன் மற்றும் ஆன்லைன் ஆகியவற்றுக்கிடையிலான வரையறை தெளிவில்லாமல் உள்ளது. எனவே கருவிக்கோவை ஓன்லைனை ஆ∴ப்லைன் இருந்து வேறுபடுத்தவில்லை. அதற்குப் பதிலாக எல்லாத் தளங்களிலும் சுற்றாடலிலும் மரியாதையும் பொறுப்புணர்வுடன் கூடிய நடத்தையையும் ஊக்கப்படுத்தும் ஒரு பகுதியாகவே இதை கருதுகிறது.

இக்கருவி ஏழு ஒன்றுடன் ஒன்று இணைந்த பகுதிகளை வழங்கியுள்ளது.


பகுதி 1-டிஜிட்டல் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்
பகுதி 2-டிஜிட்டல் தொடர்பாடல்
பகுதி 3-டிஜிட்டல் பராமரிப்பு
பகுதி 4-டிஜிட்டல் பாதுகாப்பு
பகுதி 5-டிஜிட்டல் ஆரோக்கியம்
பகுதி 6-டிஜிட்டல் கல்வி
பகுதி 7-டிஜிட்டல் செயற்பாடு

ஒவ்வொரு பகுதியும் சுருக்கமான ஒரு கண்ணோட்டத்துடனும் விளக்கவுரையுடனும் முக்கிய சொற்களுடனும் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு பகுதியின் பின்னணியின் கீழும் ஒரு ஆய்வும் முக்கிய தலைப்புகளும் பின்தொடர்கின்றன. சில கருத்துக்களை விளக்குவதற்காக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வழக்காய்வுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கையிலிருந்து உதாரணங்களும் அனுபவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுப்பின் இறுதியிலும் பின்வரும் கூறுகளை காணலாம்.

- தலைப்பை மேலும் ஆராய்வதற்காக சில கேள்விகள் மற்றும் கலந்துரையாடல் புள்ளிகள்
- கற்றல் பெறுபேறுகள்: ஒவ்வொரு பகுதியிலும் உள்ளடக்கியிருக்கும் முக்கிய கருதுகோள்களுக்கான குறிகாட்டி புள்ளிகள்.
- மேலும் வாசிப்பு: பொருத்தமான ஒன்லைன் குறிப்புகள் மற்றும் புத்தகங்களின் பரிந்துரைகள்

ஒவ்வொரு பகுதியும் பின்புலத்தை விரைவாக அறிமுகப்படுத்திய ஒரு சுய உள்ளடக்கமாகவே கருதப்படுகிறது.
பகுதி ஒன்றில் இருந்து 7 வரை, ஒவ்வொரு பகுதியும் குழு கல்வி முறைக்கான, வளர்ச்சிக்கான பயிற்சி வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளலாம்.



## டிஜிட்டல் குடியுரிமை கருவி: தொகுப்பு செயன்முறை

டிஜிட்டல் குடியுரிமை கருவியானது பல தனிப்பட்ட நபர்களினதும் நிறுவனங்களையும் அறிவுரைகளை பெற்று கூட்டு செய்முறை மூலம் தொகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட செயல்முறையானது இலங்கை தேசிய கிறிஸ்தவ மறுபிரவேச கூட்டணியால் (NCEASL, <http://nceasl.org/>) அதன் சிறுபான்மை பொருட்படுத்தல் (MinorMatters, <http://minormatters.org>) எனும் வலைதளம் மற்றும் தொடர்பாடல் பிரச்சாரம் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

பகுதி நேர அடிப்படையில் வேலை செய்த வேலை குழு ஒன்றின் மூலமே உள்ளடக்க வரைபடம், தகவல் ஆராய்வு மற்றும் ஆரம்ப வரைபு என்பன செய்யப்பட்டன. அதன் அங்கத்தவர்கள் பின்வருமாறு (குடும்பப் பெயர்களின் அகரவரிசைப்படி பட்டியலிடப்பட்டுள்ளது):

செல்வி அமலினி டி சாய்ரா
புகைப்படப் பத்திரிகையாளர், எழுத்தாளர் மற்றும் மனித உரிமை ஆர்வலர்

திரு நாலக்க குணவர்தன (குழுத்தலைவர்)
விஞ்ஞான எழுத்தாளர், பத்திரிகையாளர், சமூக கலாசார அரசியல் மீதான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் விளைவுகளை ஆராய்பவர். ஜெர்மனியின் இன்றைய நிர்வாக அகாடமியின் உறுப்பினர்.

செல்வி பூர்ணிமா மீகம்மான
இணைய ஆரம்பங்களில் பெண்களை மதிக்கும் முயற்சியின் நிறுவனர்
2017ம் ஆண்டுக்கான இணைய சமூகத்தின் 25க்கு கீழான 25 உலக விருது வெற்றியாளர்.

செல்வி யாமினி ரவீந்திரன்
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசே'க ஐக்கியத்துவம் மற்றும் ஆலோசனை பணிப்பாளர்

செல்வி சரண்யா சேகரம்
பால் மற்றும் கல்வி துறைகளில் பணிபுரியும் பெண்ணிய எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர்
Grassrooted Trust இன் செயல்முறைத் திட்ட முகாமையாளர் மற்றும் bakamoono.lk இன் ஆங்கில பதிப்பாசிரியர்

திரு பெனிஸ்லஸ் துஷான்
தொடர்பாடல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் உயர் தொழில் தகைமையாளர், அறிவு முயற்சியாளர் மற்றும் இலங்கையின் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களின் டிஜிட்டல் கதை சொல்லும் செயல்திட்டத்தின் பயிற்றுவிப்பாளர்.

வேலை குழுவின் வேலையானது NCEASL இன் ஊழிய அங்கத்தவர்களான அக்ஷனா பலிகவதன (ஊடக திட்டமிடல் அலுவலகர்), மற்றும் ஷலோமி டேனியல் (சட்ட மற்றும் ஆலோசனை இணைப்பாளர்) என்பவர்களால் எளிதாக்கப்பட்டது.

டிஜிட்டல் குடியுரிமை கருவியானது நாலக்க குணவர்தனவினால் தொகுக்கப்பட்டு NCEASL இனால் மேற்பார்வை செய்யப்பட்டது.

MODULE 1

# டிஜிட்டல் உரிமைகளும் கடமைகளும்

# டிஜிட்டல் உரிமைகளும் கடமைகளும்

கல்வி, வேலைவாய்ப்பு, சமூகமயமாதல், சமூக ஒன்று திரட்டல், பொருட்கள் கொள்வனவு மற்றும் இன்னும் பல தேவைகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்ளும் பொருட்டு எமக்கும் இணைய சேவைகளுக்குமிடையிலான நெருங்கிய வாழ்வு ஒருபோதுமில்லாதவாறு மிக வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனொரு பிரதிபலிப்பாகவே எமது டிஜிட்டல் உரிமைகள் பற்றிய விடயம் மிக முக்கிய இடத்தை வகித்து வருகிறது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவனது தேவைக்கேற்ப வகையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் சேவைகளையும் தமக்குத் தேவையான விதத்தில் வித்தியாசமான முறையில் பயன்படுத்துவதற்கான உரிமைகளும், சுதந்திரமும் உண்டு, இருப்பினும் அத்தொழில்நுட்பங்களை பொறுப்புடனும் ஒழுக்க விழுமியக் கடப்பாடுகளுடனும் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

டிஜிட்டல் தொழில்நுட்பமானது இரு முனைகளைக் கொண்டதொரு விடயமாகும். இதனை உபயோகிப்பவரும் அவரது நோக்கத்தையும் பொறுத்து இவற்றினைக் கொண்டு மனித உரிமைகளை மேம்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் அதேவேளை அவற்றை மீறவும் முடியும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பயனாளிகளான நாம் அது பற்றிய தெளிவினைப் பெற்றிருப்பது மாத்திரமன்றி அது ஏற்படுத்தக்கூடிய பின் விளைவுகள் பற்றியும் அறிந்திருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். இதன் பயனாகவே இவைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எம்மால் தடுக்க அல்லது குறைத்துக் கொள்ள முடியுமாக இருக்கிறது.

உதாரணத்திற்கு பின்வரும் விடயங்களை எடுத்துக் கொள்ளலாம், எமது தரவுகளை அரசாங்கம் அல்லது முகப்புத்தகம் மற்றும் கூகுள் போன்ற இணையதள நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டிருப்பது எமக்குத் தெரியுமா? எமது தரவுகள் நியாயமான, கவனமான முறையில் பயன்படுத்தப்படுகிறதா? அல்லது எமது அறிவுக்கு எட்டிய வகையில் அல்லது எமது விருப்பத்துடனேயே இந்த தரவுகள் மற்றவர்களுடன் பகிரப்படுகிறதா? (சில வேளைகளில் விற்பனையும் செய்யப்படலாம்). அரசாங்கங்கள் எமது தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்குகள் மற்றும் ஏனைய தொடர்பாடல்கள் பற்றிய விடயங்களை கண்காணிக்க பரந்தளவிலான மின்னியல்சார் பொறிமுறைகளைக கையாளுகின்றனவா?

பல நாடுகளில் பாரியளவிலான சட்டதிட்டங்கள், நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும் கூட அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் இணையக் குற்றத்தை புரிபவர்களால் எமது தரவுகள் மற்றும இணைய நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அவற்றில் இடம்பெறும் தொடர்பாடல்களை அவதானிக்கவும் முடிகிறது. ஆகவே, இணையதள பாவனையாளர்களான நாம் எமது இணைய உரிமைகள் மற்றும் பொறுப்புணர்ச்சிகள் பற்றிய சரியான தெளிவினைப் பெற்றிருப்பது மாத்திரமன்றி அவற்றை எந்தவொரு நிலைமையிலும் மீறாத வகையில் நாம் நடந்து கொள்ளவும் வேண்டும்.

மிக முக்கியமான விடயம் யாதெனில், நாம் எமது தரவுகளையும் ஏனைய டிஜிட்டல் சாதனங்களையும் எவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பது என்ற விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில், எமது செயற்பாடுகள் மற்றவர்களது டிஜிட்டல் உரிமைகளை மீறுபவையாகவோ அல்லது மற்றவர்களுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலோ அமைந்துவிடக் கூடாது. இவ்வாறு செயற்படுவது மற்றவர்களது டிஜிட்டல் பாவனையில் கஷ்டத்தில் இட்டுச் செல்பவையாக அமைந்துவிடும். இந்த அத்தியாயத்தில், டிஜிட்டல் உரிமைகள் மற்றும் டிஜிட்டல் பொறுப்புகள் தொடர்பான எண்ணக்கருக்களை நாங்கள் ஆராய்வோம். தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் டிஜிட்டல் தகவல்தொடர்பு மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை அம்சங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

# முக்கிய சொற்கள்

டிஜிட்டல் உரிமைகள் எனப்படுவது ஒவ்வொருவருக்கும் அவர்களது புரிதல்களுக்கு ஏற்ப வித்தியாசமான விளக்கங்களைக் கொடுக்கலாம் - இவை டிஜிட்டல் (பதிப்பு) உரிமைகள் முதல் டிஜிட்டல் மனித உரிமைகள் வரை காணப்படலாம்.

டிஜிட்டல் மனித உரிமைகள், அநேகமாக டிஜிட்டல் உரிமைகளையே இவை இலகுவாக சுட்டிக்காட்டி நிற்கிறது. மேலும் இவை தனியொருவரின் மனித உரிமைகளான விடயங்களுக்காக அணுகுதல், பாவனை செய்தல், ஒன்றை உருவாக்குதல், டிஜிட்டல் ஊடகங்களில் பிரசுரித்தல் அல்லது கணனிகளையோ அல்லது ஏனைய தொடர்பாடல் சாதனங்களையோ அல்லது தொடர்பாடல் வலையமைப்புக்களையோ பயன்படுத்துவதையும் குறித்து நிற்கும்.

பதிப்புரிமை எனும் விடயத்தை நோக்குமிடத்து, டிஜிட்டல் உரிமைகள் எனப்படுவது பதிப்புரிமை செய்யப்பட்ட டிஜிட்டல் வேலைகளுக்கும் (திரைப்படம், இசை மற்றும் கலை), கணனி, வலையமைப்பு மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கும் இடையிலான, பாவனையாளர் அனுமதிக்கும் தொடர்பினையும் விபரிப்பதாக அமைகின்றது.

டிஜிட்டல் உரிமை முகாமைத்துவம் எனப்படுவது டிஜிட்டல் முறையில் கோப்பாக சேமிக்கப்பட்ட சாதனங்களை பாதுகாப்பதற்கான ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு முறைமையாகும். இவற்றில் டிஜிட்டல் தொழிநுட்ப முறையினூடாக சேகரிக்கப்பட்டு பகிரப்பட்ட டிஜிட்டல் இசை மற்றும் திரைப்படங்கள் போன்றவைகளும் ஏனைய டிஜிட்டல் முறையில் சேகரிக்கப்பட்டு பகிரப்பட்ட தரவுகளும் அடங்கும்.

இவ் ஆவணத்தில் டிஜிட்டல் உரிமைகள் எனப்படும் போது நாம் டிஜிட்டல் மனித உரிமைகளை குறிப்பிடுகிறோம் டிஜிட்டல் பதிப்புரிமையை அல்ல.



Source: http://www.ictliteracy.info/

# மனித உரிமைகளும் டிஜிட்டல் உரிமைகளும்

எல்லா வகையான டிஜிட்டல் உரிமைகளும் அடிப்படை மனித உரிமைகளின் கட்டமைப்பிற்குள் மிகத்திடமாக வேரூன்றி இருப்பதோடு அவை வரலாற்று ரீதியாக வெவ்வேறு சமூகங்களினால் வேறுபட்ட கலாசாரத்திற்கு இணங்க உருவாக்கப்பட்டவையாகும்.

மனித உரிமைகள் எனப்படுவது எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாகவே, சாதி, மதம், தேசிய இனம், குலம், மொழி அல்லது ஏனைய எந்த வகையான பாகுபாடுகளுமின்றி மனிதன் மனிதனாக வாழ்வதற்காக கிடைக்கப்பட்ட உரிமைகள் ஆகும். மனித உரிமைகள் எனப்படுவதில் உள்ளடங்குபவை வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரங்கள், அடிமைத்தனம் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமைகள், தனது சொந்தக் கருத்துக்களை தெரிவிப்பதற்கான சுதந்திரம், கல்வி கற்றல் மற்றும் வேலை செய்வதற்கான சுதந்திரம் உள்ளிட்ட மேலும் சிலவற்றையும் குறிப்பிடலாம். இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தகைய பாகுபாடுகளுமின்றி இவ் உரிமைகளை அனுபவிப்பதற்கான சுதந்திரம் உள்ளது.

இவ் உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமாக ஆவணமாக மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தைக் இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும். உலகத்தின் பல பிரதேசங்களிலிமிருந்து பலதரப்பட்ட சட்ட வரைஞர்களினாலும் பல்வேறு கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாலும் வரையப்பட்ட இந்த சர்வதேசப் பிரகடனமானது பிரான்ஸின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத் தொடரில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. மேலும் இது முழு உலகுக்கும் பொதுவானதொரு நியமமாகவும் கணிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனம் 30 விதமாக சர்வதேச ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமைகள், அந்தரங்கம் மற்றும் தனிப்பட்ட ரகசியங்களைப் பாதுகாப்பதற்கான உரிமைகள் மற்றும் கல்வி கற்றுக் கொன்வதற்கான உரிமைகள் என்பவற்றையும் எடுத்துக் கூறுகிறது. மேலும் இவ் உரிமை பிரகடனமானது 500 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டும் உள்ளது.

இவ் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கென பலதரப்பட்ட சர்வதேச மனித உரிமை சாசனங்கள் மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகளும் 1945 ஆம் ஆண்டு முதலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவற்றின் உதவியுடனையே சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இச்சாசனங்களை உலகிலுள்ள அநேகமான நாடுகள் (இலங்கை உள்ளடங்கலாக) ஏற்றுக் கொண்டு அதில் கைச்சாத்திட்டுமுள்ளன .

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் என்பது உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனமாகும். சுவிட்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பேரவையானது ஒவ்வொரு வருடத்திலும் மார்ச், ஜூன் மற்றும் செப்டெம்பர் ஆகிய மாதங்களில் தனது வருடாந்த கூட்டத் தொடர்களை நடாத்தி வருகிறது.

கடந்த காலகட்டத்தைப் பார்க்குமிடத்து, சில மனித உரிமைகள் குறிப்பாக இணைய வழி உரிமைகள் இதில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவைகளாவன கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமைகள், தரவுகளைப் பாதுகாப்பதற்கும் தனியுரிமைப் படுத்துவதற்குமான உரிமைகள் மற்றும் குழுக்களில் ஒன்று சேர்வதற்கான உரிமைகள் ஆகும். மேலும் கல்வி கற்பதற்கும் பல மொழிகளைக் கற்பதற்குமான உரிமைகள், நுகர்வோர் உரிமைகள், விருத்தியடைவதற்காக தங்களை மேலும் திறம்படுத்திக்

கொள்வதற்கான உரிமைகள் போன்றவைகளும் டிஜிட்டல் விடயங்களை மேலோங்கச் செய்வதற்கான உரிமைகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மிகப் பிரதான விடயங்களாகும்.

இணைய வழியில் தொடர்ந்து வரும் தரவு மற்றும் சக்தி வாய்ந்த வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிநுட்பங்கள் தனியாள் உரிமைகளுக்கும் பிறரது மனித உரிமைகளுக்கும் கடுமையான ஆபத்துக்களை விளைவிக்கக் கூடியவைகளாக அமைகிறது. இணைய தளத்தின் எல்லைக்குட்பட்ட தன்மை தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் மற்றும் நிறுவன நடைமுறைகள் என்பவற்றுக்கு சவால் நிறைந்தவையாகவும் அமைகிறது.

இப்புதிய யதார்த்தம் நிறைந்த விடயங்களை மனித உரிமைகள் கட்டமைப்புடன் தொடர்புபடுத்திக் கையாள்வதென்பது இலகுவான காரியம் ஒன்றல்ல. டிஜிட்டல் ஆதிக்கத்துக்கு அல்லது இணையவழிக்கு கூடுதல் உரிமைகள் காணப்பட வேண்டுமா? என சிலர் கேட்கின்றனர்

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் "மக்கள் இணைய வழியில (Online) வைத்திருக்கும் அதே உரிமைகள் இணைய வழியற்ற (Offline) முறையிலும் பாதுகாக்கப்பட வேண்டும" என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது ஐ.நா. உறுப்பு நாடுகளினால் (இலங்கை உட்பட) மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அரசியல் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுபவையாக அமைகிறது. சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள கடப்பாடுகளின்படி, அரசாங்கங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமைகள், தனியுரிமைப் பாதுகாப்பு மற்றும் இணையதள (Online) உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வகுப்பதற்கான உறுதிப்பாடுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இத்தீர்மானது ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பின்வரும் விடயத்தைக் கேட்டு நிற்கிறது. "தேசிய ஜனநாயக மற்றும், வெளிப்படையான நிறுவனங்கள் ஊடாக அனைத்து வகையான இணையதள வாயிலான சுதந்திரங்கள், தனியுரிமைகள், மற்றும் பிற மனித உரிமைகள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாக இணைய பாதுகாப்புக்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். சட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டு இணையப் பயன்பாட்டுச் சுதந்திரத்தையும் அவற்றின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொருட்டு, அவை தொடர்ந்தும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வளர்ச்சியினை உருவாக்கும் ஒரு துடிப்பு மிக்க சக்தியாகவும் இருக்க முடியும் ".



[1] Full text at: https://www.un.org/en/universal-declaration-human-rights/index.html
[2] A non-legal overview of these can be found at: https://www.un.org/en/sections/issues-depth/human-rights/
[3] Official website of HN Human Rights Council: https://www.ohchr.org/EN/pages/home.aspx

## நெறிமுறை என்றால் என்ன?

நெறிமுறை எனப்படுவது பிரச்சினை ஒன்றினைத் தீர்த்து வைத்துக் கொள்வதற்கான படிப்படியான முயற்சிகள் அல்லது சில வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதைக் குறிக்கிறது. இவை அநேகமாக தரவுகளை செயற்படுத்துவது, கணக்கிடுதல் மற்றும் கணினி மற்றும் கணிதவியல் சார்பான விடயங்களைக் குறித்து நிற்கிறது. ஒரு நெறிமுறையானது சில வேளைகளில் தரவுகளை திரிவுபடுத்துவதையும் குறிக்கும், அதாவது புதிய வகையான தரவுகளை உள்ளீடு செய்தல், குறிப்பிட்ட ஒரு விடயத்தைத் தேடுதல் அல்லது ஒரு விடயத்தை கையாள்தல் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

Source: https://www.techopedia.com/definition/3739/algorithm

## டிஜிட்டல் மனித உரிமைகள் என்றால் எவை?

இப்பகுதியில் இருந்து டிஜிட்டல் உரிமைகள் என குறிப்பிடப்படுவது டிஜிட்டல் மனித உரிமைகளை குறிக்கின்ற அதேவேளை டிஜிட்டல் மனித உரிமைகளை அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இவை இரண்டுக்கும் தொடர்புகள் இல்லாமலுமில்லை. அவற்றிற்கு இடையிலான தொடர்புகளை பிறிதொரு கலந்துரையாடல் மூலம் அவதானிக்க வேண்டிய தேவையும் எமக்கு உண்டு.

உலகளாவிய வலை தளம் (World Wide Web) எனப்படுவது புவியியல்சார் இடைமுகம் சார்ந்த தொழில்நுட்ப அம்சமாகும், அதனையே தற்காலத்தில் அதிகளவிலான மக்கள் பயன்படுத்தியும் வருகின்றனர். இது 1989 ஆம் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப முறைமையாகும். முதல் அரை தசாப்தத்தில், குறிப்பாக 1990 களில் எம்மில் அதிகளவிலானோர் வலைத்தளங்களை பாவிக்க முடியாத நிலையொன்று காணப்பட்டது – புதியதொரு இணையதள உள்ளீடுகளை உருவாக்குவதற்கு பரந்துபட்ட நிகழ்ச்சித்திட்ட அறிவின் தேவை உணரப்பட்டது. பாவனையாளர்கள் தங்களது இணைய உள்ளீடுகளை மின்னஞ்சல் மற்றும் கலந்துரையாடல் பகுதிகளிலேயே உருவாக்க வேண்டிய நிலையும் காணப்பட்டது. அக்காலத்தில் காணப்பட்ட மிகப்பெரும் பிரச்சினையாக அமைந்தவை யாதெனில் இணையதள பாவனையில் எவ்வாறு அதிக மக்களை பங்குபற்றச் செய்வது என்பதாகும். இணையதள பாவனையின் பயன்பாடு அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மிக அதிகளவில் விருத்தியடைந்தது. 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித குடித்தொகையில் சுமார் அரைவாசியினர் இணைய தளத்தில (Online) கால் தடம் பதித்தனர்: ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (UN's International



Telecommunication Union) கணக்கெடுப்பின்படி, 51.2 வீதமான உலக சனத்தொகை அல்லது 3.5 பில்லியன் மக்கள் இந்த இணையதள வசதிகளை பாவித்ததாகக் கூறப்படுகிறது. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் இணைய தளங்களை பாவிப்பவர்களின் விகிதாசாரம் சுமார் 47 வீதமாகவும் காணப்பட்டது. இதன் அர்த்தம் யாதெனில் இணையப் பயன்பாட்டுக்கான கேள்வி முன்னொரு போதும் இல்லாததைவிட தற்போது மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது, இருந்த போதிலும் இவ் வசதி வாய்ப்புகளை பயன்படுத்த முடியாத மற்றும் ஒரு சாரார் காணப்படுவதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களின் உதயத்தின் பின்னரான 2000 ஆண்டுகளின் நடுப்பகுதியில், இணைய தளத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு நபரும் தங்களுடைய இணைய பதிப்புக்களை பதிவிடக் கூடிய நிலை உருவானது. இவை புதிய சந்தர்ப்பங்களை வழங்கியது மட்டுமல்லாமல் புதிய சவால்களையும் உருவாக்கியது என்பதை மறுப்பதற்கில்லை.

முன்னேற்றத் தொடர்பாடல்களுக்கான அமைப்பு(The Association of Progressive Communication – APC) என்பது 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இந்நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக மனித உரிமைகள் மேம்பாடு, சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நிலைபேறு தன்மையை உருவாக்கும் வேலைத்திட்டங்களில் பணிபுரிபவர்களின் தொடர்பாடல் கட்டமைப்புக்களை உருவாக்குதல் குறிப்பாக இணையதளத்தை செயலிகளை அடிப்படையாகக் கொண்ட முறையினை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டே உருவானது. இவர்கள் இணையதள உரிமைப் பட்டயம் ஒன்றினை உருவாக்கி பின்வரும் விடயங்களை அவற்றில் உள்ளடக்கினர்.

- அனைவருக்கும் இணையதளத்தை அணுக வசதியளித்தல்
- கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் குழுக்களில் பங்கு பற்றுவதற்குமான உரிமைகள்
- அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
- பகிர்ந்து கொள்ளப்பட்ட கற்றுக் கொண்ட விடயங்கள் மற்றும் படைப்பாக்கங்கள் - இலவச தடைகளற்ற திறந்த மென்பொருட்கள் மற்றும் தொழிநுட்ப வசதிகளை உருவாக்குதல்.
- தனியுரிமை, கண்காணிப்பு மற்றும் மறைகுறியீடாக்கல்
- இணையதள ஆளுமை
- விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் உரிமைகளை அறிந்து கொள்ளல்



தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமானது படிப்படியாக வளர்ந்து வருவதனையிட்டு, டிஜிட்டல் வாய்ப்புகளும் சவால்களும் மாற்றமடைந்து கொண்டே செல்கிறது. பல ஆண்டு காலமாக டிஜிட்டல் உரிமைகளுக்கான விவாதங்களை மனித உரிமை செய்ற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சிவில் சமூக குழுக்கள் போன்றோர் முன்வைத்துக் கொண்டே வருகின்றனர்.

[4] The promotion, protection and enjoyment of human rights on the Internet. UNHRC Resolution A/HRC/32/L.20. Adopted on 27 June 2016. http://ap.ohchr.org/documents/dpage_e.aspx?si=A/HRC/32/L.20
[5] https://news.itu.int/itu-statistics-leaving-no-one-offline/

“இணையதளம் என்பது உலகளாவிய பொது வெளியாகும். அது திறந்த, எளிதான மற்றும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும். அதிகளவான ஆட்கள் இதில் பிரவேசிப்பதைப் போன்றே அதிகளவானோர் இவற்றிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். பூகோளமயமாதலைப் போன்றே இணையதள பாவனையின் மூலம் பலதரப்பட்ட சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறுகின்றது. எது எவ்வாறிருப்பினும் இணையதள வசதிகளும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப செயற்பாடுகளும் சமூக ஒன்று திரட்டல், சமூக அபிவிருத்தி, நீதியற்ற நிலையை எதிர்த்தல் மற்றும் வித்தியாசமான படைப்பாற்றல்களையும் புதிய உருவாக்கல்களையும் தெரியப்படுத்துவதற்கான சக்திவாய்ந்த ஒரு ஆயுதம் ஆகும் ”.

ஆசிய பசுபிக் பிராந்திய இணையதள உரிமைகள் பட்டயத்தின் (APC) ஆரம்ப வசனங்கள், 2006.

6 APC Internet Rights Charter, 2006: https://www.apc.org/en/pubs/about-apc/apc-internet-rights-charter

## பால்நிலைப் பரிமாணமும் இணையதள பாவனையும்

இணையதள பாவனையில் ஆண்கள் மற்றும் பெண்களின் பாவனைகள் வித்தியாசமானதாக அமைகிறது, அதே போன்று அவர்களது இணையதள அனுபவங்களும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.
முதலாவதாக, தனிநபர் வருமானமோ அல்லது சொந்த நாட்டு வித்தியாசங்களோ இல்லாமல் அதிகமான பெண்கள் இணையதள பாவனையில் குறைவாகவே காணப்படுகின்றனர். உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் 2018 ஆம் ஆண்டு LIRNEasia எனும் அமைப்பினால் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 34ூ ஆன 15-65 வயதுக்குட்பட்ட பெண்கள் அதே வயது பரம்பலையுடைய ஆண்களை விட குறைந்தளவிலேயே இணையதளத்தினைப் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது.
இந்தியாவின் இணையதளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி அமைப்பு 2017 இல் இந்தியாவின் இணைய தளம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், அவ்வாண்டில் 30 வீதமான பெண்களே இணையதளங்களைப் பயன்படுத்துவதாக அறிய முடிகிறது.
பெண்கள் இணைய தளமொன்றுக்குள் நுழைந்தவுடன் பலதரப்பட்ட இணைய வகை இம்சைகளுக்கு ஆளாகின்றனர், இதற்கான காரணம் அவர்கள் பெண்களாக இருப்பதே தவிர வேறொன்றுமில்லை. இன்னும் சில இடங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் மிகவும் அதிகளவாகக் காணப்பட்டும் உள்ளது (இந்த இம்சைகள் பற்றிய தெளிவான பல விளக்கங்கள் மற்றைய பகுதியில் வழங்கப்பட்டுள்ளது).
பெண்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பலர் டிஜிட்டல் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய பல விடயங்களை பால்நிலை அணுகுமுறையிலும் பெண்ணிய பார்வைகளினூடாகவும் வழங்கியுள்ளனர். அவர்கள் இணையதள பாவனை பற்றிய அங்கீகாரத்தினையும் புகழாரத்தினையும் வழங்கக் கூடிய முழுமையான அணுகுமுறை ஒன்றின் தேவையினை மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கின்றனர். இதன் பொருள் யாதெனில் பெண்களை இலக்கு வைத்து அவர்களை இம்சைகளுக்கு உட்படுத்துவது தற்போது இணைய வழியில் மற்றும் சமூகங்களில் பரந்துபட்டு அறியப்பட்டதாகக் கொள்ளப்பட வேண்டும். இவற்றினை வெற்றிகொள்ள இரண்டு கோளங்களிலும் மிக உறுதியான பதில்கள் தேவைப்படுகிறது.
இணையதளம் பற்றிய பெண்ணியல் பண்புகளானது பெண்கள் இயக்கங்களுக்கான கட்டமைப்பு ஒழுங்கொன்றினை முன்வைப்பதோடு மாத்திரமல்லாமல் தொழில்நுட்பம் சம்மந்தமான சவால்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் இவை பால்நிலை மற்றும் இனப் பெருக்கம் சம்மந்தமான பார்வையினூடாக இணையம் சம்மந்தமான உரிமைகளை நோக்குகிறது. 2014 ஆம் ஆண்டு முதன் முதலாக வரையப்பட்ட இந்த வரைபு, 2016 ஆம் ஆண்டு மிகவும் பிந்திய பதிப்பாக அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி பிரசுரிக்கப்பட்டது. இந்த நிகழ்வானது சமூக நிறுவனக் குழுக்களின் உலகளாவிய வலையமைப்பான முன்னேற்றத் தொடர்பாடல்களுக்கான அமைப்பினால் நடைமுறைப் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
தற்போது மொத்தமாக 17 பண்புகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் இவை ஐந்து பெரும் பிரிவுகளுக்குள்ளும் உட்படுத்தப்பட்டுள்ளன, அவையாவன : அணுகும் வசதி, நகர்வு, பொருளாதாரம், விடயங்களைத் தெரியப்படுத்தல் மற்றும் வடிவமாக்கல்.

முகவுரை வாசிப்பு: " பெண்ணிய வலையமைப்பானது பெண்களின் உரிமைகளை எந்த வகையான வேறுபாடுகளுமின்றி - முழுமையாக அனுபவிக்கவும், ஆணாதிக்கமில்லாத எல்லா வகையான இன்பமயமான விளையாட்டில் ஈடுபடவும் பெண்களை வலுப்படுத்துகிறது. மேலும் இது, வித்தியாசமான உண்மை நிலைமைகள், குறிப்பாக வயது, உடல் பலவீனம், பாலியல் மற்றும் பாலினம், அடையாளங்கள், சமூக பொருளாதார அரசியல் இருப்பிடங்கள், மத நம்பிக்கைள், இனத்துவ தோற்றப்பாடுகள், மற்றும் தனித்துவங்கள் போன்றனவற்றை ஒன்றிணைக்கிறது"

இதில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயம் யாதெனில் இணையவழி என்பதில் எழுகின்ற சவால்கள் இணையமற்ற விடயத்தையும் சார்ந்து இருப்பதாகும் அல்லது உலக நடைமுறையில் தற்போது இடம்பெறும் ஒரு விடயம் எனவும் குறிப்பிடலாம். இருந்த போதும் இணையவழி மற்றும் இணையவழி அல்லாத (online and offline) ஆன இரண்டும் அடிக்கடி மாறுபட்டு பயன்படுத்தப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். ஆகவே இவை பற்றிய சரியான தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பரந்துபட்ட ஆய்வுகள் மிகவும் அவசியமானதாகக் காணப்படுகிறது.

இணைய பாவனை பற்றிய பெண்ணிய கருத்துக்களை பார்க்குமிடத்து பின்வரும் வினாக்கள் எமது மனதில் எழலாம்.

- டிஜிட்டல் சாம்ராஜ்யத்தை அணுகும் வசதி யாருக்கு காணப்படுகிறது?
- வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கும் இந்த சாரார் தங்களது கருத்துக்களை எந்த விதமான கெடுபிடிகளும் இல்லாமல் இலகுவாக தெரிவிக்கக்கூடிய நிலையில் காணப்படுகின்றனரா?
- அவ்வாறு செய்வதால் ஏற்படும் பின்விளைவுகள் யாது? குறிப்பாக வலுவிழந்த கூட்டத்தில் ஏற்கனவே உள்வாங்க-ப்பட்டவர்களின் நிலை என்ன?
- இணையதள உள்ளடக்கங்களை யார் உருவாக்குகின்றனர்? யார் வரைகின்றனர்? இது ஒரு உள்ளடக்க முறையின் மூலம் உருவாக்கப்பட்டதா?
- டிஜிட்டல் உலகில் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் யாவை? இதில் எல்லோருக்கும் சம வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த நாம் என்ன செய்யவேண்டும்.





[7] https://lirneasia.net/2019/05/afteraccess-findings-from-sri-lanka-released-in-colombo-today-event-report/
[8] Read all Feminist Principles of the Internet at: https://feministinternet.org/en

“பெண்களை பொது வெளிகளில் உள்வாங்குவது தொடர்ந்து மறுக்கப்பட்டே வந்திருக்கிறது, ஏனெனில் ஆண்கள் அவர்களது “ஆண்மையை” பொது இடங்களில் கட்டுப்படுத்த முடியாது. தொழில்நுட்பப் பாவனையின் அதிகரிப்பின் விளைவாக, பெண்கள் இணையதளங்களில் பிரவேசிப்பதும் தடுக்கப்படுகிறது, ஏனெனில் பெண்கள் இந்த மெய்நிகர் உலகுக்கு வருவதற்கு முன்னரே ஆண்களின் பிரவேசம் அங்கு பரந்துபட்டு காணப்படுவதாகும். இன்னுமொரு விடயம் என்னவென்றால், பெண்கள் அதிகமாக ஒன் லைன் பாவனையிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது விலகுவதற்குக் காரணம் அவர்கள் இணையதள பாவனையில் சிறுபான்மைக் குழுவாக இருப்பதாகும்”.

நிகாட் டாட், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் - டிஜிட்டல் உரிமைகள் மன்றம், பாகிஸ்தான்

## இணைய வழியில் (ஒன்லைனில்) கருத்துச் சுதந்திரம்

மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தின் 19 ஆவது அத்தியாயத்தில் கருத்துச் சுதந்திரம் பற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பேசுவதற்கான உரிமை, பிரசுரிக்கும் மற்றும் ஒளிபரப்புவதற்கான உரிமைகள், எல்லைகளற்ற தகவல்களைப் பெற்றுக் கொள்ளவதற்கான உரிமை போன்றவை உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. இவை டிஜிட்டல் யுகத்தின் மிக முக்கியமான உரிமைகளாகும்.

இணையதளமானது உலக அரங்கில் மிகவும் பயன்மிக்கதொரு விடயமாக தற்கால உலகில் மாற்றமடைந்துள்ளது, தனிநபர் கலந்துரையாடல்கள், கருத்துக்களை வெளியிடல், தகவல் பரிமாற்றம் மற்றும் பல பெரும் விடயங்களில் ஒளி பரப்பு செய்யும் ஒரு தளமாகவும் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி ஜனநாயக நீரோட்டத்தில் மனித உரிமைகள் பற்றி பேசவும் அரசியல், பொருளாதார முன்னேற்ற விடயங்களில் சமூகத்தை ஒன்று திரட்டவும் மிக முக்கிய ஆயுதமாகக் காணப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும், இப்படிப்பட்ட சமூகத்துக்கு பல நன்மைகளை விளைவிக்கும் இணையதளங்கள் சில வேளைகளில் தடைப்படுத்தப்பட வாய்ப்பும் காணப்படுகிறது. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் இணையதளத்துக்கு நாம் வழங்கும் உள்ளீடுகளையும் உள்ளடக்கங்களையும் தடுத்தல் அல்லது இணையதளத்தை முற்றாக தடை செய்தல் அல்லது பிடிவாதமாக இணையதள நடவடிக்கைகளையும் கண்காணித்தலும் அவற்றை முடக்குதலையும் குறிப்பிடலாம்.

ஆகவே இதில் காணப்படும் வாய்ப்புக்களையும் சவால்களையும் நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

தற்கால உலகில் இணையதளமானது, குறிப்பாகக் கூறுமிடத்து சமூக வலைதளங்கள் மிகப் பாரிய தாக்கங்களையும் பங்களிப்புகளையும் செலுத்துவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக உலகில் எந்த மூலையில் இருக்கும் ஒருவரையும் இப் பூகோளத்தில் இருக்கும் இன்னுமொருவருடன் மிகவும் இலகுவாக இணைக்கக் கூடிய ஆற்றல் இதற்கு காணப்படுவது சிறப்பம்சமாகும். இவ்வாறான செயற்பாடுகள blogs, post அல்லது comments, Facebook, twitter, போன்ற சமூக வலைதளங்களில் காணலாம். உதாரணத்துக்கு குறிப்பிடுமிடத்து Instagram, YouTube போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் பல எண்ணிக்கையிலான சமூக வலைத்தளங்கள் கட்டணங்கள் ஏதுமின்றி இலகுவாக இணையக்கூடிய வசதிகளையும் வழங்குகிறது.

அண்மைய காலங்களில் இணையதளங்களில் விடயங்களை பதிவிடுவதற்கும் பரப்புவதற்கும் சில வெகுஜன ஊடக நிறுவனங்களுக்கு குறிப்பாக தொலைக்காட்சி சேவைகள், பத்திரிகைகள் போன்ற ஊடகத் துறையினருக்கு மிகவும் சவாலாகக் காணப்பட்டது. இதற்கான காரணங்கள் யாதெனில் இத்துறையில் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவு இடைவெளி, ஆள் பற்றாக்குறை மற்றும் இத்துறையிலுள்ளவர்களை பயிற்றுவிப்பதற்கு அதிகளவிலான பொருளாதார வசதிகள் தேவைப்பட்டமையாகும். இணைய தளமானது மிகவும் குறைந்த விலையில் அதிக செலவுகள் இன்றி மேற்கொள்ளப்படக் கூடிய ஒரு விடயமாகும்.

மேலும் இவை புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற சமூகங்களை ஒன்று படுத்தவும் மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். இலவச இணையதள முறையில் காணப்படும் மற்றுமொரு மிக முக்கியமான சிறப்பம்சம் யாதெனில் பார்வையாளர்களை மிக வேகமான முறையில் அடையவும் அவர்களை ஏதோவொரு முறையில் ஒன்றிணைக்கக் கூடியதாக இருப்பதாகும். இது இம்முறையில் காணப்படும் ஒரு வாய்ப்பாகவும் கொள்ளப்படுகிறது. தமது கருத்துக்களை சுதந்திரமான முறையில் வெளிப்படுத்த முடியாத சூழலில் வாழும் ஒருவருக்கு இம்முறையானது மிக இலகுவான முறையில் கருத்துக்களை வெளியிட உறுதுணையாக அமையும்.

கனடா நாட்டிலுள்ள கருத்துச் சுதந்திரத்துக்கான செயற்பாட்டாளாரான லோரா டிரைபின் கருத்துப்படி "இது உண்மையில் மற்றவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய முறை, தகவல்களை பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல இது இணையதளத்துக்கே உரிய ஜனநாயக முறையுமாகும். மேலும் இதுவே கருத்துக்கள் தெரிவிப்பதற்கான மிகப் பெரும் சொத்தாகும்" எனக் கூறினார்.

இலங்கையில் இணையதளமானது கருத்துச் சுதந்திரத்துக்கான கடைசி எல்லையாகக் காணப்படுகிறது. இலங்கையில் பிரதான ஊடகங்களுக்கான நுழைவு அதன் வாயில் காப்பாளர்களான பதிப்பாசிரியர்கள், உரிமையாளர்கள் போன்றோர்களால் பாதுகாக்கப்படுகிறது, எவ்வாறிருப்பினும் இவர்களில் பலர் பொது நன்மைகளுக்காக செயற்படுபவர்களாகக் காணப்படவில்லை மாறாக தனிநபர் நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிப்பவர்களாகவும் அதீத தணிக்கையில் ஈடுபடுபவர்களாகவுமே இருக்கின்றனர். மீண்டும் இந்தப் பின்னணியைப் பார்க்குமிடத்து, இணையதளமானது பிரஜைகளுக்கான மிக முக்கியமான மாற்று வழியாகவே அமைகிறது. பலர் பிரதான ஊடகங்களால் அதிகமாக வெளியில் பேசப்படாத விடயங்கள் அல்லது புறக்கணிக்கப்பட்ட விடயங்களை பொது நன்மைக்காக விவாதிப்பதற்காக வெளியில் கொண்டு வருகின்றனர்.

> "நவீனகால சமுதாயத்தில் இணையதளத்தின் நிலைமாறும் தன்மைக்கு ஏற்ப தகவல்களின் திறந்த தன்மையில் மாற்றம் ஏற்படுவதும் மிக முக்கியமமானதாகும். சமூக பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு உள்ளடக்கங்களின் சவால்களைத் தீர்க்கும் போதும் சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.."
>
> அத்தியாயம் 13 (ஆலோசனை நிறுவனம்)
> https://www.article19.org/issue/digital-rights/

## வெறுப்புப் பேச்சு – கருத்துச் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தல்

கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமை எனப்படுவது ஒரு முழுமையான உரிமை அல்ல - இதற்கு சில நியாயமான வரம்புகளும் பொருந்தும். அனுமதிக்க முடியாத ஒரு வகையான வெளிப்பாடே வெறுப்பினை உண்டாக்கும் பேச்சுக்களாகும்.

வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஒன்லைன் மற்றும் ஓப்லைன் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் காணப்படுவதானது இலங்கை அரசியல் யாப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட சுதந்திரத்தினையும் இலங்கை கையெழுத்திட்ட சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களையும் எளிதில் மீறக்கூடியவொரு செயலாகக் காணப்படுகிறது.

வெறுக்கத்தக்க பேச்சுக்கள் என்பதற்கு பல வியாக்கியானங்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து வெறுப்பூட்டும் பேச்சுக்கள் எனப்படுவது இனம், மதம், பாலின அடையாளம் மற்றும் தேசியம் ஆகியவற்றின அடிப்படையில் வெறுப்பை ஆதரிப்பதான செயற்பாடுகள் என்று கூறலாம்.

முக்கியமான விடயம் யாதெனில் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஒருவரை புண்படுத்தும் பேச்சுக்களிலிருந்து வேறுபட்டவை, ஆகவே இவை இரண்டையும் ஒன்றுபடுத்தாமல் இரு வேறு திசைகளில் நோக்குவது மிக முக்கியமாகும். உண்மையில் கருத்துச் சுதந்திரமானது அதிர்ச்சிகள், புண்படுத்தல்கள் அல்லது தொந்தரவுளை ஏற்படுத்தும் நிலையை உருவாக்குமிடத்து அவை உண்மையில் செல்வாக்கற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. பிரபல எழுத்தாளர் சல்மான் றுஸ்தி ஒரு இடத்தில் கூறுகையில் “கருத்துச் சுதந்திரம் என்றால் என்ன? புண்படுத்தும் சுதந்திரம் இல்லாமல் கருத்துச் சுதந்திரம் இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்”.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் எனும் விடயம் நெடுங்காலம் நீடித்த போர்க்கால சூழல், மற்றும் யுத்தத்துக்கு பிற்பட்ட காலமான 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான மெதுவாக நகரும் நல்லிணக்க செயற்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே நோக்கப்பட வேண்டும். இலங்கையில் நீடித்திருந்த யுத்த சூழ்நிலையானது இன, மத, மற்றும் அரசியல் ரீதியாக சமூகத்தை பெரிதும் துருவப்படுத்தியுள்ளது. இது மாத்திரமன்றி அச்சமூகத்தை பல்வேறு வகையான தீவிரவாத சிந்தனைகளில் உற்சாகப்படுத்தியுள்ளதாகவும் அமைந்துள்ளது. அரசியல் கட்சிகள் தேசிய இன நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குப் பதிலாக இந்தப் பிளவுகளைப் பயன்படுத்தியே தங்களது அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்கின்றன (இதன் முடிவில் வழங்கப்பட்ட சம்பவக் கற்கை 01 இனைப் பார்க்கவும்).

வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய விடயத்தில் இலங்கையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை நோக்குமிடத்து அங்கு பாரிய இடைவெளி ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் பல சர்வதேச நியமங்களுக்கு ஏற்றாற் போல உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் ஏற்படுகிறது. வெறுக்கத்தக்க பேச்சுக்களை எதிர்ப்பதில் முறையான விமர்சனத்தையும் கருத்து வேறுபாடுகளை அனுமதிப்பதும் மிக முக்கியமாகும்.

2005 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி "(வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கான) எந்தவொரு வரம்புகளும் தன்னிச்சையாக இல்லாமல் சட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டும். நியாயமான வெளிப்பாட்டின் எந்தவொரு கட்டுப்பாட்டையும் தவிர்ப்பதற்காக அவை "அவசியமானவை"எனும் அளவிடையை பூர்த்தி செய்ய வேண்டும், இதற்கான வரம்புகளும் வரையறைகளும் காணப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையதளத்தில் வெறுப்பூட்டும் பேச்சுக்களை எதிர்த்தல்" என்று தலைப்பிடப்பட்ட இந்த ஆய்வறிக்கையில் "இந்த சர்வதேச தரநிலைகளானது கருத்து வெளிப்பாட்டின் வரையறை நியாயமானதாகக் காணப்பட வேண்டும் என்பதோடு இவை அதிகாரத்தைப பயன்படுத்தும் ஒன்றாக அமைந்துவிடக் கூடாது. மறுபுறத்தில் மற்றவர்களின் உரிமைகளை நிலை நிறுத்தும் நோக்கத்தை தவிர...... அந்த நோக்கங்கள் தேசிய பாதுகாப்பு, பொது விழுமியங்கள் அல்லது பொது சுகாதாரமாகவும் இருக்க முடியும்" என்று யுனெஸ்கோ கூறுகிறது.

யுனெஸ்கோ பல வகையான சட்ட ரீதியற்ற முறைமைகளை இணையதள வெறுப்பூட்டும் பேச்சுக்கு எதிராக கையாள முடியும் எனக் கூறுகிறது. சம்மந்தப்பட்ட நபர்கள் தங்களுக்கு சமமான சகபாடிகளுடன் எதிர் பேச்சுக்களில் ஈடுபடலாம், அதே நேரம் சிவில் சமூகக் குழுக்கள் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் இடம்பெறுவதைக் கண்காணிக்கவும், ஆவணப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும் முடியும். மேலும் உத்தரவாதப்படுத்தப்பட்ட இடங்களில் அவ்வாறான விடயங்கள் இடம்பெறுமாயின் அவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தி உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரவும் முடியும். இணைய நிறுவனங்களின் உதவியுடன் பிரச்சாரக் குழுக்கள் அவை பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் முடியும் என்று குறிப்பிடுகிறது.

நடுத்தர நீண்ட காலத்தில் வெறுக்கத்தக்க பேச்சுக்கு எதிரான உண்மையான பாதுகாப்பு மனிதர்களின் மனதிற்குள்ளேயே இடம்பெற வேண்டும். பேச்சுச் சுதந்திரத்திற்கான உண்மையான பாதுகாப்பு மனித மனதிற்குள் மட்டுமே உருவாக்கப்பட வேண்டும். இங்குதான் நாம் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும், வெறுக்கத்தக்க பேச்சை எதிர்க்கக் கூடிய இணையவழி சமூகத்தை வலுப்படுத்துவதும் மிக இன்றியமையாதது ஆகும்.

### வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய முகப்புத்தகத்தின வரைவிலக்கணம்(FACEBOOK'S)

சமூக விழுமியங்கள் என்று எம்மால் நன்கு அறியப்படும் முகப்புத்தகத்தின் விதிகளின்படி(Facebook's rules), வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் எனப்படுவது பாதுகாக்கப்பட்ட குணாதிசயங்களான இனம், தேசிய தோற்றம், மதத் தொடர்பு, பாலியல் நோக்கு நிலை, சாதி, பாலின அடையாளம் மற்றும் கடுமையான நோய் அல்லது இயலாமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் மீது நேரடித் தாக்குதல் நடாத்துவது எனக் குறிப்பிடுகிறது". மேலும் இது குடியேற்ற நிலைக்கும் சில பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குகிறது.

Source: https://www.facebook.com/communitystandards/

## இணையத்தள தணிக்கை

இணையம் ஒரு சிறந்த தளமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. திறந்த இலகுவாக அணுகக்கூடிய நிலையிலுள்ள இணையத்தளம் சமூகங்களின் ஜனநாயக இருப்புக்கு இதுவே அடிப்படை என்ற கருத்து அதன் தாராண்மை தன்மையினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இணையத்தின் பாவனையானது (தவறான பாவனையும்) ஒரு சிக்கலான நிலைமையை உருவாக்கியிருப்பது மட்டுமல்லாமல் குழப்பகரமான நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது. எனவே இதன் உண்மையான தன்மை மற்றும் மதிப்புகள் என்பன அதீத ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்துக்கான திறந்த இணையத்தளம் எனும் சமூக ஆர்வலர்களைக் கொண்ட குழுவொன்றின் கருத்துப்படி "இணையதளங்களில் அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் இணையத்தின் மூலமாகவே சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வான நிலையை குறைக்க முடியம்" எனக் கூறப்பட்டுள்ளது.

தாராண்மைவாத இணையதள படைப்பாளிகள் கல்வியியலாளர்களாக அல்லது தொழில்நுட்பவியலாளர்களாகக் காணப்பட்டனர். அவர்களது படைப்பாற்றல்கள் திறந்ததாகவும் எல்லோராலும் பெற்றுக் கொள்ளக் கூடியதுமாக இருக்க வேண்டும் என வேண்டப்பட்டது.

காலத்துக்கு காலம் இதன் வளர்ச்சி விரிவடைய விரிவடைய இணையத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்ற கேள்வியும் எழத் தொடங்கியது. மேலும் இவை இன்னும் தீர்க்கப்படாத விவாதங்களாகவும் உருவாகியுள்ளது.

தேசிய சட்ட வரையறைகளின் மூலம் தனியொரு அரசாங்கத்தினால் இணையதளமொன்றைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. இதற்குரிய காரணம் அதன் வடிவமைப்பாகும். ஆனாலும் சில அரசாங்கங்கள் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் பயன்படுத்துகின்றன, அதன் மூலம் இணையதளத்தின் வெளிப்டைத் தன்மை மங்கலடையும் துர்ப்பாக்கிய நிலை உருவாகிறது. சில ஜனநாயக நாடுகள் டிஜிட்டல் ஊடகங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு மற்றும் சட்டம் சம்மந்தமான பிரச்சினைகளின் விளைவாக இத்தளங்களை ஏற்கனவே தடை செய்துள்ளன அல்லது தடை செய்வதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

இப்படியான நிலைமைகள் இணையதள சுதந்திரம் பற்றிய உலக கலந்துரையாடலுக்கு வித்திட்டுள்ளது, மேலும் இதற்காக நியாயமான கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கிறது. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இணையதளமொன்றை ஏதாவது ஒரு காரணத்துக்காக யாராவது ஒருவர் நிருவாகக் காரணத்துக்காக முடக்க முற்பட்டால், அது ஒரு நியாயமான நடவடிக்கையாக ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்படவே மாட்டாது. மேலும் இது கருத்துச் சுதந்திரத்துக்கு மிகவும் அபாயகரமான ஒரு விடயமாகவும் பார்க்கப்படுகிறது.



“இணையதளங்களில் அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் இணையத்தின் மூலமாகவே சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வான நிலையை குறைக்க முடியம்.”

ஜனநாயகத்துக்கான திறந்த இணையம்

“இணைய அச்சுறுத்தல்கள், இணையதளத்தில் வெறுப்பை உண்டாக்கும் சம்பவங்கள் மற்றும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கை போன்ற விடயங்களில் தற்கால அரசாங்கங்கள் தங்களை ஈடுபடுத்துவதால் மனித உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டை உணர முடியாத நிலை காணப்படுகிறது. உதாரணமாக தேசிய பாதுகாப்பு அல்லது குறியாக்கை நோக்கத்துக்காக சில அநாமோதய கருவிகளின் மூலம் தனிநபர்களின் உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். இது தனியாள் உரிமைகளுக்கு அச்சுறுத்தலானதாகவும் அமைகிறது. புதிய தொழிநுட்பங்கள் அதிக செயல்திறன் மிக்கவையாகக் காணப்பட்டாலும் அரசாங்கங்களினால் பாதுகாப்பு எனும் நோக்கத்துக்காக கட்டுப்படுத்தப்படும் நிலையும் காணப்படுகிறது. இவை தனியுரிமையையும் சுதந்திரத்தையும் குறைத்து மதிப்பிடுபவைகளாகவும் அமைகிறது .”

இணையதள சமூகத்தினால் வெளியிடப்பட்ட
உலக இணையதள அறிக்கை 2017

## தனியுரிமை

சர்வதேச சாசனங்களைப் போலவே, சர்வதேச மனித உரிமைகள் சாசனத்திலும் (உறுப்புரை 12 இல்) நபர் ஒருவரின் தனிப்பட்ட உரிமைகள் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்காலத்தில் மிக அதிகமாக பயன்பாட்டிலுள்ள இணையப் பாவனை மற்றும் அவை தொடர்பான நடவடிக்கைகளின் விளைவாக நபர்களின் தனியுரிமை பற்றிய விடயத்தில் புதிய சில குழப்பகரமான சூழல் உருவாகியிருப்பதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மிக உயர்தன்மையானது உரிய நொடிப்பொழுதில் எந்தத் தகவல் தொடர்பாடல்களையும் மேற்கொள்ளக் கூடிய மிக இலகுவான நிலையை உருவாக்கியிருக்கிறது. அதே நேரத்தில் இத்தகைய உயரிய நிலையிலுள்ள தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் கண்காணிப்பு, முடக்குதல் மற்றும் தரவு திரட்டு போன்ற விடயங்களின் மூலம் நலிவுற்றதாக மாறக்கூடிய நிலை உருவாகியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இணைய முறை பாவனையில் முழுமையான தனியுரிமை பாதுகாக்கப்படுகிறது என்ற விடயம் சாத்தியமற்றது – ஏனெனில் எமது ஒவ்வொரு நடவடிக்கைகளும் தரவுகளும் தானாகவே ஏதோவொரு இடத்தில் பதிவு அல்லது சேகரிக்கப்படுகிறது என்ற விடயமே இவ்வாறு கூறப்படுவதற்குக் காரணமாகும், மேலும் இவை தேவையேற்படின் மீள் பெறக்கூடிய நிலையிலும் உள்ளது. இவ்வாறானதொரு நிலை காணப்பட்டாலும் கூட ஏதோவொரு வகையில் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கான சாத்தியப்பாடுகளும் காணப்படுகிறது என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனாலும் இவை உண்மையாகவே பாவனையாளர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் காணப்படுகிறது என்ற விடயத்தை உறுதிப்படுத்தக்கூடிய பொறுப்புதாரிகளாக சேவை வழங்குனர்கள், தொழில்நுட்பப் பாவனையாளர்கள் மற்றும் அரச சட்ட நெறிமுறைகள் காணப்பட வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும் இணைய பாவனையில் தனியுரிமை பற்றிய உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பற்றி பலர் இன்னும் தெளிவற்ற நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றனர், இவர்களில் ஒரு சாரார் தங்களுடைய இவை பற்றிய தெளிவின்மையால் தங்களுடைய தனியுரிமையை இழக்கும் துரதி'டவசமான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இணையவழிப் பாவனை சம்மந்தமான மிகப் பெரிய சவால் யாதெனில் பொது வாழ்வு மற்றும் தனிப்பட்ட வாழ்வு பற்றிய வரையறை மக்களிடத்தே காணப்படாமையாகும். அநேகமானவர்களுக்கு இவற்றுக்கிடையிலான வேறுபாட்டை புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுவது கவலைக்குரியது. இப்படியான சம்பவங்களை சமூக வலைத்தளப் பாவனைகளில் அதிகமாகக் காணப்படக்கூடியதாக உள்ளது. தனிப்பட்ட விடயங்களை பொது விடயங்களிலும் பொது விடயங்களை தனிப்பட்ட கருத்துக்களுடனும் குழப்பியடிக்கக்கூடிய நிலை இதில் காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.



[9] https://openinternet.global/about-open-internet-democracy-initiative

## டிஜிட்டல் பொறுப்புணர்வுகள்

“உயர் அதிகாரத்துடன் உயர் பொறுப்புக்களும் வர வேண்டும்” எனும் மிக பிரபல்யமான வாசகமானது ஸ்பைடர் மேன் எனும் கதையில் கூறப்பட்டிருப்பதை நாம் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.
இவ் உபதேசமானது டிஜிட்டல் தொழிநுட்பப் பாவனையாளர்களுக்கு மட்டுமல்லாமல் இணையதள பாவனையாளர்களுக்கும் பொருந்தக்கூடிய விடயம் ஒன்றாகும். இணைய மற்றும் டிஜிட்டல் வசதிகளை இலகுவாக அணுகக்கூடிய வசதி வாய்ப்பானது தேவையேற்படும் போது தேவையான விடயங்களை அணுகுவதற்காக மட்டும் இருக்காமல் மிக வேகமான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையையும் உருவாக்கியுள்ளது. ஆகவே பொறுப்புணரச்சியுடன் கையாள்வது என்பது இவற்றுடன் சேர்ந்தே உண்மையாக வரவேண்டிய ஒரு விடயமாகும்.
ஆகவே இது ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட பொறுப்புக்களாகும். மேலும் இவை பல்வேறுபட்ட வகையில் பரந்தும் விரிந்தும் காணப்படுகிறது. ஏதோவொரு கலந்துரையாடல் ஒன்றின் மூலம் பின்வரும் விடயங்கள் பொறுப்புணர்வு என்ற வகைக்குள் வகைப்படுத்தப்பட்டன.

- மற்றவர்களின் பலவீனங்களை கொச்சைப்படுத்தல், தொந்தரவு கொடுத்தல் மற்றும் திருடுதல் பேன்றவற்றை அறியப்படுத்துவதற்கான பொறுப்புணர்வு
- ஆய்வுகள் மற்றும் விடயங்களை மீளத் தேடிப்பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் உறுதுணையானவற்றை மேற்கோள் காட்டுவதற்கான பொறுப்புணர்வு
- இசை, திரைப்படங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான விடயங்களை பதிவிறக்கம் செய்வதற்கான பொறுப்புணர்வு
- தகவல்களை திருடக்கூடியவர்களிடமிருந்து தரவு அல்லது தகவல்களை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கான பொறுப்புணர்வு.
- தங்களுடைய அடையாளங்கள் பற்றிய பொய்யான தகவல்களை வழங்காமல் இருப்பதற்கான பொறுப்புணர்வு

இன்னுமொரு கலந்துரையாடல் ஒன்றின் போது பின்வரும் வியடங்களை தனிநபர் ஒருவர் பொறுப்புள்ள பிரஜையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தெரியப்படுத்தப்பட்டன.

- இணையவழியில் கொச்சைப்படுத்தல் : மற்றவர்களுடன் இணையவழியில் எவ்வாறு தொடர்பாடலை பேண வேண்டும் என்பதற்கு நீங்களே பொறுப்பாளிகளாவர். மேலும் மற்றவர்களின் இணைய வழியிலான துஂபிரயோகங்களிலிருந்து உங்களைப் பாதுகாப்பதற்கு நீங்களே பொறுப்பாளிகளாவர்.
- இணையதள பாதுகாப்பு : தங்களுடைய தனிப்பட்ட பாதுகாப்பினை உயரிய நிலையில் வைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். எம்மில் அநேகமானோர் இணையதள பாதுகாப்பு என்றால் சிறுவர் பாதுகாப்பு, இணையதள கொச்சைப்படுத்தல் மற்றும் பாலியல் சூறையாடல் என்றே எண்ணுகின்றனர். ஆனாலும் இவை அவ்வாறான விடயங்களை விடவும் மிகவும் மேலானவை. எனவே நாம் எல்லோரும் இவை பற்றிய போதியளவான முன்னேற்பாடுகளையும் விழிப்புணர்வுகளையும் கொண்டிருக்க வேண்டும்.

- இணையதள பண்புகளுக்கு அல்லது மதிப்புகளுக்கு புறம்பான செயற்பாடுகள் : இணையதள கருத்துப் பரிமாற்றங்களின் போது விசைப்பலகையிலுள்ள சுருக்க வழி மொழிகளைப் பயன்படுத்துகிறோம். சில வேளைகளில் இந்த சுருக்கக் குறிகள் தொழில்வாண்மை உறவுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலை உருவாக வழி வகுக்கலாம். உதாரணமாக "SHOUTING" என்று நாம் தட்டச்சு செய்யும் போது எல்லா எழுத்துக்களையும் கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதுவது சிறப்பானதல்ல.
- தவறிழைத்தவர்கள் பற்றி அறிக்கையிடல் : டிஜிட்டல் பிரஜையொருவர் இணையதள தவறிழைப்பவர்களுடன் ஊடாட்டத்தில் ஈடுபடும் போது அவர்களை அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய நிலையை உருவாக்கலாம். இவ்வாறான நெறிமுறை தவறிய விடயங்களை பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்ட சேவை வழங்குனர்களுக்கோ அல்லது கண்காணிப்பாளர்களுக்கோ தெரியப்படுத்துவதன் மூலம் உரிய நேரத்திலேயே கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க முடியும். இடம் பெற்ற குற்றத்தின் தன்மை மற்றும் அதன் சூழ்நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும்.
- சட்ட ரீதியான பாதுகாப்பு : இணையதள செயற்பாடுகளில் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதானது தாம் அந்நாட்டிலுள்ள இணைய பாவனை பற்றிய சட்ட நெறிமுறைகளை அறிந்து அவற்றைப் பின்பற்றுவதாகும். உதாரணத்துக்கு கூறுமிடத்து, உங்களுக்கு டிஜிட்டல் பதிப்புரிமை மற்றும் பிரசுரித்தல் பற்றிய சட்ட நடைமுறைகளைப் பற்றித் தெரியுமா? உங்களுக்கு மென்பொருட்களை கொள்ளையடிக்கும் இணையதளங்கள் பற்றி தெரியுமா? மற்றவர்கள் உங்களுடைய டிஜிட்டல் அடையாளங்களை திருடுவதிலிருந்து நீங்கள் எவ்வாறு உங்களைப் பாதுகாத்துக் கொள்வது?



## இணையத்தளத்தை எம் அயலவர் போன்று கவனித்தல்

ஜக்கி முர்ராய் எனும் அமெரிக்க பாடசாலையின் ஆசிரியரொருவர் நடுத்தர பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 20 வருட காலமாக தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பித்து வந்தார். இவர் டிஜிட்டல் பொறுப்புணர்வு நடைமுறைகளுக்கு பின்வரும் நடைமுறைகளை சிபாரிசு செய்கிறார்

ஒப்பீட்டு ரிதியாக பல நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய இணையதளத்தை எமது அயல்வீட்டார் என்று எண்ணிக் கொள்வோம்:

- உங்களது அயல் வீட்டார்களுடன் பழகுதைப் போன்று இணையதளத்துடனும் பழகுவதற்கு எண்ணுவோம்.
- உங்களுடைய தனிப்பட்ட விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். அதே போன்று மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களையும் கேட்டறிய முனைய வேண்டாம். மற்றவர்களுக்கும் தனிப்பட்ட உரிமைகள் இருக்கிறது என்பதைப் புரிந்து நடந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய சுற்றுச் சூழல் பற்றி மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இணைய தளத்திற்குள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அதன்படி நடந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய சமூகத்தைப் போன்றே, நீங்கள் அவர்களுடன் நன்றாக நடந்து கொண்டால் அவர்கள் உங்களுடன் மதிப்பும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள் .
- உங்களுக்கு பரீட்சியமில்லாத ஒருவரின் உதவி கிடைத்து விடும் என்று எண்ணாதீர்கள் -- அது ஒரு போதும் நடக்காது. உங்களை தனிப்பட்ட அடையாள எண் முகவரி முறை மூலம் அறிந்து கொள்ளலாம். அவை என்னவென்று கலந்துரையாடுங்கள்.
- உங்களுடைய அறிவாற்றல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.மற்றவர்களுடன் ஒன்றிணைந்து இணைய வழியில் உதவுங்கள்.

Source: https://www.teachhub.com/technology-classroom-digital-rights-responsibilities

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 01: இலங்கையில் முகப்புத்தகக் கணக்குகளில் உள்ள வெறுப்பூட்டும் வார்த்தைப் பிரயோகங்கள்

இணைய பாவனைகளில் இடம்பெறும் வெறுப்புணர்வைத் தூண்டும் வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகள் ஆண்டாண்டு காலமாக நடைமுறையில் இருந்தே வருகிறது. ஒரு சில ஆய்வாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைத்து முகப்புத்தகம் போன்ற சமூக ஊடகங்களில் அதிகரித்து வரும் வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய விடயங்களைத் தொகுத்து ஆராய்ந்து ஆவணப்படுத்தினர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம (Centre for Policy Alternatives - CPA) 2014 ஆம் ஆண்டு உள்நாட்டில் மேற்கொண்ட ஆய்வின்படி : "இலங்கையில் அதிகரித்து வரும் வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் இன்னுமொரு நிகழ்ச்சித் திட்டத்துக்கு எந்த வகையான உத்தரவாதத்தையும் வழங்காது. யுத்தத்துக்குப் பின்னர் மீண்டெழுந்து வரும் நாட்டில் சமூக, கலாசார, மத, இன நல்வாழ்வு மற்றும் வேறுபாடுகளை மதித்தல் போன்ற விடயங்களை நாங்கள் பார்க்கும் விடயத்தில் அரசாங்கத்துக்கும் அதன் நல்லாட்சிக்கும் மிகப் பெரும் சவாலாக அமைகிறது" என்று குறிப்பிட்டுள்ளது.

வன்முறையை திருப்திப்படுத்தல் எனும் தலையங்கமிடப்பட்ட அறிக்கையில்: இலங்கையில் முகப்புத்தகங்களில் இடம்பெறும் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் பற்றிய ஒரு ஆய்வு இலங்கையில் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அழுத்கம எனும் இடத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு முதல், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மற்றும் நடைபெற்றவுடன் செயற்பட்ட 20 குழுக்களின் தனிப்பட்ட முகப்புத்தகக் கணக்குகளில் பதிவிடப்பட்ட விடயங்களை சில மாதங்களுக்கு பகுத்து ஆய்வு செய்து இந்த அறிக்கை உருவாக்கப்பட்டது. பொதுவாக இந்த ஆய்வானது குழப்பகரமான நிலையில் இணையத்தளத்தில் இடம்பெறும் வெறுப்பையேற்படுத்தும் பேச்சுக்கள் எவ்வாறு உருவெடுக்கிறது, என்ன வகையான கருத்துக்கள் உருவாக்கப்பட்டு பதிவிடப்படுகிறது, யாரால் யாருக்காக இவை உருவாக்கப்படுகிறது போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிக்கைப்படுத்தியது.

மாற்றுக் கொள்ளைகளுக்கான நிலையத்தின் ஆய்வறிக்கையின்படி, இலங்கையில் முஸ்லிம் மக்கள் 9 சத வீதமான சிறுபான்மையினராக காணப்படுவதன் விளைவாக இச்சமூகம் பலதரப்பட்ட இணைய வழி வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு ஆளாக வேண்டிய நிலைக்கு புறந்தள்ளப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டிய அதேவேளை, மற்றைய சமூகங்களுக்கும் இவ்வாறான நிலை உருவாகியிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறான சம்பவங்களுக்கு இலக்கு வைக்கப்பட்டவர்களாக மனித உரிமை ஆர்வலர்கள், நடுத்தர நிலையிலுள்ள அரசியல்வாதிகள், இன நல்லிணக்கத்துக்காக பாடுபடும் மத குருமார்கள், பெண்கள், பல் பாலின சமூகத்தினர் மற்றும் அதீத சிங்கள பௌத்தவாதத்துக்கு செவி சாய்க்காத இந்நாட்டுப் பிரஜைகளும் அடங்குவர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆராய்ச்சியாளர்களான சில்பா சமரதுங்க மற்றும் சஞ்சனா ஹெொட்டொடுவ ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில் “முடிவாக, சமூக – அரசியல் குழப்பநிலைக்கு என்ன செய்வதென்று சரியானதொரு அறிவியல்சார் பொறிமுறையொன்று இல்லாமலுள்ளது” என்று கூறினர். இக்கருத்துக்கள் பின்வருவனவற்றை சாராம்சமாகத் தெளிவுபடுத்துகிறது: அதிக எண்ணிக்கையான பாவனையாளர்கள், மிகப் பெரும் எண்ணிக்கையிலான பதிவு உள்ளீடுகள் மற்றும் அதன் வித்தியாசத்தன்மை மற்றும் அவ்வாறான வெறுப்பூட்டும் பேச்சுக்கள் மிக வேகமாக பரவக்கூடிய தன்மை மற்றும் அதனைக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் என்பனவாகும்.

இந்நிலையானது சில அரசாங்கத்தின் பிடிவாதமுள்ள அரசியல் நடவடிக்கைளினால் விமிர்சிக்கப்படுவது மாத்திரமல்லால் இதுவொரு சவால் நிறைந்த ஒன்றாகவும் உருவெடுத்துள்ளது.

More: https://www.cpalanka.org/liking-vilence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

## சம்பவக் கற்கை 2 : இணையதள செயலிழப்பும் சமூக ஊடகங்களின் முடக்கமும்.

வலையமைப்பு செயலிழப்பு: எனப்படுவது வேண்டுமென்றே இணையதள நிரந்தர சேவைகளான நிரந்தர இணையதள கட்டமைப்பு, கையடக்கத் தொலைத்தொடர்பு வலையமைப்பு நிறுத்தல் அல்லது இவை இரண்டையும் ஒன்றாக மேற்கொள்ளல் போன்றவை அண்மைய காலங்களில் பல நாடுகளில் இடம்பெற்றிருப்பதை எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலைமைகள் பிரஜையொருவரின் தகவல் தொடர்பாடல் உரிமைகளுக்கு மிகப் பாரதூரமான அச்சுறுத்தல்களாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
அவ்வாறு இடம்பெற்ற அநேக நிலைமைகளின்போது அரசாங்கம் ஏன் இவ்வாறான இணையதள முடக்கத்தை மேற்கொண்டது என்பதற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்களை முன்வைக்கத் தவறியுள்ளது. எவ்வாறிருப்பினும் அவர்களால் முன்வைக்கப்பட்ட காரணங்களை நாம் பின்வரும் பிரிவுகளில் வகைப்படுத்தலாம். தேசிய பாதுகாப்பை நிலை நிறுத்தும் நோக்கத்துக்காக: தேர்தல் காலங்களில் நியாயமுள்ள தேர்தலொன்றை நடாத்துவதற்காக: கலவரங்கள் மற்றும் ஊர்வலங்களில் இடம்பெறக்கூடிய விடயங்களை தடுப்பதற்காக அல்லது பிரபல்ய பாடசாலைகளில் அல்லது பரீட்சைகளில் இடம்பெறக்கூடிய ஏமாற்று முறைகேட்டு விடயங்களை தடுப்பதற்கு எனக் கூறலாம்.
இணையதள முடக்கம் எனப்படும் விடயமானது இணையதள பாவனை உரிமைக்கான தரநிலையை கீழ்த்தரப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றே நோக்கப்பட வேண்டும். சுதந்திர இல்லம் எனும் சர்வதேச கருத்துச் சுதந்திர மேம்பாட்டு நிறுவனமானது 2010 ஆம் ஆண்டு முதல் கருத்துச் சுதந்திரத்துகான உரிமைகள் மிகப் பாரியளவில் மறுக்கப்பட்டு வந்து கொண்டே இருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது. சுதந்திர வலை எனும் அவர்களது வருடாந்த அறிக்கையில் உலகத்திலுள்ள 65 நாடுகளில் - அதாவது 87 வீதமான இணைய பாவனையாளர்களை உள்ளடக்கியதாக அமைந்தது. இதன்படி அரசாங்கத்தின் கொள்கை ரீதியான நடவடிக்கைகள் வருடத்துக்கு வருடம் கூடிக் குறைந்து கொண்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
2018 ஆம் வெளியிடப்பட்ட வலையமைப்பில் சுதந்திரம் என்ற அறிக்கையின்படி,"இவ்வாறான முடக்கும் செயல்கள் இணையதளத்தில் தவறான செய்திகளைப் பரப்புதல் எனும் கொள்கையை மழுங்கடிக்கும் செயலாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது". மேலும் இவ்வாறான நிலைமைகளில் நகரங்களிலும் மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வலையமைப்புத் தடுப்பானது மக்கள் தாம் மிக ஆபத்தான நிலையிலிருக்கும் போது அவை பற்றிய தெளிவான விளக்கங்களையோ அல்லது மேலதிகத் தகவல்களையோ தங்களுடைய உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை மழுங்கடிக்கும் செயலாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.
இணையதள தடையானது தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் விளைவுகளும் மிதமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த விடயம் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களினால் விபரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

“இணையதள நிறுத்தமானது பொருளாதார தொழில்நுட்ப மற்றும் உரிமைகள் தொடர்பான பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இவை இணையதள பாவனையாளர்களின் இணையதளம் மீதான நம்பிக்கையை குறைத்து மதிப்பிடும் செயலாகக் காணப்படுவது மட்டுமல்லாமல் உள்நாட்டு பொருளாதாரத்திலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அது மாத்திரமன்றி நாட்டின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையின் மீது அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலாகவும் கணிக்கப்படுகிறது. கொள்கை வகுப்பாளர்கள் இவைகள் பற்றி அதீத கவனம் செலுத்துவதோடு பாதுகாப்பையும் முன்னுரிமைப்படுத்த வேண்டும் என்று இணையதள சமூகம் (Internet Society) தனது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிட்டுள்ள தனது பொதுக் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2019 ஜூன் வரையிலும் இலங்கையில் சுமார் 04 சமூக ஊடக முடக்கங்கள் இடம்பெற்றுள்ளன. முதலாவது சமூக ஊடக முடக்கமானது 2018 மார்ச் மாதம் இலங்கையின் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில்  இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையின் போது இடம்பிடித்தது. அடுத்ததாக 21 ஏப்ரல் 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னர் சுமார் தொடர்ச்சியாக 16 நாட்கள் மூன்று முறையாக பிரபல்ய சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் இந்த முடக்கமானது வெறுப்பூட்டும் பேச்சுக்களின் அளவு பெரிதாகக் குறைந்ததாகக் காணப்படவில்லை, கிடைக்கப்பெற்ற தரவு பகுப்பாய்வுகளின்படி மக்கள VPN போன்ற மாற்றுவழித் தளங்களைப் பயன்படுத்தி தொடர்ந்து  பிழையான கருத்துக்களையும் தகவல்கள் பரிமாற்றத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

More at: https://freedomhouse.org/report/freedom-net/freedom-net-2018/rise-digital-authoritarianism
https://www.internetsociety.org/wp-content/uploads/2017/11/ISOC-PolicyBrief-Shutdowns-20171109-EN.pdf

## கலந்துரையாடல்களுக்கான விடயங்கள்

இவை பற்றிய மேலதிகமான விடயங்களை அறிந்து கொள்ள இங்கு சில கேள்விகளும் கலந்துரையாடல் விடயங்களும் தரப்பட்டுள்ளன.

- இணைய வழி மற்றும் இணைய வழியற்ற பாவனைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் மீண்டும் மீண்டும் தொடர்பு படுத்தி கூறப்படுவதால் இதனை கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது. உங்களுடைய டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் இணையதள அநுபவங்களின் அடிப்படையில் கலந்துரையாடவும்.

- சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினைப் பற்றி குறிப்பாக தனியுரிமை பற்றி எடுத்துக்கூறும் உறுப்புரை 12 மற்றும் கருத்துச் சுதந்திரம் பற்றி தெரிவிக்கும் உறுப்புரை 19 பற்றியும் கலந்துரையாடவும்.

- கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமானது சிலவேளைகளில் மற்றவர்களை பாதிக்கும், கவலையளிக்க வைக்கும் அல்லது தொந்தரவு செய்யும் ஒரு விடயமாக மாறுவதனால் அது தனது பிரபல்யத் தன்மையை இழக்கிறது. நீங்கள் இக்கருத்துடன் உடன்படுகிறீர்களா?

- டிஜிட்டல் தனியுரிமை, கண்காணிப்பு மற்றும் மறைகுறியிடல் போன்றவை எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளது? முழுமையான இணையதள தனியுரிமைப் பாதுகாப்பானது எல்லா நேரத்திலும் சாத்தியமாகாது, ஆகவே நபர் ஒருவர் எவ்வாறு தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?

- இணையதளம் பற்றி பெண்ணியல் கோட்பாட்டின் 17 பண்புகளும் பாதுகாப்பான, பொறுப்புணர்வுடன் கூடிய மற்றும் உபயோகமுள்ள பாவனையாளர்களாக மாற்றுவதற்கு எவ்வாறு உதவியளிக்கிறது?

- இணையதளத்தில் சுதந்திரம் எனப்படுவது ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர இல்லம் எனும் அமைப்பினால் வருடாந்தம் வெளியிடப்படும் உலக இணையதள சுதந்திரம் பற்றிய அறிக்கையாகும். இணையதளத்தில் சுதந்திரத்தின் இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையைப் படித்த நீங்கள் அதில் உமது நாடு பற்றி கூறப்பட்ட விடயங்களுடன் ஒத்துப் போகிறீர்களா என்பதைக் கூறவும
https://freedomhouse.org/report-types/freedom-net

- அரசாங்கங்கள் (இலங்கை உட்பட) மேற்கொள்ளும் முழுமையான இணையதள முடக்கமானது அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக ஊடகங்கள் மீதான தடை அல்லது கலந்துரையாடல் வலைத்தளங்கள் தேசிய பாதுகாப்பு, சட்டத்தை நடைமுறைப்படுத்தல் அல்லது சுதந்திரமான தேர்தல் போன்ற காரணங்களை முன்னிட்டு இவ்வாறான தடைகளை விதிப்பது எந்த நிலையிலாவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா? கலந்துரையாடுக.

## கற்றுக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள்

இந்தப் பகுதியை கற்றறிந்ததன் பின்னர் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவுகளைப் பெறுவீர்கள்

- இணையதளத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து டிஜிட்டல் உரிமைகளும் மனித உரிமைகளே ஆகும். இந்த உரிமைகள் மேம்பாடானது உலகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளைப் பொறுத்தே இடம்பெறுகிறது.

- சில மனித உரிமைகள் இணையவழிப் பயன்பாட்டுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு காணப்படுகிறது. அவை கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமைகள், தரவுகளைப் பாதுகாப்பதற்கான உரிமையும் தனியுரிமைகள் மற்றும் குழுக்களில் இணைவதற்கான உரிமைகள்.

- தற்காலத்தில் இணைய பாவனைகள் அதிகரித்திருப்பினும் (மனித சனத்தொகையின் அரைவாசிக்கும் மேற்பட்டோர் 2018 இல் பயன்படுத்தியுள்ளனர்) இவற்றைப் பயன்படுத்த இயலாதவர்களை அடைவது எமது முக்கிய இலக்காகும்.

- வெப்தள பாவனையும் இணையதள பாவனையும் இரு முனை சம்மந்தப்பட்ட விடயமாகும். மனித உரிமை மேம்பாட்டுக்கு இவை முக்கியமான விடயமாகக் காணப்பட்டாலும் இணையத் தள முடக்கம் மற்றும் அவற்றில் இடம்பெறும் பதிவுகளைத் தடுத்தல் மற்றும் கண்காணித்தல் போன்றவை பிடிவாத நிலையையே காட்டுகிறது.

- இணையதளம் மற்றும் இணைய வழியற்ற முறைகளிலும் வெறுப்பூட்டும் பேச்சுச் செயற்பாடுகள் மலிந்து காணப்படுகிறது. எனவே இவையிரண்டிற்கும் சமூகம் பொறுப்பான முறையில் பதிலளிக்க வேண்டும். சட்ட ரீதியான தர்க்கத்துக்கும் கருத்து மாறல்களுக்கும் இடம் கொடுத்து உலகுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து எமது சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

- வெறுப்பூட்டும் பேச்சுகளுக்கெதிரான சட்ட ஏற்பாடும் அவசியமானவை ஆனாலும் இவை போதுமான நிலையில் இல்லை. சட்ட ரீதியற்ற முறையான சமூகம் பற்றிய கல்வியறிவு, டிஜிட்டல் இலக்கியம் மற்றும் இணையவழி சமூகத்தின் அறிவை மேம்படுத்த வைப்பது வெறுப்புச் செயற்பாடுகளை தடுக்கும் சிறந்த வழி முறையாகும்.

- இணையதளமானது உலகளாவிய ரீதியிலும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய தளமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது. அதன் வடிவமைப்பானது எவராலும் தடுக்க முடியாதவாறு காணப்பட்டாலும் சில அரசாங்கங்கள் அவர்களது நாட்டுக்குள் அதனை ஊடறுத்து விடயங்களைத் தடுக்கவும் முடக்கவும் செயற்பட்டுள்ளது.

- இணையதளமானது உலகயாவிய தடையற்ற, பால் நிலை பாகுபாடற்ற, பாதுகாப்பான மற்றும் எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய இயங்குதளமாக காணப்பட வேண்டும் என்பதற்காக சிவில் சமூகக் குழுக்கள் தங்களாலான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது. இந்த விடயங்கள் கடந்த காலங்களில் இணையத்தள உரிமைகள் பட்டயம், இணையதளம் பற்றிய பெண்ணியல் கொள்கைகள் மற்றும் இன்னும் பல விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மேலதிக வாசிப்புகளுக்காக

கருத்துச் சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையாளரின் அறிக்கை
https://www.ohchr.org/en/issues/freedomopinion/pages/opinionindex.aspx

தனியுரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையாளரின் அறிக்கை
https://www.ohchr.org/EN/Issues/Privacy/SR/Pages/SRPrivacyIndex.aspx

இணையத்தில் சுதந்திரம் : உலகளாவிய இணையதள சுதந்திரம் பற்றிய ஆண்டறிக்கை
https://freedomhouse.org/report-types/freedom-net

உலக இணையதள அறிக்கை 2017: டிஜிட்டல் எதிரகாலத்துக்கான பாதை, இணையதள சமூகம், 2017
https://www.internetsociety.org/globalinternetreport/

முன்னேற்ற தொடர்பாடல் அமைப்பு (Association for Progressive Communications (APC)
https://www.apc.org/

வன்முறையில் விருப்பம் கொள்ளல் : இலங்கையில் முகப்புத்தகங்களில் இடம்பெற்ற வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்கள் பற்றிய ஒரு ஆய்வு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2014.
https://www.cpalanka.org/liking-violence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

உறுப்புரை 19 - டிஜிட்டல் உரிமைகள் பற்றிய தேடல் (கருத்துச் சுதந்திரம் மற்றும் குழுக்களுடன் ஒன்றிணைவதற்கான உரிமைகள்)
https://www.article19.org/issue/digital-rights/

Electronic Frontier Foundation (EFF)
https://www.eff.org/

ஐரோப்பிய கருத்துச் சுதந்திர இணையதளங்களின் குழு
https://www.coe.int/en/web/freedom-expression/internet-freedom1

ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் - தனியுரிமைகளுக்கும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான உரிமைகள், Privacy International இன் ஒரு ஆய்வு
https://privacyinternational.org/blog/1111/two-sides-same-coin-right-privacy-and-freedom-expression

## மேலும் சில வளங்கள்

**EROTICS:** பாலியல் மற்றும் இணையதளத்துக்கிடையிலான குறுக்கு வெட்டுத் தொடர்பு பற்றி ஆராயும் இணையத்தள ஆராய்ச்சியாளர்களின் வலையமைப்பு
https://erotics.apc.org/

**Gender and Internet Governance eXchange:** இணையதள பாவனை, கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திகளில் பெண்களின் பங்களிப்பு பற்றிய விடயங்களில் காணப்படும் இடைவெளிகளை இல்லாமல் செய்வதற்காக செயற்டுதல்
http://gigx.events.apc.org/en/home-page/

**Gender Evaluation Methodology:** பால்நிலை பற்றிய விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை எவ்வாறு மதிப்பீடு செய்வது
http://www.genderevaluation.net/

**GenderIT.org:** பால்நிலை மற்றும் தொழில்நுட்பக் கொள்கை பற்றிய உலகின் முதலாவது இணையதளம
https://www.genderit.org/

**Take Back the Tech!** பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க மற்றும் தொழில்நுட்பங்களைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு அழைப்பு
https://www.takebackthetech.net/



MODULE 2

# டிஜிட்டல் தொடர்பாடல்

# டிஜிட்டல் தொடர்பாடல்

மனித படைப்புக்களான நாம் அதிகளவில் மற்றவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம். நாம் மொழியினையும் ஊடகங்களையும் மற்றவர்களுடன் தொடர்பினைப் பேணும் சாதனமாகப் பயன்படுத்துகிறோம்.

நாங்கள் மற்றவர்களுடன் சாதாரணமான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில்லை, இவற்றை விவரணமும் செய்கிறோம். இவை எம்மை கதை கூறுபவர்களாக மாற்றுகிறது. கதை கூறுவதானது மனித நாகரீகத்தைப் போன்றதொரு பழைமையான வரலாற்றைக் கொண்டது.

தற்காலத்தில் எமக்குக் கிடைக்கும் டிஜிட்டல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதியானது மிக துல்லியமான இலகு சேவையாக மாத்திரமில்லாமல் பலருடன் வேகமாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் வாயப்பளிக்கிறது. எவரும் தன்னிடம் இருக்கும் சாதாரண தொலைத்தொடர்பு சாதனங்களான ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி மூலம் முழு உலகுக்கும் தனது கருத்துக்களை தெரிவித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இதற்காக சமூக ஊடகங்கள், ப்ளொக்ஸ் மற்றும் பொட்காஸ்ட் போன்றவற்றையும் உபயோகிக்கின்றனர்.

இது ஒரு ஜனநாயக முறையிலான தொடர்பாடல் முறைமையாகியுள்ளது. ஏனெனில் அதனைப் பயன்படுதக்கூடிய அதிகாரமும் கடப்பாடுகளும் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர்பாடல் எனப்படுவது ஒருவருடைய கருத்தை மட்டும் தெரிவிக்கும் செயற்பாடு அல்ல. மேலும் இது தகவல்களைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு ஆயுதமும் மட்டுமல்லாமல் சமூகத்தை ஒழுங்கமைத்து, ஒன்று திரட்டி அவற்றை கட்டியெழுப்பும் ஒரு முறைமையும் ஆகும். வேறு பிரதேசத்தில் வாழும் மக்களுடன் தங்களுடைய நேர வித்தியாசத்துக்கும் அப்பால் சென்று கருத்துக்களை பகிர்ந்தும் கலந்துரையாடியும் உறவுகளைப் பேண இது உறுதுணையாகவுள்ளது.

தொடர்பாடலானது இரு வழித் தொடர்பாடலாக இருப்பதன் மூலமே பயனுள்ளதாக காணப்படும். வெகுஜன ஊடகங்கள் (அநேகமாக) ஒரு வழித் தொடர்பாடல்களைக் கொண்டிருப்பதனால் தகவல்களை பதிவிடுபவருக்கும் அதனைப் பார்ப்பவர்களுக்குமிடையிலான தொடர்பை மட்டுமே இதில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதனடிப்படையில் நோக்குமிடத்து இணையதள வாயிலான தொடரபாடல்கள் இரு வழிகளிலும் இடம்பெறலாம். இணையமானது இலகுவான ஊடாட்டத்துக்கும் பங்குபற்றுதலுக்கும் வாய்ப்பளிக்கிறது. ஆயினும் இதனை பயன்படுத்துபவரின் அடிப்படையிலேயே அவை எந்த நோக்கத்துக்காக, மரியாதையாக அல்லது வேறு எந்த விடயத்துக்குப் பயன்படுத்துவது என்ற விடயம் தங்கியுள்ளது.

தொடர்பாடலின் மிக முக்கியமான அம்சம் யாதெனில் பங்குபற்றுதல் முறையிலான செவிமெடுத்தல் ஆகும். இது உரிய நேரத்தில் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி தங்களது கருத்துக்களையும் உடனுக்குடன் பதிவிடவும் உதவி புரிகிறது. சில வேளைகளில் சமூக ஊடகங்களில் இடம்பெறும் சூடான விவாதங்களில் எமக்கு என்ன விடயம் சொல்லப்பட்டது என்பதை மறந்து விட்ட நிலையும் காணப்பட்டிருக்கிறது. இந்த அலகில் நாம் எவ்வாறு டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தி ஒழுக்கமான முறையில், மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொடர்பாடல்களை மேற்கொள்வது என்பதைப் பற்றி பார்ப்போம். தயவு செய்து இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் ஒரு முன்மாதிரி வரைபு மட்டுமே என்பதைக் கருத்திற்கொண்டு இவற்றைப் பயன்படுத்தி எமது தொடர்பாடல் திறன்களை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வது மிகச் சிறந்த அம்சமாகும்.

# முக்கிய சொற்கள்


டிஜிட்டல் தொடர்பாடல் என்பது பலருக்கும் பல வகையான அர்த்தங்களைக் கொடுக்கலாம்.

ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட வரைவிலக்கணத்தில் கூறுவதாயின் டிஜிட்டல் தொழிநுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு, ஒளிபரப்பு மற்றும் இணையதள வசதிகளுக்காக வெற்றிகரமான முறையில் ஒளிக்கற்றலலைகளை அனுப்புதலும் பெறுதலும் என்று கூறலாம்.

டிஜிட்டல் தொடர்பாடலானது இணையதள முறைமையில் டிஜிட்டல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி தனிநபர் மற்றும் குழுக்கள் தகவல்களை பரமாறிக் கொள்ளும் முறை என்றும் பொருள்படும். இவ்வாறான தகவல் பரிமாற்றங்கள் தனிப்பட்டவையாகவும் பொதுவானதாவும் அமையலாம்.

டிஜிட்டல் கதை கூறல் எனப்படுவது பலவிதமான டிஜிட்டல் விமர்சனங்களைக் குறிக்கும். உதாரணமாக இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட கதை கூறும் முறை, கருத்துக்களுடனான கணனி விளையாட்டுக்கள், மற்றும் ஒலி ஒளிபரப்புக்கைக் குறிப்பிடலாம். டிஜிட்டல் கதை கூறும் எந்தவொரு நபரும் தனது வாழ்க்கை அனுபவங்களை, விருப்பு வெறுப்புக்களை அல்லது அவை தொடர்பான விடயங்களை டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தி தெரியப்படுத்தும் ஒருவராக இருக்கலாம்.

திறம் வாய்ந்த தொடர்பாடல் எனப்படுவது அரச, தனியார் வியாபார மற்றும் மற்றைய சமூக நிறுவனங்களின் ஏற்புடைமையை அறிந்து அதற்கேற்ற வகையில் கருத்தாழமிக்க முறையில் தொடர்பாடல்களை முன்னெடுப்பதைக் குறிக்கும்.



# டிஜிட்டல் தொடர்பாடல்களின் பல்தரப்பட்ட வகைகள்

டிஜிட்டல் தொடர்பாடல்களின் முறைமை, அதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் மற்றும் அதற்கான தளங்கள் என்பன கடந்த சில காலங்களாக மிக வேகமாக வளர்ந்து வந்திருந்ததை எம்மால் காண முடிகிறது. பொதுவாக பயன்பாட்டிலுள்ள சிலவற்றை இங்கு பின்வருமாறு நோக்கலாம்.

- இணையத்தளம எனப்படுவது கணனிகளுக்காக உருவாக்கப்பட்ட உலகிலுள்ள மிகப்பெரும் தொடர்பாடல் வலையமைப்பாகும். இவை மில்லியன் கணக்கான உள்நாட்டு கல்வியியல்சார், வியாபார ரீதியான மற்றும் அரச நிறுவனங்களின் இணைப்பை வலையமைப்பு முறைமையினூடாக பல்வேறுபட்ட தகவல் பரிமாற்ற முறைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு தொழில்நுட்ப முறையாகும். இப்பெயர் சில வேளைகளில் வலை என்று சுருக்கமாக அழைக்கப்டுவதுமுண்டு.

- **WORLD WIDE WEB ("WWW" OR "THE WEB")** எனப்படுவது உலகில் மிகப்பிரபல்யமாக மாற்றமடைந்துள்ள இணைய தளங்கள் உபயோகிக்கும் இணைய பகுதிகளாகும். இது முதன் முதலில் 1989 ஆம் ஆண்டு Tim Berners-Lee என்பவரால் HTML முறையின் மூலமாக புதிய இணைய பகுதியொன்றின் உருவாக்கத்துடன் கண்டுபிடிக்கப்பட்டது. இணைய தளங்கள் hypertext எனும் சொல்லிடைவெளிகளற்ற பகுதிகளினைக் கொண்டே உருவாக்கப்படுகிறது. மேலும் இவை HTML முறையிலேயே எழுதவும்படுகிறது..

- மின்னஞ்சல் **(EMAIL)** எனப்படுவது இணையதளத்தில் மின்னஞ்சல் கணக்கொன்றை வைத்திருப்போர் மின்னஞ்சல்களை அனுப்பவும் பெறவும் பயன்படுத்துவதாகும். இவைகள் கிட்டத்தட்ட தபால் மூலம் அனுப்பப்படும் கடிதத்தை ஒத்தவையே ஆனாலும் மிகவும் வேகமாக சென்றடையக்கூடியவை.

- **VOICE OVER INTERNET PROTOCOL (VOIP)** எனப்படுவது இணையதளத்தில் குரல் பதிவுகளை அனுப்பும் முறையாகும். இதில் அநேகமானவர்களால் அறியப்பட்டது Skype ஆகும. VOIP இனைப் பயன்படுத்துவது ஒரு செலவு குறைந்த முறையாகும். மேலும் இதைப்பயன்படுத்ததுவதற்கு தொலைபேசியைப் போன்று தனியொரு இணைப்பைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. இன்றைய காலத்தில் காணப்படும் அநேகமான VoIP சேவைகள் ஒலி மற்றும் ஒளி பதிவுகளை அனுப்பக்கூடிய வசதிகளைக் கொண்டு காணப்படுகிறது. வீடியோ பதிவுகளை அனுப்புவதற்கு அதிகளவான னுயவய தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

- கையடக்க தொலைபேசிகள (இவை handphones, cell phones, or cellular telephones என்றும் அழைக்கப்படும) என்பது நாங்கள் விரும்பிய வேளையில், விரும்பியவருடன், விரும்பிய இடத்திற்கு எடுத்து செல்லக்கூடிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட தொலைத்தொடர்பு சாதனமாகும் (வலையமைப்பின் செயற்பாட்டிற்கு அமைவாகவே இதைப் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது). ஆசியக் கண்டத்திலுள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அநேகமாக அடிப்படை வசதிகளைக் கொண்ட கையடக்க தொலைபேசிகளே பாவனையில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் இவை குறுஞ்செய்தி அனுப்புவதற்கும் மற்றவர்களுடன் கதைக்கும் தேவைகளுக்குமே மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளுக்குரிய இணையதள வசதிகள் (மிகவும்) குறைந்ததாகவும் காணப்படுகிறது. எல்லா வசதிகளையும் கொண்ட கையடக்க தொலைபேசிகள் ஒப்பீட்டளவில் போட்டோ மற்றும் இசை போன்றனவற்றை சேகரித்துக் தேவையேற்படின் கேட்டு மகிழவும் பயன்படுத்தப்படுகின்றன. தேவையேற்படின் இணையதளத்தில் உலாவரவும் இதை பயன்படுத்த முடியும். இவ்வாறான கையடக்க தொலைபேசிகள் ஸ்மார்ட் போன் அல்லது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் எனும் வரையறைக்குள் உட்படுத்த வேண்டுமாயின் அவை அன்ட்ரொய்ட (Android) அல்லது ஐ.ஓ.எஸ (iOS) போன்ற மூன்றாம் நிலை இலவச இயங்குதள வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும். சாதாரணமாக ஸ்மார்ட் தொலைபேசியொன்று கைகளால் உரசி பயன்படுத்தப்படக்கூடிய (touch screen) வசதிகளை திரையில் கொண்டிருக்கும், இவை அநேகமாக திரையின் 75 வீதமான பகுதியளவில் காணப்படும்.

- சமூக ஊடகங்கள் பொதுவாக இணையதளங்கள (websites), இயங்கு தளங்கள் (platform) மற்றும் செயலிகள், (apps) போன்றவற்றைக் கொண்டு அமையப் பெற்றிருக்கும். இவை பாவனையாளர்கள் தாங்கள் விரும்பியவர்களுடன் ஊடாட்டங்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் தாங்கள் விரும்பிய செயலிகளை உருவாக்கவும் பயன்படுத்தவும் உதவுகிறது. பாவனையாளர்கள் நாட்டுக்குள்ளே, சர்வதேச ரீதியில் அல்லது தங்களுடைய பிராந்திய ரீதியிலான விடயங்களில் தங்களை ஈடுபடுத்தவும் உதவுகிறது. இதே நேரத்தில் இந்த சமூக ஊடகங்களுக்குள் விகீ, ப்ளொக்ஸ் போன்ற செயலிகளின் தளங்களும் மற்றவர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள உதவும Facebook, Instagram, YouTube, Pinterest மற்றும் Twitter போன்ற சமூக வலையமைப்பு பகுதிகளையும் காணக்கூடியதாகவுள்ளது. தற்காலத்தில் காணப்படும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளின் அதீத பாவனையின் காரணமாக சமூக ஊடகங்களின் பாவனை ஒரு போதுமில்லாத அளவிற்கு அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

- **INSTANT MESSAGING (IM)** இணையதளத்தினூடான உடனடியாக குறுந்தகவல்களை அனுப்பப் பயன்படுத்தப்படும் ஒரு வகை செயலி ஆகும். இவ்வாறான சில செயலிகளில் தாம் ஒரு முறை அழுத்துவதன் மூலம் விரும்பிய விடயங்களை எழுத்து மற்றும் குறியீடு மொழியில் உடனடியாக அனுப்பக்கூடிய செயற்திறன்களைக் கொண்டும் காணப்படுகிறது. அதில் மிகவும் உயர்தரமான சில செயலிகள் கோப்புக்களை அனுப்ப, பெற, அழுத்தக்கூடிய இணையதள முகவரிகள், VoIP அல்லது வீடியோ முறையிலான அரட்டைகள் போன்ற செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. தற்கால உலகில் பலவகையான IM சேவைகள் காணப்படுகிறது இவற்றில் சில சமூக ஊடகங்களுடன் இணைந்ததாகவும் காணப்படுகிறது. எவ்வாறாயினும் ஒவ்வொரு IM சேவைகளும் தங்களுக்கேயான இயங்கு தளங்களையும் மென்பொருட்களையும் கொண்டே காணப்படுகிறது. இவ்வாறான IM சேவைகளில் இலங்கையில WhatsApp, Viber மற்றும Facebook messenger போன்றவை மிகவும் பிரபல்யமானதாகக் காணப்படுகிறது.

- **SMS (SHORT MESSAGE SERVICE)** அல்லது குறுந்தகவல் சேவைகள் என்பது அநேகமான தொலைபேசிகள், இணையதளங்கள் மற்றும் கையடக்க தொலைபேசிகளில் தற்காலத்தில் காணப்படும் இலகு குறுந்தகவல் பரிமாற்றல் முறையாகும். இம்முறையானது வரையறுக்கப்பட்ட எழுத்து அளவுகோல்களுடன்கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட குறுந்தகவல் முறையாகும். தற்காலத்தில SMS சேவைகளையும் விட மிஞ்சிய அளவுக்கு சில சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் இச்சேவைகளின் பாவனை அளவில் குறைவடைந்ததாக காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் SMS ஆனது தனக்கென்றதொரு இடத்தை இன்னமும் கொண்டுதான் காணப்படுகிறது. மேலும் தொழில்நுட்ப உலகில் தனக்கென்றதொரு இடத்தை இன்னமும் தக்கவைத்துக் கொண்டே காணப்படுகிறது. இத்தொழில்நுட்ப முறைக்கு உதாரணமாக, ஆபத்தொன்றின் போது தாமிருக்கும் இடத்தை இன்னுமொருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு அனுப்பப்படும் தாமிருக்கும் இடம் பற்றிய முன்னறிவிப்புக் குறுந்தகவல் பரிமாற்றத்தைக் குறிப்பிடலாம்.

- **BLOG** எனப்படுவது ஒருவரால் இணையதளத்தில் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பிறர் அறியும் பொருட்டு வழங்கப்படும் பதிவு முறையாகும். இவ்வாறான Blogs களை எழுதுபவர Blogger என்று அழைக்கப்படுவர். Blog ஒன்றினை எழுதுவதற்கு முன்னர் அந்நபர HTML பற்றிய அறிவைக் கொண்டிருப்பது மிக முக்கியமானதொன்றாகும், இவ்வாறான விடய அறிவு அவரிடத்தில் காணப்படாதவிடத்து இது பற்றிய விடய அறிவுள்ள ஒருவரை அணுகிப் பெற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும். பொதுவாக இவ்வாறு பிரசுரிக்கப்படும் விடயங்கள் மற்றவர்களின் பாவனைக்கு மிகவும் இலகுவான Content Management முறையின் மூலம் உருவாக்கப்பட்டிருப்பது பாவனையாளர்களையும் எழுதுபவரையும் மிகவும் இலகுபடுத்தும் ஒன்றாகக் காணப்படுகிறது. தனிநபரின் இயக்கப்படும blog களைக் போலவே குழுக்களினால் முகாமை செய்யப்படும் டிடழப களும் பாவனையில் காணப்படுகிறது. சில நிறுவனங்கள் இலவச blog சேவைகளை முகாமை செய்து வருவதனால் பாவனையாளர்களிடமிருந்து பரந்து பட்ட கருத்துக்களை பெற்றுக் கொள்ள முடிவதோடு இலகுவான கருத்தாடல் தளங்களையும் இந்த இருசாரார்களுக்கும் இது வழங்குகிறது.



## இணையதளம் மற்றும் வெப் ஆகியவை ஒன்றல்ல

இணையதளம் மற்றும் வெப் **(world wide web** அல்லது **www)** ஆகியவை அடிக்கடி மாறிமாறி பயன்படுத்தப்படும் சொற்றொடர்களாகும் ஆனாலும் இவை இரண்டும் ஒரே கருத்தை வெளிப்படுத்தும் சொற்களல்ல. இவைகள் இரண்டும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை ஆனாலும் இரு வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

இணையதளத்தின் தந்தை என்று அழைக்கப்படும் அமெரிக்காவிலுள்ள கணனி விஞ்ஞானியான **Vint Cerf** பின்வருமாறு விளக்குகிறார். "இணையதளமானது உலகிலுள்ள பல மில்லியன் கணக்கான கணனிகளை ஒன்றிணைக்கும் வலைப்பின்னல் கட்டமைப்புத் தொகுதியாகும். உலகளாவிய வலையமைப்பு அல்லது **World Wide Web** எனப்படுவது இணைய வலையமைப்பிலுள்ள ஒரு இயங்கு தளமாகும். இவை இரண்டும் ஒன்றின் மேல் ஒன்று பின்னிப் பிணைந்தே காணப்படுகிறது. நீங்கள் இணையதளத்திலுள்ள பல விடயங்களை அனுபவிக்க உறுதுணையாக இருப்பது **World Wide Web** இனாலேயே" என்று குறிப்பிடுகிறார்.

இணையதளமானது 1960 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தே ஒரு வலையமைப்பின் மூலம் பல கணனிகளை ஒன்றிணைத்து ஒருமித்த கருத்தாடல்களை மேற்கொள்ள வாய்ப்பு வழங்கி வருகிறது. இது முதலில் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டு பின்னர் ஐரோப்பாவிலுள்ள நிறுவனங்களுக்கும் பாவனைக்கு விடப்பட்டது. எவ்வாறாயினும் 1990 வரை இதன் பாவனைகள் உயர் தொழிநுட்பவியல் சார்ந்ததாகவே காணப்பட்டுள்ளது. பிரித்தானிய கணனி விஞ்ஞானியான **Tim Berners-Lee** என்பவரே இலகு பாவனை முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியிருந்தார்.

More: https://www.webopedia.com/DidYouKnow/Internet/Web_vs_Internet.asp

## ஜிட்டல் தொடர்பாடல்களிலுள்ள அடிப்படை அம்சங்கள்

நாம் மேலே குறிப்பிட்ட விடயத்துக்கு மேலாக இன்னும் பல டிஜிட்டல் மற்றும் வெப் ரீதியான விடயங்கள் காணப்படுகின்றன. இவற்றிலுள்ள அதிகளவான சேவைகள் கட்டணமின்றி இலவசமாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளது, எவ்வாறாயினும் தமக்கென ஒரு கணக்கை கொண்டிருப்பது அல்லது ளபைெ ரி பண்ணிக் கொள்வது இச்சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள உறுதுணையாக அமையும்.
இவ்வாறு அதிகளவான விருப்புக்கள் காணப்படுவதனால் அவையனைத்தையும் நீங்கள் பாவித்துப் பயன்பெற வேண்டும் என்பது பொருளல்ல. தற்காலத்தில் ஒரு போதுமில்லாத அளவுக்கு இந்த விடயத்தில் நாம் விரும்புவதை தெரிவுசெய்து புத்திக்கூர்மையாக மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது.
இதன் விளைவாகவே மூலோபாய (தந்திரோபாய) தொடர்பாடல் மிக முக்கியமாகக் காணப்படுகிறது. இது " ஒரு நிறுவனத்தின் இலக்கு ஒன்றை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் மூலோபாய தொடர்பாடல் முறையாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மூலோபாய (தந்திரோபாய) தொடர்பாடலில் முக்கியமான விடயம் யாதெனில் ஆராய்ச்சிகளின் மூலம் விடய அறிவுகளைப் பெற்றுக்கொண்டு திட்டங்களை புதியது புனைதல் முறையில் எடுத்துக் கூறுவதாகும். இதில் குறிப்பிடப்படும் தகவல்கள் அதனை பெற்றுக்கொள்ளுபவர்களை மனதில் வைத்துக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இதன் குறிக்கோளாகும் (ஆகக் குறைந்தது அடிப்படை பெற்றுக்கொள்ளுபவர்களை மனதில் கொண்டு இரண்டாவது குழுவையும் மனதில் கொண்டு இடம்பெற வேண்டும்˙)



மேலே காட்டப்பட்டவாறு, மூலோபாய (தந்திரோபாய) தொடர்பாடலை பின்வரும் நான்கு பெரும் பிரிவுகளில் அடக்கலாம் (இதிலுள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயற்பாடுகளைக் கொண்டு காணப்படும்)

- மதிப்பிடல் உதாரணமாக யாருக்கு எதை தெரிவிக்க வேண்டும் என்ற விடயத்தை முன்னராகவே திட்டமிட்டுக் கொள்ளல்
- திட்டமிடல் இது எமது பார்வையாளர்களைக் கவருவதற்காக எப்படியான முறையில் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்பதைக் குறிக்கும்
- தயாரித்தல் செய்திகளையும் அதற்குத் தேவையான பொருட்களையும் தயார் படுத்தல் (இவை மேலுள்ள இரண்டுக்கும் பிறகே இடம்பெறுகிறது)
- செயற்படுத்தல் அல்லது தெரிவித்தல் செய்திகளை பரப்புதல், அவற்றுடனே செல்லல் மற்றும் அநுபவங்களை மதிப்பீடு செய்தல்

மூலோபாய (தந்திரோபாய) தொடர்பாடலின் பண்புகளானது டிஜிட்டல் மற்றும் டிஜிட்டலற்ற இரு துறைகளிலும் மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. அரசியல், சமூக சிந்தனை அல்லது தயாரிப்பொன்றினை சந்தைப்படுத்துவதாக இருந்தாலும் மனதில் தெளிவான நோக்கம் ஒன்றினைக் கொண்டு தொடர்பாடல்களை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும்.



A helpful and non-technical guide to strategic communications is at: https://www.jrmyprtr.com/comms-101/

# டிஜிட்டல் சார்ந்த செய்முறைப் பண்பாடு

டிஜிட்டல் சார்ந்த செய்முறைப் பண்பாட்டின் பின்னணி யாதெனில் "நீங்கள் எவ்வாறு மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அதைப் போலவே மற்றவர்களையும் கவனித்தல்" ஆகும்.
இதன் அர்த்தம் யாதெனில் மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதோடு இணையதள பதிவுகளுக்கு பொதுவான மதிப்பும் மரியாதையும் வழங்குவது ஆகும். இது மற்றவர்களோடு கருத்தாடல்களில் ஈடுபடும்போது கட்டாயமாக மனதிற் கொள்ள வேண்டிய விடயமாகும்.
இணையதளத்தில் ஒருவர் இன்னொருவரை நல்ல முறையிலும் கெட்ட முறையிலும் விமர்சிப்பதற்கான முறைமைகள் காணப்படுகிறது. இதே போல இணையதளமற்ற வழிகளிலும் இவ்வகையான செயற்பாடுகள் காணப்படுகிறது. நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு வசனங்களும் மற்றவர்களில் மாற்றங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். இது உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை படம்பிடித்துக் காட்டுபவைகளாக அமைகிறது.


இங்கு மூன்று உதாரணங்கள் வழங்கப்படுகின்றன, அவற்றினை சற்று ஆராய்ந்து பார்ப்போம்

- நீங்கள் ஒரு சினிமா திரையரங்கிலோ அல்லது விளையாட்டுப் பூங்கா ஒன்றிலோ இருப்பாதாகக் கற்பனை பண்ணிக் கொள்ளவும். உங்களுக்கு அருகாமையில் நிற்கும் ஒருவருடைய கையடக்க தொலைபேசியில் அழைப்பொன்று வருகிறது. அவர் அந்த அழைப்பை நிறுத்தி விடாமல் (திரையில் உள்ள பொத்தானை அமுக்குவதன் மூலம் இதை மேற்கொண்டிருக்கலாம்) மிக ஓங்கி உயர்ந்த சத்தத்தில் சம்பாசனையில் ஈடுபடுகிறார். இப்படியான சம்பவங்கள் உண்மையில் அமைதியான இடங்களில் இடம்பெறக் கூடாது.
- நீங்கள் உங்களுடைய உறவினர் ஒருவருடனோ அல்லது நண்பர்களுடனோ அளவளாவிக் கொண்டிருக்கையிலையே உங்களது கையடக்க தொலைபேசிக்கு வரும் குறுஞ்செய்திகளுக்கு உடனடி பதில்களை அனுப்பிய வண்ணமே செயற்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையில் உங்களுடைய கவனமானது உங்களது தொலைபேசியின் மீதும் உங்களது நண்பர்கள் அல்லது நீஙகள் கதைத்துக் கொண்டிருப்பவர் மீதும் இரண்டாகப் பிரிகிறது. இது உண்மையிலே ஒரு ஒழுங்கற்ற விடயம் மட்டுமல்லாமல் உங்களது ஒழுங்கற்ற நேர முகாமைத்துவத்தையும் எடுத்துக் காட்டுபவையாகும்.
- நீங்கள் உங்களது மின்னஞ்சல் தொடர்பாடலிலோ அல்லது சமூக ஊடகங்களில் ஈடுபடும் போதோ நீங்கள் மேற்கொள்ளும் எல்லாப் பதிவுகளும் அல்லது எழுத்துக்களும் கெப்பிட்டல் எழுத்துக்களில (CAPITAL letters) மட்டுமே காணப்படுகிறது. நீங்கள் இவை ஒரு சாதாரணமான விடயம் என எண்ணிக் கொள்ளலாம், ஆனால் இவை மூர்க்கத்தனமான அல்லது உரத்த தொனியில் கருத்து வெளியிடும் ஒரு செயலாகவே கருதப்படுகிறது. டிஜிட்டல் செயன்முறைப் பண்பாடானது மின்னஞ்சல் அல்லது குறுந்தகவல்களின் போது கெப்பிட்டல் எழுத்துக்கள் பயன்படுத்துவதை ஒரு போதும் உற்சாகப்படுத்தாது. ஒரு தனி சொல்லுக்கு அல்லது வசனத்தை எழுதும் போது முழுமையான கெப்பிட்டல் எழுத்துக்களைப் பயன்படுத்தலாம் மாறாக முழு சம்பாசனையையும் அல்லது பந்தியையும் கெப்பிட்டல் எழுத்துக்களை மட்டும் கொண்டு மேற்கொள்வது ஒரு ஆரோக்கியமான விடயம் அல்ல (இந்த வசனம் எவ்வாறு நல்ல முறையில் மேற்கொள்வது என்பதனை எடுத்துக் கூறுகிறது).

மேற்கூறப்பட்ட உதாரணங்களை பார்க்குமிடத்து, முதலாவது விடயமானது நடத்தை பற்றி எமக்கு தெரியப்படுத்துகிறது, அதாவது சினிமா திரையரங்குகளில் மற்றவர்கள் அமைதியாக கண்டுகளித்துக் கொண்டிருக்கும் வேளையில் நாம் மிக சத்தமாக கலந்துரையாடல்களில் ஈடுபடுவதானது மற்றவர்களை தொல்லை படுத்தும் ஒரு விடயம் என்பதோடு அப்படியான செயற்பாடுகளை யாராலும் அனுமதிக்க முடியாது. சில வேளைகளில் அந்த இடங்களிலுள்ள முகாமைத்துவக் குழுக்களால் உங்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றவும் நேரிடலாம். இரண்டாவது மற்றும் மூன்றாவது உதாரணங்கள் நீங்கள் சமுதாயத்திலுள்ள நெறிகளை மீறிச் செயற்படுவதை விளக்குகிறது. இங்கு சமூகத்துக்கென்று ஒரு சட்டம் உண்டு என்பது பொருளல்ல மாறாக அதற்கென்று சில நெறிமுறைகள் உண்டு. ஆகவே அவற்றை மதித்து ஒழுகுவதுதான் சிறந்த விடயம்.

இணையதள பாவனையின் போதும் டிஜிட்டல் தொடர்பாடல்களின் போதும் மேற்கொள்ள வேண்டிய, மேற்கொள்ளப்படக் கூடாத பல விடயங்கள் உள்ளன. அவை பற்றியதொரு நீண்ட பட்டியலை இங்கு வழங்க முடியாது: பல தகவல்கள் இணையதளங்களிலும் வேறு தளங்களிலும் கிடைக்கின்றன.

ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் உங்களது தனிப்பட்ட வாழ்வில் நடைமுறைப்படுத்தும் நெறிமுறைகள் யாவற்றையும் இணைய பாவனையின் போதும் கடைப்பிடித்து ஒழுகவும். மரியாதை மற்றும் சரியான முறையில் நடந்து கொள்ளல் ஆகிய இரண்டும் இணையதள மற்றும் இணையதளமற்ற பாவனை ஆகிய இரண்டிலும் மிக முக்கியமான விடயமாகும்.




[2] See, for example, https://uncw.edu/oel/documents/pdfs/netiquette.pdf and https://www.verywellmind.com/ten-rules-of-netiquette-22285

## அசௌகரியத்தை ஏற்படுத்துபவரை ஊட்டி வளர்க்காதீர்கள்!

இணைய பேச்சு வழக்கில், **troll** எனப்படுவது மற்றவர்களை க்‘டத்துக்குள்ளாக்கும் அல்லது மற்றவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் ஒருவரைக் குறிப்பிடும். இப்படியானவர்கள் தேவையில்லாத நாடகங்களை அரங்கேற்றி அதன் மேல் மக்களின் பார்வையை திசை திருப்பி பாரதூரமான மீள் பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுமென்றே புனைந்த, வெறுப்பூட்டும், விடயத்தோடு சம்மந்தமே இல்லாத விடயங்களை பதிவிடுகின்றனர். இவர்களது நோக்கம் மற்றவர்களின் உணர்ச்சியை கிளப்புவதே தவிர வேறு ஒன்றுமில்லை.

இதில் பல வகையானவர்கள் உள்ளனர் - மக்களது பொதுக் கலந்துரையாடல்களில் வேண்டுமென்றே நஞ்சை விதைப்பவர்கள், அதே போல் “பேச்சுச் சுதந்திரம் (அதற்கும் ஒரு எல்லை உண்டு)” எனும் போர்வையில் பாகுபாடான அல்லது ஒரு குழுவை இழிவு படுத்தும் கருத்துக்களை தெரிவிப்பவர்களும் ஆவர். இவர்களால் மேற்கொள்ளப்படும் எல்லாக் கருத்துக்களும் அப்படியானவைதான் என்றும் அர்த்தம் கொள்ள முடியாது, சில வேளைளில் இந்த குழப்பகரமான கருத்தாடல்கள் நல்ல அர்த்தப்‘டியான ஒரு சம்பாசனைக்கும் இட்டுச் செல்லலாம். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து யாராவது ஒருவர் அசௌகரியத்தை மட்டும் ஏற்படுத்துகிறாரா அல்லது கருத்துக்களை முன்வைக்கிறாரா என்பதைத் தெளிவாகக் குறிப்பிட முடியாதுள்ளது.

இப்படிப்பட்டவர்களுடன் எவ்வாறு பழகிக் கொள்வது? சரியான ஆலோசனை:இ அவர்களது கருத்துக்களுக்கு பதில்களோ அல்லது மீள் ஊட்டமோ வழங்காமல் அவர்களை புறக்கணியுங்கள். நீங்கள் அவர்களை ஊட்டி வளர்க்காவிட்டால் அவர்கள் உங்களை தனிமையில் இருக்க விடுவார்கள்.



Source: https://theconversation.com/dont-feed-the-trolls-really-is-good-advice-heres-the-evidence-63657

“நீங்கள் பயன்படுத்தும் எல்லா ஊடகங்களுடனும் மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள், கோபமான எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டாம். நையாண்டித் தாக்குதல்கள். சம்மந்தமே இல்லாத பொய் வதந்திகள் பற்றிக் கவனமாக இருங்கள். நீங்கள் தொலைபேசியிலோ அல்லது நேரடியாகவோ மேற்கொள்ளும் விடயங்கள் இணைய வழியில் அவ்வாறே அமைந்து விடாது. மேலும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் -நீங்கள் அனுப்பும் எந்த மின்னஞ்சலோ, குறுந்தகவலோ சேமித்து வைத்து, பிரதியாக்கப்படுத்தி இன்னொருவருக்கு அனுப்பவும் முடியும். நீங்கள் இன்று அனுப்பிய அல்லது பதிவிட்ட விடயம் உங்களை வருடக் கணக்கில் அடிக்கடி க்‘டத்துக்குள் ஆக்கலாம்”

**LARRY MAGID, 21**ஆம் நூற்றாண்டுக்கான
டிஜிட்டல் செய்முறைப் பண்பாடு

## நகர்வு ஊடகவியலைப் புரிந்து கொள்ளல்

நகர்ந்து செல்லக்கூடிய வகையில் அல்லது mobile journalism எனப்படுவது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி ஒன்றின் உதவியுடனான டிஜிட்டல் கதைகூறும் செயற்பாடாகும். இவற்றில் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியானது படங்கள், ஒலி மற்றும் ஒளி வடிவங்களில் மாற்றங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இம்முறையின் மூலம் தொழில்வாண்மை ஊடகவியல் மற்றும் பிரஜை ஊடகவியல் ஆகிய இரண்டும் பயனடையும்.

இதற்கான ஒரு வரைவிலக்கணத்தை பின்வருமாறும் குறிப்பிடலாம். “ஊடகங்களில் சம்பாசனை மூலம் விடயத்தை தெரிவிக்கும் ஒரு புதிய அணுகுமுறை இதுவாகும். ஊடகவியலாளர்கள் அல்லது இதனைப் பயன்படுத்தும் செயற்பாட்டாளர்கள் கையடக்க ஊடகத்துறையில முழுமையாக தன்னாட்சி பெற்றவர்களாக காணப்படுவர்”

மொபைல் பத்திரிகைத்துறையில் ஸ்மார்ட்ட தொலைபேசிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. மேலும் இவை தொலைக்காட்சி, வானொலி செய்தி சேவைகள் மற்றும் ஏனைய ஒலி, ஒளிபரப்பு மற்றும் சமூக ஊடகங்களின் சேவைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன.

வேறு எந்த சாதனங்களை விடவும், ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் குறுக்குத் தளப் படைப்பாற்றல்கள் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புக்களை மிக அதிகமாக ஊக்குவிப்பவைகளாகக் காணப்படுகின்றன. போட்டோக்கள், வீடியோக்கள், பட வரைபுகள் போன்றன மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டு, அதனை செப்பனிட்டு அந்தக் கையடக்க தொலைபேசிகளின் உதவியுடனே சமூக ஊடகங்கள் அல்லது இணையதளங்களுக்கு பதிவேற்றம் செய்யக்கூடிய நிலை காணப்படுகிறது. பார்வையாளர்களின் கேள்விகள் மற்றும் கருத்து விமர்சனங்களுக்கும் அதன் மூலமாகவே உடனடியாக பதில்களை அனுப்பக்கூடிய வசதி வாய்ப்புக்களும் இதில் காணப்படுகிறது. இதற்காக chat apps, social messaging அநளளயபபைெ மற்றும் மின்னஞ்சல் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர்.



ஒரு ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியானது வானொலி, தொலைக்காட்சி, எழுத்துரு போன்ற எத்தகைய தேவைக்கும் இருந்த இடத்திலேயே இருந்து மேற்கொள்ளக்கூடிய கலையகமாகக் காணப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்ட சில உதாரணங்கள் நகர்வு பத்திரிகைத்துறையின் உபயோகங்களாகும்.

- எளிதானது : ஒரு தரமான கையடக்க தொலைபேசி ஒன்றினை உபயோகிப்பதன் மூலம் வீடியோ நிழற்படக் கருவிக்கு ஒத்த நிலையிலுள்ள படப்பிடிப்புக்களை மேற்கொள்ளலாம். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது சிறந்த வீடியோவொன்றினை மேற்கொள்வதற்கான தொழில்வாண்மை செயலியை தரவிறக்கம் செய்து கொண்டு படப்பிடிப்பு சாதனத்துக்கான உபகரணங்களை தயார்நிலையில் வைத்திருப்பதாகும்.

- எங்கும் எடுத்தும் செல்லக்கூடியது: அநேகமான நகர்வு நிலையில் வேலை செய்யும் ஊடகவியலாளர்கள் தங்களுடைய உபகரணங்களை முதுகின் பின்னால் சுமக்கும் பொதியொன்றில் வைத்துக் கொண்டு தாம் விரும்பும் இடத்துக்கு செல்லக்கூடியவர்களாக தொழிற்படுகின்றனர். 3 கிலோ கிராமைவிட குறைந்த நிறையையுடைய படப்பிடிப்புக் கருவி, மூவூசிக் கால், சிறிய மைக் மற்றும் வெளிச்சத்தை ஏற்படுத்தக்கூடிய மின்குமிழ்கள் போன்றன எந்த நிலையிலும் தேவையான இடத்துக்கு கொண்டு செல்லக்கூடிய வகையில் காணப்படுவதானது சிறப்பம்சமாகும்.

- புத்தியுள்ளது: மிக விவேகமாக செயல்படக்கூடிய சிறந்த ஊடகவியலாளர்களுக்கு ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியானது மிகவும் உபயோகமுள்ளதாகக் காணப்படுகிறது.

- அணுகக்கூடியது: ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியின் அளவு, அவை பொதுவாக எல்லா இடத்திலும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றமை போன்றன பேட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு எத்தகைய தொல்லைகளையும் ஏற்படுத்தாது. பிரபல செய்தி நிறுவனமான ராய்ட்டர் பத்திரிகை நிறுவனம் நடாத்திய ஆய்வொன்றில் மக்கள் பெரியதொரு தொலைக்காட்சி வீடியோ படப்பிடிப்புக் கருவியொன்றுக்கு முன்னால் நிற்பதைவிட சிறியதொரு கைத் தொலைபேசிக்கு முன்னால் நிற்பதற்கு அதிக விருப்பம் தெரிவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

- ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கும் தொழில்சார் நிபுணர்களுக்குமான செயலி: ஐபோன் மற்றும் அன்ட்ரொய்ட் கைத்தொலைபேசிகளில் பயன்படுத்தக்கூடிய அதிக எண்ணிக்கையிலான செயலிகள் காணப்படுகின்றன. சில மிக எளிமையானது என்பது மட்டுமல்லாமல் அசைவுகளுடன் கூடிய நகர்வுப் படங்கள், தலையங்கங்கள் மற்றும் இசை போன்றனவற்றை அந்த செயலிகளிலேயே பதிவேற்றக்கூடிய வகையில் காணப்படுகிறது.

# பிரதான சமூக ஊடகங்களை பயன்படுத்துபவர்களுக்கான உதவிக் குறிப்புகள்

**Twitter**

- சதுரக் குறியீடுகளையே உபயோகிப்பது சிறந்தது – சில நிலையான குறியீடுகளான #LKA போன்றவற்றைப் பயன்படுத்தும் போது இலங்கை பற்றிய முழுமையான பதிவுகளை இலங்கையைப் பின்தொடர்பவர்களுக்கு அறியப்படுத்தலாம். அதே போன்று அளவில் சிறியதான ஆனால் கருத்தாழமிக்க சதுரக் குறியீடுகளைப் பயன்படுத்தும் போது இது அதிக விளைவினை ஏற்படுத்தும். இது நாங்கள் எந்த விடயத்தை குறிப்பிட முயன்றோமோ அதே விடயத்தை பின்தொடர்பவர்களையும் விடயத்தின்பால் ஈர்க்க வழியமைக்கும்.
- உங்களுடைய எல்லா பதிவுகளையும் அல்லது கதைகளையும் ஒரே வகையான தொடர் நூலில் கொண்டு வரும்போது உங்களுக்கும் ஏனையவர்களுக்கும் இவை பற்றிய தெளிவான விளக்கம் கிடைக்கப்பெறும்.
- கூட்டத்தை வளர்க்கும் தகவல் முறைமை – தகவல்களை அல்லது மற்றவர்களின் கருத்துக்களை அறிவதற்காக விடப்படும் கோரிக்கை விண்ணப்பமானது உங்களது கட்டுரைகளுக்கு அல்லது பதிவுகளுக்கு அதிக விடயங்களை வழங்குபவைகளாக அமையப்பெறும். இதற்கான காரணம் யாதெனில் நீங்கள் மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கருத்தாழமிக்க பதில்கள் மற்றும் ஆலோசனைகளே ஆகும்.
- உங்களுடைய பதிவுகளில் படங்களையும் வீடியோக்கள் அல்லது ஓடியோக்களை செயற்படுத்த வைக்கும் செயலிகளையும் இணையுங்கள் - தற்போதைக்கு கிடைக்கும Twitter பற்றிய கொள்ளளவு அறிக்கையின்படி இது சுமார் 2.20 நிமிடங்கள் வரை கொள்ளளவுள்ள வீடியோக்களை பதிவேற்ற இடமளிப்பதாக அறிய முடிகிறது. இதே போன்று நீங்கள் இவற்றில் தரவேற்றம் செய்யும் வீடியோக்களை YouTube மற்றும் SoundCloud போன்ற செயலிகளிலும் இயக்க முடியும். இவ்வாறு அமைவானது பாவனையாளர்களுக்கு மிகச் சிறந்தது என்பதோடு அதிகமானவர்களை இதன்பால் ஈர்க்கவும் வழியமைக்கிறது.

**Facebook**

- உங்களுடைய வீடியோக்களை நேரடியாகவே முகப்புத்தகத்தில் பதிவேற்றி விடுங்கள் - இவ்வாறு செய்யாமல் வேறு செயலிகளைப் பயன்படுத்தி வீடியோக்களில் மாற்றம் ஏற்படுத்தும் போது உண்மையான அநுபவங்களை பெற மாட்டீர்கள்.
- நீங்கள் முகப்புத்தகத்தில் போட்டோக்கள், வீடியோக்கள் போன்றவற்றை பதிவேற்றம் செய்யும் போது அதற்கென வேறான கோப்புக்களை உருவாக்கி அதன் பெயர்களை அல்லது ஏதாவது நிகழ்வொன்றின் போது இடம்பெற்றிருந்தால் அந்த நிகழ்வின் பெயரை வழங்குங்கள். வேறு தளங்களுக்கு பகிர்ந்து கொள்ள விரும்பினால் அதன Link இனையும் வழங்குங்கள்.

**Instagram**

- பார்க்கக்கூடிய நிலையிலுள்ள உள்ளடக்கங்கள் எப்போதும் நகர்ந்து செல்லக்கூடிய உள்ளடக்கங்கள் - விடயத்தை தெரிவிக்கக்கூடிய நன்றாக பெறப்பட்ட படங்கள் நீண்ட கட்டுரைகளையும் விட அதிக கருத்துக்களை தெரிவிக்ககூடிய வல்லமை படைத்தவை.

- Instagram இல் அதிக செயற்பாடுகளைக் கொண்ட இளைய சமுதாயத்தை கவரக்கூடிய வகையில் உங்கள் கருத்துக்களையும் பதிவுகளையும் இடுங்கள். இந்த இளம் சமுதாயத்தினர் அவற்றை அவர்களுக்கான தகவல் கிடங்காக பயன்படுத்துவது மட்டுமல்லாமல் இந்த தகவலை பிறருக்குத் தெரியப்படுத்தியும் மற்றவர்களை அதன்பால் ஈர்க்கவும் செய்வார்கள்.

- வழமை போல் தொடர்நது பயன்படுத்துங்கள், எப்பொழுதும் சதுரக்குறியீட்டுடன் செய்திகளை வெளியிடுங்கள் - உரைகள் முடிவுற்றதன் பிற்பாடு உங்களுடைய சதுரக்குறியீடுகளை பயன்படுத்துங்கள், அவை பாவனையாளர்களுக்கு ஒரு ஒழுங்கான பார்வையை வழங்கும்.

- உங்களுடைய பதிவுகளில் உங்களை போன்ற நீங்கள் பதிவிடும் நபர்களையும Tag செய்து விடுங்கள் - மனித உரிமைக் குழுக்கள் போன்றன.

- நடைபெற்றுப் கொண்டிருக்கும் ஒரு விடயம் என்றால் கதைகளுடன் சேர்த்து பதிவிடுங்கள். எப்பொழுதும் உங்களுடைய பதிவுகளுடன் பொதுவான சதுரக்குறிகளுடன் விடயத்தையும் இணையுங்கள் . உதாரணமாக #LKA, #SriLanka போன்றவை.

நீங்கள் மிக அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட செயலிகளைக் கொண்டு செயற்பாடுகளில் ஈடுபடுவீர்கள், ஆனாலும் இதில் முக்கியமான விடயம் யாதெனில் நீங்கள் யாருடன், எதற்காக, எப்போது தொடர்பு கொள்கிறீர்கள் என்ற விடயத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## பாதுகாப்பு மற்றும் நெறிமுறையான ட்ரோன்களை (ஆளில்லா பறக்கக்கூடிய) பயன்படுத்துதல்

ஆளில்லா உலங்கு வான்வழி வாகனங்கள (Unmanned aerial vehicles (UAVs) அல்லது ட்ரோன் எனப்படுவது அநேகமாக இராணுவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். ஆனாலும் கடந்த சில காலமாக சாதாரண மனிதர்களின் எவருக்கும் பாதிப்பேற்படுத்தாத நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. ட்ரோன்களின் சந்தை விலைகளிலும் பாரியளவு மாற்றங்கள் தற்காலத்தில் ஏற்பட்டுள்ளது (அடிப்படை அம்சங்களைக் கொண்ட ட்ரோன்கள் கொழும்பில் இலங்கை நாணய மதிப்பில் 30,000) ஆனாலும் அதன் பன்முகத்தன்மை அதிகரித்து விட்டது எனலாம். இவ்வாறான வருகையானது பல புதிய விடயங்களான செய்தி சேகரிப்பு, அனர்த்தங்களுக்குப் பின்னரான நிலையில் மேற்கொள்ளும் மதிப்பீடு, மற்றும் ஸ்மார்ட் விவசாயம் போன்ற விடயங்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது எனலாம்.


இலங்கையில் ட்ரோன் பாவனையாளர்களாக படப்பிடிப்பாளர்கள், தொலைக்காட்சிகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இதன் உயரிய சேவை பாவனையாளர்களான "பெரும் காட்சிகள்" கால நிலை மாற்றம், வளங்களில் நிலவும் பற்றாக்குறை, மற்றும் அரசியல் குழப்பநிலைகள் போன்றவற்றை படம்பிடித்து மக்கள் மயப்படுத்தும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்றனர். ட்ரோன் மூலம் வழங்கப்படும் காட்சிகள் களத்திலிருந்து வழங்கப்படும் ஊடக அறிக்கை மற்றும் புலனாய்வு ஊடகத்துறை போன்றவற்றுக்கு மேலதிக பெறுமதி சேர்ப்பவைகளாகக் காணப்படுகிறது.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ஒரு சில ஊடகவியலாளர்களே இவற்றை உபயோகித்து படம்பிடிப்பது பற்றிய பயிற்சிகளைப் பெற்றிருந்தனர். குறிப்பாக கூறுமிடத்து சஞ்சனா ஹட்டொடுவ மற்றும் அமந்தா பெரேரா போன்றவர்கள் இத்தகைய பயிற்சிகளை வழங்கும் முன்னணி பயிற்றுவிப்பாளர்களாக காணப்பட்டனர். பருமட்டப்பார்வை எனும் முறையினைப் பயன்படுத்தி உலர் வலயங்களில் காணப்படும் வறட்சிகளின் தாக்கங்கள் பற்றிய நல்ல பல கதைகளையும் வழங்கியிருந்தனர். இதே போன்று மக்கள் நெருக்கமாக வாழும் கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடி எனும் கிராமத்தில் காணப்பட்ட குப்பைகளினால் ஏற்படும் பிரச்சினைகள் அதே போன்று ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் நிலப்பயன்பாடு பற்றிய மிக நெருங்கிய தோற்றப்பாட்டைக் காட்டும் படங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் ட்ரோன்களின் பாவனையால் கிடைக்கப்பெறும் நன்மையைப் போல பல தீமைகளும் சமூகத்துக்கு ஏற்படத்தான் செய்கிறது. இது மக்களின் தனிப்பட்ட விடயங்களுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் பயன்படுத்தப்படலாம், அதே போன்று பொது பாதுகாப்புக்கும் சவாலாக அமைந்து விடலாம். ஏற்கனவே சில ஊடக நிறுவனங்கள் பொதுப்பாதுகாப்பு மற்றும் ஊடக தர்மம் என்பவற்றை புறம் தள்ளிவிட்டு தங்களது நடவடிக்கைகளுக்காக இதனைப் பயன்படுத்தியும் உள்ளனர். உதாரணத்துக்கு கூறுமிடத்து கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியரும் ஊடகவியலாளருமான மறைந்த லசந்த விக்கிரமதுங்கவின் உடல் அடக்கம் செய்யப்பட்டு மேலதிக் விசாரணைகளுக்காக கொழும்பு பொது மயானத்தில் தோண்டி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் ட்ரோன் ஒன்று வானில் பறக்கவிடப்பட்டு உலா வந்ததை இங்கு குறிப்பிடலாம். இது மறைந்த

ஊடகவியலாளரின் குடும்பத்தின் தனிப்பட்ட விருப்புக்கு அப்பாற்பட்டே மேற்கொள்ளப்பட்டது என்பது இங்கு நினைவூட்டத்தக்கதாகும். இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையானது ட்ரோன் பாவனைக்கான ஒழுங்கு முறையொன்றினை ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்துப் பாவனையாளர்களுக்கும் வழங்கியிருக்கிறது. 1 கிலோ கிராம் எடையை விடக்குறைந்த எந்தவொரு ட்ரோனும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட தேவையில்லை, அதே நேரம் 1 கிலோ கிராமுக்கும் 25 கிலோ கிராமுக்கும் உட்பட்ட எல்லா ட்ரோன்களும் பதிவு செய்யப்பட வேண்டும் ( 25 கிலோ கிராமுக்கு மேற்பட்ட எவையும் பறப்பதற்கு அனுமதியில்லை) என்பதே இந்த நடைமுறையாகும். பறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டவைகளும் சில குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு மேலாக இயக்கப்பட தடை விதிக்கப்பட்டுள்ளது, அவையாவன சன நெருக்கமுள்ள பிரதேசங்கள், பாதைகள் மற்றும் இரயில் தண்டவாளப் பாதைகள், தேசிய பூங்காக்கள் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் போன்றனவையாகும். ட்ரோனை இயக்குபவர்கள் எப்போதும் தனது பார்வையை இதன் மூலம் கடைப்பிடிக்க வேண்டும்.

“ட்ரோன் ஒன்றினைப் பார்க்கும் போது அவையொரு சாதாரண விளையாட்டுப் பொருள் ஒன்றினைப் போன்று புலப்பட்டாலும் அதன் உண்மையான செயற்பாட்டினால் பல பாதிப்புகள் ஏற்படலாம், மேலும் இவை சட்ட நடைமுறைக்கு ஒழுக தவறின் சட்டநடவடிக்கைகளுக்கும் வழி வகுக்கலாம். எனவே இதனைப் பயன்படுத்துபவர்களிடம் கூறப்பட்ட விடயங்களில் விழிப்படைந்து இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எனவே நாகரீகமான முறையில் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு, மற்றவர்களின் தனியுரிமைகளுக்கு மதிப்பளித்து இதனை மனதில் கொண்டு தங்களுக்கும் தங்களை சுற்றி இருப்பவர்களையும் மனதில் கொண்டு ஒழுகுவது தலையாய கடமையாகும்” என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .



Code of Ethics for Drone Journalists formulated in the United States is available at : http://www.dronejournalism.org/code-of-ethics/
[3] Ministry of Mass Media statement on drone use: http://www.aviationvoice.lk/drone-journalism-sri-lanka-ethics-regulations-guidelines/

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 01 – யாழ்ப்பாணத்தில் டிஜிட்டல் கதை கூறல

இலங்கையின் வட மாகாணத்தில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்த சூழ்நிலை நிறைவு பெற்று சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர், அங்குள்ள மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கை நிலைகளான பொருளாதார, வாழ்வாதார, சமூக விடயங்களில் திரும்பிக் கொண்டிருந்தனர். தொழில் முயற்சியாண்மை மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. சிவில் சமூக செயற்பாடுகள் மீண்டும் உயிர்த்தெழ தொடங்குகிறது. இந்நிலை இவ்வாறிருக்க பிரதான ஊடகங்கள் தொடர்ந்தும் பொதுமைப்படுத்தப்பட்ட எதிர் விமர்சனங்களை எதிர்கொண்டே வருகிறது.

"வெளிநாட்டு ஊடகங்களினால் எங்களின் மேல் பொதுமைப்படுத்தப்பட்ட விடயங்களை திணிப்பது கட்டாயம் எதிர்க்கப்பட வேண்டும், ஆனாலும் உள்நாட்டு ஊடகங்களில் இவை பற்றி மேற்கொள்ளப்பட்ட செய்திகள் மிகவும் குழப்பகரமானதாகக் காணப்பட்டது. இது எமது மக்களின் எழுச்சியின் மேல் களங்கம் விளைவிக்கும் செயற்பாடாகும்" என்று யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட இளம் ஊடகவியலாளரும் டிஜிட்டல் ஊடக செயற்பாட்டாளருமான பெனிஸ்லோஸ் து'ான் கருத்துத் தெரிவித்தார்.

இந்த விடயமே அவரை டிஜிட்டல் கதை கூறல் பற்றிய விடயங்களைக் கற்றறிந்து தனது சகா இளம் ஊடகவியலாளர்களையும் பயிற்றுவிக்க ஏதுவாக அமைந்தது. ஏற்கனவே யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க நிலையத்தினால் 06 மாத கற்கையைப் பூரத்தி செய்த இளம் ஆண், பெண்களைக் கொண்ட 10 குழுக்கள் இவரால் பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

கிட்டத்தட்ட 200 மாணவர்கள் (2019 நடுப்பகுதி வரை) இந்தக் கற்கை நெறியை தொடர்வதற்கு வருகை தந்திருந்தனர், அதற்கேற்றாற் போல எங்களது பாடத்திட்டங்களிலும் சில மாற்றங்களை தேவைக்கேற்ப மேற்கொண்டோம் என்று து'ான் கூறுகிறார். "எல்லோரிடமும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி காணப்படுவதால் அவர்கள் அதன் மூலம் படங்களை பிடிப்பதற்கு விரும்புகின்றனர். ஆனாலும் சிறந்த ஊடகப் பிரஜையாக இருப்பதென்பது பெரும் பொறுப்புணர்ச்சி மிக்க விடயமாகும்".

து'ான் பத்திரிகைத்துறையில் பணியாற்றியுள்ள ஒரு ஊடகவியலாளர் என்பதோடு சமாதான முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதொரு சமூக ஆர்வலராவார். இவர் தற்போது கொழும்பில் தனது தொழில் நிமிர்த்தம் வாழ்ந்து வருகிறார் என்பதோடு, வெள்ளிக்கிழைகளில் தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்துக்கு (சுமார் 400 கி.மீ) பயணம் செய்து வார இறுதிப் பயிற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார்.

"டிஜிட்டல் கதை கூறல் கற்கை நெறியின் பிரதான நோக்கம் யாதெனில் இதில் பயிற்சி பெறும் இளம் மாணவர்களது டிஜிட்டல் கதை கூறும் திறமைகளை மேம்படுத்தி ஊடக பிரஜையாக அவர்களை மாற்றிக் கொள்வதாகும் என து'ான் கருத்துத் தெரிவிக்கிறார்".

"இக்காலத்தை எடுத்துக் கொண்டால் அனேகமான இளைய சமூகத்தினர் ஸ்மார்ட் தொலைபேசிகளை தன்னகத்தை கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு மற்றவர்களுடன் இணைப்பை மேற்கொள்ளக்கூடிய வசதிவாய்ப்புகள் மிக இலகுவாகக் காணப்படுகிறது. அநேகமானவர்கள் தங்களது கைத்தொலைபேசியினைப் பாவித்து புகைப்படம் எடுப்பதற்கு விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அதே போல தாம் எடுத்த படங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர், எவ்வாறிருப்பினும் அவர்களுக்கான வழிகாட்டல்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது…..எனது வகுப்பறைக் கற்கைநெறிகளானது இவற்றை ஈடு செய்யும் ஒன்றாக அமைவதோடு இவர்களுக்கு தேவையான விடயங்களை அவர்களுக்குள் மறைந்து கிடக்கும் திறமைகளை பாவித்து முன்கொண்டுவர உதவுபவையாக அமைகிறது".

டிஜிட்டல் கதை கூறும் பயிற்சி நெறியானது டிஜிட்டல் கதை கூறல் முறையின் அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இதில் பயன்படுத்தப்படும் புகைப்பட பாவனையானது காட்சிப்படுத்தல் மூலமாக விடயப்பரப்பினை வெளிக்கொணரும் ஒரு சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது, அதே போன்று சமூக ஊடகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இக்கற்கை நெறியில் பங்குபற்றுபவர்களுக்கு ஊடக ஒழுக்கவியல் பற்றிய விடயங்களும் கற்பிக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட தகவலாளியின் பெயர்களை கோடிட்டுக் குறிப்பிடப்படாமல் பாதுகாப்பது மற்றும் அரசியல் சூழ்நிலைக்கேற்றவாறு குழப்பகரமான விடயங்களில் தெளிவாக நடந்து கொள்ளல் போன்றனவும் கற்பிக்கப்படுகின்றன.

இதில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் அவர்களது விருப்பத்துக்கு இணங்க புகைப்பட கட்டுரையொன்றினை வரைய வேண்டும். இதன் மூலம் பல புத்தாக்க விடயங்கள் வெளிக்கொணரப்பட்டது மட்டுமல்லாமல் அவற்றில் சில, இணைய தளங்களிலும் தன்னிச்சையாகவே பிரசுரிக்கவும் பட்டுள்ளன.

இதிலுள்ள ஒரு குழு "முல்லைத்தீவில் ஒவ்வொரு நாளும்" (இலங்கையிலுள்ள மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் இதுவொன்றாகும்) எனும் முகப்புத்தகப் பகுதியொன்றினை உருவாக்கி அதில் தங்களுடைய சொந்த அனுபவப் பகிர்வுகளை மற்றவர்களுடன் புகைப்படக் காட்சிகளின் மூலம் பகிர்ந்து கொண்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் நேர்மறையான விசேட இயல்புகள் பல இதில் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

இன்னுமொருவர் தனது சக வகுப்புத் தோழருடன் இணைந்து **"Jaffnapedia"** எனும் எனும் பக்கத்தை உருவாக்கினார். யாழ்ப்பாண மக்களின் பண்புகளையும் அங்கு அமையப்பெற்றுள்ள இடங்களையும் பிரதிபலிக்கும் பல விடங்களை புகைப்படங்களாக முகப்புத்தகம் மற்றும் **Instagram** போன்றவற்றில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியை முகாமை செய்யும் சாரார் ஏனையவர்களையும் தங்களிடமுள்ள புகைப்படங்களை அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

"கதை கூறும் போது ஒருவர் விருத்தியடைகிறார், நீங்கள் உங்களது சொந்த சமூகங்களைப் பற்றிய விடயங்களை மற்றவர்களுக்கு கதைகளாகக் கூறும் போது ஊடகங்களினால் புனையப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட பல விடயங்களை உங்களால் வெளியில் கொண்டுவர முடிகிறது. நாங்கள் எங்களை போர்க்கால சூழலினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகம் என்று அடையாளப்படுத்துவதை விடுத்து, நம்பிக்கையுள்ள ஒரு சமூகம் என அடையாளப்படுத்த வேண்டும். தாம் கடந்து வந்த காலங்களில் ஏற்பட்ட வடுக்களிலிருந்து மீண்டெழ மக்கள் பகீரத பிரயத்தனம் செய்கின்றனர்" என து'ான் குறிப்பிட்டார்.

மேலும் எங்களைப் பற்றிய கதை கூறுபவர்கள் அவற்றை வர்ணனை அல்லது விமர்சனம் செய்யக்கூடியவர்களாக காணப்படுகின்றனர். வர்ணனைகளை இழக்கும் போது நாம் எமது சக்திகளையும் இழக்கின்றோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

More: https://www.thehindu.com/news/international/going-beyond-the-scars-of-the-civil-war/article27950495.ece
https://www.facebook.com/DSTjourney/
https://www.facebook.com/everydaymullaitivu/
https://www.facebook.com/jaffnapedia/

## சம்பவக் கற்கை 2: சமூக ஊடகப் பிரகடனம்

பொறுப்புணர்வுடனான முறையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் எனும் நோக்கத்துக்காக சமூக ஊடகப் பிரகடனமொன்று 2019 ஆம் ஆண்டு, 16 சிவில் சமூக குழுக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பிரதான நோக்கமாக சமூக ஊடகங்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதைக் குறிப்பிடலாம்.

சமூக ஊடகங்களின் பாவனையின் போது கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தும் அதேவேளை ஒழுக்கவியல், ஜனநாயக மற்றும் சமூக நன்னோக்கத்துக்கான ஊடக பங்காண்மையையும் வேண்டி நிற்கிறது.

சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் மிகவும் அவதானமாக கவனிக்கப்படும் ஒரு சூழ்நிலை தற்கால இலங்கையில் காணப்படுகிறது. கருத்துக்களை தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் இன்னும் சரியான முறையில் புரிந்து கொள்ளப்படாத நிலையொன்றே தொடர்ந்து காணப்படுகிறது. சமூக ஊடகங்களிலும் இவை பற்றிய சரியான தெளிவுகள் இன்னும் சரியான அளவில் காணப்படவில்லை, குறிப்பாக கூறுமிடத்து முடிவுகளை மேற்கொள்ளும் தரத்தில் இருக்கும் சாரார்களுக்கும் இவை பற்றிய சரியான புரிதல்கள் காணப்படாத துர்ப்பாக்கிய நிலையொன்று இன்னும் காணப்படுகிறது. தன்னார்வ முறையில் உருவாக்கப்பட்ட இந்த சமூக ஊடகப் பிரகடனமானது, இப்படியான சூழ்நிலைக்கான சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட காலத்துக்கேற்ற உதவி என்றே கூறியாக வேண்டும். இக்குறிக்கோள்களுக்காக உருவாக்கப்பட்ட நியம வழிகாட்டல்கள் அல்லது பிரகடனம் எனப்படுவது இலங்கையிலுள்ள சமூக ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகங்களினால் அவர்களுக்காவே முன்மொழியப்பட வேண்டும்.

இந்தப் பிரகடனத்தின் குறிக்கோளாக "இலங்கையில் பொறுப்புள்ள சமூக ஊடகப் பாவனை முறைமையொன்றினை உருவாக்குவதோடு டிஜிட்டல் கல்வியறிவின் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வசதிகளை வழங்குவதாகும். மனித உரிமைகளின் முக்கிய பண்புகளுக்கு மதிப்பளித்து நீதியான சமூகமொன்றை தோற்றுவிப்பதே இந்த பிரகடனத்தின் முக்கிய நோக்கமாகும், மறுபுறத்தில் இச் சமூக ஊடகங்களினால் ஏற்படுத்தப்படும் பாதகங்களையும் இது நன்கு அவதானித்தே வரையப்பட்டுள்ளது".

சமூக ஊடக பிரகடனத்துக்கான கைச்சாத்து பின்வரும் விடயங்களை ஒழிப்பதற்காக முன் மொழியப்பட்டுள்ளது.

- இன, மத மற்றும் சாதி அடிப்படையிலான அனைத்து பாகுபாடுகளை இல்லாதொழித்தல்
- பாலியல் அடிப்படையிலான வன்முறைகள் அல்லது பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் எல்லா வகையான வன்முறைகளையும் அடியோடு இல்லாதொழித்தல் (பாலியல், பாலியல் வன்முறை, திருமண வெறுப்பு மற்றும் பிறரது புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அவர்களது சம்மதமின்றி வெளியிடல் உள்ளடங்கலாக)
- பாலியல் துஷ்பிரயோகம்
- பால்நிலை அல்லது பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள்
- சிறுவர் உரிமை பற்றிய வன்முறைகள் மற்றும் சுரண்டல்கள் (கடத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளடங்கலாக)
- வெறுப்பூட்டும், வன்முறையை உண்டாக்கும், பயமுறுத்தும், கட்டாயப்படுத்தி சம்மதப்படுத்த வைக்கும் விடயங்கள், இணைய குற்றங்கள், மற்றும் ஆபத்தான வார்த்தை பிரயோகங்கள் போன்ற செய்தி விடயங்கள்
- ஓரங்கட்டப்பட்ட சமூகங்களைத் துன்புறுத்தல்
- சட்ட ரீதியற்ற நடைமுறைகள்
- தகவல் திருட்டு மற்றும் ஆதாரமற்ற முறையில் ஒழுக்கவியல் நெறிமுறைகளை பின்பற்றாமல் செயற்படல் (குறிப்பாக ஒருவரது சம்மதமின்றி புகைப்படங்களை பிரசுரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்)
- பிழையான தகவல்கள், திருத்தம் செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் விடயங்களற்ற தகவல்கள்
- பாலியல் தூண்டுதலான செய்திகளை முறையற்ற விதத்தில் பகிர்தல்

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சமூக ஊடகப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளன (இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம (Centre for Policy Alternatives), கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் ஒன்றியம், Groundviews.org, Hashtag Generation, Internet Media Action, Jaffna Press Club, Lanka News Web, Law and Society Trust, Maatram.org, Movement for Land and Agricultural Reform, Nelum Yaya Foundation, Outbound Today, PEACE ECPAT Sri Lanka, Rights Now Collective for Democracy, Sarvodaya Shramadana Movement, Sri Lanka Muslim Media Forum, Sri Lanka Working Journalists' Association, Transparency International Sri Lanka, and Vikalpa.org.

More: http://www.socialmedialanka.org/

## கலந்துரையாடல்களுக்கான விடயங்கள்

இந்த விடயங்கள் பற்றிய மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு பின்வரும் வினாக்களையும் கலந்துரையாடல் விடயங்களையும் உபயோகித்துக் கொள்ளுங்கள்

- தொடர்பாடலிலுள்ள மிக முக்கியமான விடயம் யாதெனில் அவதானமாக செவிமடுத்தல் ஆகும். நீங்கள் இந்த விடயத்துடன் உடன்படுவீர்களாயின், நீங்கள் மற்றவர்களை அவர்கள் இவற்றை மேற்கொண்ட சரியான முறையில் நிலை நிறுத்தி கேட்கப்பட்ட விடயங்களுக்கு பதிலளிப்பதற்கு இணையதளத்தில் உலா வருவதை விடுத்து எவ்வாறு அவர்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க முடியும்?

- இலங்கையில் காணப்படும் வெற்றிகரமான தந்திரோபாய தொடர்பாடல் செயற்பாட்டின் மூலம் பொது மக்கள் அல்லது சமூகம் பயனடைந்த ஒரு விடயத்தை உங்களால் தெரியப்படுத்த முடியுமா?

- டிஜிட்டல் இணையதளத்தை சரியான முறையில் பயன்படுத்தும் விடயம் பற்றி சில உதாரணங்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலாக நன்மைபயக்கும் மற்றும் நன்மை பயக்காத சில உதாரணங்களைக் குறிப்பிடவும்

- நீங்கள் இணையதளத்தில் வலம் வந்துள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் உலா வரும்போது எவ்வாறு அவற்றை சமாளித்துக் கொண்டீர்கள்?

- சமூக ஊடகமொன்றில் உங்களது நண்பரொருவர் பாலியல் அல்லது அல்லது பெண்களை வெறுப்பது பற்றிய விடயங்களை பதிவேற்றியிருப்பதை அவதானித்திருப்பின் நீங்கள் அதற்கு எவ்வாறான பதில்களை வழங்குவீர்கள்? அவற்றை நீர் புறக்கணிப்பீரா அல்லது பதிலளிப்பீரா? (சில நாட்கள் கடந்தாயினும் சரி, உங்களது பதில் எவ்வாறு அமையும்)

- இலங்கையில் எங்காவது இடம்பெற்ற டிஜிட்டல் கதை கூறல் பற்றிய விடயங்கள் பற்றி உங்களுக்கு தெரியுமா? இது எந்த விடயமாகவும் இருக்கலாம்.

- டிஜிட்டல் தொடர்பாடல எந்த வகையைச் சார்ந்தது? குறிப்பாக உடனடியாக வழங்கக்கூடிய குறுந்தகவல் வசதிகள் மொழிப் பயன்பாட்டில் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது? சுருக்கமான முறைகள் சொற்கள் பயன்படுத்தப்பட்ட, எங்களது சொந்த மொழியுடன் ஆங்கில மொழி இணைக்கப்பட்டு கலந்துரையாடல்களில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் சிலவற்றை குறிப்பிடவும்.

## எதிர்பார்க்கப்படும் கற்றல் பயன்பாடுகள்

இந்த பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்களை அறிந்து கொள்வீர்கள்

- தற்காலத்தில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் இணையதளம் போன்றவை சமூகத்தக்கு பலவிதமான நன்மைகளை மிக நேர்த்தியாக வழங்குகிறது. இது மிகப் பெரும் பொறுப்புணர்வுடன் அதற்கான அதிகாரங்களையும் வழங்குகிறது.

- இரு தரப்பு முறையான கலந்துரையாடல் மிக முக்கியமானதொன்றாகும். வெகுஜன ஊடகங்களை போலல்லாது இணையதள கருத்துப் பரிமாறல்கள் இரு தரப்பிலும் இடம்பெறலாம். இவை இதில் பங்குபற்றுவர்களின் ஊடாட்டத்தை அதிகரிப்பதோடு பங்குபற்றுதலையும் தூண்டுகிறது.

- தொடர்பாடலின் மிக முக்கியமான அம்சம், இடம்பெறும் விடயங்களை சரியாக அவதானிக்கும் கலை ஆகும். இவ்வாறான அம்சம் தற்போதைய எமது அன்றாட டிஜிட்டல் தொடர்பாடல்களில் மிக குறைவாகவே காணப்படுகிறது அல்லது அவ்வாறான ஒரு விடயம் இடம்பெறாத நிலையே காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இவ்வாறு சரியான முறையில் அவதானிப்பதானது விடயங்களை அவ்வப்போது தேவையேற்படின் நிறுத்தி பதில்களை வழங்குவதற்கு உறுதுணையாக அமைகிறது.

- எவ்வாறு தொடர்பாடல்களை மேற்கொள்வது என்பதை சரியான முறையில் தேர்வு செய்வது மிக முக்கியமாகும். இவ்வாறு நடைபெறாதவிடத்து மற்றவர்களது அவதானம் எம்மீது இல்லாத நிலையில் எங்களது தொடர்பாடல்களை கொண்டு செல்ல வேண்டிய நிலையே காணப்படும்.

- டிஜிட்டல் பயன்பாட்டு முறை (இணையதள பாவனை முறை) எனப்படுவது மற்றவர்கள் இணையதளத்தில் ஏதாவதொரு விடயத்தை பதிவிடும் போது அதற்கு போதுமான முறையில் மரியாதை செலுத்தி தங்களுடைய பதில்களையும் யாரையும் தாக்காத வகையில் இடுவதாகும். உங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படும் அதே விடயத்தையே நீங்கள் இங்கேயும் கடைப்பிடிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

- மொபைல் ஊடகவியல் எனப்படுவது கையடக்க தொலைபேசியொன்றின் உதவியுடன் தாம் விரும்பிய விடயங்களை புகைப்படம் மற்றும் வீடியோ தொகுப்பு என்பவற்றின் உதவியுடன் விடயத்தை தெரியப்படுத்தும் ஒரு முறையாகும்.

## மேலதிக வாசிப்புகளுக்காக

டிஜிட்டல் கதை கூறல்: கடந்த காலகட்டத்தில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றியவர்களினால் உருவாக்கப்பட்ட சில டிஜிட்டல் கதைகள்
http://stories.apc.org/

சமூக மாற்றத்துக்காக நிலைமாறும் கதை கூறல்
https://www.transformativestory.org/

இணையதள நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கான 10 வழி முறைகள்
https://www.theguardian.com/media/2019/mar/10/10-ways-to-improve-your-digital-etiquette

“குழப்ப நிலைகளை ஊட்டி வளர்க்காதீர்கள்” சிறந்ததொரு ஆலோசனை – ஆதாரங்கள் இங்கே
https://theconversation.com/dont-feed-the-trolls-really-is-good-advice-heres-the-evidence-63657

மொபைல் ஊடகவியல் கையேடு: செய்தியறை மற்றும் நிருபர்களுக்கான வழிகாட்டல்கள்
http://www.mojo-manual.org/

மொபைல் ஊடகவியல் கையேடு
https://ethicaljournalismnetwork.org/mojo-the-mobile-journalism-handbook

ஆளில்லா பறக்கும் இயந்திரத்தை உபயோகிக்கும் ஊடகவியலுக்கான வளங்கள்
https://gijn.org/drone-journalism/



MODULE 3

# டிஜிட்டல் பாதுகாப்பினை மேம்படுத்தல்

# டிஜிட்டல் பாதுகாப்பினை மேம்படுத்தல்

வலைத்தளம் எனப்படுவது உலகில் காணப்படும் கணனிகளை ஒன்றிணைத்து தகவல் பரிமாற்றங்களுக்காக உருவாக்கப்பட்ட இலத்திரனியல் வலைப்பின்னல் ஆகும்.
இந்த நிஜ உலகின் ஒத்த தன்மையின் பயன்பாட்டிற்காக இணையதளமானது ஒரு சாதாரண தபால் சேவையைப் போன்று பயன்படுத்தப்படுகிறது ஆனாலும் இவை மிக வேகமானவை. தபால் சேவையைப் போன்றே தபாலுறை ஒன்றிற்கும் கடிதத்தை வைத்து தங்களது தகவல்களை ஒருவர் மற்றொருவருக்கு அனுப்பி வைக்கிறார். இணையதளமானது கணனிகள் சிறியதொரு பொதிகள் போன்றதொரு அமைப்புக்குள் டிஜிட்டல் தகவல்கனை அனுப்பி செய்தி பரிமாற்றத்தை மேற்கொள்ள உதவுகிறது.
பூகோள வலையமைப்புடன் பில்லியன் கணக்கான சாதனங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. அவைகளாவன மேம்படுத்தப்பட்ட கணனிகள், தனிப்பட்ட கணனிகள (desktops, laptops or tablets), ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் மற்றும் ஆயிரக்கணக்கான தயாரிப்பாளர்களினால் தயாரித்து சந்தையில் விடப்பட்ட விசேட சாதனங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
"பொதுவான மொழி" ஒன்றினை பயன்படுத்தியே இந்த சாதனங்களை இயக்கி தரவுகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இந்த மொழியானது பரிமாற்றல் தடுப்பு நெறிமுறை அல்லது இணையதள நெறிமுறை (Transmission Control Protocol/Internet Protocol) என்று அழைக்கப்படும். இணையதளத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொரு சாதனங்களும் பரிமாற்றல் தடுப்பு நெறிமுறை அல்லது இணையதள நெறிமுறை ஒன்றுடன் இணைந்து காணப்படும்.
சாதாரணமாக நீங்கள் தபாலில் கடிதமொன்றை அனுப்பும் போது அவை தபாலகத்தினாலேயே கையாளப்படுகிறது. இவை எவ்வாறு சேகரிக்கப்படுகிறது, எவ்வாறு பிரிக்கப்படுகிறது, எவ்வாறு அனுப்பப்படுகிறது மற்றும் விநியோகிக்கப்படுகிறது போன்ற விடயங்கள் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இதே போன்றுதான் இணையதள தரவுகளும் பல்தரப்பட்ட கம்பிகள், திசைவிகள் மற்றும் கணனிகளினூடாக அது சென்றடைய வேண்டிய இடத்தைச் சென்றடைகிறது.
2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி உலகில் சுமார் 3.9 பில்லியன் இணையதள பாவனையாளர்கள் மில்லியன் கணக்கான அரச, தனியார், தொண்டு நிறுவனங்களில் பாவிக்கப்பட்டிருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. அநேகமான பகுதிகளில் இணையதள தேடல் அநுபவங்கள் பாதுகாப்பானதாகவும் திருப்திகரமானதாகவும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பல்வேறுபட்ட சாதனங்கள் ஒன்றுடனொன்று இணையும்போது சில நேரம் இவைகள் தவறான திசைகளில் செல்வதற்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே இணைய பாதுகாப்பு அல்லது கணனிசார் பாதுகாப்பு மிக முக்கியமானதாக காணப்படுகிறது.
கணனி பாதுகாப்பு எனப்படுவது விடயங்களையும் முறைமைகளையும் உள்ளடக்கியவை: மேலும் அவை பாவிக்கும் மக்களைப் பற்றியவை. இந்தப் பாடப்பரப்பில் நாம் கணனி பாதுகாப்பு பற்றிய அடிப்படை விடயங்களை அறிந்து கொள்வோம். அடுத்த பாடப்பரப்பில் காணப்படும் கணனி பாதுகாப்பு பகுதியில் டிஜிட்டல் சேவைகளைப் பயன்படுத்தும் போது அவற்றை பெற்றுக்கொள்ளுபவர்களின் பாதுகாப்பு பற்றிய விடயங்களை அறிந்து கொள்வோம்.

# முக்கிய சொற்கள்

டிஜிட்டல் பாதுகாப்பு (தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு என்றும் அழைக்கலாம்) எனப்படுவது டிஜிட்டல் முறையில் பதிவேற்றப்பட்ட தகவல்களுக்கான பாதுகாப்பு நடைமுறைகளை குறிக்கும். இதற்காக பயன்படுத்தப்படும் சாதனங்கள் இணைய வலையமைப்புடன் இணைக்கப்பட்டோ அல்லது இணைக்கப்படாமலோ காணப்படலாம். கணனி பாதுகாப்பு வரையறைக்குள் பௌதீக மற்றும் இணைய பாதுகாப்பு ஆகிய இரண்டையும் நாம் உள்ளடக்கலாம்.
கணனி பாதுகாப்பு: இணையதளங்களில் கணனிகள் இணைக்கப்பட்டு இருக்கையில் அவற்றைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள். விசேடமாக இவை உரிமைகளற்ற முறையில் தரவுகள், தகவல்களை பெற்றுக்கொள்வதை (கணனிகளை தாக்கப்படுவதை) தடுப்பதற்கு உதவியளிக்கிறது.

மேக கணனி முறை **(Cloud computing)** என்றால் கணனியிலுள்ள வன்தட்டில் தகவல், நிகழ்ச்சிகளை சேகரிக்காமல் இணையதளங்களில் சேமித்துக் கொள்ளும் முறை ஆகும். மேக முறை இணையதளத்துக்கான ஒரு உருவகம **(metaphor)** ஆகும்.



Source: https://searchsecurity.techtarget.com/definition/cybersecurity

## டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் கணனி பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படை அம்சங்கள்

நாம் டிஜிட்டல் சாதனங்களை பாவிக்கும்போது எமது தனிப்பட்ட, இரகசியமான, நாம் பணிபுரியும் இடங்களிலுள்ள அலுவலக ரீதியான, ஆக்கத்திறனான மற்றும் ஏனைய பல வகையான தரவுகளை வழங்குகிறோம். இணையதள வலையமைப்பொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள கணனியொன்றுடன் நாம் இணைக்கும் போது – எமது நிறுவனத்துக்கு உள்ளேயோ அல்லது உலகளாவிய இணைய வலையமைப்புடனோ – நாம் மற்றவர்களது தரவுகளுடன் சம்மந்தப்படுகிறோம்.

எங்களது சாதனங்களையும் தரவுகளையும் பாதுகாப்பது மிக முக்கியமானதாகும், அதே போன்று மற்றவர்களது தரவு பாதுகாப்புக்கு மரியாதை கொடுப்பதும் மிக முக்கியமான ஒன்றாகும். இணையதளம் போன்ற ஒன்றுடனொன்று இணைந்து காணப்படும் வலையமைப்புகளில் நாம் அனைவரும் விழிப்புடனும் அவதானமானவும் இருப்பது மிக முக்கியமாகும். இவற்றில் ஒருவர் அவதானமிழந்து இருப்பினும் மற்றவர்கள் அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கவும் வழியமைக்கும்.

டிஜிட்டல் பாதுகாப்பு அல்லது கணனி பாதுகாப்பு எனப்படுவது அதிகாரமளிக்கப்படாதவர்களின் ஊடுருவல்கள் மட்டுமே என்று எண்ணிவிடக்கூடாது. எங்களது அறியாமை அல்லது அவதானக் குறைவின் காரணமாகவும் சேமிக்கப்பட்டிருக்கும் தரவு, தகவல்களை இழந்துவிடக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் விளைவாக எமது தரவுகள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அவற்றை இழந்துவிடவும் வாய்ப்புகள் உண்டு. வெள்ள அனர்த்தம், தீப்பரவல் மற்றும் மின்சாரப் பாதிப்பு போன்ற எதிர்பாராத நிகழ்வுகளினாலும் எமது தரவுகள் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

கணனி பாதுகாப்பு அல்லது டிஜிட்டல் பாதுகாப்பு எனப்படுவது அதி தீவிரமான பாதுகாப்பு ஏற்படுகளை தன்னகத்தே ஏற்படுத்திக் கொள்வது மட்டுமே என்று பொருள்கொண்டு விடக்கூடாது. சில நேரம் நாங்கள் மிகப்பொருத்தமான தீர்வு என்று எண்ணிக்கொள்ளும் ஒரு விடயம் சாத்தியமற்றதாகி விடலாம். எனவே காலத்துக்குக் காலம் அவை பற்றி வெளிவரும் புதிய அம்சங்கள் பற்றி தெளிவைப் பெற்றிருப்பதோடு எமது பாதுகாப்பு முறைமைகளையும் மீள்பரிசீலனை செய்து கொள்ள வேண்டும், குறிப்பாக இணையதள பாவனையாளர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்: நல்ல ஆரோக்கியமான கணனி பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு அம்சங்களுக்கு பாவனையாளர்களின் ஈடுபாடு, கடப்பாடுகள் மற்றும் அவை பற்றிய சரியான தெளிவுகள் போன்றன மிக இன்றியமையாதது ஆகும். நாம் எமது சில தேவைகளான மென்பொருள், வன்பொருள் விடயங்களுக்காக வெளியிலுள்ள ஒருவரை தகவல் தொழில்நுட்ப சேவை வழங்க கேட்டுக்கொள்வது போன்றதொரு விடயமல்ல.

டிஜிட்டல் பாதுகாப்பு அல்லது கணனி பாதுகாப்பு முறைமையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒவ்வொரு விடயங்களையும் இங்கே பட்டியலிடுவதென்பது சாத்தியமற்றதொரு விடயம் ஆகும். இவை பற்றிய எண்ணிலடங்கா ஆலோசனைகளும் விடயங்களும் இணையதளங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். கீழே வழங்கப்பட்ட சில பொதுவான விடயங்கள் இவை பற்றிய அடிப்படை விடயங்களை உங்களுக்கு வழங்குகிறது.

Source: https://wiobyrne.com/digital-hygiene/

## டிஜிட்டல் ஆரோக்கியமே முக்கியமான விடயம்!

டிஜிட்டல் ஆரோக்கியம் எனப்படும் சொல்லானது ஒருவரது டிஜிட்டல் சாதனங்கள், கணக்குகள் மற்றும் தரவுகள் என்பன எவ்வாறு சுத்தமான அல்லது அசுத்தமான நிலையில் காணப்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட பயன்படுத்தப்படுகிறது. நல்லதொரு டிஜிட்டல் ஆரோக்கியம் என்பது எமது இல்லங்களிலும் வேலைத்தளங்களிலும் ஒரே மாதிரியானதாகக் காணப்பட வேண்டும். தனிக்கணக்குகள் அல்லது சாதனங்கள் மற்றவர்கள் அவற்றுக்குள் நுழைவதற்கான வாய்ப்பாக அமைந்து விடலாம். அவ்வாறன்றி இவை தீங்கு விளைவிக்கும் ஒன்றால் இடம்பெற்றிருப்பின் உங்களது தகவல்கள், தரவுகள், ரகசிய இலக்கங்கள் மற்றும் கணக்குகள் போன்றவை ஆபத்தான நிலைக்குள் காணப்பட்டு உங்களது கணனி மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

## கணனி வைரஸ் அல்லது கணனிகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய விடயங்களிலிருந்து எவ்வாறு உங்கள் தரவுகளை பாதுகாத்துக் கொள்வது.

கணனி வைரசுக்கள் எனப்படுவது மிகச் சிறியதொரு நிகழ்ச்சி மூலம் ஒரு கணனியிலிருந்து மற்றைய கணனிகளுக்கு மின்னஞ்சல்கள், மின்னஞ்சல் இணைப்புக்கள் மற்றும் சிறிய தரவேற்றிகளின் மூலம் பரவக்கூடியது. இப்படியான வைரசுக்கள் உங்களது கணனிகளுக்குள் ஊடுருவுவதன் மூலம் அங்கு காணப்படும் தரவுகளின் சாதாரண நிலைமைகளில் மாற்றங்களை அல்லது அதன் முழு வடிவத்தையும் அழிக்கக்கூடியவை.

- கணனி வைரசுக்களை எதிர்க்கக்கூடிய வைரஸ் பாதுகாப்புக்களை பயன்படுத்துங்கள்
- உங்களது இயங்கு தளங்கள (Windows, FireFox மற்றும Chrome) போன்றன காலத்துக்கேற்ற வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதன் இறுதி பதிப்பானது உங்களுக்கு சரியான பாதுகாப்பை வழங்கும்.
- மின்னஞ்சல் இணைப்புகளை பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருங்கள்: உங்களுக்கு பரீட்சியமல்லாத, உறுதியற்ற விடயங்கள் ஏதாவது காணப்படின் அவற்றை திறப்பதிலிருந்து விலகியிருங்கள்.
- தேடல் தளங்களில் காணப்படும் கட்டுப்பாட்டு இயக்கியை (pop-up blocker) எப்போதும் இயங்கச் செய்யுங்கள்.
- உங்களது தேடல்களின் போது எப்போதும் ஒரு கட்டுப்பாட்டு இயக்கியை பயன்படுத்துங்கள். அநேகமான கட்டுப்பாட்டு இயக்கிகள் பாதிப்பான தீங்கு விளைவிக்கக்கூடிய விடயங்களை தன்னகத்தே கொண்டவை. மேலும் இவை உங்களது கணனிகளுக்கும் அவற்றுக்குள் காணப்படும் தரவுகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்துபவை.
- தடுப்பு சுவர (firewall) ஒன்றினை எப்போதும் பதிவிறக்கம் செயது கொள்ளுங்கள். இதுவே உங்களது கணனிகளுக்குள் வரும் விடயங்களை அவதானித்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துகிறது. உங்களது கணனிகளில் ஏலவே காணப்படும் வைரஸ் பாதுகாப்பு செயலியுடன் இணைந்து இவை மேலதிக பாதுகாப்பையும் வழங்குகிறது.
- நிருவாகக் கணக்குகளுக்கு எப்போதும் ரகசிய குறியீடொன்றை பாவியுங்கள்.



குறிப்பு: உங்களது சாதனங்கள் சில வேளைகளில் தாக்கங்களுக்கு உட்பட்டிருப்பினும் அவை எப்பொழுதும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுவாகக் காணப்படும் என்று எண்ண வேண்டாம். எனவே தொடர்ந்து வைரஸ் அழிப்பு செயலிகளை புதிப்பித்து நுட்பமான சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

## வைரஸ் தொற்றுக்கு உள்ளானதற்கான அறிகுறிகள்

தீங்கு விளைவிக்கும் வைரஸ் தாக்கங்களுக்கு உள்ளானதை அடையாளங்கண்டு கொள்வதற்கான சில இலகு வழிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

- நல்லதொரு காரணம் இன்றி உங்களது சாதனங்கள் மிகவும் குறைவான வேகத்தில் இயங்கும்.
- உங்களது சாதனங்கள் திடீரென மீள் ஆரம்பம் செய்து கொண்டிருக்கும் அதே வேளை வழமைக்கு மாறான விடயங்களைக் காட்டிக் கொண்டிருக்கும்.
- உங்கள் சாதனங்களில் காணப்படும் செயலிகள் நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு செயல் திறனுள்ளதாகக் காணப்படமாட்டாது.
- அங்கு வழமைக்கு மாறான சில பிழையான தகவல்கள் திரையில் காணப்படும் (சில வேளைகளில் பிழையான முறையிலும் எழுதப்பட்டிருக்கும்)
- பாவனையாளர்களினால் உருவாக்கப்படாத சில குறுகிய செயலிகள் உருவாக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.
- தகவல்களை சேகரித்து வைப்பதற்கான போதிய இட வசதிகள் இல்லாமல் காணப்படும்
- உங்களது அனுமதியேதுமின்றி கோப்புகள் மற்றும் செயலிகள் அழிக்கப்பட்டு காணப்படும


## தரவுகளை மீள சேமித்துக் கொள்ளல (BACKING-UP DATA)

தரவு ஊழல் அல்லது இழப்பு என்பன நல்லதொரு மென்பொருள் மற்றும் வன்கொருள் காணப்படினும் இடம்பெறலாம். எனவே தரவுகளை மீள சேமித்துக் கொள்ளல் இப்படியான விடயங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு சிறந்த முறை என்பதோடு தங்களுக்கு தேவைப்படும் போது அவற்றை மீளப் பெற்றுக் கொள்ள வசதியையும் கொடுக்கிறது.

பொதுவான தரவு மீள் பெற்றுக்கொள்ளும் முறையானது உங்களது கணனியின் வன்தட்டு சேமிப்பகத்திலிருக்கும் (hard disk) தரவு ஊழல் அல்லது இழப்பு என்பன நல்லதொரு மென்பொருள் மற்றும் வன்கொருள் காணப்படினும் இடம்பெறலாம். எனவே தரவுகளை மீள சேமித்துக் கொள்ளல் இப்படியான விடயங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு சிறந்த முறை என்பதோடு தங்களுக்கு தேவைப்படும் போது அவற்றை மீளப் பெற்றுக் கொள்ள வசதியையும் கொடுக்கிறது.

பொதுவான தரவு மீள் பெற்றுக்கொள்ளும் முறையானது உங்களது கணனியின் வன்தட்டு சேமிப்பகத்திலிருக்கும் (USB) பொருளொன்றுக்குள் மாற்றம் செய்து கொள்ளும் முறை ஆகும். அதே போன்று இணையங்களை அடிப்படையாகக் கொண்ட முகில்கள (cloud) முறையைப் பயன்படுத்தியும் உங்களது தரவு, கோப்புக்களை சேமித்து வைத்துக் கொள்ள முடியும் (உதாரணமாக Google போன்ற இணைய அடிப்படையிலான சேமிப்பகம்).

மேக முறையிலான சேமிப்பு முறையானது உங்களுக்கு தேவையான இடத்திலிருந்து தேவையான வேளையில் தேவைப்படும் விடயங்களை தொலைதூர (remote) வன்பொருட்களில (hardware) சேமித்து வைக்க உதவுகிறது. இவற்றை பாவனையாளர்கள் தங்களுக்கு தேவைப்படும்  வேளையில் தேவையான போது இணையதள பிரவேசத்தின் மூலம (internet) பெற்றுக் கொள்ளலாம். மேக முறைகள் உண்மையில் தரவுகளை முகாமை செய்வதற்கு மிக இலகுவான வழிவகையாகும்.  அநேகமான மேக முறைகள் அதிக சேமிப்பு வசதிகளை வழங்குவதுடன் தரவுகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாட்டு வசதிகளையும் வழங்குகிறது (Google போன்ற சேவை வழங்குநர்கள் தாம் கணக்கொன்றுக்குள் நுழையும் வேளையில் இலகுவான இலவச சேமிப்பு வசதிகளை வழங்குகிறது)



## தரவுகளை மறை குறியாக்குதல் (ENCRYPTING DATA)

மறைகுறியாக்கல் எனப்படுவது (தன்னியக்க மென்பொருளொன்றினால்) அதிகாரமளிக்கப்படாத ஒருவரால் உங்களது தரவுகளை பார்க்க முடியாமல் செய்யும் வழிமுறை ஆகும். இம்முறையானது உங்களது அதி ரகசிய விடயங்களான கடனட்டை ரகசிய இலக்கங்கள் போன்றவற்றை குறிகளாக்கி (encoding) அத்தகவல்களை வாசிக்க முடியாத மறைக்குறியீட்டு எழுத்தாக (cipher text) மாற்றுகிறது. அப்படியான தரவுகள் அதிகார கடவுச் சொற்களின் உதவியுடன் மட்டுமே மறைகுறியீடுகளை நீக்கி (decrypted) வாசிக்க கூடியதாக மாற்றப்படுகிறது.

தரவுகளை மறைகுறியாக்கல் என்பது அவற்றை பாதுகாப்பான இடமொன்றில் சேமித்து வைக்கும் பொறிமுறையாகும் -- அவற்றினை பற்றி ஏலவே அறிந்தவர்களினால் மட்டுமே அதை மீண்டும் வாசிக்க முடியும். மறைகுறியாக்கம் என்பது குறியாக்கவியலின (cryptography) டிஜிட்டல் வடிவம் ஆகும், மேலும் இவை கணித வழிமுறையினைப் பயன்படுத்தியே தகவல்களை துருவி வெளியில் கொண்டுவருகிறது. எனவே அதை உருவாக்கி அனுப்பியவர்களினால் மட்டுமே அவற்றினை வாசிக்க முடியும். அதிகாரமற்ற ஒருவர் அவற்றை வாசிக்க முற்படின் அவை தேவையற்ற (junk) விடயமாக தோற்றமளிக்கும்.

மறைகுறியாக்கலில் இரண்டு பிரதானமான முறைகள் காணப்படுகிறது. ஆவையாவன: சரியான அளவில் (சமச்சீரான) மறைகுறியாக்கல் - இது தனி கடவுச் சொற்களுடன் வழங்கப்பட்டிருக்கும் மற்றும் சரியான அளவிலற்ற (சமச்சீரற்ற) மறைகுறியாக்கல் - இவை தனி மற்றும் பொது குறியீடுகளைக் கொண்டு காணப்படும்.

இணைய பாவனை தொடர்பாடல்களுக்கு மறைகுறியாக்கல் மிகவும் முக்கியமானதொன்றாகும் (உதாரணமாக, மின்னஞ்சல், அரட்டைகள் மற்றும் பரிமாற்றல்கள் இடம்பெறும் பகுதிகள்). இங்கு செய்திகள் மறைகுறியாக்கப்படவில்லையாயின் தீங்கு விளைவிக்கக்கூடிய சில உங்களது செய்திகளை இடைமறிக்க வாய்ப்புகள் காணப்படும்.

முடிவிலிருந்து – முடிவுக்கு வரும் மறைகுறியாக்கி (End-to-end encryption/E2EE) எனப்படுவது தொடர்பாடல்களில் பங்குபற்றும் பாவனையாளர்கள் மட்டுமே செய்திகளை வாசிக்கக் கூடிய முறையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பான செய்தி அனுப்பல் முறையாகும். மேலும் இவை வலையமைப்பு சேவை வழங்குநர்கள், இன்டர்நெட் வழங்குநர்கள், மற்றும் ஏனைய தொலைத் தொடர்பாடல் சேவைகள் வழங்குநர்கள் தொடர்பாடல்களை டிஜிட்டல் பரிமாற்ற மறைகுறியாக்க முறையினைப் பாவித்து உரையாடல்களை ஒற்றுக்கேட்பதை தடுக்கும் ஒரு சிறந்த செயல்முறையாகும்.

மறைகுறியாக்கல் முறையானது தொலைத்தொடர்பாடல்களின் நம்பிக்கையையும் ரகசியத் தன்மையையும் உயர்த்தி நிற்கிறது. உதாரணமாகக் கூறுமிடத்து WhatsApp, Signal போன்ற தளங்கள் தானாகவே முடிவிலிருந்து முடிவுக்கான மறைகுறியாக்கி (E2EE) முறையில் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலம் இடம்பெறும் கலந்துரையாடலின் உயரிய தன்மையை மேம்படுத்துவதற்கு இவை உறுதுணையாக காணப்படுகிறது.

## முக்கியமான தரவுகளை இல்லாது அழித்தல

நீங்கள் கோப்பு ஒன்றினை உங்களது கணனியிலிருந்து அழித்தால் அது முற்றாகவே மறைந்து விடுவதில்லை. இது உங்களது கோப்புகளை சேமித்து வைத்திருந்த தளத்திலிருந்து மாத்திரமே அழிக்கப்படுகிறது. எனவே உங்களது கோப்புக்கள் இன்னுமே வன்தட்டில் சேமிக்கப்பட்டிருக்கிறது, இன்னுமொரு கோப்பொன்று அதன்மேல் உருவாக்கப்படுமிடத்து மாத்திரமே முன்னைய கோப்புகள் அங்கிருந்து அகற்றப்படும். அவ்வாறு அதன்மேல் இன்னுமொரு கோப்பொன்று உருவாக்கப்பட்டிருப்பினும் தேவையேற்படின் முன்னைய தரவுகளை மீளப் பெற்றுக்கொள்வது சாத்தியமாகும்.

நீங்கள் ஏதாவது தரவுகளை முற்றாக அகற்ற வேண்டுமாயின் பாதுகாப்பான முறையொன்றின் மூலம் அவற்றை அகற்ற வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து அத்தரவுகள் அவ்வாறே காணப்படும் அல்லது அதன்மேல் முக்கியமான விடயங்கள் மீளெழுதப்பட வாய்ப்புகள் மிக அதிகம். இவ்வாறான முறையில் அழிக்கப்பட்டாலும் தொழில்நுட்ப வல்லுநர்களினால் அந்த தரவுகளை தேவையேற்படின் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

"துடைத்தல்" எனும் செயன்முறையானது ஒரு தரவினை மீண்டும் மீண்டும் எழுதுவதனைக் குறிக்கும். Eraser (அழிப்பான் செயலி) எனப்படும் உயர்தர விண்டோவ் செயலியை பயன்படுத்துவதன் மூலம் வன்தட்டுக்களில் காணப்படும் தரவுகள் அதன் மேல் மேலும் மேலும் எழுதப்படுவதன் மூலம் நிரந்தரமாக அழிக்கப்படுகிறது. இது மிகவும் அவதானமாக தெரிவு செய்யப்பட்ட ஒரு முறையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.
Https://eraser.Heidi.Ie/



## இணைய முறையில் இருக்கும் போது உங்களது தரவுகளை பாதுகாத்தல்.

Wi-Fi அல்லது wireless இணையதளம் எனப்படுவது கம்பிகளேதும் இல்லாமல் வானலை (காற்றலைகளினால்) வலையமைப்பொன்றுடன் தொடர்பு கொள்ளும் முறை ஆகும். இது பாவனையாளர்கள் எந்த இடத்துக்கு நகர்ந்து சென்றாலும் எந்தவொரு இடைஞ்சலுமில்லாமல் தமது தேவைக்கேற்றால் போல சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை வழங்குகிறது. எவ்வாறிருப்பினும் இவை மிகுந்த அவதானத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொது இடங்களில் மிக மலிவாகக் காணப்படும் இலவச Wi-Fi வசதிகளைப் பயன்படுத்தும் போது நாம் மிகுந்த அவதானத்துடன் இருப்பது அவசியம், எமது தரவுகள் குறிப்பிட்ட வலையமைப்புடன் இணைந்து செயற்படுபவர்களினால் இடைமறிப்பு செய்யப்பட வாய்ப்புகள் மிக அதிகமாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் சமூக வலைத்தளங்களான Facebook அல்லது செய்தி வழங்கும் சேவைகள் போன்றனவற்றைப் பாவிப்பதற்கு மிக சிறந்தது, உங்களது தனிப்பட்ட விடயங்களான மின்னஞ்சல் மற்றும் வங்கிக் கணக்குகள் போன்றனவற்றை பொது Wifi இனைப் பயன்படுத்தி செயற்படுத்தாமல் இருப்பது மிக சிறந்தது.

இது ஏன் நிகழ்கிறது? ஏனெனில் நீங்கள் பொது Wi-Fi களைப் பயன்படுத்தும் போது அக்குறிப்பிட்ட வலையமைப்புடன் தொடர்புபட்ட யாராவது ஒருவரினால் உங்களது தரவுகள் இடைமறித்து ஒத்துக்கேட்க வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகிறது, இதற்குரிய காரணம் உங்களது வலையமைப்பு பொதுவானதாக காணப்படுவது ஆகும். உண்மையில் உங்களுக்கு பரீட்சயம் இல்லாத யாராவது ஒருவரினால் வழங்கப்படும் இலவச Wi-Fi இனைப் பயன்படுத்தாது இருப்பது மிக புத்திசாலித்தனமான செயற்பாடாகும். சில குற்றங்களை இழைப்பவர்கள் இப்படியான இலவச அல்லது முரட்டுத் தனமான Wi-Fi வசதிகளை வழங்கி தகவல்களை திருட அதிகமான வாய்ப்புகள் காணப்படுகிறது.

மற்றுமொரு பாதுகாப்பு அறிவுறுத்தல்: இணையதளங்கள் அல்லது சமூக வலைதளங்களுக்குள் நுழைகையில் அப்பகுதியினுடைய தனியுரிமை பற்றிய அறிவுறுத்தல்களைக் கட்டாயம் படித்து விளங்கிக் கொள்ளுங்கள். இவற்றினை இயங்கு தளத்தின் மேற்பகுதியில் அல்லது அடியிலுள்ள பகுதியில் கண்டு கொள்ளலாம். புதிய தளங்களுக்கு செல்கையில் ஆரம்பத்தில் கணக்கிற்கு உட்செல்லும் வாயிலில் அல்லது இருக்கும் கணக்கைக் கொண்டு உட்செல்கையில் இவற்றினை அறிந்து கொள்ள முடியும். எனவே இணைய தளங்களுக்கு நுழைவதற்கு முதலே அவற்றை பற்றி நன்கு அறிந்து கொண்ட பின்னர் உட்செல்வது எப்போதும் மிகச் சிறந்தது.

மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றுக்கு மற்றவர்களுக்கும் உபயோகிக்கும் சாதனம் ஒன்றினைப் பயன்படுத்தி நீங்கள் கணக்கொன்றுக்குள் உட்செல்வதாயின் உங்களது வேலைகள் முடிந்தவுடன் கட்டாயம் கணக்கை விட்டு வெளியேறும் (sign out) விடயத்தை மேற்கொள்வதை மறக்காதீர்கள். இதனை சரியாக மேற்கொள்ளாதவிடத்து உங்களுக்கு அடுத்தபடியாக பயன்படுத்துபவர்கள் மிக இலகுவாக உங்கள் கணக்குகளுக்குள் உட்செல்ல இது வழி வகுக்கும், அது மாத்திரமல்லாமல் கணக்குகளுக்குள் மற்றவர்களது அனுமதியில்லாமல் ஊடுருவும் நபர்கள் மிக எளிதாக உங்களது விடயங்களை திருடிவிடுவார்கள் என்பதும் இங்கு கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.



## டிஜிட்டல் சொத்துக்களைப் பாதுகாத்தல

உங்களது டிஜிட்டல் சொத்துக்களை பாதுகாப்பதற்கு மிக எளிதானதும் முக்கியமானதுமான சில முன்னெச்செரிக்கைகள் அவசியமாகும்.

கடவுச் சொல் அல்லது அடையாளச் சொல் என்பது பாவனையாளர் ஒருவர் மிக இலகுவாக மனனம் செய்து கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்படும் உள் நுழைவு அனுமதி ஆகும். டிஜிட்டல் பொறிமுறையில் இக்கடவுச்சொற்கள் எழுத்துக்கள், குறிகள் மற்றும் இலக்கங்களைக் கொண்டு இணைந்து ஒழுங்கமைக்கப்பட்டதொரு முறையில் காணப்படும்.

பாதுகாப்பான முறையில் பாதுகாக்கக்கூடிய தங்களுக்கு பரீட்சயமான கடவுச் சொற்களைக் கொண்டிருப்பது உங்களது கணக்குகளுக்குள் அனுமதியில்லாமல் பிறர் அனுமதிப்பதைத் தடுக்கும் மிக முக்கியமான நடவடிக்கை ஆகும். கடவுச் சொல்லானது நீங்கள் நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தும் ஒரு உண்மையான சொல்லாக இருக்க வேண்டிய எந்தத் தேவையுமில்லை: சொல்லொன்று இல்லாமல் வித்தியாசமான ஒன்றாக காணப்படின் மற்றவர்கள் ஊகித்து உங்களது கணக்குக்குள் நுழைவதைத் தடுக்கும் சிறந்த வழிமுறையாகும். ஆகவே மற்றவர்களால் ஊகித்துக் கொள்ளமுடியாத ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். நல்லதொரு கடவுச்சொல்லைத் தெரிவு செய்து கொள்வதற்கான சில ஆலோசனைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

- உங்களது கணக்குகளை பாதுகாத்துக்கொள்ள எப்பொழுதும் மிகவும் வலிமையான கடவுச் சொல்லொன்றை தேர்வு செய்து கொள்ளுங்கள். இலக்கங்கள், குறியீடுகள், சிறிய எழுத்துக்கள் மற்றும் பெரிய எழுத்துக்கள் உள்ளடங்கலான நீண்டதொரு கடவுச்சொல்லை தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- உங்களுக்கு நன்கு பரீட்சயமான மிக எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய கடவுச்சொல் ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- வெளிப்படையாக மற்றவர்களால் ஊகித்துக் கொள்ளக்கூடிய மிக இலகுவான விடயங்களான உஙகளது பிறந்த தினம், வருடாந்த நினைவுகள், முகவரி, பிறந்த இடம், உயர்தர பாடசாலை, உறவினர்கள் மற்றும் செல்லப்பிராணிகள் போன்றவற்றை வழங்க வேண்டாம்.
- உங்களது ஒவ்வொரு கணக்குகளுக்கும் வெவ்வேறான கடவுச்சொற்களை வழங்குங்கள். முக்கியமான கணக்குகளுக்கு கடவுச் சொற்களை மீண்டும் மீண்டும் வழங்குவது மிக ஆபத்தானது. இப்படியான நிலையில் ஒருவர் உங்களது கடவுச் சொல்லைப் பெற்றுக்கொண்டால் உங்களது ஏனைய கணக்குகளான மின்னஞ்சல், முகவரிகள் மற்றும் வங்கிக் கணக்குகள் போன்ற எல்லாவற்றுக்கும் நுழைவதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.
- உங்களது கடவுச் சொற்கள் ஏதாவது மறந்து போய்விடின் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளும் வகையிலான மாற்றுக் கணக்கொன்றை அல்லது வழிமுறைகளை வழங்குங்கள்
- காலத்துக்குக் காலம் உங்களது கடவுச் சொற்களை மாற்றிக் கொள்ளுங்கள் - அடிக்கடி இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவது மிகவும் பிரயோசனமானதொரு விடயம் ஆகும்.
- நீங்கள் பாவிக்கும் இயங்கு தளங்களில் உங்கள் கடவுச் சொற்களை ஞாபகத்தில் வைத்திருக்க அனுமதிப்பது வசதியாக இருக்கலாம், ஆனாலும் இவை ஆபத்தானதொரு விடயம் ஆகும். வேறு யாராவது உங்களது சாதனங்களைப் பாவிப்பின் அவர்கள் மிகவும் இலகுவாக உங்களது கணக்குகளிலுள்ள தொடர்புகள் உட்பட அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்ள இவை வழி வகுக்கும்.

## டிஜிட்டல் சொத்துக்கள் யாவை?

மிக இலகுவான மொழிநடையில் கூறுவதானால் டிஜிட்டல் சொத்து எனப்படுவது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் சேமிக்கப்பட்ட ஒரு உள்ளடக்கம் ஆகும். முகில் **(cloud)** முறையானது படங்கள், வீடியோக்கள், கோப்புக்களைக் கொண்ட எழுத்துக்கள், விரிதாள்கள் அல்லது பகுதிகளைக் கொண்டதொரு முறையாகும். இவ்வாறான டிஜிட்டல் சொத்துக்கள் உங்களது கணனியின் வன்தட்டில் அல்லது ஸ்மாரட் கையடக்க தொலைபேசியின் நினைவகத்தில் அல்லது இணையதளத்தில் சேகரித்து வைத்துக் கொள்ள முடியும்.

டிஜிட்டல் சொத்துக்கள் எனும் போது உங்களது மின்னஞ்சல் கணக்குகள் மற்றும் சமூக வலைதளங்களுக்கான கணக்குகளும் உள்ளடங்கும்.

## இரு முனை அங்கீகார முறைகளை பயன்படுத்தல்

மிக உறுதியான கடவுச்சொல் ஒன்றினை வழங்கியதன் பிற்பாடு மேற்கொள்ள வேண்டிய அடுத்த முக்கியமான நடவடிக்கையானது இரு முனை அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொள்வது ஆகும் (இரு முனை உறுதிப்படத்தல் அல்லது இரு முனைகளில் அங்கீகரித்தல் என்றும் அநேகமாகக் கூறப்படும்).
அதாவது நீங்கள் உங்களது கடவுச் சொற்களை வழங்கியதற்கு மேலதிகமாக, நீங்கள் இரண்டாவது பகுதியான தகவல்களை உங்களது கணக்குகளுக்கு வழங்க வேண்டும். இது அநேகமாக உங்களது பதிவு செய்யப்பட்ட கைத்தொலைபேசிக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பி வைக்கப்படும் (இவை குறிப்பிட்ட சில நிமிடங்களுக்குள் செயல்படுத்தக்கூடிய ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஒன்றாகவே காணப்படும்). பொதுவாக தற்காலத்திலுள்ள எல்லா சமூக ஊடகங்களும் அதே போன்று கூகுள் நிறுவனமும் இந்த இரு முனை அங்கீகார முறைமைகளை தற்போது தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகிறது. இணையதளங்கள் எழுத்து மற்றும் செயலி முறை போன்ற இரு முறைகளையும் அங்கீகரிக்க ஒத்தாசை வழங்குவதாயின், தயவு செய்து செயலி முறையினை மாத்திரமே தெரிவு செய்யவும். இவ்வாறு கூறுவதற்கான காரணம் குறுஞ்செய்திகள் அனுப்பப்படும் போது அவை ஒரு போதும் மறைகுறியாக்கப்படுவதில்லை, எனவே மற்றவர்கள் அதை இடை மறித்துப் பெற்றுக்கொள்ள இவை ஒரு வாய்ப்பாக அமைந்து விடலாம்.



## கடவுச் சொற்கள் இரகசியமானவை!

கடவுச் சொல் என்பதன் பொருள் அவை தங்களுக்குரிய இரகசியமானதும் தனிப்பட்டதுமாகும். அவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு விடயம் அல்ல. மேலும் இது எந்த விதத்திலும் மற்றவர்களுக்காக காட்சிப்படுத்தக்கூடிய ஒரு பொருளும் அல்ல. இருந்தாலும் இதுவே அநேகமானவர்களால் விடப்படும் மாபெரும் தவறுகளில் ஒன்று என்பதோடு அவ்வாறு ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து முடிந்த பின்னரே மனம் வருந்துவதையும் எம்மால் காண முடிகிறது. ஆகவே தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்: நீங்கள் பாதுகாப்பான ரகசியமான கடவுச் சொற்களை வழங்கினால் மட்டுமே உங்களது கணக்குகளை பாதுகாத்துக் கொள்ளலாம்.


## கையடக்க தொலைபேசியின் பாதுகாப்பு

ஒவ்வொரு கையடக்க தொலைபேசி, GSM ஒவ்வொரு கையடக்க தொலைபேசி, (IMEI அல்லது International Mobile Equipment Identity) எனும் தனி அடையாள இலக்கத்தைக் கொண்டு காணப்படும்.

இந்த IMEI இலக்கம் உருவாக்கப்பட்டதற்கான பிரதான காரணம் யாதெனில் கையடக்க தொலைபேசியில் பயன்படுத்தப்படும் சிம் அட்டைகள் நிரந்தரமானதொன்று இல்லை என்பதோடு அது பாவனையாளர்களின் விருப்பத்திற்கேற்ப மாற்றமடையலாம், ஆனாலும IMEI இலக்கம் உருவாக்கப்பட்டதற்கான பிரதான காரணம் யாதெனில் கையடக்க தொலைபேசியில் பயன்படுத்தப்படும் சிம் அட்டைகள் நிரந்தரமானதொன்று இல்லை என்பதோடு அது பாவனையாளர்களின் விருப்பத்திற்கேற்ப மாற்றமடையலாம், ஆனாலும IMEI இலக்கத்தின் அடிப்படையில் அக்கையடக்க தொலைபேசி பற்றி சில மேலதிக தகவல்களை உதாரணமாக கையடக்க தொலைபேசியின் வகை மற்றும் உற்பத்தி ஆண்டு போன்றவற்றை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

உங்களது கையடக்க தொலைபேசியின IMEI இலக்கத்தை *#06# sequence. ஐ டயல் செய்வதன் மூலம் நீங்கள் இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம். அதே போன்று உங்களது கையடக்க தொலைபேசியின் உத்தரவாத காலத்தில் வழங்கப்படும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதாயின் அல்லது அதற்கான படிவத்தை நிரப்பும் போது இந்த IMEI அடையாள இலக்கம் உங்களுக்கு மிகவும் உறுதுணையாகக் காணப்படும். அதே போன்று உங்களது கையடக்க தொலைபேசி தொலைந்தோ அல்லது திருடப்பட்டாலோ இந்த ஐஆநுஐ இலக்கத்தைக் கொண்டு சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது வலையமைப்பு சேவை வழங்குநரிடமோ நீங்கள் முறைப்பாடொன்றினைப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலமாக உங்களது தொலைந்த அல்லது திருடப்பட்ட தொலைபேசியின் பாவனையை உடனடியாக நிறுத்தி வைக்கவும் முடியும். இதன் பிற்பாடு வேறொரு சிம் அட்டையைக் கொண்டு உங்களது கையடக்க தொலைபேசியை பயன்படுத்த முயன்றாலும் அவற்றை இயங்கச் செய்ய முடியாமல் போகும்[1].

எனவே உங்களது தொலைபேசியின் IMEI இலக்கத்தை தெரிந்து கொள்வதுடன் அவற்றை சரியான பாதுகாப்பானதொரு இடத்தில் குறித்தும் வைத்துக் கொள்ளுங்கள்.




[1] Google has some useful advice on creating a strong password and a more secure account: https://support.google.com/accounts/answer/32040?hl=en

கீழே உங்களது கையடக்க தொலைபேசியின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சில பயன்தரும் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- உங்களது கையடக்க தொலைபேசியைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தனி ரகசிய இலக்கமொன்றினை வழங்கிக் கொள்ளுங்கள். குறைந்தது 06 இலக்கங்களைக் கொண்டதொரு தனி அடையாளக் குறிப்பை வழங்குங்கள்.
- மிகவும் அண்மையில் வெளியிடப்பட்ட செயலியை தரவிறக்கம் செய்வதோடு அதனை உங்களது கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.
- உங்களது கையடக்க தொலைபேசிக்கான வைரஸ் பாதுகாப்பு செயலியை அல்லது வேறு ஏதும் தீங்கு விளைவிக்கக்கூடிய விடயங்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய செயலிகளை தரவிறக்கம் செய்து செயற்படுத்திக் கொள்ளுங்கள்.
- நம்பத் தகுந்த தளங்களிலுள்ள செயலிகளை மட்டுமே தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள் உதாரணமாக (Google play store அல்லது Apple app store)
- உங்களது செயலிகளுக்கான தடைகளை உயர்த்திக் கொள்ளுங்கள். Android மற்றும IOS இயங்கு தளங்களில் எந்த வகையான செயலிகளை அனுமதிக்கலாம் அல்லது அனுமதிக்க முடியாது என்பதை உங்களுக்கு ஏற்ற வகையில் உயர்த்தி அல்லது தளர்த்திக் கொள்ளுங்கள். நீங்கள் இதற்கான அனுமதிகளை உயர்த்திக் கொள்வது மிகவும் ஆரோக்கியமானது, இதனால இந்த செயலிகள் உங்களது தனிப்பட்ட விடயங்களுக்கு உள்ளே செல்வது தடுக்கப்படும். Mypermissions.Com எனும் இலவச இணையதளமானது இவை பற்றிய ஆரோக்கியமான பல விடயங்களை உங்களுக்கு வழங்குகிறது. அது மட்டுமல்லாமல் இந்த தளமானது தொலைபேசிக்கே ஏற்ற பல செயற்பாடுகளைக் கொண்டதொரு செயலி என்பதோடு உங்களது கையடக்க தொலைபேசிக்குள் இயங்க விடப்பட்ட ஏதாவது செயலிகளை நிறுத்தவோ அல்லது அகற்றவோ வேண்டுமாயின் மிக இலகுவான முறையில் ஒரு முறை அழுத்துவதன் மூலம் இவற்றை செயற்படுத்திக் கொள்ளலாம்.
- வேறு இடத்திலிருந்து இயக்கக்கூடிய செயலியை செயற்படுத்திக் கொள்ளுங்கள்: இது உங்களது கைத்ததொலைபேசி தொலைந்தோ அல்லது திருடப்பட்டாலோ அது இருக்கும் இடத்தை கண்டுபிடிப்பதற்கு உதவும் ஒரு செயற்பாடாகும். அதே போன்று இந்த செயலியானது உங்களது தொலைபேசியிலுள்ள செயலிகளை வேறொரு இடத்திலிருந்து அதில் காணப்படும் இரகசிய விடயங்களை பெற்றுக்கொள்ளவும் உதவும்.
- நீங்கள் பாவிக்காத வேளையில Bluetooth இனை செயலிழக்கச் செய்யவும்: உங்களது Bluetooth இயங்கும் நிலையில் காணப்படும் போது உங்களது கையடக்க தொலைபேசி வலுவிழந்ததாகவே காணப்படும். ஆகவே பிற சாதனங்களின் தாக்கத்திலிருந்து உங்களது கையடக்க தொலைபேசியினை பாதுகாக்க வேண்டியேற்படின் Bluetooth செயலிழந்த நிலையில் இருப்பது மிக முக்கியமானதாகும். சில வேவைளைகளில் நீங்கள் மற்றவர்களால் காண முடியாத நிலையில் இதனை செயற்படுத்தியிருந்தாலும் இவற்றால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் மிகவும் அதிகமானவை.



## டிஜிட்டல் அடையாள திருட்டு


ஒன்லைன் மற்றும் ஒன்லைன் அற்ற இரு முறைகளிலும் டிஜிட்டல் அடையாளத் திருட்டுக்கள் இடம்பெறலாம். அதாவது வேறு நபர்களால் உங்களது தனிப்பட்ட மற்றும் இரகசியமான விடயங்களை உங்களது கணக்குகள் அல்லது சாதனங்களுக்குள் உங்களது அனுமதியில்லாமல் உள் நுழைந்து திருடுவது ஆகும். உங்களது மிகவும் பெறுமதியான விடயங்களான வங்கிக் கணக்கு இலக்கங்கள், மின்னஞ்சல்கள், கடனட்டை இலக்கங்கள் போன்றனவற்றை திருடுவது தற்காலத்தில் அதிகமாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு இடம்பெறுமிடத்து இதனால் பல பாரதூரமான நிலைமைகள் ஏற்படலாம்.
தனியொருவரின் தனிப்பட்ட டிஜிட்டல் அடையாளங்கள் பல முறைகளில் திருடப்படலாம். ஒன்லைன் முறைகளை உபயோகிக்கும் போது இத்திருட்டு சம்பவங்கள் மிக அதிகமாக இடம்பெறுகிறது. மேலும் திருடர்களுக்கு நீங்கள் ஒன்லைன் மூலம் இருப்பது மிகவும் இலகுவாக அவர்களது திருட்டினை மேற்கொள்ள உதவுகிறது.

அடையாள திருட்டுக்களை டிஜிட்டல் முறையின்படி பின்வரும் வகைகளில் உள்ளடக்கலாம் .

- கைவிடப்பட்ட சாதனங்களான கணனி, கையடக்க தொலைபேசி மற்றும் USB போன்றவற்றிலிருக்கும் அனைத்து தகவல்களையும் வேறொரு சாதனத்துக்குள் மாற்றிக் கொள்ளல்
- Keystroke logging or spyware போன்ற செயலிகளைப் பயன்படுத்தி உங்களது தனிப்பட்ட விடயங்களை திருடிக் கொள்ளல்.
- உங்களது கணனி போன்ற சாதனங்களிலுள்ள மிகவும் பெறுமதியான கோப்புகள் மற்றும் ஏனைய விடயங்களை கடத்தல்.
- மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் போன்றவற்றினூடாக மக்களை ஏமாற்றும் செய்திகளை அனுப்பி அவர்களின் பெறுமதியான விடயங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- உங்களது பலமிழந்த கடவுச்சொல்லினை ஊகித்துக் கொண்டு அவற்றை உட்செலுத்தி உங்களது கணக்குகளுக்குள் நுழைந்து தனிப்பட்ட விடயங்களை பெற்றுக் கொள்ளல்.
- சமூக வலைத்தளங்கள் போன்ற செயலிகளை உருவாக்கி அவற்றுக்குள் உங்களை உள் நுழைய வைத்து நீங்கள் வழங்கும் மின்னஞ்சல் முகவரியினூடாக தாங்கள் ஊகிக்கும் கடவுச் சொல்லொன்றைக் கொண்டு உங்களது கணக்கிற்குள் நுழைதல்.
- உங்களது செயலிழந்த கணக்கொன்றை வேறொரு கணக்கிற்குள் மாற்றுவதைப் போல் உருவாக்கி அவற்றிற்கு நீங்கள் வழங்கும் விடயங்களைக் கொண்டு உங்களது தனிப்பட்ட விடயங்களை திருடுதல்.

இவ்வாறான அடையாள திருட்டுக்களின் பாதிப்பை நாம் முற்று முழுதாக ஒழித்து விட முடியாது. ஆனால் இவற்றிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள எம்மையும் எம்மைச் சுற்றியுள்ளவர்களையும் அவை பற்றி விழிப்டைய செய்ய வேண்டும். அவை பற்றி கீழே சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன .

- நீங்கள் வங்கிக் கணக்குகள் போன்ற பாதுகாப்பானதொரு இணையதளத்தினுள் நுழைந்திருந்தாலும் எப்பொழுதாவது வேறொரு நடுத்தர இணையதள பகுதிக்கு மாற்றப்பட்டால் அவை பற்றி விழிப்பாக இருங்கள். இணையதள பகுதிகளை (URL) அடிக்கடி பரீசீலனை செய்து கொள்ளுங்கள்.
- நீங்கள் சந்தேகத்துக்கிடமான ஏதாவதொன்றுக்காக இணையதள முறையிலான பணக்கொடுக்கல்வாங்கல்களுக்கு உங்களது கடனட்டையை பயன்படுத்தியிருப்பின் அவற்றை தொடர்ந்து அவதானித்துக் கொண்டே இருங்கள்.
- நம்பத் தகுந்த பகுதிகளில் மாத்திரமே பணக்கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளவும். நீங்கள் ஏதாவது கட்டணங்களை இணையதளத்தின் மூலம் மேற்கொண்டிருப்பின் அப்பகுதியின் மேல் பகுதியில் (வலது பக்க) பூட்டு போன்றதொரு உருவம் தோன்ற வேண்டும். அப்படியானதொரு உருவம் தோன்றாவிடத்து உங்களது அட்டைகளது இலக்கங்களை உட்செலுத்த வேண்டாம்.
- மிகப்பிரபல்யமான நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள், வங்கிகள் போன்ற நிறுவனங்களிலிருந்து அனுப்பப்படும் மின்னஞ்சல்களுக்கு ஒத்ததானவற்றில் ஏதாவது இணைப்புகளுடன் காட்சிப்படுத்தி உங்களது தனிப்பட்ட விடயங்களை வழங்கக் கேட்டால் அவைகளிலிருந்து தவிர்த்து கொள்ளவும். இதற்கு மாற்றாக அக்குறிப்பிட்ட நிதி நிறுவனத்துக்கோ அல்லது பல்கலைக்கழகத்துக்கோ அழைப்பொன்றினை மேற்கொண்டு அவை பற்றிய மேலதிக விடயங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- உங்களது பொதுவான புரிந்து கொள்ளும் தன்மைக்கேற்றவாறு நடந்து கொள்ளுங்கள். ஏதாவது ஒரு வழங்கல்கள் மிகவும் உண்மையான நம்பத்தகுந்தவொன்றாக காணப்படுமிடத்து (உதாரணமாக பாரிஸுக்கு சுற்றுப்பயணமொன்றை இலவசமாக பெற்றுக்கொள்ள உங்களது கடனட்டை இலக்கத்தை வழங்கவும் போன்ற) அவற்றை கவனத்தில் எடுக்காதீர்கள்.
- பொதுவான Wi-Fi இனை உபயோகிக்குமிடத்து உங்களது வங்கிக் கணக்கு அல்லது கடனட்டை விடயங்களை வழங்காதீர்கள்.
- சில கணனிசார் நிறுவனங்களை போன்றதொரு நிறுவனங்களிலிருந்து வரும் மின்னஞ்சல்கள் பற்றி கவனமாக இருக்கவும் (உதாரணமாக Norton Anti-Virus இது அவற்றை பதிவிறக்கம் செய்யும்படி உங்களைக் கேட்டு நிற்கும்). இவை பற்றி இந்நிறுவனங்களிலிருந்து அறிந்து கொள்ளுங்கள், மாறாக மின்னஞ்சலில் எந்த பதிலும் அனுப்ப வேண்டாம்.



[2] More information at: https://www.imei.info/
[3] Source: https://www.techopedia.com/definition/13637/identity-theft

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கைகள் 1: DATA DETOX KIT

ஆரோக்கியமான தொழில்நுட்ப அம்சங்களில் உங்களுடைய தரவுகள் செல்லும் பாதையை குறைக்க வேண்டுமாயின் அதை எங்கிருந்து ஆரம்பிப்பது என்று முடிவெடுப்பது மிக கடினமான ஒரு விடயம் ஆகும். எங்களுடைய சாதனங்கள் நமது தனிப்பட்ட வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுவதனால் இதுவே அவற்றில் சமநிலையை உருவாக்க உதவுகிறது.

Data Detox Kit எனப்படுவது நாம் அனைவரினாலும் அணுகக்கூடிய மிக எளிய ஒரு கருவியாகும். இது ஆரோக்கியமான இணையத்தை விரும்பி நீங்கள் எடுக்கக்கூடிய ஒவ்வொரு அடியின் மூலமும் உங்களை அந்த இடத்துக்கு எடுத்து செல்கிறது. இது உங்கள் டிஜிட்டல் வாழ்க்கையின் வெவ்வேறு வகையான அம்சங்களைக் கொண்டு உங்களது தொலைபேசியில் நீங்கள் செலவிடும் நேரத்தைக் கொண்டும், நீங்கள் பயன்படுத்தும் சேவைகளைக் கொண்டும், நீங்கள் வழங்கிய கடவுச் சீட்டைக் கொண்டும் ஒரு முழுமையான அணுகுமுறை ஒன்றை உருவாக்கும்.

இந்த Data Detox Kit ஆனது Tactical Tech எனும் சர்வதேச இலாப நோக்கற்ற நிறுவனம் ஒன்றினால் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனமானது சிவில் சமூகம் மற்றும் சாதாரண பிரஜைகளுக்கு தொழில்நுட்பத்தினால ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய விடயங்களில் தனது வேலைகளை முன்னகர்த்திக் கொண்டு செல்கிறது.

இதன் பதிப்புக்கள் டச்சு, பிரெஞ்சு, ஜேர்மன், இந்தோனேசியன், நோர்வே, போலாந்து, போர்த்துக்கீஸ், ஸ்பானிஸ் மற்றும் சுவீடன் மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. datadetox@tacticaltech.org எனும் மின்னஞ்சல் முகரியினூடாக நீங்கள் விரும்பிய மொழியில் PDF வகையான பிரதியொன்றைக் கேட்டு விண்ணப்பிக்கலாம் என்பதோடு மட்டுமல்லாமல் இவற்றை நீங்கள் எங்கே என்ன விடயத்துக்கு பாவிக்கப் போகிறீர்கள் என்ற விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும்.

[4] Source: http://www.digitalresponsibility.org/how-to-avoid-online-identity-theft

## சம்பவக் கற்கை 2: டிஜிட்டல் முதலுதவிப் பெட்டி

டிஜிட்டல் முதலுதவிப் பெட்டி என்ற விடயம் வெளியில் வருவதற்குக் காரணம் யாதெனில் இத்துறையில் ஒரு போதுமில்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையானவர்கள் தற்காலத்தில் ஈடுபடுகின்றனர், எனவே யாராவது ஒருவருக்கு டிஜிட்டல் துறையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களுக்கு உதவிகள் தேவைப்படுமிடத்து உரிய வேளையில் உதவியை வழங்க வேண்டும் என்பதற்காகவே இது அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறான நிலையில் அந்த பாதிக்கப்பட்ட நபர் என்ன செய்வது? எங்கே செல்வது என்பது பற்றித் தெளிவில்லாமல் காணப்படுவார், எனவே அவ்வேளையில் இது மிகவும் உறுதுணையாக அமையும். இந்த நடைமுறையை உருவாக்குவதற்கான பின்னணியாக அமைந்தது யாதெனில் எந்த ஒருவருக்கும் அவசர நிலையொன்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதறதகான தேவை உள்ளது என்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஏதாவது அவசர தேவைகள் ஏற்படுமிடத்து அத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சேவைகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு வசதி காணப்பட வேண்டும் என்பதாகும்.

இந்த டிஜிட்டல் முதலுதவிப் பெட்டியானது யாராவது இத்துறையிலுள்ள ஒருவருக்கு ஏற்படக்கூடிய பொதுவான பிரச்சினைகளுக்கு முதற்கண்ணாக வழங்கக் கூடிய அல்லது அந்நிலையைத் தடுக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பது ஆகும். இவ்வுதவிப் பெட்டியானது மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், போன்றோர்களுக்கு தாம் சுயமாக தங்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய விடயங்களைப் பற்றி கண்டறிந்து கொள்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளதாகும். அது மாத்திரமல்லாமல் எவராவது ஒருவர் பாதிக்கப்பட்டிருப்பின் அவருக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டிய சேவைகளும் இதில் உள்ளடக்கபட்டுள்ளது.

இந்தத் தொகுதியானது எவ்வாறு பாதுகாப்பான தொடர்பாடலை மேற்கொள்வது என்ற விடயத்தில் ஆரம்பித்து அவற்றுக்கான உதவிகளை பெற்றுக்கொள்வது பற்றியும் குறிப்பிடுகிறது. அதன் பின்னர் இது கணக்குகளை கடத்தல், சாதனங்களை பறிமுதல் செய்தல், ஆபத்தை விளைவிக்கும் விடயங்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது என்பது பற்றியும் குறிப்பிடுகிறது.

இக்கேள்விகள் சுய மதிப்பீடொன்றை மேற்கொள்வதன் மூலம் உங்களை வழிப்படுத்தும் அல்லது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி முதலில் பதிலளிக்க இருப்பவர்களுக்கு தெரியப்படுத்தும். இது சிக்கல்களை புரிந்து கொள்வதறகான ஆரம்ப நடவடிக்கைகளாக அமைகிறது. இதில் பயன்படுத்தப்படும் நடைமுறைகள் ஒரு நிபுணரிடம் எவ்வாறு உதவிகளைப் பெற்றுக் கொள்வது என்பது பற்றியும் குறிப்பிடுகிறது.

இந்த முதலுதவியில் காணப்படும் விடயங்கள் ஒரு சிக்கலான நிலையொன்றின் போது நிலைமைகளை அறிந்து தெரிந்து கொள்வதற்கான ஆரம்பகட்ட உதவிகளை உங்களுக்கு வழங்குகிறது. இதன் மூலம் நீங்கள் ஆரம்பத்திலேயே விடயங்களை அறிந்து அதற்கேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இதிலுள்ள ஏதாவதொரு வியடங்களுக்கு எவ்வாறு அவற்றை வெற்றி கொள்வது என்பது பற்றி உங்களுக்கு தெளிவுகள் காணப்படவில்லையாயின் உடனேயே அதில் பாண்டித்தியம் பெற்ற ஒருவரிடம் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது இவற்றை உருவாக்கியவர்களிடம் தெரியப்படுத்துங்கள்.

இவ்வாறு சுயமாகவே விடயங்களை கண்டறியக்கூடிய இந்த செயலிகள் ஊடகவியலாளர்கள், பிளொக் எழுதுபவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் போன்ற அனைத்து சாரார்களுக்கும் டிஜிட்டல் உலகில் இடம்பெறும் விடயங்கள் பற்றிய தெளிவையும் விளக்கங்களையும் கொடுப்பதாக அமைய வேண்டும். இதன் மூலமே டிஜிட்டல் உலகில் காணப்படும் ஆபத்து விளைவிக்கக்கூடிய விடயங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்து ஆபத்தற்ற ஒரு சூழலை நாம் எல்லோருக்காகவும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

More: https://www.digitaldefenders.org/digitalfirstaid/

## கலந்துரையாடல் விடயங்கள்

இவ்விடயங்கள் பற்றிய மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு கீழ்வரும் கலந்துரையாடல் விடயங்களை அவதானித்துக் கொள்ளுங்கள்.

- டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் கணனி பாதுகாப்பு என்பது பாவனையாளர், பயனாளர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவை என்பவற்றுக்கிடையிலான பகிரப்பட்ட பொறுப்புணர்ச்சி ஆகும். நீங்கள் இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா? கலந்துரையாடவும்.
- நீங்கள் எப்போதாவது கணனி வைரஸ் அல்லது கணனிகளுக்கு பாதுகாப்பு விளைவிக்கக்கூடிய ஏதாவதொன்றின் மூலம் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளனவா? அவ்வாறான நிலையை வெற்றி கொள்ள எவ்வகையான உத்திகளை நீங்கள் அல்லது உங்களது நிறுவனம் மேற்கொண்டுள்ளது?
- உங்கள் டிஜிட்டல் சேவைகளில் ஏதேனும் குறியாக்கத்தை மேற்கொண்டுள்ளீர்களா? அப்படியாயின் உங்களது அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?
- தரவு அல்லது தனியுரிமை மீறப்பட்டால் உங்களால் என்ன வகையான விடயங்களை மேற்கொள்ள முடியும்? உங்களுக்கோ அல்லது உங்கள் நிறுவனத்துக்கோ ஏதாவது ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளக்கூடிய திட்டங்கள் காணப்படுகிறதா?
- டிஜிட்டல் அடையாள திருட்டுக்கள் பற்றிய ஏதேனும் நிகழ்வுகள் உங்களுக்கு இடம்பெற்றிருக்கிறதா? அது எவ்வாறு இடம்பெற்றுள்ளது? அதை மீட்டுக்கொள்ளல் எந்த வகையில் சாத்தியமானது?
- நீங்கள் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ வேறு இடங்களுக்கு சென்று பொது wi fi களைப் பயன்படுத்துபவரா? அப்படியாயின் எந்த வகையான முன்னாயத்தங்களை நீங்கள் மேற்கொண்டீர்கள்?

## கற்றல் பலன்கள்

இந்தப்பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்

- இணைய பாதுகாப்பு எனப்படுவது விடயங்கள் மற்றும் முறைமைகளை உள்ளடக்கியது. இணைய முன்பாதுகாப்பு எனப்படுவது மக்களைப் பற்றியது.
- டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகிய இரண்டும் பாவனையாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புபட்ட எல்லோராலும் மேற்கொள்ள வேண்டிய கூட்டுப் பங்காண்மை ஆகும். நல்லதொரு டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு என்பவற்றுக்கு பாவனையாளர்களின் பங்குபற்றல், கடப்பாடு மற்றும் அவதானம் ஆகியவை மிக முக்கியமானது ஆகும்.
- உறுதியான கடவுச்சொல், இரு வழி அங்கீகாரம், தரவு மறைகுறியாக்கல் மற்றும் காலத்துக்கு காலமான தரவு மீளப் பெறல் போன்றன ஒவ்வொரு டிஜிட்டல் பாவனையாளர்களும் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய ஆரோக்கியமான நடைமுறை ஆகும். மேலும் இது நல்லதொரு ஆரோக்கியமான டிஜிட்டல் முறை என்றும் அழைக்கப்படும்.
- டிஜிட்டல் பாதுகாப்பு மற்றம் கணனி பாதுகாப்பு பற்றிய அதிகளவான இலவச ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் இணையதளங்களில் பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும் இதிலுள்ள முக்கிய விடயம் யாதெனில் நீங்கள் - அதாவது பாவனையாளர்கள்.

## மேலதிக வாசிப்புகளுக்காக

ஆரோக்கியமான டிஜிட்டல் : இணைய வழியில் பாதுகாப்பாக இருப்பதற்கான வழி முறைகள்
Book by Ed Gelbstein (2013)
http://index-of.co.uk/IT-managment/good-digital-hygiene.pdf

Norton இணைய பாதுகாப்பு அறிவுறுத்தல்கள்
https://us.norton.com/internetsecurity

கூகுள் பாதுகாப்பு நிலையம் (கூகுள் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே)
https://support.google.com/

உள் பெட்டிக்குள் பாதுகாப்பு, சமூக செயற்பாட்டாளர்களுக்கும் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களுக்குமான வழிகாட்டி
https://www.frontlinedefenders.org/en/digital-security-resources

உங்களது அன்ட்ரொய்ட் தொலைபேசியில் காணப்படும் டிஜிட்டல் ஆபத்துக்கள் இருப்பின் அதற்கான குடை
https://secfirst.org/

ஊடகவியலாளர்களுக்கான தகவல் பாதுகாப்பு கைநூல்
http://www.tcij.org/resources/handbooks/infosec

Electronic Frontier குழரனெயவழைெ'ள இனது கண்காணிப்புத் தற்காப்பு
https://ssd.eff.org/en

நல்லதொரு டிஜிட்டல் சுகாதாரம் பற்றிய உதவிக் குறிப்புக்கள்
https://wiobyrne.com/digital-hygiene/

Electronic Intifada இனது ஆர்வலர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு
https://electronicintifada.net/content/guide-online-security-activists/17536

MODULE 4

# டிஜிட்டல் அவதானத்தை ஊக்கப்படுத்தல்

# டிஜிட்டல் அவதானத்தை ஊக்கப்படுத்தல்

நாம் ஏற்கனவே கலந்துரையாடியதன்படி இணைய பாதுகாப்பு என்பது முறைமைகளையும் சாதனங்களையும் உள்ளடக்கியது. இணைய அவதானம் என்பது அவற்றைப் பயன்படுத்தும் மக்களைப் பற்றியது.

இந்தப்பாடத்திட்டமானது இணைய மற்றும் டிஜிட்டல் பாவனைகள் பற்றிய அடிப்படை பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது, உதாரணமாக மனிதர்கள் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வெப் தளங்களைப் பயன்படுத்தும் போது அவற்றிலிருந்து தங்களது சுய பாதுகாப்பினை எவ்வாறு மேம்படுத்திக் கொள்வது என்பது பற்றியது ஆகும்.

மேலும் இது டிஜிட்டல் சாதனங்கள், தரவுகள் மற்றும் டிஜிட்டல் அடையாளங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான பொதுவான அணுகுமுறை ஆகும். இவை அனைத்தும் மிக முக்கியமானவையாகும் ஆனாலும் அவை போதுமானவை அல்ல. தேவைகள் பாவனையாளர்களின் விடயங்கள் போன்றவற்றை குறிப்பிட்டால் மாத்திரமே இது பாதுகாப்பானதாக அமையும்.

அவதானமாக இருப்பது என்பது பாதுகாப்பாக இருப்பதையும் குறிக்கும். ஆனாலும் அவதானமாக இருக்க வேண்டுமென்றால் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்பட மாட்டாது. நாங்கள் உருவாக்க வேண்டும் என்று எண்ணிக்கொள்ளும் டிஜிட்டல் சுற்றுச் சூழலின் பாதுகாப்பும் அவதானமும் இவற்றிலேயே தங்கியுள்ளது.

ஒரு ஆரோக்கியமான டிஜிட்டல் சுற்றுச் சூழலொன்றை உருவாக்க வேண்டுமானால் நம்பிக்கை, நல்ல உறவு முறை மற்றும் மற்றவர்களுடனான பங்களிப்பு போன்ற தரமான நற்காரியங்களை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று எமக்கு முறபோக்கான சட்ட ஒழுங்கு முறைகளும், நடைமுறைப்படுத்தலும் மிக அத்தியவசியமானவை.

அப்படியான நடைமுறைப்படுத்தலுக்கான பல வகையான ஆலோசனைகளையும், தற்கால நடைமுறையையும் பல ஆராய்ச்சிகள் எமக்கு பல விடயங்களை எடுத்துக் கூறுகின்றன.

கூட்டணி ஒத்துழைப்புக்களை தொழில்நுட்ப நிறுவனங்கள், சட்ட அமுலாக்க நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர்களுக்கிடையில் உருவாக்கிக் கொள்ளலாம்.

# முக்கிய சொற்கள்

இணையவழி இம்சைகள்: இணையவழி கொடுமைப்படுத்தல் எனப்படுவது டிஜிட்டல் சாதனங்களான கையடக்க தொலைபேசி, கணனிகள் மற்றும் **Tablets** போன்றவற்றினூடாக மற்றவர்களை தொல்லைப்படுத்துவதை குறிக்கும். இவ்வகையான நடவடிக்கைகள் குறுந்தகவல்களினால், செயலிகளினால் அல்லது சமூக வலைத்தளங்களுக்கூடாகவோ அல்லது பொழுது போக்கு செயலிகளுக்கூடாகவோ இடம் பெறலாம். இணையவழி இம்சைகளுக்கு உதாரணங்களாக பிழையான, ஆபத்தை விளைவிக்கக்கூடிய விடயங்களை அனுப்புதல், பகிர்தல் மற்றும் பொது வெளிகளில் பிரசுரித்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் ஒருவரைப் பற்றி மற்றொருவரிடம் கேவலப்படுத்தல், அவமானப்படுத்தல் பேன்றனவற்றையும் இவற்றில் உள்ளடக்கலாம். சில இணையவழி இம்சைகள் சட்டத்துக்கு முரணான பாரிய குற்றச்செயல்களாகவும் கணிக்கப்படுகிறது.

Source: https://www.stopbullying.gov/cyberbullying/what-is-it/index.html

**Troll** என்பது இணையதள சமூகத்திற்குள்ளேயே காணப்படும் ஆபத்தை விளைவிக்கும், குற்றச் செயல்களை பொது வெளிகளில் பகிர்வோரைக் குறிக்கும். அவர்கள் எப்போதும் மற்றவர்களை எதிர்வினையாக்கும் அறிக்கைகளையே வெளியிடுவர்.

Source: https://www.techopedia.com/definition/429/troll v



## டிஜிட்டல் பாதுகாப்பும் மனித உரிமைகளும்

நாங்கள் டிஜிட்டல் பாவனைகள் பற்றிய பாதுகாப்பு அம்சங்களை மனித உரிமை நியமங்களின் அடிப்படையிலேயே அணுக வேண்டும். ஒவ்வொருவரும் தாமிருக்கும் எந்த இடத்திலிருந்தும் எத்தகைய பாகுபாடுகளுமின்றி பாதுகாப்பான இணையதள அநுபவங்களைப் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு.

பாடத்திட்டம் 1 இல் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று ஒன்லைனில் ஒருவர் இருக்கும் போது அவருக்கு காணப்படும் அதே உரிமைகள் அவர் ஒன்லைனில் இல்லாமல் இருக்கும் நேரத்திலும் மதிக்கப்பட வேண்டும்.

இவைகள் பற்றிய குறிப்பாக இணைய வசதி பற்றிய மனித உரிமைகளை பின்வருமாறு நோக்கலாம்: கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் (தகவல் அறியும் உரிமைகளும் இவற்றில் அடங்கும்), தனியுரிமையும் தரவுகளைப் பாதுகாப்பதற்கான உரிமைகளும், விசேட தேவைகளையுடையவர்களுக்கான உரிமைகள் மற்றும் பால்நிலை உரிமைகள்.

மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகளாவன ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ள இடையீடான உரிமைகளாகும். உதாரணமாக கருத்துச் சுதந்திரம் இணையதளத்தில் மற்றும் வெப் தளங்களுக்கு சமமான முறையில் அணுகுவதுடன் சம்மந்தப்பட்டது, சிறுபான்மையினரது உரிமைகளைப் பாதுகாப்பதென்பது கலாசார வித்தியாசங்களையும் பல மொழிகளுக்கான உரிமைகளால் உந்தப்படுகிறது. அதே போல தனியுரிமையை உறுதிப்படுத்துவதென்பது இணைய பாதுகாப்பு விடயங்களுக்கு மிக முக்கியமானது .



[1] Net neutrality is the principle that internet service providers (ISPs) must treat all internet communications equally, and not discriminate or charge differently based on user, content, website, platform, application, type of equipment or method of communication. More: https://www.eff.org/issues/net-neutrality

## தொழில்நுட்பம் தொடர்பான பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஒவ்வொருவருக்கும் டிஜிட்டல் பாதுகாப்பு பற்றிய விடயம் முக்கியமான ஒரு விடயமாக தற்காலத்தில் காணப்படுகிறது. எவ்வாறாயினும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோர் தொடரந்தும் இதன் தாக்கத்தினால் பாதிக்கப்படும் ஒரு சாரராராக தொடர்ந்தும் காணப்பட்டுக்கொண்டே வருகின்றனர்.

உலகிலுள்ள சில சிவில் சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பான முற்போக்கு தொடர்பாடல்கள் அமையம (Association for Progressive Communications) பெண்களின் உரிமை மேம்பாட்டுக்கான பல வேலைத்திட்டங்களை உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகிறது. பெண்களுக்கு எதிரான தொடர்ந்து வரும் வன்முறைகள் என்ற விடயத்தை நோக்குமிடத்து, தொழில்நுட்பமே இவ்வாறு இவர்கள் பாதிக்கப்படுவதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

APC இன் கருத்துக்கணிப்பின்படி, பெண்களுக்கு எதிரான தொடர் தொழில்நுட்பம்சார் வன்முறைகளுக்கான பொதுவான காரணியாக அமைவது இணைய பேச்சுக்கள், பாலியல் சேட்டைகள், கெட்ட வகையான பார்வை மற்றும் பெண்கள் பற்றிய விடயங்களான போட்டோ, வீடியோ போன்றவற்றை வேண்டுமென்றே பிழையாக சித்தரித்து வெளியிடல் போன்றவற்றை குறிப்பிடுகிறது.

இப்படியான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு சென்றாலும் அநேகமான பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு இதை நிறுத்துவதற்கு எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்ன விடயத்தைப் பற்றி முறையிட வேண்டும் மற்றும் எந்த வகையான உதவிகளை எதிர்பார்க்கலாம் என்ற தெளிவு போதாமலே காணப்படுகிறது. இவைபற்றிய கொள்கைகள் அநேகமான நாடுகளில் இப்புது விதமான வன்முறைகளை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய சட்ட நடைமுறைகள் இன்னும் நடைமுறையில் இல்லை. மெக்சிகோ நாட்டு சமூக ஆர்வலரான Luchadoras மற்றும SocialTic மற்றும APC ஆகியன இணைந்து பெண்களுக்கு எதிரான இணையவழி நடைமுறைகளைக் கட்டுப்படுத்த பின்வரும் 13 வகையான பால்நிலை சம்மந்தமான வன்முறைகளை அடையாளப்படுத்தியுள்ளனர்.

> "பெண்களுக்கெதிரான வன்முறையானது பால்நிலை ரீதியாக காணப்படும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படும் வெளிப்படையான பாகுபாடு ஆகும். மேலும் இணையதளங்களில் இதன் பலம் மேலும் ஓங்குகிறது"
>
> **JAC SM KEE, APC** பெண்கள் உரிமைகளுக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்.

For a more detailed discussion on human rights online, see:
[2]https://dig.watch/baskets/human-rights
[3] https://www.genderit.org/resources/13-manifestations-gender-based-violence-using-technology

https://www.genderit.org/resources/13-manifestations-gender-based-violence-using-technology

# 13 MANIFESTATIONS OF GENDER-BASED VIOLENCE USING TECHNOLOGY

### Unauthorised access and controlling access

Unauthorised attacks to gain access to a person's accounts or devices. These can imply unauthorised information gathering and/or blocking access to a person's account.

### Control and manipulation of information

Information gathering or theft that can imply a loss of control over such information, and any unauthorised attempt at modifying it.

### Impersonation and identity theft

The use or forgery of someone's identity without their consent.

### Surveillance and stalking

The constant monitoring of a person's activities, everyday life, or information (be it public or private).

### Discriminatory speech

Speech reflecting cultural models that assign women and gender-non-conforming bodies a secondary, sexualised or strictly reproductive role. Such speech may or may not incite violence.

### Harassment

Repeated and unsolicited acts against a person that are perceived as intrusive, disturbing or threatening. These acts may or may not be sexualised.

### Threats

Speech and content (verbal or written, in images, etc.) with a violent, sexually aggressive or threatening tone that express an intention to harm a person, their family or friends, or their belongings.

### Non-consensual sharing of private information

The unauthorised sharing or publication of any kind of information, data or private details regarding a person.

### Extortion

Forcing a person to act according to another persons' will, through threats and intimidation regarding something of value (e.g. personal information, intimate images, etc.)

### Disparagement

Defamation, smearing and/or undermining of the credibility, professional career, work or public image of a person, group or initiative, through the spreading of false, manipulated or off-topic information.

### Technology-related sexual abuse and exploitation

The act of exercising power over someone based on the sexual exploitation of their pictures and/or body against their will, where technology is a fundamental means.

### Attacks on communications channels

Deliberate tactics and actions aimed at putting a person's or group's communication or information channels out of circulation.

### Omissions by regulatory actors

Contempt or lack of interest, acknowledgment or action by actors (authorities, internet intermediaries, institutions, communities) who have the possibility of regulating, resolving, and/or penalising technology-related assaults.

LUCHADORAS

SOCIALTIC
Tecnología digital para el cambio social

APC
ASSOCIATION FOR PROGRESSIVE COMMUNICATIONS

## இணையவழி சுரண்டல் மற்றும் வன்முறைகள்

இணையவழி சுரண்டல்கள் மற்றும் வன்முறைகள் என்பது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒருவரை பாதிப்படைய செய்வதற்காக கொடுமைப்படுத்தல், பயமுறுத்தல், மன உளைச்சலுக்குள்ளாக்குதல், பாகுபாடு காட்டல், வற்புறுத்தல் அல்லது உடல், உள, உணர்வு ரீதியாக ஏதாவது வகையான நோவினை ஏற்படுத்துவதைக் குறிக்கும்.
இவ்வகையான வன்முறைகள் பல வழிகளில் மற்றும் பல வடிவங்களில் இடம்பெறலாம். இலங்கையில் இயங்கும் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காக இயங்கும் சமூக தொண்டு நிறுவனமான Grassrooted trust அமைப்பு Bakmoono.lk எனும் இணையதளத்தில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது.

- **Trolling** எனப்படுவது ஒருவர் வேண்டுமென்றே இணையதளங்களில் ஒருவரைப் பற்றி ஆதாரமற்ற கட்டுக்கதைகளை பதிவிட்டு விமர்சனம் செய்வது ஆகும். இது மற்றவர்களிடமிருந்து வேண்டுமென்றே கருத்துக்களையும் அபிப்பிராயங்களையம் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயலாகவே கணிக்கப்படுகிறது.

- இணையவழிப் பேச்சுக்கள்: ஒருவரை வேண்டுமென்றே இணையவழி மூலம் பயமுறுத்த அல்லது துஷ்பிரயோகம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல் ஆகும். இவ்வகையான குற்றங்கள் மின்னஞ்சல்கள், சமூக வலைத்தளங்கள், உடனடி குறுஞ்செய்திகள் அல்லது வேறு சில வகையான இணைய வழிமுறைகளிலும் இடம்பெறலாம். இது இன்னும் பல வழிமுறைகளிலும் இடம்பெறலாம்.

- அடையாளத் திருட்டு: என்பது ஒருவரது தனிப்பட்ட விடயங்களை அவரது அனுமதியின்றி பெற்றுக் கொண்டு கடனட்டை பெறல், வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், ஒருவரது மின்னஞ்சல்களை இன்னுமொரு வழியில் மாற்றிக் கொள்ளல், தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம். இது ஒரு குற்றச் செயல் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

- இணையவழியில் பலவீனப்படுத்தல்: என்பது ஒருவர் இன்னொருவரை பலவீனப்படுத்த அல்லது துஷ்பிரயோகப்படுத்த சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கும். இவ்வாறான மிகப் பாரதூரமான இணையவழி கொடுமைப்படுத்தலாக பாதிக்கப்பட்ட ஒருவர் பற்றிய விடயங்களை பரப்புரை செய்தல், பொய்யான விடயங்களை பதிவிடல், பாலியல் சம்மந்தமான விடயங்களை இட்டுக்கட்டுதல், மத அல்லது இனம் சம்மந்தமான விடயங்களை வெளியிடல் (வெறுக்கத்தக்க பேச்சு) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- ஆபாச ரீதியாக பழிவாங்கல் (அல்லது முன்னாள் பெண்தோழியினது ஆபாச விடயங்கள், நிர்வாணமான விடயங்களை பெற்றுக் கொள்ளலும் மற்றவர்களுடன் பகிர்தலும், வெட்கக்கேடான அசிங்கமான விடயங்கள்): எனப்படுவது தங்களது முன்னாள் காதலியுடன் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட பாலியல் ரீதியான ஈடுபாடுகளின் போது எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் போன்றவற்றை அவருடனிருந்து பிரிந்ததன் பிற்பாடு பழிவாங்கும் நோக்குடன் பிறருடன் பகிர்ந்து கொள்ளல்.

இணையவழி சுரண்டல் மற்றும் வன்முறைகள் பற்றிய மிகவும் சிறியளவிலான ஆய்வுகளே இலங்கையில் இடம்பெற்றிருக்கின்றன. இடைக்கிடையில் இடம்பெற்ற நிகழ்வுகளைக் கொண்டு பார்க்குமிடத்து இந்தப் பிரச்சினைகள் மிகப் பரந்தளவில் தற்காலத்தில் காணப்படுவதை அறிய முடிகிறது.

மூன்று நிறுவனங்களான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், Ghosha மற்றும Hashtag Generation ஆகியன ஒன்றிணைந்து மிக அண்மையில் நடாத்திய ஆய்வொன்றில் இலங்கையில் மிகப் பிரபல்யமான சுமார் 6 மில்லியன் பாவனையாளர்களைக் கொண்ட முகப்புத்தகத்தில (Facebook) பெண்களைப் பற்றி எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது என்ற விடயம் ஆராயப்பட்டது.

இந்த ஆய்வுகளின் இறுதி அறிக்கையில் ஓர் பால் புணர்ச்சியில் ஈடுபடும் பெண்கள், இரு பாலினம் சார்ந்த விருப்பமுடையவர்கள், பாலின அடையாளமற்றவர்கள் (Lesbian, Bisexual and Transgender/LBT) ஆகிய சமூகத்தவர்கள் தாங்கள் முகங்கொடுத்த தொழில்நுட்பவியல் சார்ந்த வன்முறைகள் பற்றி குழுக் கலந்துரையாடல்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களும் இடம்பிடித்துள்ளன. அதே போன்று கொழும்புக்கு வெளியேயுள்ள பெண் அரசியல்வாதிகளிடமும் இதற்காக நேர்காணல்கள் இடம்பெற்றன.

இந்த விடயங்களில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளினால் பாவிக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட 52 முகப்புத்தக கணக்குகளை தொடர்ந்து 06 மாத காலத்துக்கு கண்காணித்து வந்தனர். அதற்கு மேலதிகமாக பிரசித்திபெற்ற அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரபலங்களின் முகப்புத்தக கணக்குகளும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டதற்கமைவாக "ஒரு தெளிவான விடயம் ஒன்று புலப்பட்டது அது என்னவென்றால் பெண்களையும் LBT சமூகத்தவர்களையும் இலக்கு வைத்தே பாலியல் ரீதியான வார்த்தைப் பிரயோகங்களும், துன்புறுத்தல்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஒருவருடைய அனுமதியில்லாமல் அவரது புகைப்படங்களையும் வீடியோக்களையும் பதிவிட்டு அவர்களைத் தொல்லைப் படுத்தும் விடயங்களும் பரந்தளவில் காணப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் இறுதி விடயப்பரப்பு கூற முனைவதாவது பாலியல் வர்ணனைகளும் அசிங்கப்படுத்தலும் ஒன்லைன் மற்றும் ஒன்லைன் அல்லாத இரு வழிகளிலும் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது"

இந்த ஆய்வானது பொதுவாகவே சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில முகப்புத்தக கணக்குகளில் காணப்படும் பாலியல் மற்றும் பெண்களை வெறுக்கும் கலாசாரம் பற்றிய விடயங்களை கோடிட்டுக் காட்டுகிறது. இவை பற்றி கருத்துக்கூறிய ஆய்வாளர்கள் இந்நிலையானது இலங்கையின் கலாசாரத்தில் ஏற்கனவே காணப்படும் சாதாரணமான பாலியல் கலாசாரத்தின் நீட்டிப்பு என்று கூறுகின்றனர். இது பெரும்பாலும் நகைப்புக்குரிய விடயம் என்றே கருதப்படுகிறது (நியாயப்படுத்தப்படுகிறது). பெண்களை பாதுகாக்கக்கூடிய முகப்புத்தக பக்கங்கள், விளம்பரங்கள் இருப்பது போன்று காணப்பட்டாலும் அவை இவற்றை மேலும் பரப்பும் ஒரு விடயமாகவே காணப்படுகிறது.

போலி அடையாளங்களைப் பயன்படுத்தும் பின்தொடர்பவர்கள் மற்றும் கருத்துக்கூறுபவர்களால் இணையதளத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்படுகிறது. ஆய்வுகளின்படி இவ்வாறான விடயங்களை ஏற்படுத்துபவர்களின் முகப்புத்தக பக்கங்கள் பற்றி முகாமைக்கு முறையிடுவது கடினமானதொரு விடயமாகக் கருதப்படுகிறது. மேலும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வோர்கள் முகப்புத்தக சமூக தரநிலைகளுக்கு ஏற்ப இயங்குவதற்கான முறைகளையும் அறிந்துள்ளனர்.

[4] https://groundviews.org/2019/06/27/opinions-btch-technology-based-violence-against-women-in-sri-lanka/

"நாம் ஒரு பெற்றோராக, ஆசிரியராக அல்லது வயது வந்தவர் என்ற அடிப்படையிலோ சமூக ஊடக பாவனைகளை தடுக்க அல்ல கையடக்க இணையதள சாதனங்களை நிறுத்தவோ இயலாது. இதனால் கிடைக்கப்பெறும் அறிவு ரீதியான நன்மைகள் எண்ணிலடங்காது. இணையதள உலகம் என்பது நாம் மற்றவர்களுடன் கலந்துரையாடி உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் ஒரு தளமாகும். நாம் மனச்சாட்சியின் அடிப்படையில் பொறுப்புடன், மற்றவர்களை மதித்து அவர்களுடன் நல்ல முறையான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்"

BAKAMOONO.LK

"ஒன்லைன் மற்றும் ஒன்லைனற்ற முறையில் இடம்பெறும் வன்முறைகளை இரு கூறுகளாகப் பிரிப்பதென்பது சாத்தியமற்ற ஒரு விடயம் ஆகும். தொழில்நுட்பத்தினால் உண்டாக்கப்படும் வன்முறைகள் என்பது ஒரு தனிப்பட்ட பிரச்சினை அல்ல மாறாக இது இன்னொன்றின் மறு வடிவம் ஆகும். பெண்கள், சிறுமிகள் மற்றும் **LGBT** சமூகத்தவர்கள் மீது கட்டவிழ்த்தப்படும் வன்முறைகள் என்பது இணையதளத்தினால் மட்டும் ஏற்படும் ஒரு விடயம் அல்ல – குறுஞ்செய்திகள் அல்லது தொலைபேசிகளின் மூலமாகவும் இவ்வாறான விடயங்கள் ஏற்படலாம். ஆகவே இந்த நிலைமைகளான பெண்களின் தனியுரிமை, அவர்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் பொது இடங்களிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ அவர்கள் மீதான கெட்ட பார்வை போன்றன இணையதளத்திலும் அதிகமாக இடம்பெறுகிறது, இது இன்னும் அதிகரிக்கும் நிலையே காணப்படுகிறது"

OPINIONS, B*TCH: TECHNOLOGY-BASED VIOLENCE AGAINST WOMEN IN SRI LANKA
(CPA, Ghosha and Hashtag Generation, 2019)

# சமூக ஊடக நியமங்கள்

எல்லா சமூக ஊடகங்களும் தங்களது பாவனையாளர்களுக்கான பொருத்தமான சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கின்றன. இவைகள் அநேகமாக சமூக நியமங்கள் அல்லது தரநிலைகள் என்று எம்மால் அறியப்படுகிறது. தாம் ஒரு கணக்கொன்றை ஆரம்பிக்கும் போது பாவனையாளர்கள் அனைவரும் இதற்குக் கட்டுப்படுவதாக ஏற்றுக்கொள்கின்றனர்.

உதாரணமாகக் குறிப்பிட்டால், 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி உலகிலுள்ள மிகப்பெரும் சமூக ஊடகமான முகப்புத்தகத்தில் **(Facebook)** 2.38 பில்லியன் பாவனையாளர்கள் மாதமொன்றுக்கு இதைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பாவனையாளர்கள் இன்னும் பில்லியன் கணக்கான விடயங்களை இத்தளத்தில் பயன்படுத்துகின்றனர் அல்லது மீள் செயற்படுத்துகின்றனர். உலகிலுள்ள அநேக பிரதேசத்தில் இவற்றினூடாக இடம்பெறும் அரட்டைகளில் எந்தவிதமான ஆபத்தான விடயங்களும் இடம்பெறுவதில்லை. ஆனாலும் இதைப் பயன்படுத்தும் எல்லோரும் அதனது நியதிகளுக்கு கட்டுப்பட்டு பொறுப்புடன் பயன்படுத்துவதில்லை. முகப்புத்தகத்தின் சமூக நியமப் பகுதியில் எந்த விடயங்கள் அனுமதிக்கப்பட்டவை எந்த விடயங்கள் அனுமதிக்கப்படாதவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றினைச் சற்று அவதானிக்கவும். **https://www.facebook.com/communitystandards/**

“எங்களது சமூக நியமங்களின் அடிப்படை நோக்கம் யாதெனில் ஒரு பாதுகாப்பான சூழலை அனைவருக்குமாக உருவாக்குவது மாத்திரமல்லாமல் மற்றவர்களையும் இதன்பால் ஒழுக வைப்பதாகும். எமது கொள்கையானது தொழில்நுட்பம் மற்றும் பொதுப்பாதுகாப்புத் துறையில் பாண்டித்தியம் பெற்றவர்களின் ஆலோசனைகளுக்கமைவாகவே அமைக்கப்பட்டுள்ளது” இவ்வாறு இதன் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முகப்புத்தகமானது தங்களது விதிமுறைகள் பின்வரும் மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது: பாதுகாப்பு (மற்றவர்களுக்கு ஆபத்தாக அமையும் விடயங்களை அகற்றுதல்), குரல் (பாவனையாளர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற வகையில் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்) மற்றும் சமபங்கு (அனைவருக்கும் ஒரே நியமத்தை நடைமுறைப்படுத்தல்).

இந்த சட்டதிட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகள், வெறுப்பூட்டும் பேச்சுக்களும் நடவடிக்கைகளும், ஆட்கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் போன்ற வன்முறைகளை அல்லது குற்றச் செயல்களை மேற்கொள்ள ஒரு போதும் இடமளிக்காது. மேலும் இது “கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்” எனக் குறிப்பிடப்படும் போதைவஸ்துக்கள் மற்றும் ஆயுத விற்பனைகளுக்கும் தடை விதிக்கிறது. முகப்புத்தகமானது தங்களுக்கு ஆபத்து விளைவிக்கும் விடயங்கள் அல்லது தற்கொலை போன்ற விடயங்களை ஊக்கப்படுத்தும் விடயங்கள் ஏதும் பதிவிடப்பட்டிருந்தால் அதனை உடனே நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும். அதே போன்று பாலியல் சுரண்டல்கள் போன்ற விடயத்தையும் தடை செய்கிறது (சிறுவர்கள் அல்லது வயது வந்தவர்களை).

இதற்கு மேலதிகமாக, இந்த சட்டதிட்டங்கள் ஆட்சேபிக்கக்கூடிய விடயங்களான வரைபடங்கள் மற்றும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் போன்றன “பாதிக்கப்பட்ட மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பாதுகாக்கப்பட வேண்டிய விடயங்களான சாதி, இனம், தேசியம், பால்நிலை, பாலியல் அடையாளங்கள், விசேட தேவைகள் மற்றும் நோய் தன்மை போன்றவற்றுக்கு எதிராக இடம்பெறும் வன்செயல்கள் என்பவற்றை குறிப்பிடுகிறது.

இந்த நியதிகளை மீறுவோர் பாரதூரமான விடயங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். முதலாவது முறை மீறுமிடத்து அறிவுறுத்தலொன்றும், தொடர்ந்து மீறி வன்முறைகளில் ஈடுபடுமிடத்து அவர்களது கணக்குகள் முடக்கப்பட்டு எத்தகைய பதிவுகளையும் இடமுடியாத நிலை உருவாகும். தொடர்ந்து இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்களது கணக்கு நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்படும். “பொதுமக்களினது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்கள் ஏதாவது இடம்பெற்றதாக காணுமிடத்து நாம் சட்ட உதவி நிறுவனங்களை நாடி அவர்களது ஆலோசனைகளை பெற வேண்டியுமேற்படலாம்” என இவ்விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**Instagram, YouTube, Twitter** போன்ற மற்றைய சமூக ஊடக தளங்களும் தங்களுக்கென நியமங்களை வகுத்துள்ளது. நீங்கள் அவற்றையும் வாசித்துப் பயன்பெறுமாறு நாம் உங்களுக்கு ஆலோசனை வழங்குகிறோம்.

## இணையவழி சுரண்டல்கள் அல்லது வன்முறைகள் இடம்பெறுமிடத்து அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் பற்றி விழிப்படையச் செய்வதும் பாவனையாளர்கள் மத்தியில் அவை பற்றி தெளிவடையச் செய்வதும் மிக முதலாவதாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.
குழுக்களுக்கு சுயமாக விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு பல ஒன்லைன் மூலமான வளங்கள் வழங்கப்பட்டடிருக்கின்றன. கீழே இரண்டு வகையான சர்வதேச ரீதியிலான உதாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- **Take Back The Tech!** என்பது APC இனால் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்றிட்டமாகும். குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை தொழில்நுட்பம் சார்ந்த அவர்களுக்கெதிரான வன்முறையிலிருந்து பாதுகாப்பளிப்பதற்கான ஒரு செயற்பாடாகக் காணப்படுகிறது. உலகளாவிய ரீதியில் நோக்காகக் கொண்ட இந்த சிறுமிகள் மற்றும் பெண்களுக்கெதிரான தொழில்நுட்பம் சார் வன்முறையிலிருந்து விடுபடும் நோக்கைக் கொண்ட இச்செயற்றிட்டம் ஆய்வுகள் மற்றும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பல ஆலோசனைகளையும் முன் வைக்கிறது. இத்திட்டமானது பாதுகாப்பான தகவல்களை மக்களுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் அவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த வருடத்தில் மாத்திரம் இந்த Take Back Take Tech பல விடயங்களுடன் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது, ஆனாலும் குறிப்பாக கூறுமிடத்து பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயற்றிட்டம் எனப்படும் பரந்தளவிலான விழிப்புணர்வு நிகழ்வு வருடாந்தம் இடம்பெறுகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். https://www.takebackthetech.net/

- **Safer Internet Day (SID)** இணையதள பாதுகாப்பு தினம் என்பது இணையதள பாவனையிலிருந்து பாதுகாப்பு பெறுவதனை நோக்காக கொண்ட சர்வதேச தினமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இது ஒவ்வொரு வருடத்தின் பெப்ரவரி மாதத்திலும் இரண்டாவது வாரத்தின் இரண்டாவது நாள் நினைவுகூரப்படுகிறது. இந்நாளானது இணையதள பாவனை நாட்காட்டியில் மிகவும் முக்கியமானதொரு நாளாகத் திகழ்கிறது. உலகம் பூராகவும் சுமார் 140 நாடுகளில் இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இணையதளத்தை பலவீனப்படுத்தல் முதல் சமூக வலைத்தளங்கள் வரை பாதுகாப்பான இணையதள பாவனையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு புதிய விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. https://www.saferinternetday.org/


இலங்கையைப் பொறுத்தவரையில், டிஜிட்டல் பாதுகாப்பினை அல்லது டிஜிட்டல் பொறுப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் பல சிவில் சமூக குழுக்கள் தங்களாலான தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் பாவனையாளர்களுக்கு வழங்குகின்றனர்.

- **The Grassrooted Trust:** சமூகத்திலிருந்து ஒடுக்கப்பட்ட குழுவினருக்கு இணையதள மற்றும் அவர்களது உண்மையான உலகு பற்றிய பாதுகாப்பான விடயங்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். http://www.grassrooted.net/

- **Bakamoono.lk** எனப்படுவது Grassrooted மற்றும் அவர்களது பங்காளி நிறுவனங்களால் முகாமைத்துவம் செய்யப்படும் மும்மொழி இணையத்தளம் ஆகும். இவர்களது சேவைகள் அநேகமாக பாலியல் மற்றும் உறவுகள் பற்றிய விடயங்களில் குறிப்பாக சம்மதம், பால்நிலை, இணையவழி சுரண்டல் மற்றும் வன்முறைகள் பற்றிய விடயங்களை உள்ளடக்குவதாக அமைகிறது. http://www.bakamoono.lk/en

- **Women in Need (WIN)** பால்நிலை ரீதியான வன்முறைகளுக்கு முகங்கொடுத்த பெண்கள் மற்றும் சிறுமிகளது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விடயங்களில் சேவைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டது. இந்நிறுவனத்தின் சட்டத்தரணிகளும் ஆற்றுப்படுத்தல் சேவைகளில் அநுபவமுள்ளவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். https://www.winsl.net/

- **Shilpa Sayura** இளைஞர்களை பொறுப்புணர்வுள்ள தகவல் தொடர்பாடல் பாவனையாளர்களாக ஆக்குவதை நோக்காகக் கொண்டது. “சிறுமிகளை இணையதளத்தில் மரியாதை செய்வோம்” எனும் தன்னார்வ நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் அதேவேளை சமூக வலைத்தள தொடர்பாடல்களில் சிறுமிகள் மீது இடம்பெறும் துஷ்பிரயோகம் பற்றிய வேலைத்திட்டத்தை இதன் மூலம் கொண்டு நடாத்துகிறது (இப்பாடத்திட்டத்தில் காணப்படும் சம்பவக் கற்கை 1 இல் இவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது) http://www.shilpasayura.org



[5] http://counterpoint.lk/violence-is-violence-offline-or-online/

## இணையவழி சுரண்டல்கள் அல்லது வன்முறைகள் இடம்பெறுமிடத்து அவை பற்றி எவ்வாறு முறையிடுவது.

இவை பற்றிய விடயங்களுக்கு பதிலளிப்பதற்காக மூன்று அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இது 18 வயதுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட மற்றும் குற்றமிழைத்தவர்கள் பற்றிய விடயங்களில் தமது சேவைளை நடைமுறைப்படுத்துகிறது.
- பொலிஸ் குற்றத்தடுப்புத் திணைக்களத்தின் இணைய குற்றப் பிரிவு ஆனது 18 வயதுக்கு மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்களது விடயங்களில் தமது சேவையை வழங்குகிறது.
- இலங்கை கணனி அவசரகால மற்றும் தயார் நிலைக் குழு (SL-CERT) ஆனது இவைகளில் இடம்பெறும் குற்றங்கள் பற்றிய முறைப்பாடுகளை பெறுதல், மற்றும் அவற்றை பொலிஸ் குற்றத்தடுப்புத் திணைக்களத்தின் இணைய குற்றப் பிரிவு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றுக்கு பரிந்துரை செய்யும் நடைமுறையை மேற்கொள்கிறது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது சிறுவர் துஃபிரயோகம் மற்றும் தொழில்நுட்பம் சார் வன்முறைகள் சம்மந்தமாக நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக கொள்கை வகுப்பாளர்களுடன் இணைந்து செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

உங்களது அல்லது உங்களுக்கு தெரிந்த ஒருவரது புகைப்படம் அல்லது வீடியோக்கள் உங்களது அனுமதியின்றி ஒன்லைனில் (உதாரணமாக இணையதளத்தில்) பிரசுரிக்கப்பட்டிருந்தால் உடனடியாக Sri Lanka CERT இற்கு அவர்களது தொலைபேசி இலக்கமான 0112 2 691 692 ஊடாக அறியத்தரவும். நீங்கள் எதிர்பார்த்தளவிற்கு அவர்களிடமிருந்து பதில்கள் ஏதும் கிடைக்காவிட்டால் Women in Need இற்கு 011 471 85 85 இனூடாக இவை பற்றி முறையிடவும்.

பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பின், பொலிஸ் குற்றத்தடுப்புத் திணைக்களத்தின் இணைய குற்றப் பிரிவின் 011 232 69 79 எனும் இலக்கத்தினூடாக அல்லது இடம்பெற்ற சம்பவம் பற்றிய முழுத்தகவல்களையும் dir.cid@police.lk மற்றுமம telligp@police.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக அனுப்பவும்.

பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்குக் குறைந்த சிறுவராயின், தேசிய சிறுவர் பாதகாப்பு அதிகாரசபையின் அவசர இலக்கமான 1929 இற்கோ அல்லது அவர்களது இணையதளத்தினூடாகவோ முறையிடலாம்.

http://www.childprotection.gov.lk/

Grassrooted Trust அமைப்பின் இணையதளத்தில் காணப்படும் சில ஆலோசனைக் குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன. இக்குறிப்புக்களாவன தகவல்களையும் ஆதாரங்களையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி எமக்கு தெளிவூட்டுகிறது

- நீங்கள் யாராவது ஒருவரால் அச்சுறுத்தப்பட்டால், நீங்கள் அவரிடம் மேற்கொண்ட தொடர்பாடல்கள் எவற்றையும் எந்த சமூக வலைத்தளங்களில் இடம்பெற்றிருந்தாலும் அவற்றை நீங்கள் அழித்துவிட வேண்டாம். பொலிசாரிடம் முறையிடப் போகுமிடத்து அவர்கள் உங்களது கையடக்க தொலைபேசியை அவர்களிடத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளலாம், ஆகவே அவை பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இத்தொடர்பாடல்கள் குறுஞ்செய்திகளாகவோ, அழைப்பு வந்ததற்கான பதிவுகளாகவோ இருக்கலாம்.

- உங்களால் முடிந்தால் இத்தொடர்பாடல்கள் இடம்பெற்ற விடயங்களை Screenshot முறை மூலம் பிரதியொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் சில தளங்களில் குறிப்பாக Instagram, Direct message போன்றவற்றில் நீங்கள் அனுப்பியவை அனுப்பப்படாமலும் இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. நீஙகள் பொலிஸாரிடம் இவை பற்றி முறையிடுவதாயின் உங்களது சட்டத்தரணி ஒருவருடன் அல்லது உங்களுடன் வரும் ஒருவரிடம் உங்களது screenshot அவர்களது கணனிக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளவும். அவ்வாறு இடம்பெற்றிருப்பின் அதற்கான காலக்கேட்டினை அறிந்து கொள்ளவும்.

- நடந்த ஒவ்வொரு விடயத்துக்குமான ஆதாரங்களையும் தேடிப் பெற்றுக் கொள்ளவும். உதாரணமாக உங்களுக்கு எப்போதாவது அச்சுறுத்தும் வகையிலான குறுஞ்செய்திகள் அல்லது அழைப்புக்களேதும் வந்திருப்பின் அவை இடம்பெற்ற திகதி மற்றும் நேரம் (குறைந்தது அண்ணளவான நேரம் மற்றும் திகதியாவது) என்பவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள். காலவரிசைக்கிரமமான முறையில் பதிவுகளை ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்வது உங்களுக்கு மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயமாகக் காணப்படும்.



[6] http://www.bakamoono.lk/en/article/2600/how-to-report-cases-of-cyber-exploitation-and-violence

## இணைய தொல்லைகளுக்கு எதிரான சட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள்.

2019 ஆம் நடுப்பகுதி வரை இலங்கையில் இணைய தொல்லைகளை குற்றமாக கணிக்கும் எந்தவிதமானதொரு சட்ட ஏற்பாடுகளும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
எவ்வாறாயினும் தண்டனைச் சட்டக் கோவையின் சில பிரிவுகள் இவை பற்றி தெளிவு படுத்துகிறது.

- பிரிவு 345 பாலியல் தொல்லை பற்றி குறிப்பிடுகிறது (வார்த்தைகளாலோ அல்லது செயல்களாலோ ஒருவரைத் தொல்லைப்படுத்துவதும் இதில் அடங்கும்)

- பிரிவு 372 பலாத்காரப்படுத்தல் பற்றி குறிப்பிடுகிறது (ஒருவரை வேண்டுமென்றே ஆபத்தான நிலைக்கு ஆக்குதல், சொத்து அல்லது பாதுகாப்பை வழங்க ஒருவரை தூண்டிவிடுதல்)

- பிரிவு 483 பயமுறுத்தும் குற்றச் செயல் அல்லது ஒருவரை பயம்காட்டி ஒழுகச் சொல்வது அல்லது சில தண்டனைகளிலிருந்து விலக்களிப்பது பேன்றன)

மேற்கூறப்பட்டவற்றில் பிரிவு 372 மற்றும் 483 ஆகியவற்றை பயமுறுத்தி பலாத்காரத்தின் போது எடுத்த போட்டோ மற்றும் வீடியோக்கள் ஆகியவற்றை சமூக வலைத்தளங்களில் பகிரல் அல்லது இணைய தளங்களில் சேமித்து வைப்பதை தடுத்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தலாம்.
ஆபாச வெளியீட்டு சட்டத்தின் கீழ் (1927 மற்றும் அதன் பின்னரான திருத்தத்தில்) ஒருவரது புகைப்படத்தை அவருக்கு தெரியாமல் மாற்றம் செய்து அவரது  சம்மதம் இன்றி பகிர்தல், திருத்தங்கள் அல்லது மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய மென்பொருட்களை பயன்படுத்தி திருத்துதல் ஆகியன ஒரு குற்றமான செயலென வழக்குத தொடர முடியும். இச்சட்டத்தின் பிரிவு 2 இன் பிரகாரம், ஆபாசமான வெறுப்பூட்டுகின்ற புகைப்படங்களை வைத்திருத்தல், விநியோகித்தல் மற்றும் பொது இடங்களில் காட்சிப்படுத்தல் ஆகியன குற்றம் ஆகும்.
கட்டண சாதனங்கள் மோசடி சட்டத்தின் (2006 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க) பிரிவு 3 (ச) இன் பிரகாரம் வேண்டுமென்றே ஒருவரிடமிருந்து பணத்தையோ அல்லது பொருட்களையோ சாதனமொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளல் ஒரு குற்றமான செயலென கொள்ளப்படுகிறது.
2007 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க கணனி குற்ற சட்டத்தின் பிரிவு 7 ஆனது அனுமதியின்றி கணனியொன்றினூடாகவோ அல்லது தகவல் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கணனியொன்றினூடாகவோ தகவல்களைப் பெறுவது ஒரு குற்றமாகும். மேலும் தரவிறக்கம் செய்தல், பதிவேற்றம் செய்தல் மற்றும் விடயங்களை பிரதியெடுத்தல் போன்றவையும் குற்றச்செயல் என கருதப்படுகிறது.

இருந்தாலும் இந்த சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு ஒன்லைன் மூலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதானது இலகுவான காரியம் அல்ல. அநேகமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவைகள் பற்றி முறையிட வேண்டிய அதிகாரி அல்லது நிறுவனங்கள் பற்றிய சரியான தெளிவு இல்லாத நிலையே காணப்படுகிறது. மேலும் இவற்றிலிருந்து தப்பித்துக் கொண்ட அனைவரும் சட்டத்தரணி ஒருவருக்கூடாக தமக்குத் தேவையான நீதியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுவதும் சாத்தியமற்றதொரு விடயம்.

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 1: இணையத் தளத்தில் பெண்களை கௌரவப்படுத்தல

சில ஆண்டுகளுக்கு முன்னர் பூர்ணிமா மீகாம்மன தனது உயர்தரப் பரீட்சைக்காக தயாராகிக் கொண்டிருந்தார். பரீட்சைக்கு சில நாட்களுக்கு முன்னர் மிக மோசமான குறுஞ்செய்திகள் சில அவரது முகப்புத்தகத்துக்கு வந்தது. அவருக்கு மிகவும் நன்கு பரிட்சயமானதொரு நண்பர் ஒருவரினாலேயே இவ்வாறானதொன்று கேவலமான குறுஞ்செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது.
“நான் மிகவும் ஆத்திரமும் கவலையுமடைகிறேன். அவள் இவ்வாறு நடந்து கொள்ள காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. நான் ஒரு போதும் இப்படியானதொன்றை எனது நண்பரிடமிருந்து வரும் என எதிர்பார்க்கவில்லை. நான் மனதளவில் மிகவும் கவலையடைகிறேன். சில நாட்களுக்குப் பின்னர்தான் எனது முகப்புத்தகக் கணக்கிற்குள் எங்கள் இருவருக்கும் நன்றாகத் தெரிந்த ஒருவர் நுழைந்து சிலருக்குப் பிழையான முறையில் தகவல்கள் அனுப்பியுள்ளார் என நான் அறிந்து கொண்டேன்”.
பூர்ணிமா உண்மையில் இந்த நிலைமையில் அவளது நண்பர்கள் மற்றும் உறவினர்களினால் வழங்கப்பட்ட ஆறுதலினாலேயே இந்நிலையிலிருந்து மீளக்கூடியவளாக இருந்தாள். இப்படியானதொரு சம்பவமானது பெண்கள் மற்றும் சிறுமிகள் எவ்வாறு கெட்ட விடயங்களுக்காக குறிவைக்கப்படுகின்றனர் என்ற விடயத்தை எடுத்துக் காட்டும் சிறந்ததொரு பாடமாகவும் அமைந்தது.
அவரது முன்னைய அநுபவங்களைக் கொண்டு நன்னோக்கத்துக்காக செயற்படுத்தப்படும் தன்னார்வ வேலைத்திட்டமான “பெண்களுக்கு இணையதளத்தில் மதிப்பளிப்பது” எனும் சமூக நிகழ்ச்சித்திட்டமானது சமூக வலைத்தளங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் இணைய வன்முறைகள் பற்றி சமூக விழிப்பூட்டும் ஒரு செயற்றிட்டமாகக் காணப்படுகிறது. இவ்வேலைத்திட்டமானது சில்பா சயுர பவுண்டேசன் (Shilpa Sayura Foundation) எனும் இலாப நோக்கற்ற சமூக சேவை அமைப்புடன் இணைந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.
பூர்ணிமாவின் கருத்துப்படி அதிகமான இள வயதினர் இணையதளம் பற்றியோ அல்லது இணையத்தில் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது போன்ற அடிப்படை அறிவும் இல்லாத நிலையிலேயே இவற்றைப் பாவிப்பதாகக் கூறுகிறார். இளைய சமூகத்தினருக்கு இணையதளங்களில் அல்லது சமூக ஊடகங்களில் இவ்வாறான கெட்ட அநுபவங்கள் ஏற்படுமிடத்து அவர்கள் அவற்றிலிருந்து முற்றாக விலகியிருப்பதற்கு வழியமைக்கும் அதேசமயம் இவ்வனுபவங்கள் அவர்களது உடல் உளவியல் ரீதியான நடவடிக்கைகளில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்களது கல்வி நடவடிக்கைகளில் மற்றும் வேலைகளிலும் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தவதாகக் கூறுகிறார்.

“பாதுகாப்பதற்கான சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன, ஆனாலும் இவை பற்றிய சரியான விழிப்புணர்வு மக்களிடத்தே காணப்படவில்லை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட வளங்கள் உள்ளூர் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது”. பெண்களுக்கு மதிப்பளிப்போம் எனும் வேலைத்திட்டமானது டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்ட மக்களுக்கு விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். இணைய முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரமல்லாமல் ஏனையோருக்கும் இந்த விடயம் பற்றிய புரிதலொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக இது தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கருப்பொருள்களில் ஒன்றான இளைய சமூகத்தினருக்கான இணைய பாதுகாப்புக் கைநூலானது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் உகந்த ஒரு வளமாகக் காணப்படுகிறது. பெண்களுக்கு மதிப்பளிப்போம் எனும் வேலைத்திட்டமானது இணையவழி பாதிப்புக்களை முற்றாக ஒழிப்பதற்காக இளைஞர்களை ஒரு வலையமைப்புக்குள் கொண்டு வந்து அவர்களுக்கூடாக தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

2017 ஆம் ஆண்டு கணனி சமூகம் (Internet Society) பூர்ணிமாவை 25 இற்குக் கீழ் 25 விருது எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உலகிலுள்ள தலைசிறந்த இணைய பாதுகாப்புக்காக பாடுபடும் இளையோர்களில் ஒருவராக அங்கீகரித்துள்ளது.

More: http://respect-girls-on-internet.blogspot.com/
https://www.internetsociety.org/25th/25-under-25/awardees
https://www.bbc.com/sinhala/sri-lanka-41218095

## சம்பவக் கற்கை 2: இலங்கையில் ஆபாசப் பழி

ஆபாசப் பழி (Revenge porn) எனும் பதமானது இணையவழியில் ஒருவரது அனுமதியில்லாமல் அவரது புகைப்படங்கள், படங்கள் அல்லது வீடியோக்கள் போன்றனவற்றை பகிர்தல் அல்லது பிரசுரித்தல் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. இப்படியான நிலை இலங்கையில் இன்னும் அதிகரித்துக் கொண்டு செல்லும் ஒரு நிலையே காணப்பட்டாலும் அவை பற்றி முறையிடும் அளவு அல்லது சட்ட உதவியை நாடுதல் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுவது வருத்தமளிக்கிறது.

Grassrooted Trust அமைப்பில் பணியாற்றும் ஆய்வாளரும் பெண்ணியவாத ஆர்வலருமான சரணியா சேகரம் அவருடைய நிறுவணம் ஆய்வின்போது கண்டுபிடித்த பழிவாங்கும் நோக்கை கொண்ட ஆபாச உள்ளடக்கங்களை பகிரும் பல வலைத்தகளங்கலில் ஒன்றை குறித்து விபரிக்கின்றார். WhatsApp குழுவொன்று தனது குழுவில் ஒருவர் அங்கத்தவராக இருக்க வேண்டுமானால் குறைந்தது பெண்களது ஐந்து ஆபாச படங்களை அல்லது வீடியோக்களை கட்டாயம் அனுப்பியாக வேண்டும் என்ற நடைமுறையும் இருந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இங்கு எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால்: இந்த இளைஞர்கள் ஏன் இவ்வாறான ஆபாசப்படங்களை நாணயங்களுக்கு ஒப்பானதாக எண்ணுகின்றனர்? எப்படி இவர்கள் இதற்கான உரிமத்தை எடுத்துக் கொண்டனர்? என்று கூறினார்.

அவர் இன்னுமொரு உதாரணத்தை இதனுடன் சம்மந்தப்படுத்திக் குறிப்பிட்டார், அதாவது ஒரு பெண் தனது முன்னாள் காதலனால் வீடியோ அழைப்பொன்றுக்கு வந்து அவனை சந்தோசப்படுத்துமாறு கேட்டுக் கொண்டான், அவ்வாறு அவர் அதற்கு உடன்படாவிட்டால் தன்னிடமிருக்கும் படங்களை தான் மற்றவர்களுடன் பகிரப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்தான். அந்தப் பெண் முடியாது என்று கூறியபோது அந்தக் குற்றத்தை செய்த நபர் கூறினார் “நல்லது அவள் தனது வாழ்க்கை பற்றி நன்றாக அறிந்திருக்கிறாள், ஏனென்றால் அவளது படங்கள் வெளியிடப்பட்டால் அவளது முழு வாழ்க்கையும் அழிந்து விடும்” என்று கூறினான்.

“இது எமக்குத் தெரிவிப்பது என்னவென்றால் குற்றமிழைப்பவர்களும் தாம் செய்யும் விடயங்களால் ஏற்படும் எதிரொலிகள் பாதிக்கப்பட்டவர்கள் மீது எவ்வாறு அமையும் என்பதையும் நன்றாக விளங்கியுள்ளனர். இவர்களுக்கு எமது சமூகம் இதன் மீது எவ்வாறான நிலையில் காணப்படும் என்ற விடயமும் நன்றாக புரிகிறது. மேலும் இவற்றினால் என்ன வகையான பாதிப்புகள் ஏற்படுத்தப்படும் என்பதும் அவர்களுக்கு நன்றாகப் புரியும்”

சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்க நிலை தொழிநுட்ப பாதிப்புகளைவிட மேலோங்கியதாகக் காணப்படுவதுதான் முக்கிய பிரச்சினை என சரண்யா குறிப்பிடுகிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில் பழிவாங்கும் நோக்கோடு நடைபெறும் ஆபாச விடயங்கள் நெருங்கிய சகாவினால் இழைக்கப்படும் வன்முறை மற்றும் பால்நிலை ரீதியான வன்முறை போன்ற கண்ணோட்டத்தில் நோக்கப்பட வெண்டும் என்றும் குறிப்பிட்டார்.

“இணையதளங்களில் இடம்பெறும் வன்முறைகளை மக்கள் ஒரு தனிப்பிரச்சினையாகவே பார்க்கின்றதொரு நிலை காணப்படுகிறது. ஆனாலும் இவர்கள் அதனுடன் தொடர்புள்ள ஏனைய புள்ளிகளுடன் இணைப்பதை மறந்துள்ளனர்” என்று குறிப்பிட்டார். இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்கு அமைவாக அக்குற்றங்களுக்கு எதிராக முறைப்பாடொன்றை மேற்கொள்ளுமிடத்து அவற்றை நடைமுறைப்படுத்தலாம், உதாரணமாக ஆபாச வெளியீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 ஆனது ஆபாச படங்களை பகிர்தல், காட்சிப்படுத்தல் மற்றும் உடந்தையாக வைத்திருத்தல் போன்றவை பற்றிக் குறிப்பிடுகிறது.

எவ்வாறாயினும் இவை பற்றிக் கரிசனை காட்ட வேண்டிய பொது நிறுவனங்கள் தொடர்ந்தும் வினைதிறனற்றதாகவே காணப்படுகிறது. பாதிக்ப்பட்டவர்கள் ஒழுங்கான முறையில் நடாத்தப்படுவதில்லை. அவ்வாறான நிலை தொடருமிடத்து நீதியை தேடுபவர்கள் நம்பிக்கையிழந்தவர்களாக காணப்படுவது இயல்பானதாகும். பாதிக்கப்பட்டவர்களை அவமானப்படுத்தும் கலாசார நிலைமை எப்போதும் தவறிழைத்தவர் மீது குற்றஞ்சாட்டுவதை விடுத்து பாதிக்கப்பட்டவர் மீதே தனது நிலைப்பாட்டை வெளியிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர் முன்வந்து விடயங்களை தெரியப்படுத்த தயங்கும் நிலையும் காணப்படுகிறது.

Adapted from: https://roar.media/english/life/in-the-know/cyber-exploitation-and-violence-the-darker-side-of-cyberspace/

## கலந்துரையாடல்களுக்கான விடயங்கள்

இவ்விடயங்கள் பற்றிய மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு கீழ்வரும் கலந்துரையாடல் விடயங்களை அவதானித்துக் கொள்ளுங்கள்.

- இணையவழி வன்முறை, துன்புறுத்தல்கள் மற்றும் சுரண்டல்களுக்கு எதிராக பெண்ணொருவர் எந்தளவிற்கு முன்னெச்செரிக்கையாக இருந்து கொள்ள முடியும்? பாவனையாளர் மட்டத்தில் நடைமுறைச் சாத்தியமான எத்தகைய விடயங்களை மேற்கொள்ளலாம்?

- "ஒன்லைன் மூலம் இடம்பெறும் வன்முறைகளைப் போல ஒன்லைனற்ற முறையில் இடம்பெறும் வன்முறைகளும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வெளிப்படையான பால்நிலை ரீதியான வன்முறையாக காணப்படுகிறது" இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? கலந்துரையாடவும்.

- இணைய மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பானது சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான பாரிய சவாலாக காணப்படுகிறது, இருந்தாலும் இன்னும் சில சமூகத்தில் பலமிழந்த குழுக்களும் இதன் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்கள் எத்தகைய ரீதியில் ஒன்லைனில் இலக்குவைக்கப் பட்டுள்ளனர்?

- பரஸ்பர ஒப்புதல்களுக்கு அமைவாக இருவர்களுக்கிடையில் நம்பிக்கையான ரீதியில் புகைப்படங்களையும் வீடியோக்களையும் பகிர்ந்து கொள்வதானது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி மற்றும் வெப் தளங்களின் பாவனையின் மூலம் மிக இலகுவாக்கப்பட்டுள்ளது. இது இயல்பாகவே ஒரு பாதுகாப்பற்ற முறை என எண்ணுகிறீர்களா? எந்த வகையான முன்னெச்செரிக்கைகளும் ஆலோசனைகளும் தேவையென எண்ணுகின்றீர்கள்? கலந்துரையாடவும்.

- பிரச்சினையை (ஏற்படுத்தும் பூதங்களை) வளர்க்காதீர்கள்! ஏனெனில் இவர்கள் உங்களது கவனங்களை திசை திருப்பி உங்கள் மீது நாட்டம் கொள்ள எத்தனிப்பவர்கள். மிகச் சிறந்த வழி யாதெனில் அவற்றை நீங்கள் புறந்தள்ளி விடுங்கள். இருந்தாலும் இவை எல்லா நேரத்திலும் சாத்தியப்பட மாட்டாது. ஆகவே எத்தகைய நடவடிக்கைகளை உங்களால் மேற்கொள்ள முடியும்?

- இணைய குற்றங்கள் மற்றும் இணைய அடையாள திருட்டு போன்ற விடயங்களில் ஈடுபடுவர்களிகளினால் இணையத்தின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டது. அனைவரும் கட்டாயமாக அவர்களது உண்மையான சொந்த அடையாளத்தைக் கொண்டே இணையதளங்களை பாவிக்க வேண்டும் என கூறுகிறீர்களா? முகப்புத்தகமானது எமது சமூகத்தினது கண்ணாடி என எண்ணுகிறீர்களா?

- அண்மையில் இடம்பெற்ற ஆய்வொன்றின்படி பாலியல் கலாசாரமும் பெண் வெறுப்பு விடயங்களும் இலங்கையர்கள் பயன்படுத்தும் மும்மொழியிலான முகப்புத்தகங்களில் காணப்படும் பொதுப் பண்பாகக் காணப்படுகிறது. இது உண்மை எனில், உங்களது அநுபவங்கள் எவ்வாறு அமைந்துள்ளது?

- சமூக வலைத்தளங்களின் சமூக நியமங்கள் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?. அவைகள் போதுமான அளவில் காணப்படுகிறதா? இத்தளங்களினால் போதுமான அளவு கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா? இன்னும் ஏதாவது மேலதிகமாக ஏற்படுத்திக் வேண்டுமா?.

- ஒருவருக்கு ஒன்லைன் மூலமான குற்றமொன்று இழைக்கப்படுமிடத்து அவருக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் முறையானது ஏன் கடிமானதாகக் காணப்படுகிறது? சட்டத்தை நடைமுறைப்படுத்தி நீதியை நிலைநாட்ட எவ்வாறான மேலதிக விடயங்களை மேற்கொள்ளலாம்?

- இலங்கையில் டிஜிட்டல் மற்றும் இணைய பாதுகாப்பை மேம்படுத்த புதிய சட்ட ஏற்பாடுகள் தேவைப்படுகிறதா? அல்லது இது உண்மையில் என்னவென்றால் தற்போது காணப்படும் சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்தி இணைய சுரண்டல்களுக்கு எதிரான சமூகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு விடயமா? கலந்துரையாடவும்.

## கற்றல் பலன்கள்

இந்தப்பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்.

- ஆரோக்கியமான டிஜிட்டல் சூழலை உருவாக்க நாம் பாவனையாளர்களிடத்தே தரமான நம்பிக்கைகள், நல் அபிப்பிராயங்கள், நல்ல உறவுகள் மற்றும் பங்களிப்புகளை உருவாக்க வேண்டும். அதே போல எமக்கு முற்போக்கான சட்ட நடைமுறைகளும் தேவைப்படுகிறது.

- தொழில்நுட்பங்களை பயன்படுத்துபவர்களுக்கு இணையதளமும் டிஜிட்டல் பாதுகாப்புக்களும் ஒரு முக்கியமான அம்சமாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் அதன் பாதுகாப்புக்கு இணைய சுரண்டலும் வன்முறைகளும் ஆபத்தானவைகளாகக் காணப்படுகிறது.

- பொதுவாகவே பால்நிலை ரீதியான வன்முறைகளைத் தடுக்க வேண்டுமானால் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் தொழில்நுட்பம் சார் வன்முறைகளைத் தடுத்தி நிறுத்தியாக வேண்டும்.

- இலங்கையில் முகப்புத்தகம் மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படும் முறையினை காணுமிடத்து சமூகத்தில் காணப்படும் நிலையற்ற தன்மையும் வேறுபாடுகளும் புலப்படுகின்றது. உதாரணமாக பாலியல் மற்றும் பெண் வெறுப்பு பற்றிய கலாசாரம்.

- எல்லா வகையான பெரியளவிலான சமூக வலைத்தளங்களும் தங்களுக்கென ஒரு சட்டதிட்டங்களைக் கொண்டுள்ளன, இவை சமூக நியமங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், வன்முறைகளில் ஈடுபடுவோர் தாம் இதற்குள் நுழைவதற்கான வாய்ப்புக்களை எப்பொழுதும் தேடிக்கொண்டே இருக்கின்றனர். சமூகத் தளங்களினாலும் பாவனையாளர்களினாலும் மிக உறுதியான விழிப்புணர்வு மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகள் மிக முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது.

- இணைய சுரண்டல்கள் மற்றும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பலர் தங்களுக்கான நீதி நியாயங்களைப் பெற்றுக் கொள்வதில் தொடர் சவால்களை எதிர்கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். விடயங்கள் பற்றி முறையிடல் தொடர்பான சரியான நிலை காணப்படாததன் விளைவாக அநேகமானவர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

- இந்நிலையில் பல சமூக சுய உதவிக் குழுக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் தங்களாலான பல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குகின்றனர்.

## மேலதிக வாசிப்புக்காக

முகப்புத்தக சமூக நியமங்கள்
https://www.facebook.com/communitystandards/

YouTube கொள்கைகள்
https://www.youtube.com/yt/about/policies/

Twitter சட்ட நடைமுறைகள்
https://help.twitter.com/en/rules-and-policies/twitter-rules

Instagram சமூக வழிகாட்டல்கள்
https://help.instagram.com/477434105621119

அறிக்கையிடல் அழுத்திக்கு பின்னால் : இலங்கையில் இணைய வன்முறைகளை ஒழித்தல். Bakamoono.lk இல் அமாலினி டீ சய்ரா வினால் பிரசுரிக்கப்பட்ட விடயங்களின் விளக்கமான கலந்துரையாடல்.
http://www.bakamoono.lk/en/article/2136/beyond-the-report-button-tackling-cyber-violence-in-sri-lanka

OPINIONS, B*TCH: இலங்யையில் பெண்களுக்கெதிராக இடம்பெறும் தொழிநுட்பம் சார் வன்முறைகள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், Ghosha and Hashtag Generation, 2019
https://groundviews.org/2019/06/27/opinions-btch-technology-based-violence-against-women-in-sri-lanka/

இணைய சுரண்டல்களும் வன்முறைகளும் : இணையவெளியின் இருண்ட பகுதி
Article by Radhia Rameez on Roar Media, April 2018
https://roar.media/english/life/in-the-know/cyber-exploitation-and-violence-the-darker-side-of-cyberspace/

சிறுவர் உரிமைகளும் இணைய தளமும்: வழிகாட்டியிலிருந்து நடைமுறைப்படுத்தலுக்கு. யுனிசெப், 2016
https://www.unicef.org/csr/files/Childrens_Rights_and_the_Internet_Guidelines_to_Practice_Guardian_Sustainble_Business_English.pdf

Take Back the Tech! A call to take control of technology to end violence against women
https://www.takebackthetech.net/

Online gender-based violence: A submission from the Association for Progressive Communications to the UN Special Rapporteur on violence against women, its causes and consequences, November 2017
https://www.apc.org/sites/default/files/APCSubmission_UNSR_VAW_GBV.pdf



MODULE 5

# டிஜிட்டல் நல்வாழ்வை வளர்த்தல்

# டிஜிட்டல் நல்வாழ்வை வளர்த்தல்

இன்றைய காலத்தில் நாம் டிஜிட்டல் சாதனங்களையும் அவற்றின் சேவைகளையும் எமது வேலைகளுக்காகவும், கற்றல் நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் பிற பொழுது போக்கு அம்சங்களுக்காகவும் பயன்படுத்தி வருகிறோம். இத்தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அதேவேளை இணையத்தள பாவனைகளிலும் அதிகளவான நேரத்தை செலவழிக்கின்றோம். இவ்வாறான தொடர்ச்சியான பாவனைகள் சில நேரங்களில் எமது உடல், உள மற்றும் சமூக ரீதியிலான வாழ்க்கை முறையிலும் பல விதமான தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

டிஜிட்டல் நல்வாழ்வு என்பது சில வேளைகளில் ஒரு புதிய விடயமாக எம்மில் சிலருக்கு அமையலாம். இந்த விடயமானது தொடரச்சியான டிஜிட்டல் தொழில்நுட்ப பாவனைகளின் மூலம் எமது உடல், உள மற்றும் சமூக வாழ்க்கை எவ்வாறு பாதிப்படைகிறது என்பதை விளக்கும் அதேவேளை இவற்றிலிருந்து நாம் எவ்வாறு விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையொன்றினை அமைத்துக்கொள்வது? எந்த வகையான வாழ்க்கை நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்பதையும் எமக்கு விளக்கி நிற்கிறது.

நாம் இந்தப் பாடப்பரப்பில் டிஜிட்டல் சாதனங்களால் ஏற்படுத்தப்படும் பின் விளைவுகள் யாது? என்பதை அறிந்து கொள்ளும் அதேவேளை அவற்றை சரியான முறையில் கடைப்பிடிக்கத் தேவையான அடிப்படை ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், நாம் இந்தப் பாடப்பரப்பில் எந்தவொரு இடத்திலும் டிஜிட்டல் சுகாதாரம் அல்லது இலத்திரனியல் சுகாதாரம் (Digital health / E- health) பற்றி எங்கேயும் குறிப்பிடவில்லை. இந்த விடயமானது சுகாதார சேவைகளை வழங்குவதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் ஒரு விசேடத்துவமான முறையாகும். ஆகவே அந்த விடயமானது இதிலிருந்து வேறுபட்ட ஒரு விடயமாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

# முக்கிய சொற்கள்

டிஜிட்டல் ஆரோக்கியம்: இது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு வாழ்க்கை முறை ஆகும். இது முழுமையான உடல், உள, மற்றும் ஆத்மீக ரீதியான நன்மைகளை உருவாக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை வழிமுறையும் ஆகும். மேலும் இது நபரொருவர் தேகாரோக்கியமுள்ளவராக, இயற்கையான முறையில், மனித மற்றும் டிஜிட்டல் சமூகத்தில் தாமும் ஒருவராகக் காணப்படும் நிலையைக் குறிக்கும்.

உண்மையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் அடைந்து கொள்ள வேண்டிய உயரிய நிலை இதுவே ஆகும்.

டிஜிட்டல் நல்வாழ்வு: சுகாதார தொழில்வாண்மையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் டிஜிட்டல் சாதன உற்பத்தியாளர்கள் போன்றோர்கள் இது பற்றிக் குறிப்பிடுகையில், மனிதர்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதானால் அவனால் பெற்றுக்கொள்ளப்படும் அநுபவங்கள் அவனது உடல், உள சுகாதாரத்துக்கு அளவிடக்கூடிய விதத்தில் பொருத்தமானதாகக் காணப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

டிஜிட்டல் போதையிலிருந்து விடுபடுதல் **(Digital detox)**: என்பது ஒருவர் டிஜிட்டல் உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் போன்றவற்றின் பயன்பாட்டிலிருந்து விடுபட்டு அந்த நேரத்தை சமூக இடைவினைகள் **(social interaction)** மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு உபயோகிப்பதைக் குறிக்கும். இவ்வாறான செயற்பாடு ஒருவரை ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் போன்றவற்றால் ஏற்படுத்தப்படும் விளைவுகளிலிருந்து விலகி நிம்மதியாக வாழ உதவி புரியும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்



## பௌதீக ரீதியான தாக்கங்கள

எமது வாழ்வுடன் பின்னிப்பிணைந்து காணப்படும் டிஜிட்டல் சாதனங்களை விலக்கிக் கொள்வது ஒரு இலகுவான காரியமொன்று அல்ல. ஆனாலும் அதை பயன்படுத்தும் முறையினைக் கொண்டு சரியான வகையில் எமது வாழ்வை நாம் அமைத்துக் கொள்ளலாம். இதன் விளைவாக எமது உடல், உள ரீதியான ஆபத்துக்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொண்டு ஆரோக்கியமான வாழ்வையும் நாம் அமைத்துக் கொள்ளலாம்.
மிக நீண்ட நேரத்துக்கு ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு திரையொன்றினைப் பயன்படுத்தி வேலைசெய்வதானது நீண்ட கால சுகாதார கேடுகளை விளைவிக்கக் கூடிய ஒரு விடயம் ஆகும். தற்போது அறிந்து கொண்ட விடயங்களுக்கு அமைவாக பின்வரும் தாக்கங்கள் உங்கள் உடலுக்கு ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது.

- பார்வைக் கோளாறுகள்: கணனி பார்வைக் குறைபாடு (Computer Vision Syndrome or CVS) என்பது தொடர்ச்சியான கணனி பாவனையின் மூலம் ஒருவருக்கு ஏற்படக்கூடிய கண் மற்றும் பார்வை சம்பந்தமான ஒரு குறைபாட்டு நிலை ஆகும். அநேகமாக கிட்டப்பார்வை தொடர்பான குறைபாடுகளே இதனால் ஏற்படலாம். இக்குறைபாட்டு அறிகுறிகளாக கண் திரிபு அல்லது கண் சிரமம், மங்கலான தெளிவற்ற பார்வை மற்றும் கண் உலர்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். (கணனி பாவனைக்கு மேலதிகமாக இன்னும் சில காரணிகளும் கண் பார்வை சம்மந்தமான குறைபாடுகளை ஒரு அலுவலக சூழலில் ஏற்படுத்தலாம் - அவைகளாவன அறையில் பொருத்தப்பட்டிருக்கும் குளிரூட்டி, வெப்பத்தை வெளியேற்ற பொருத்தப்பட்டிருக்கும் மின் விசிறி (exhauster fan), காற்றினால் அடித்து செல்லப்படக்கூடிய கடதாசித் தூசிகள் மற்றும் ஏனைய அசுத்தமான பொருட்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்).


- கழுத்து வலி: நீங்கள் உங்கள் கழுத்தினை வளைத்து கணனித் திரை ஒன்றினைப் பார்த்து வேலை செய்து கொண்டிருக்கையில் உங்களது கழுத்து தசை நார்கள் இழுபடத் தொடங்குகிறது. இது காலப்போக்கில் தசைப்பிடிப்பு மற்றும் தலைவலி போன்றவற்றைத் தோற்றுவிப்பதற்கான மூல காரணியாக அமைகிறது. மடி கணனிப் பாவனையாளர்கள் கழுத்து வலிக்கு ஆளாகக்கூடிய சாத்தியப்பாடுகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது, காரணம் என்னவென்றால் அவர்கள் தமது கழுத்தினை வளைத்து கணனியின் திரையை பல முறை பார்த்துக் கொண்டே தமது வேலைகளை செய்து முடிப்பது ஆகும். கையடக்க தொலைபேசியொன்றினை கழுத்துக்கும் தோள்ப்பட்டைக்கும் இடையில் வைத்துக் கொண்டு கதைப்பதும் கழுத்து வலியை ஏற்படுத்துவதற்கு ஒரு காரணியாக அமைகிறது (சிலர் தமது கைகளைப் பயன்படுத்தாமல் இவ்வாறு உபயோகிப்பது போல), இவ்வாறான நிலை உங்களது கழுத்துப்பகுதியை ஆரோக்கியமற்ற ஒரு நிலைக்குக் கொண்டு செல்கிறது. கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி குறுஞ்செய்திகளை எழுதும் போதும் உங்களது தலையை தொலைபேசிக்கு ஏற்ப வளைத்து வைக்கும் வேளையிலும் இது உங்களது கழுத்துப் பகுதிக்கு வலியை ஏற்படுத்தலாம்.

- அதிகளவான நேரம் அமர்ந்து கொண்டிருத்தல்: கணனிகளைப் பயன்படுத்தும் அநேகமானவர்கள் மணித்தியாலக் கணக்காக ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு தங்களது அலுவலக வேலைகளை செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலை நீரிழிவு, உடல் பருமன், மாரடைப்பு, உடற் கொழுப்பு மற்றும் உயர் குருதியமுக்கம் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாகவும் அமைகிறது. இவ்வாறு வேலை செய்யும் ஒருவர் தொடர் உடற்பயிற்சிகளில் ஈடுபட்டாலும் கூட ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு வேலை செய்வதானது ஆரோக்கியத்துக்கு ஒரு பெரும் சவாலாகவே அமைகிறது.

- கேட்டல் குறைபாடுகள்: நீங்கள் தொடர்ந்து Headphone ஒன்றினைப் பயன்படுத்தி இசை, பாடல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ள பயன்படுத்தும் ஒருவராயின் உங்களுக்கு காதிரைச்சல் மற்றும் கேட்டல் பிரச்சினைகள் போன்றன ஏற்பட இவை காரணமாக அமையலாம்.

- நித்திரைக் குழப்பம்: டிஜிட்டல் சாதனங்களை அதிக நேரம் பாவிக்குமிடத்து நித்திரையின்மை அல்லது குறைந்தளவிலான நித்திரை போன்றன ஏற்பட வாய்ப்புகள் அதிகம், இவை பிற்காலத்தில் பாரிய சுகாதார பிரச்சினையாக உருவாகுவதற்கான காரணியாகவும் அமையலாம்.

- மீள் காயங்கள் ஏற்படல்: கணனியானது அதன் பாவனையாளர்களுக்கு ஏற்றவகையில் கச்சிதமான முறையில் நாள் முழுவதும் இருந்து வேலை செய்யக்கூடிய வகையான விசைப்பலகையைக் கொண்டு (Keyboard) வடிவமைக்கப்பட்டு காணப்படுகிறது. இவ்வாறான நிலை தொடர் மீள் காயங்கள் ஏற்படக் காரணமாக அமையலாம். மேலும் இவ்வாறான நிலையேற்படக் காரணம் தசைகளில் ஏற்படும் வெடிப்புகள், தசைநார் மற்றும் நரம்பு மண்டலங்களில் ஏற்படும் சேதங்களுமே காரணமாகும். மேலும் இதன் விளைவாக வலிகள், பலமற்ற தன்மை (சோர்வு), உணர்ச்சியற்ற நிலை அல்லது புலங்களின் செயற்பாடுகள் சரியான முறையில் இடம்பெறாமை போன்றனவும் ஏற்படுகிறது. இந்நிலையால் ஏற்படக்கூடிய மோசமான நிலைகளாக குறை தோற்றம், குறை தொழில்நுட்பம் மற்றும் அதிக பாவனை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



எனவே எமது தொழில்நுட்பத்தை நாம் விரும்ப வேண்டும். இது எவ்வளவு நன்மையானதென்பதே ஒரு ஆச்சரியமாகும். தொழில்நுட்பத்தில் உள்ள பிரச்சனை என்னவெனில் அது கேடானதொன்றல்ல மாறாக அது மிக நன்மையானது எனவே நாம் அதை விரும்புகிறோம். சிலவேளைகள் நாம் இதை அதிகமாக விரும்புகிறோம். எவ்வளவு தூரத்துக்கு விரும்புகிறோம் என்றால், தொழில்நுட்பத்திக்காக நாம் செய்யும் தியாகங்களை நாம் எல்லா வேளைகளிலும் உணர்ந்துகொள்வதிலை .எமது உடல் செயற்பாடுகளிலே நாம் தியாகங்களை செய்கிறோம்.எமது உறவு முறைகளிலே நாம் தியாகங்களை செய்கிறோம், எமது கவனத்தினை கொடுப்பதில் தியாகங்களை செய்கிறோம்,எமது நேரங்களிலே, எமது தூக்கத்திலே, இயற்கையோடு எமக்குள்ள தொடர்பிலே நாம் தியாகங்களை செய்கிறோம்,இந்த அனைத்து தியாகங்களையும் கடந்த 20 வருடங்களிற்கு முன் இருந்திராத தொழிநுட்பத்திற்காகவே நாம் இன்று செய்கிறோம்

**JEREMY MCCARTHY, FROM A 2017 TALK AT THE GLOBAL WELLNESS INSTITUTE**

http://psychologyofwellbeing.com/201712/digital-wellness-wellness-in-the-age-of-technology.html

## உளவியல் தாக்கங்கள்

மிக நீண்ட காலத்துக்கு டிஜிட்டல் சாதனங்களை தொடர்ந்து பாவிப்பதானது உங்களது மனம் மற்றும் எண்ணங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும்.
டிஜிட்டல் சாதனங்களின் தொடர் பாவனையால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய பல விடயங்கள் ஏற்கனவே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன, உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி, வியைாட்டுகளுக்கு அடிமையாகலானது ஒருவரது மனநிலையில் பாரியதொரு மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய காரணிகளிலொன்று என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பயம் மற்றும் பதகளிப்பு போன்ற காரணங்களால் கையடக்க தொலைபேசி பாவனைகளிலிருநது விலகியிருத்தல் "nomophobia" என்று அழைக்கப்படும். இதே போன்று கணனி மற்றும் சமூக வலைத்தளங்களின் தொடர் பாவனையானது நடத்தை ரீதியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை ஆகும்.
2012 ஆம் ஆண்டில் Pew ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட இணையத்தளங்களும் அமெரிக்கர்களின் வாழ்க்கை முறையும் எனும் நிகழ்ச்சித் திட்டத்தில் 'புத்தாயிரம் ஆண்டானது அதன் மிகைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையால் பயனடையும் அதேவேளை பாதிப்படையவும் கூடும்" என்றதொரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் நேர்காணல்களுக்காக அழைக்கப்பட்ட பல பங்குதாரர்கள் கருத்துத் தெரிவிக்கையில் பொதுவாக புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துபவர்கள் அதிக தகவல்களை விரைவாக அணுகக்கூடியவர்களாக காணப்படுவர் என்பதை ஒப்புக்கொள்ளும் அதேவேளை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது அதன் பயனாளிகளை பொறுமையிழக்கவும், கவனத்தை சிதறடிக்க மற்றும் பொழுது போக்கு விடயங்களில் ஆசையூட்டக் கூடியவையாகவும் அமையலாம் என்று தெரிவித்தனர்.
கீழே சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவை தொடர் டிஜிட்டல் சாதனங்களின் பாவனைகளின் விளைவாக எமது உளவியல் மற்றும் உணர்வு ரீதியான விடயங்களில் எவ்வாறான தாக்கங்களை செலுத்துகின்றன என்பதைப் பார்ப்போம்.

- **iDisorder:** டிஜிட்டல் சாதனங்களின் நீண்ட கால பாவனையால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கான ஆராய்ச்சிகளில் வைத்தியத் துறை தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இத்துறையில் விசேடத்துவம் பெற்ற சில நிபுணர்கள் iDisorder பற்றி முன்னெச்சரிக்கை ஒன்றினையும் விடுத்திருக்கின்றனர், அதாவது இவ்வாறான நிலைமைகளுக்கு உள்ளானவர்கள் உளவியல் அறிகுறிகளான உடற்பருமன் குறைபாடு (Obsessive Compulsive Disorder / OCD), ஒன்றின் மீது தீவிர நாட்டம் கொள்ளல் (narcissism) அல்லது ஒன்றின் மேல் தனது கவனத்தை செலுத்த முடியாமை அல்லது தீவிர செயற்பாடு (Attention-deficit/hyperactivity disorder (ADHD) போன்றன தொழில்நுட்பத்தின் அதீத பாவனையால் எமக்கு ஏற்படக்கூடிய குறைபாடுகளுக்கான அறிகுறிகளாகக் கொள்ளப்படுகிறது. குறுஞ்செய்திகளை அடிக்கடி பார்க்க வேண்டிய நிலை, முகப்புத்தகக் கணக்கில் தமது நிலையை (status) அடிக்கடி பதிவேற்றிக் கொள்ள வேண்டும் எனும் அதீத எண்ணம் அல்லது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியிலுள்ள விளையாட்டுக்களில் அடிக்கடி ஈடுபடுதல் போன்ற அறிகுறிகளும் இவற்றைச் சார்ந்தவைகளே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

- உடனடி மன நிறைவு **(Instant gratification):** எனப்படுவது இது சம்மந்தமான மற்றுமொரு விடயமாகும். நாங்கள் முகப்புத்தக கணக்கு (Facebook Account) ஒன்றில் அல்லது Twitter அல்லது Instagram இல் புகைப்படமொன்றை பதிவிடுகையில் அது உடனடியாக ஒப்புகை (approval) இடப்பட வேண்டிய எமது நிலையை எமக்கு உணர்த்துகிறது. மெய்நிகர் உலகில் (virtual world) இவ்வாறான மன நிறைவுடன் (திருப்தியுடன்) இயங்குவதானது மோசமான தேர்வுகள் போன்று பெரும் ஏமாற்றங்களை ஏற்படுத்தவும் எமக்கு வழி வகுக்கும்.

- அதீத விருப்பம் கெள்ளல **(Narcissism):** சில பாவனையாளர்களின் சுய மரியாதையை அதிகரிக்க சமூக ஊடகங்கள் உதவி புரியக் கூடும், ஆனாலும் இவை தீவிர எண்ணம் கொண்ட ஆளுமைக் குறைபாட்டை உங்களுக்கு உருவாக்கலாம். இவ்வாறான மன நிலையானது மக்கள் தங்களது முக்கியமான விடயத்தை மட்டும் உணர்த்திப் பார்க்கும் ஒரு நிலையே என்பதோடு இவற்றுக்கு அதீத கவனம் மற்றும் விடயங்களை அறிந்து கொள்வதற்கான ஆழ்ந்த தேவையும் காணப்படுகிறது. மேலும் இந்நிலையானது மற்றவர்களுடனான எமது உறவுகளை முடிவுக்கு கொண்டு வரும் ஒரு செயற்பாடு என்பதோடு அவர்களது (மற்றவர்களது) நிலையை புரிந்து கொள்ளாத ஒரு நிலைமைக்கும் எம்மை இட்டுச் செல்லலாம்.

- மனநிலைக் கோளாறுகள் அல்லது குறைபாடுகள் **(Moods disorders):** மனநிலைக் கோளாறுகளான பதகளிப்பு மற்றும் ஆழ்ந்த கவலை போன்றவற்றுக்கும் சமூக ஊடகங்களுக்கும் இடைத் தொடர்புகள் காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. ஆனாலும் இதே ஆய்வு இவை ஒரு குழப்பகரமான உறவு முறை என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. எனவே இவை பற்றிய திடமான இறுதி முடிவொன்றினை எடுப்பதாயின் இத்துறை பற்றி சரியான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவைகளும் காணப்படுகிறது.



[1] Details at: https://web.eecs.umich.edu/~cscott/rsi.html

## சுகாதார கேடுகளை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள்

முன்னர் நாம் கூறியதைப் போன்றே நாம் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பாவிப்பதைத் தடுத்துக் கொள்வதென்பது முடியாத ஒரு காரியமாகும், ஆனாலும் இவற்றைத் தொடர்ந்து பாவிப்பதனால் ஏற்படக்கூடிய பாரிய சுகாதார கேடுகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய எம்மால் முடியுமான சிறு சிறு நடவடிக்கைகளை கடைப்பிடிக்கலாம்.
சுகாதாரத் துறையில் விசேடத்துவம் பெற்ற சிலரின் அறிவுரைகள் சில கீழே வழங்கப்பட்டுள்ளன, இவற்றுடன் மேலும் சில பொருத்தமானவற்றையும் எம்மால் இணைத்துக் கொள்ளலாம்.

- போதிய வெளிச்சமுள்ள கண்கள் கூசாத ஒரு இடத்தில் உங்களது கணனிகளை வைத்துப் பாவியுங்கள். குறிப்பாக உங்கள் கண்களிலிருந்து சுமார் 20 முதல் 30 அங்குலம் (50 சென்ரி மீற்றர் முதல் 76 சென்றி மீற்றர்) தூரத்தில் இதை வைத்துக் கொள்ளுங்கள். அதே போன்று உங்களது கண்களை உலர்த்தக்கூடிய காற்று மூலங்கள் உங்களது மேசைக்கு அருகில் உள்ளதா என்பதையும் அவதானித்துக் கொள்ளுங்கள்.
- கணனி பாவனையாளர்கள் தங்களது கணனி திரையின் வெளிச்சத்தின் (கண்களைக் கூசும் தன்மையை) அளவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். பனிச் சூழல் போன்ற (Ergonomic) விதத்தில் உங்களது கணனியை 90 பாகைக்கு வைத்து யன்னலுக்கு ஒத்திசைவான பக்கத்தில் (யன்னலுக்கு நேராகவோ அல்லது பின்புறமாகவோ வைக்க வேண்டாம்) அல்லது பக்கவாட்டில் வெளிச்சம் படுமாறு (அதன் கீழ் வைக்காமல்) அமைத்துக் கொள்ளவும்.
- நீண்ட நேரத்துக்கு திரையை உற்று நோக்கி பயன்படுத்துவதானால் உங்களது கண்களைப் பாதுகாத்துக் கொள்வதும் முக்கியமான அம்சமாகும். எப்பொழுதும் கண்களை மூடி மூடித் திறப்பதை மறந்து விடாதீர்கள். நாங்கள் சாதாரணமாக கண்களை மூடித் திறப்பதை விடவும் சற்று அதிகமான முறையில் இதை மேற்கொள்ளவும்.
- 20-20 முறையில் உங்களது கண்களுக்கு ஓய்வினைக் கொடுக்கவும். உதாரணமாக கூறுவதானால் பொருளொன்றை ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் 20 விநாடிகளுக்கு 20 அடி தூரத்தில் வைத்துக் கொண்டு பின்பு அவற்றை மாற்றிக் கொள்ளல். அதன் பிற்பாடு அதனை நடுத் தூரத்தில் எடுத்து வைத்துக் கொள்ளல், இவ்வாறான பயிற்சியில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.
- முடியுமானானல் மிகவும் மிருதுவான தளபாடங்களைத் தெரிவு செய்து எடுத்துக் கொள்ளுங்கள், இவை உங்களுக்கு மிகவும் மெருதுவாக அமர்ந்து கொண்டு வேலைகளை முன்னெடுத்துக்குக் கொண்டு செல்ல மிக உறுதுணையாக அமையும். நன்றாக வடிவமைக்கப்பட்ட கதிரை, மேசைகள் உங்களது வேலைகளை மிக இலகுவான முறையில் மன நிறைவுடன் மேற்கொள்ள உதவுபவைகளாக அமையும்.
- நீங்கள் தூங்கும் போது கையடக்க தொலைபேசியையோ அல்லது வேறேதாவது சாதனங்களையோ உங்களது தூங்கும் இடங்களுக்கோ அல்லது அருகாமையிலோ வைத்துக்கொண்டு தூங்க வேண்டாம். இவை உங்களது தூக்கத்தை கலைக்கும் ஒரு விடயமாக அமைவது மாத்திரமல்லாமல் இவைகள் அனைத்தையும் நீங்கள் தூங்குதற்கு குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பாவது அணைத்து விடுங்கள், ஏனெனில் நீங்கள் தூங்குவதற்கு முன்பு இதன் திரைகளிலிருந்து உங்கள் கண்களுக்கு வந்த வெளிச்சங்களிலிருந்து உங்களது கண்கள் ஓய்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- மிகவும் குறைந்தளவாக சாய்ந்து கொள்ளக்கூடிய கதிரையொன்றினை உங்களது வேலைத்தளங்களில் தெரிவு செய்து கொள்ளுங்கள். இவை நீங்கள் ஆரோக்கியமான முறையில் அமர்ந்து கொண்டு வேலைகளை முன்னெடுப்பதற்கு மிகவும் வசதியாக அமையும்.
- அடிக்கடி கீழே பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு உங்களது கணனிகளை சரியாக உங்கள் கண்மட்டத்துக்கு நேர் எதிராக வைத்துக் கொள்ளுங்கள், உயரம் போதாமல் இருந்தால் அதற்குக் கீழ் ஏதாவது பொருளொன்றை வைத்து சற்று உயரமாக்கிக் கொள்ளுங்கள். உங்களது மடி கணனிகளில் காணப்படும் விசைப்பலகைக்கு (Keyboard) மேலதிகமாக இன்னுமொரு மேலதிக விசைப் பலகையொன்றை வைத்துக் கொள்ளளுங்கள் இவை உங்களுக்கு வசதியான முறையில் விடயங்களை எழுதிக் கொள்ள உதவுபவையாக அமையும். இதே நிலையை தொடர்ந்து கடைப்பிடிக்கும் இடத்து உங்களது கழுத்துக்கும் மிகவும் ஆறுதலான நிலையொன்று உருவாகும்.
- வேலை செய்து கொண்டிருக்கும் வேளையில் அடிக்கடி சிறு பயிற்சிகளில் ஈடுபடுங்கள். நீங்கள் படிக்கும் வேளையிலோ அல்லது வேலையில் ஈடுபடும் வேளையிலோ சிறிய வகையான உடல் அசைவுப் பயிற்சிகளில் ஈடுபடுங்கள். உதாரணத்துக்கு சொல்வதானால் உங்களது தோள் பட்டையை சிறிது நேரம் வேறு திசைகளுக்கு அசைத்தல். உங்களுக்கு ஓய்வு நேரங்கள் கிடைக்குமாயின் அந்நேரங்களில் இன்னும் சில மேலதிக பயிற்சிகளான உங்களது கழுத்துத் தசைகளை அசைக்கும் வகையான பயிற்சிகளில் ஈடுபடுங்கள்.
- பல விடயங்களை கையிலெடுத்துக் கொண்டு ஒரே நேரத்தில் செய்து முடிக்க அவதியுறுவதை நிறுத்தி ஒரு நேரத்தில் ஒரேயொரு வேலையை மாத்திரம் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். ஒரு நேரத்தில் ஒரேயொரு விடயத்தில் மாத்திரம் உங்களது அவதானத்தை செலுத்துங்கள். சாதாரணமாக ஒரு விடயத்துக்கு 20 நிமிடங்களை ஒதுக்கிக் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். அதே நேரத்தில் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்கக்கூடிய நிலையில் அல்லது ஏதாவது விடயங்களை எழுதுதல் அல்லது விடயமொன்றை செவியுற்றவராக இருந்து உங்களது வேலைகளையும் செய்யும் ஒருவராக இருந்துகொள்ளப் பழகுங்கள்.
- எத்தனை வகையான ஊடகங்களை ஒரு நேரத்தில் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உங்களுக்குள்ளேயே சுய விசாரணை செய்து கொள்ளுங்கள். மேலும் இதன் மூலமான உங்களது இலக்குகள் என்ன என்பதையும் பரிசீலித்துக் கொள்ளுங்கள். இவ்வாறான சிறிய வகையான சுய விழிப்புணர்வு உங்களை குருட்டுத் தனமான தொழில்நுட்ப பாவனையிலிருந்து தடுக்கும்.
- உங்களது கணனியில் நேரக் கணிப்பான் ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு 15 அல்லது 20 நிமிடங்களுக்கு ஒரு முறை உங்களுக்கு ஞாபகமூட்டலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

[2] https://www.pewinternet.org/2012/02/29/millennials-will-benefit-and-suffer-due-to-their-hyperconnected-lives/

## RSI இனைத் தடுத்தல்

ஏதாவது ஒரு விடயத்தினால் தொடர் சேதங்கள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டுக்கொண்டே இருக்குமாயின் அவற்றிலிருந்து மீண்டு கொள்வதற்கான சிறந்த வழி யாதெனில் அவற்றை கைவிட்டுவிட்டு செய்யாமல் இருத்தல் ஆகும.

ஒரு சிறு ஓய்வேதும் எடுத்துக்கொள்ளாமல் தொடர்ந்து **type** பண்ணிக்கொண்டிருக்கும் விடயங்களை செய்யும் ஒரு நபர் நீங்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு அல்லாமல் நீங்கள் அவ்வகையான விடயங்களில் உங்களை அறியாமல் தொடர்ந்து மேற்கொள்ளும் ஒருவராயின், நேரக் கணிப்பான் ஒன்றை செயற்படுத்திக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் செய்திகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**RSI** இனைத் தடுப்பதற்கான சிறந்த வழி யாதெனில் சரியான முறையில் அமர்ந்து கொள்வதாகும். சரியான முறையில் பின் பக்கமாக சாய்ந்தவாறு அமர்ந்து கொள்வது மிக முக்கியமான விடயமாகும். கணனியின் திரையினை உங்கள் கண் மட்டத்துக்கேற்ப அமைத்துக் கொள்ளுங்கள். முடங்கைக்கு ஏற்றாற் போல விசைப்பலகையை வைத்துக் கொள்ளுங்கள். அதுவும் சரியாக அமையா விட்டால் மீண்டுமொரு முறை உங்கள் இருக்கும் முறையை சரியாக அமைத்துக் கொள்ளுங்கள்.
இன்னும் சில அறிவுறுத்தல்கள்: மணிக்கட்டுக்குக் கீழே ஏதாவதொன்றை வைத்தக் கொள்ளுங்கள், இடைவேளை நேரங்களில் கைகளுக்கு சிறு

பயிற்சிகளைக் கொடுங்கள், கணனி **trackball** அழராளந ஒன்றைப் பாவியுங்கள் அத்தோடு கைக்கு அடக்கமான இலகுவாக பாவிக்கக்கூடிய அழகாக வடிவமைக்கப்பட்ட விசைப்பலகை ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

More: https://www.webopedia.com/DidYouKnow/Internet/Web_vs_Internet.asp

## டிஜிட்டல் பழக்க வழக்கங்களை எவ்வாறு கையாள்வது

எங்களது கையடக்க தொலைபேசி அல்லது மடி கணனியை அணைத்து விட்டு இருக்க முடியாதளவிற்கு தொழில்நுட்பமானது எமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த ஒரு விடயமாக மாறியுள்ளது. அதே நேரம் இந்த தொழில்நுட்ப சாதனங்களில் கூடிய நேரம் எமது காலத்தை செலவழிப்பதானது எமக்கு உடலியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எமது சமூக உறவுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும்.
உலகில் இன்று கையடக்க தொலைபேசியின் பாவனையானது மிகவும் பரந்துபட்டு காணப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது. அநேகமான மக்கள் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியினை எமது நாளாந்த செயற்பாடுகளான மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் உறவினர், நண்பர்களுடன் உறவு முறையில் பின்னிப் பிணைந்து உறவாடுதல் போன்ற விடயங்களுக்கும் பயன்படுத்துகின்றனர். நூற்றுக் கணக்கான செயலிகள் இவ்வகையான பாவனைகளுக்காக எம்மைச் சுற்றிக் காணப்படுகிறது.

எவராலும் தாம் விரும்பாத வரை டிஜிட்டல் பாவனையிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ள முடியாது – அதாவது குறிப்பிட்டதொரு காலத்துக்கு யாராலும் டிஜிட்டல் அல்லது மின்னியல் சாதனங்களிலிருந்து விலகி இருக்க முடியவே முடியாது. டிஜிட்டல் விடயங்களிலிருந்து விலகியிருத்தல் என்பது இச்சாதனங்களை பயன்படுத்தும் எமது அதீத செயற்பாடுகளிலிருந்து விலகி உண்மையான உலகிலுள்ள விடயங்களில் சில நேரத்தை செலவழித்து வாழ்க்கையை சந்தோசமான வழியில் கொண்டு செல்வது ஆகும்.
இந்த டிஜிட்டல் பாவனையிலிருந்து விலகியிருக்க நினைக்கும் விடயத்தில் எங்களால் சில விடயங்களை மேற்கொள்ள முடியும். அதாவது நாம் எவ்வளவு வகையான சாதனங்களைப் பயன்படுத்துகிறோம், குறிப்பாக எங்களது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் போன்றவற்றை நாம் கண்காணித்துக் கொள்ள வேண்டும். பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுத்தக் கொள்ளவும்.

- நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தும் திரையிலிருந்து சிறியதொரு ஓய்வினை எடுத்துக் கொள்ளுங்கள். இது நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கும் அறையிலிருந்து வெளியேறி சற்றுத் தொலைவில் நகரக் கூடிய சிறியதொரு நடையாகவும் இருக்கலாம் அல்லது மிக நீண்ட வார வேலைக்குப் பின்னரான ஒரு நாள் ஓய்வாகவும் இருக்கலாம். நீங்கள் நாளாந்தம் பகிரும் உங்களது நிலை பற்றிய விடயங்களிலிருந்து சற்று விலகியிருக்க எண்ணுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துக் கொள்ளுங்கள், அதாவது உங்களால் பதிவிடப்படும் விடயங்கள் உண்மையில் அத்தியாவசியமான ஒரு விடயமா? அல்லது இவை உண்மையான இலக்குடன் கூடிய வலையமைப்பை விரிவுபடுத்தும் ஒரு விடயமா? என்பதை நீங்களே உங்களை சோதித்துக் கொள்ளுங்கள்.
- தற்காலத்தில் வெளியிடப்பட்ட Android மற்றும் iOS (Apple) சாதனங்களில் நீங்கள் ஒவ்வொரு கிழமையும் திரையில் செலவழித்த மொத்த நேரங்களை மீட்டுப் பார்க்கக்கூடிய வசதிகளைக் கொண்டு காணப்படுகிறது. மேலும் இவற்றில் நீங்கள் அதிக நேரத்தை செலவழித்த விடயங்களை வேறாக அறிந்து கொள்ளவும் முடிகிறது. இன்னும் சில இலவச செயலிகளில் நீங்கள் டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்தும் முறைமை பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகிறது.

- எங்களது கையடக்க தொலைபேசிகளில் காணப்படும் வெற்று இடங்கள் (free space); மற்றும் நேரம் பற்றிய எல்லைகளை அறிந்து கொள்ளும் ஒரு பொறிமுறையும் காணப்படுகிறது. உதாரணமாக கூறுமிடத்து, நீங்கள் சாப்பிடும் வேளைகளில் கையடக்க தொலைபேசியிலிருந்து முற்றாக விடுபடும் வகையிலான முறைமை ஒன்று, அல்லது குடும்ப சவாரி அல்லது மதிய வேளையில் ஒரு மணித்தியாலத்தை ஒதுக்கிக் கொள்ளல் போன்ற விடயங்களில் ஈடுபாட்டை உருவாக்கிக் கொள்ளவும் முடியும்.
- டிஜிட்டல் சாதனங்களிலிருந்து வெளிவரும் நீலக்கற்றலைகள் (வெளிச்சம்) உங்கள் தூக்கத்துக்கு கேடு விளைவிக்கும் ஒரு விடயமாக அமையலாம். விஞ்ஞானிகள் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் நாம் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் டிஜிட்டல் திரைகளில் எமது பார்வையை செலுத்துவதிலிருந்து விலகியிருப்பதே மிகவும் ஆரோக்கியமானது என எம்மை அறிவுறுத்துகின்றனர்.

Techlicios எனும் இணையதளத்திலிருந்து பெறப்பட்ட ஏழு பயனுள்ள ஆலோசனைக் குறிப்புக்களும் உங்களுக்காக கீழே தரப்பட்டுள்ளன .

- உங்களது கையடக்க தொலைபேசிகளுக்கு நீங்கள் உறங்கும் அறைகளில் மின்னேற்றம் (charge) செய்து கொள்ள வேண்டாம்.

- மற்றவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்கள் தவிரந்த மற்றைய அனைத்தையும் நிறுத்தி வையுங்கள். நீங்கள் மற்றவர்களுடன் நேரடியான தொடர்பாடல்களுக்கு பயன்படுத்தும் விதங்களைத் தவிர்ந்த மற்றைய அனைத்தையும் நிறுத்தி வைப்பது மிகவும் பயனுள்ளதொரு விடயமாகும். இன்னுமொரு விதத்தில் கூறுவதானால் twitter மற்றும் முகப்புத்தகம் போன்றவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்கள் உட்பட அனைத்து செயலிகள் மற்றும் ஏனைய விளையாட்டு செயலிகளையும் அறிவுறுத்தல் கிடைக்கப் பெறாதவாறு நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

- உங்களது சாதனத்தின் Home திரையை குறைந்தளவு ஒளிரக்கூடியவாறு அமைத்துக் கொள்ளுங்கள். குறைந்தளவான செயற்பாடுகளைக் கொண்ட செயலிகளை விடுத்து மற்றைய அனைத்து செயலிகளையும் உங்களது Home screen இலிருந்து முற்றாக அகற்றி விடுங்கள். இதற்குள் maps, ride hailing, camera மற்றும் messaging apps போன்றனவும் உள்ளடங்கும்.

- உங்களது கையடக்க தொலைபேசியினை கறுப்பு – வெள்ளை முறைக்கு (iOS and some Android phones only) ஆக்கிக் கொள்ளுங்கள்: வண்ணமயமான செயலிகளும், உருவகங்களும் உங்களது மூளைக்கு அழகிய தோற்றங்களைக் கொடுப்பவையாக அமையலாம், மற்றும் இதே நிலைமை உங்களது கையடக்க தொலைபேசி தொடர்நது புதிய விடயங்களை அதனுள் பெற்றுக் கொள்வதற்கும் (update) வழியமைக்கவும் செய்யும். எனவே உங்களது கைத்தொலைபேசிகளின் திரையை கறுப்பு – வெள்ளை நிறத்துக்கு மாற்றிக் கொள்வதன் மூலம் இவ்வாறான தேவையற்ற தொடர் புதிய விடயங்களை பெற்றுக் கொள்வதிலிருந்து உங்களது சாதனங்களை விடுவித்துக் கொள்ளலாம்.

- சற்றுப் போதுமான அளவுக்கு மட்டுமே சமூக ஊடகங்களைப் பாவித்தல்: நீங்கள் மின்னஞ்சல்களை தொடர்ச்சியாக பாவிப்பவர்களாக இருப்பின் சமூக வலைத்தளங்களை பார்ப்பதற்கான நேரத்தை அதற்குள்ளேயே முதலில் முடிவு செய்து கொள்ளுங்கள். இதன் மூலம் நீங்கள் உங்களது தேவைக்கேற்பவே சமூக ஊடகங்களை பாவிக்கும் ஒரு நபராக மாற்றமடைவீர்கள், இவ்வாறு இல்லாமல் போகுமிடத்து உங்களுக்கென்று திட்டமொன்று இல்லாமல் தான் போன போக்கில் சமூக ஊடகங்களை பாவிக்கும் மன நிலையையுடைய ஒருவராக நீங்கள் காணப்படுவீர்கள்.

- மக்கள் சூழ்ந்து காணப்படும் இடங்களில் கையடக்க தொலைபேசிகள் பாவிப்பதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்: Phubbing எனப்படுவது எங்களது கைத்தொலைபேசியின் மேல் மற்றவர்களது பார்வையை விடச் செய்யும் ஒரு தீய பழக்கவழக்கமாகும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஒருவர் தனது கையடக்க தொலைபேசி மீது தனது அதீத கவனத்தை செலுத்த முற்படின் அவருக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குமான தொடர்பாடல் அந்த இடத்திலேயே இல்லாமல் போகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எப்போதாவது ஒருவருடன் நேரடியாகப் பேச எண்ணினால் தயவு செய்து உங்களது கையடக்க தொலைபேசியையும் அதற்குள் வரும் notification யையும் நிறுத்திவிட்டு சாதாரண முறையில் பேசிக் கொள்ள முயற்சியுங்கள்.




[3] https://www.techlicious.com/tip/how-to-build-better-digital-habits/

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 01: நன்றாக செலவழித்த ஒரு தருணம


Tristan Harris என்பவர் 2012 ஆம் ஆண்டு கூகுள் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். நாட்கள் செல்லச் செல்ல இவர் தன்னுடைய டிஜிட்டல் தொழில்நுட்ப வேலைப்பழுவில் மூழ்கிக் கொண்டிருந்தார். இந்நேரத்தில் அவரது தொலைபேசியில் இருந்து வரும் ஒவ்வொரு சலசலப்பும் தன்னுடைய கவனத்தை சிதறடிக்கும் ஒரு விடயம் என்பதைப் புரிந்து கொண்டார். தன்னுடைய உள்பெட்டிக்குள் (inbox) வரும் ஒவ்வொரு செய்திகளும் தன்னுடைய கவனத்தை வேறு திசையில் மாற்றும் ஒரு விடயம் என்பதை அறிந்து கொண்டும் அவரால் தொடரந்து தன்னுடைய வேலையின் மேல் கவனத்தை செலுத்த முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

பிற்பட்ட காலங்களில், தன்னுடைய நிறுவனத்தைப் போன்ற தொழில்நுட்பங்களை வழங்கும் பாரிய நிறுவனங்களால் கவனத்தை ஈர்க்க நடைமுறைப்படுத்தப்படும் ஒரு விடயம் இது என்பதை அவர் அறிந்து கொண்டார். தான் தயாரித்த ஒரு presentation இல் "கவனச் சிதறல்களைக் குறைத்து பாவனையாளர்களுக்கு மதிப்பளிப்பதற்கான ஒரு அழைப்பு" எனும் தலைப்பில் ஒரு விடயத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டமையானது பாரியளவில் இந்நிறுவனத்துக்குள் மற்றைய பணியாளர்களுடன் பகிரப்பட்டு பேசு பொருளாக மாறியது, ஆனாலும் கூட இவற்றால் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

2016 ஆம் ஆண்டு Harris கூகுள் நிறுவனத்திலிருந்து விலகி இலாப நோக்கற்ற நிறுவனமான "Time Well Spent" எனும் நிறுவனத்தை ஆரம்பித்தார் (இதன் பின்னர் இந்நிறுவனமானது Center for Humane Technology என பெயர் மாற்றம் செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது). Attention Economy எனப்படும் அவதானமிகு பொருளாதாரம் பற்றிய விடயங்களில் தனது பார்வையை செலுத்தி சமூகத்துக்காக செயற்படும் நிறுவனமாக சேவையாற்றத் தொடங்கினார். இந்நிறுவனம் இரண்டு வருட காலமாக மனிதாபிமானம், மன நிறைவு (திருப்தி) மற்றும் கல்வி போன்ற செயற்றிட்டங்களில் தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது.

பொது மேடைகளில் நடைமுறைப்படுத்தும் பேச்சுக்களில் (TED talks) சமூக ஊடகங்களையும் இணைத்துக் கொண்ட Harris தாம் தொலைபேசிப் பேச்சுக்களில் அதிக நேரத்தை செலவழிப்போர் என்ற விடயத்தை நன்கு அறிந்தவராகவும் காணப்பட்டார். இவரால் இதற்கு மிகவும் இலகுவான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன: உங்களது திரைகளை பசயல நிறத்துக்கு மாற்றிக் கொள்ளுங்கள் (அதிக நிறமுடையதாக வைத்திருப்பதை விட). இரவு நேரங்களில் நீங்கள் தூங்கும் வேளையில் "don't disturb" என்பதை தெரிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு அல்லது வேறு ஏதாவது விடயங்களுக்கு செல்வதானால் உங்களது கையடக்க தொலைபேசியை வீட்டில் வைத்து விட்டுச் செல்லுங்கள்.

Silicon Valley's big corporation எனும் நிறுவனத்தின் உதவியுடன் Time Well Spent Movement தனது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது. 2018 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்து Apple, Google மற்றும் Facebook போன்ற நிறுவனங்கள், பாவனையாளர்கள் இதன் மேல் தாம் செலவழிக்கும் நேரத்தை இலகுவாகக் கண்டறிவதற்கு வாய்ப்பினை வழங்கும் விதமான விடயங்களை தமது செயலிகளில் உள்ளடக்கத் தொடங்கினர். எது எவ்வாறாயினும் இந்த விடயமானது பாவனையாளர்கள் தாம் பயன்படுத்தும் விடயங்கள் பற்றி தெளிவு பெற்று அதற்கு இசைவான முறையில் தமது நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் பொருட்டு மாத்திரமே இவையனைத்தும் பயனுள்ளதாக அமையும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.




Read more: https://humanetech.com/
https://www.wired.com/story/google-and-the-rise-of-digital-wellbeing/

## கலந்துரையாடல் விடயங்கள்

இவ்விடயங்கள் பற்றிய மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு கீழ்வரும் கலந்துரையாடல் விடயங்களை அவதானித்துக் கொள்ளுங்கள்.

- நீங்கள் கணனி, கையடக்க தொலைபேசி மற்றும் Tablet போன்றவற்றைப் பாவிக்கும் ஒரு நபராயின், உங்களுக்கு தெரியுமா நீங்கள் திரையில் பயன்படுத்தும் நேரத்தின் அளவை (நாளாந்த மற்றும் வாராந்த ரீதியில்) உங்களால் கண்டு கொள்ள முடியும் என? (Apple மற்றும் Android சாதனங்களில் இதற்கான வசதிகள் தற்போது காணப்படுகிறது)

- "தொழில்நுட்பங்கள் எம்மை திசை திருப்பாமல் அவற்றின் மூலம் என்ன பலன்களை எம்மால் அடைய முடியுமோ அவற்றை நாம் அடைந்து கொள்ள வேண்டும்". இந்த விடயத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? கலந்துரையாடவும்.

- நீஙகள் கணனி ஒன்றுக்கு முன்னால் அல்லது மடி கணனியொன்றுக்கு முன்னால் அமரும் வேளையில் எவ்வாறு அமர்ந்து கொள்கிறீர்கள் என்ற விடயத்தை நீங்கள் எப்போதாவது அவதானித்து இருக்கிறீர்களா?

- நீங்கள் உங்களது கழுத்தினை கீழ் நோக்கி வளைத்து உங்களது கையடக்க தொலைபேசியை பார்ப்பது மிகவும் க்'டமான விடயம் என்பதை அறிந்துள்ளீர்களா?. வேறு ஏதாவது பயிற்சி முறைகளினால் உங்களது கழுத்து மற்றும் தோள்ப்பட்டைப் பகுதியை சரி பார்த்துக் கொள்ளக்கூடிய முறைகள் ஏதும் பற்றி அறிந்திருப்பின் உங்களது குழுக்களுடன் அவை பற்றி கலந்துரையாடவும்.

- கூகுள் நிறுவனத்தின் டிஜிட்டல் நல்வாழ்வு இணையதள பகுதியை தரிசிக்கவும் https://wellbeing.google/ உங்களது தொழில்நுட்ப பாவனை மற்றும் முறைமைகளை முகாமைத்துவம் செய்யக்கூடிய பல வழிமுறைகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன, அவற்றைக் கொண்டு பயன் பெறவும்.

## கற்றல் பலன்கள்

இந்தப்பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்.

- நாம் மேற்கொள்ளும் எந்தவொரு விடயமாக இருந்தாலும் அங்கு தொழில்நுட்பத்தின் ஒரு பகுதி பின்னிப்பிணைந்து காணப்படுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எமது வாழ்க்கையில் அந்தளவிற்கு முக்கியமான ஒன்றாக தற்காலத்தில் மாறியுள்ளது. இவற்றினால் ஏற்படுத்தப்படும் உடல், உள மற்றும் சமூக ரீதியிலான தாக்கங்கள் மிக அதிகமானவை. எனவே இது பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதொரு விடயம் ஆகும்.

- தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது நிறுவனத்தின் படைப்புகள், மற்றும் சேவைகளினால் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றி நன்கு அறிந்துள்ளன. அதே போன்று கட்டுப்படுத்தி, பாவனை செய்விப்பதற்கான உபாயங்களையும் வகுத்துள்ளன.

- நாம் பாவிக்ககும் தொழில்நுட்ப சாதனங்களுக்கு அடிமைப்பட்டிராத நிலையொன்று உருவாக வேண்டும். நாம் மிகவும் திடகாத்திரமாக இருந்தாலும் இவற்றினால் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு விடயத்தாலும் எம்மைக் கட்டுப்படுத்தி எமது சமூக பழக்கவழக்கங்களை இழக்கக்கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ளக்கூடாது. ஒரு இலகுவான வழியாதெனில் தங்களை தாமே சுய பரிசீலனை செய்து கொண்டு அவை பற்றி விழிப்புடன் இருப்பது ஆகும்.

- கையடக்க தொலைபேசி மற்றும் கணனி சம்மந்தமான அதீத பாவனையிலிருந்து விலகி நிம்மதியாக இருப்பதற்கான அதிகளவிலான வழி முறைகள் எம்மைச் சுற்றி காணப்படுகின்றன.

- எம்மில் அநேகமானவர்கள் டிஜிட்டல் சாதனங்களை பாவித்து அவற்றுக்குக் கட்டுப்பட்டு அடிமைப்படாதவர்களாக இன்னும் காணப்படுகின்றனர். ஆனாலும் இன்னும் சிலர் இதற்குக் கட்டுண்ட நிலையிலேயே காணப்படுகின்றனர். அவை பற்றி புரிந்து கொண்டு விழிப்படைந்து இருப்பதே இவற்றினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான முதற் படி ஆகும். எனவே இந்த விடயத்திலிருந்து விலகியிருந்து எமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு இந்தப் புரிதல் நிலை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

# மேலதிக வாசிப்புகளுக்கு

டிஜிட்டல் இணையத்தள கடப்பாடுகள்
http://www.digitalresponsibility.org/

டிஜிட்டல் நல்வாழ்வு இணையத்தளம
https://digitalwellbeing.org/

கூகுளின் டிஜிட்டல் நல்வாழ்வு பற்றிய இணையத்தளம
https://wellbeing.google/

Office ergonomics: Preventing eye strain
https://healthengine.com.au/info/office-ergonomics-preventing-eye-strain

What is Digital Detox and how to start with it?
https://mrnoob.net/how-to-start-with-digital-detox/

MODULE 6

# டிஜிட்டல் அறிவினை அதிகரித்தல்

# டிஜிட்டல் அறிவினை அதிகரித்தல்

டிஜிட்டல் அறிவு (கல்வியறிவு) என்பதனை விளக்குவதற்கு பல வரைவிலக்கணங்கள் வழங்கப்படுகின்றன.

மிகவும் இலகுவான வரைவிலக்கணம் ஒன்றினைக் கூறுவதானால், டிஜிட்டல் எழுத்தறிவு என்பது "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணையத் தளத்தினூடாக விடயங்களை அறிந்து, மதிப்பீடு செய்து, அவற்றைப் பயன்படுத்தி, பகிரக்கூடிய வகையில் ஏதாவதொரு விடயத்தைத் தயாரித்தல்" எனக் கூறலாம். இந்த டிஜிட்டல் எழுத்தறிவு என்பது பல வகையான திறன்களை தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுவது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இவை அனைத்தும் டிஜிட்டல் உலகிலுள்ள சவால்களை வெற்றி கொள்ள எமக்கு மிகவும் இன்றியமையாதவைகள் ஆகும்.

டிஜிட்டல் எழுத்தறிவு எனப்படுவதானது பொதுவான எழுத்தறிவு விடயங்கள் மற்றும் அடிப்படை வாசிப்புத் திறன் போன்றவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும். இவை டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு செயற்படுகின்றது, மக்கள் இவற்றால் எந்த வகையான அநுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது போன்ற பல விடயங்களை எமக்கு விளக்கி நிற்கிறது.

மேலும் இந்த விடயமானது விமர்சனம் செய்வதற்கான சிந்தனை சக்தி, பல்வகைத்தன்மையான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களின் பற்றிய மதிப்பீடு, டிஜிட்டல் சாதனங்களைப் பற்றிய அறிவு, இணைய தளங்களைப் பாவித்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப பாவனைகளின் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றிய விடயங்களையும் விளக்கி நிற்கிறது.

டிஜிட்டல் சாதனங்களான கணனி (Computer), மடி கணனி (Laptop) மற்றும் Tablets போன்றவற்றைப் பயன்படுத்துபவர்கள் இணைய தளங்களை எவ்வாறு பயன்படுத்தி அதன் மூலம் எவ்வாறு விடயங்களை அறிந்து கொள்வது என்பது பற்றிய அறிவை ஏற்கனவே பெற்றுக் கொண்டிருப்பர். மேலும் இந்த விடயம் பற்றி அறிந்தவர்களுக்கு சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது மற்றும் தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது போன்ற விடயங்களும் மிகவும் பழக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படும். எது எவ்வாறிருப்பினும், டிஜிட்டல் எழுத்தறிவு என்பது தற்காலத்தில் மிகவும் பரந்துபட்ட ஒரு விடயமாகக் காணப்படுகிறது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம் ஆகும்.

டிஜிட்டல் எழுத்தறிவு என்பது தொழில்நுட்ப அறிவையும் திறன்களையும் தாண்டி நிற்கும் ஒரு விடயமாகும். ஒன்லைன் பாவனைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிமுறைகள், மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்கல் மற்றும் தம்மை பற்றிய சுய அக்கறை போன்ற விடயங்களையும் உள்ளடக்கியதொன்றாகக் காணப்படுகிறது. இதுவே தற்காலத்தில் இலங்கையில் டிஜிட்டல் எழுத்தறிவு பற்றிய விடயங்களை முனனேற்றுவதற்கான இலக்கு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.


# முக்கிய சொற்கள்

டிஜிட்டல் எழுத்தறிவு : என்பதற்கு பல விளக்கங்கள் வழங்கப்பட்டாலும் அவை அனைத்தும் பெரும்பாலும் ஒத்த கருத்துள்ளதாகவே காணப்படுகிறது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு என்பது கணனி மற்றும் இணையத்தள பாவனை போன்றவை காணப்படும் சமூகத்தில் நபர் ஒருவர் தனது சமுதாய பங்களிப்பை மிகச் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொள்வதாகும்.

தொழில்நுட்பவியல் அறிவு (முன்னர் கணனி அறிவு என்றும் அழைக்கப்பட்டது) என்பது டிஜிட்டல் தொழில்நுட்பம் பற்றியதொரு ஆழமான அறிவைக் குறித்து நிற்கிறது.

தகவல் அறிவு அறிவியல் உலகின் ஒரு பகுதியை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்ற ஒரு விடயம் ஆகும்: அவையாவன, ஒரு இடத்தில் விடயங்களை அமைக்கக்கூடிய தன்மை, அடையாளப்படுத்தல், தேவையேற்படின் அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளல், செயற்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் தகவல்களை முழுமையாகப் பயன்படுத்தல் போன்றன ஆகும்.



Source: http://www.ictliteracy.info/

# டிஜிட்டல் அறிவின் மூன்று முகப்புக்கள்

டிஜிட்டல் அறிவுத் திறன்களை நாம் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் வகைப்படுத்திக் கொள்ளலாம். அவையாவன: டிஜிட்டல் விடயங்களைக் கண்டறிந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளல், புதிய டிஜிட்டல் விடயங்களை உருவாக்குதல் மற்றும் அவைகளைப் பற்றி மற்றவர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் அல்லது தொடர்பாடல்களின் மூலம் அவற்றைப் பகிர்ந்து கொள்ளல் போன்றன ஆகும்.

டிஜிட்டல் விடயங்களைக் கண்டறிந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளல்: என்பது டிஜிட்டல் அறிவின் மிக முக்கியமான ஒரு அம்சம் ஆகும். டிஜிட்டல் விடயங்களை சாதாரணமாகப் பெற்றுக் கொள்வதோடு மட்டும் எம்மை மடடுப்படுத்திக் கொள்ளாது அவற்றைப் பகுப்பாய்வு செய்ய பழகிக் கொள்ளவும் வேண்டும். இந்த செயற்பாட்டுக்கு உதாரணமாக தகவலொன்று எவ்வாறு கிடைக்கப் பெறுகிறது, அதன் நம்பகத்தன்மை மற்றும் அவற்றை வழங்கிய மூலங்கள் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வது போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்றைய காலப்பகுதியின் மிக முக்கியமான விடயம் யாதெனில் அடிப்படை ஆதாரங்களற்ற விடயங்களை கைவிட்டு சரியான நம்பத்தகுந்த விடயங்களை மட்டுமே நாம் கண்டறிந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

புதிய டிஜிட்டல் விடயங்களை உருவாக்குதல்: இணையதளங்களில் அதிகளவான டிஜிட்டல் சாதனங்கள் காணப்பட்டாலும் நாம் எமது அறிவு, திறமையினைப் பயன்படுத்தி காலத்துக்கேற்ற புதிய விடயங்களை உருவாக்கிக் கொள்கிறோம், இவை உண்மையில் மதிப்பளிக்கப்பட வேண்டிய திறமைகளை வெளிக்கொணரும் ஒரு செயற்பாடாகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இவ்வாறான விடயங்களை உருவாக்க அவை பற்றி அறிவினையும் அநுபவத்தையும் பெற்றுக் கொள்வதென்பது எமக்கு மிகவும் பயனுள்ள ஒரு விடயமாகும். இதன் மூலம் இவை மாணவர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில் துறை சார்ந்தவர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒரு விடயமாக இது அமையும்.

மற்றவர்களுடன் கலந்துரையாடல்கள் அல்லது தொடர்பாடல்களின் மூலம் பகிர்ந்து கொள்ளல். அடுத்த மிகவும் பெறுமதிமிக்க திறன் யாதெனில் எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நாம் உரிய காலத்தில், உரியவர்களுடன் சரியான முறையல் பகிர்ந்து கொள்கிறோமா என்பது ஆகும். சமூக ஊடகங்களின் மூலம் இவ்விடயங்களை பகிர்ந்து கொள்வதென்பது மிகவும் இலகுவானதொரு விடயமாக தற்காலத்தில் காணப்படுகிறது, இருப்பினும் இச்சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எமது புகைப்படங்கள், சம்மந்தமில்லாத கருத்துக்கள் மற்றும் பிழையான கருத்துக்களை பகிர்தல் போன்றவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துகளும் காணப்படுகிறது.

மற்றவர்களுடன் விடயங்களை பகிர்ந்து கொள்வதென்பது இந்த உறவுமிக்க உலகில் மிகவும் எளிதான விடயமாகக் காணப்பட்டாலும் அவற்றை நாம் பகிர்ந்துகொள்ளும் போது சட்ட நெறிமுறைகளை மதித்து, மற்றவர்களது கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, பதிப்புரிமைகளுக்கு மதிப்பளித்து நடந்து கொள்வது மிகவும் முக்கியமானதொரு விடயம் ஆகும்.

## இலங்கையில் டிஜிட்டல் அறிவு

இலங்கையில் டிஜிட்டல் அறிவு என்பது இன்னும் இதன் ஆரம்ப காலகட்டத்திலேயே காணப்படுகிறது. ஆனாலும் டிஜிட்டல் அறிவு எனப்படும் போது கணனி சம்மந்தமான அறிவு மட்டுமே என்று நாம் எண்ணிக்கொள்ளக் கூடாது, கணனி அறிவு என்பது பல திறன்களையும் விடயங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியதொரு பரந்துபட்ட விடய பரப்பாகும்.

இலங்கையில் கணனி அறிவை மதிப்பீடு செய்வதற்காக இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் (Department of Census and Statistics - DCS) கடந்த தசாப்தங்களில் மதிப்பீடொன்றை மேற்கொண்டது. அதே போன்று டிஜிட்டல் அறிவினை மதிப்பீடு செய்வதற்காக அண்மையில் ஒரு செயற்றிட்டத்தையும் ஆரம்பித்துள்ளது. எது எவ்வாறாயினும் இந்த விடயப் பரப்புக்காக மிகவும் குறுகிய வரைவிலக்கணம் ஒன்றே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்தில் கணனி அறிவு என்பது எத்தகைய வயது வித்தியாசங்களுமின்றி, நபர் ஒருவருக்கு மற்றவர்களது உதவியின்றி சுயமாகவே கணனியொன்றை பாவிக்கக்கூடிய இயலுமை என்று குறிப்பிட்டுள்ளது.

டிஜிட்டல் அறிவு என்பதற்கு தொகைமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரைவிலக்கணமும் மிகவும் எளியதொன்றாகவே காணப்படுகிறது. ஒருவர் (அதாவது 6-59 வயதுக்கு இடைப்பட்ட ஒருவர்) மற்றவர்களது உதவியின்றி சுயமாகவே கணனி, மடி கணனி, tablet மற்றும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியொன்றினை இயக்கக் கூடிய நிலையில் இருத்தலே டிஜிட்டல் அறிவு என்று வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணங்களில் இணையத் தளங்கள் பாவிப்பதற்கான திறமைகள் பற்றியோ அல்லது செயலிகளை இயக்கக்கூடிய செயல் திறமைகள் பற்றியோ குறிப்பிடப்படவேயில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும்.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது காலத்துக்கு காலம் இத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்வது வழக்கமானதொன்றாகும். 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இலங்கையில் காணப்படும் டிஜிட்டல் அறிவு 28.3மூ என மதிப்பிடப்பட்டுள்ளது (முதல் 6 மாத காலப்பகுதியில் மாத்திரம்). இதை அடிப்படையாகக் கொண்டு மொத்த சனத்தொகைக்கும் பார்க்குமிடத்து 40.3மூ என மதிப்பிடப்பட்டுள்ளது (ஆண்கள் 44.5மூ மற்றும் பெண்கள் 36.4மூ).

“வகைப்படுத்தப்பட்ட எல்லா மட்டங்களிலும் டிஜிட்டல் அறிவு என்பது கணனி அறிவை விட மிக உயர்வானதொன்றாகும். இது தனிப்பட்ட கணனி முதல் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி அல்லது வயடிடநவ வரையும் பரந்து காணப்படும்” என தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இந்த கணக்கெடுப்பின் மூலம் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் மத்தியிலும், இளைய சமூகத்தினர்கள் மத்தியிலும் கணனி மற்றும் டிஜிட்டல் சம்மந்தமான அறிவு மிக அதிகளவாகக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் ஒரு பொதுவான விடயம் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

DCS இனால் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் தேர்ச்சி மட்டத்தை அளவீடு செய்வதற்குத் தேவையான மதிப்பீடு முறைமைகள் மாத்திரமே இருப்பினும் இவை விடயப்பரப்புக்குப் போதுமானதாகக் காணப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

உதாரணத்துக்கு கூறுமிடத்து இணையதள சேவைகளைப் பயன்படுத்துபவர்களில் எத்தனை பேர் உண்மையிலே இதில் கிடைக்கப்பெறும் ஒன்லைன் சேவைகளைப் பயன்படுத்துகின்றனர்? அதே போல் என்ன காரணத்தால் இவர்களால் முழுமையான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை? ஏதாவது விடயங்கள் இவர்களை இச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதிலிருந்து தடுக்கிறதா? போன்றவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

LIRNEasia எனப்படும் ஆய்வு நிறுவனத்தினால் மிக அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் யாதெனில் இணையதளங்களைப் பயன்படுத்தும் அநேகமான இலங்கையர்கள் இதில் காணப்படும் ஏனைய பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 40மூ ஆனவர்கள் மாத்திரமே இணையதளத்தில் காணப்படும் ஏனைய சேவைகளான இணைய தேடல்கள், பதிவுகளை மேற்கொள்ளல், இணையதளத்தில் அல்லது சமூக ஊடகங்களில் கருத்துக்களை பகிர்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பிரதான விடயம் யாதெனில் பாவனையாளர்களிடம் காணப்படும் குறைவான பாவனை பற்றிய அறிவே இவை பற்றிய மேலதிகத் தேடல்களுக்கு செல்ல முடியாமைக்கான காரணமாகும் என்று கூறப்படுகிறது. மேலும் தங்களுக்கு பழக்கமான இணையதளங்களைத் தவிர ஏனைய தளங்களுக்கு செல்வதற்கான பயமும் இவர்களை ஒரே விடயத்துக்குள் வைத்திருப்பதற்கான காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயமானது இணையதளங்களில் உலாவ நன்கு அறிவுள்ளவர்களிடத்தில் காணப்படும் இடைவெளியை எமக்கு தெளிவாக விளக்கி நிற்கிறது.




[1] http://www.statistics.gov.lk/education/ComputerLiteracy/ComputerLiteracy-2018Q1-Q2-final.pdf
[2] https://lirneasia.net/after-access

# டிஜிட்டல் அறிவுத் தேர்ச்சிகள்

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களினால் எவ்வாறான டிஜிட்டல் தேர்ச்சிகள் வழங்கப்பட வேண்டும் என சரவதேச ரீதியிலாக பல வகையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

பிரஜைகளுக்கான ஐரோப்பிய டிஜிட்டல் தேர்ச்சிக் கட்டமைப்பு (The European Digital Competence Framework for Citizen) அல்லது DigiComp எனப்படும் நிறுவனமானது மக்களின் டிஜிட்டல் தேர்ச்சி நிலைகளை உயர்த்துவதற்கான பல விடயங்களை உலகில் அறிமுகப்படுத்தியுள்ளது. DigiComp இனால் முதன்முதலாக 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு பதிப்பானது டிஜிட்டல் அறிவுத் தேர்ச்சி மட்டம் பற்றிய விடயங்களுக்கான முக்கிய உசாத்துணையாக காணப்படுகிறது. இதன் பிற்பாடு இந்தப் பிரசுரமானது DigiComp 2.0 என இரண்டாவது முறையாக சிறு மாற்றங்களுடன் மீள் பதிப்பு செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும். இந்த விடயமானது அக்காலத்திலிருந்தே UNESCO நிறுவனத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

DigiComp 2.0 இல் குறிப்பிடப்பட்ட தேர்ச்சி நிலைக் கட்டமைப்புக்கள் பின்வருமாறு அமைகிறது.

| தேர்ச்சி மட்டங்கள் | தேர்ச்சிகள் |
|---|---|
| 1. தகவல் மற்றும் தரவு பற்றிய அறிவு | 1.1 தரவுகள், தகவல்கள் மற்றும் விடயங்களுக்காக உலாவுதல், தேடல் மற்றும் வடிகட்டி சரியானவற்றை தெரிவு செய்தல்.<br>1.2 தரவுகள், தகவல்கள் மற்றும் விடயங்களை மதிப்பீடு செய்தல்.<br>1.3 தரவுகள், தகவல்கள் மற்றும் விடயங்களை முகாமை செய்தல். |
| 2. தொடர்பாடல்கள் மற்றும் ஒன்றிணைந்து செயல்படல். | 2.1 டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக பரஸ்பர தொடர்பு பேணல்.<br>2.2 டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக பகிர்தல்.<br>2.3 டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக மக்களுடன் ஒன்றிணைதல்.<br>2.4 சரியான முறையில் இணைய சேவைகளை பயன்படுத்துதல்.<br>2.5 டிஜிட்டல் அடையாளங்களை முகாமைத்துவம் செய்தல் |
| 3. டிஜிட்டல் விடயங்களை உருவாக்குதல் | 3.1 டிஜிட்டல் விடயங்களை விருத்தி செய்தல்.<br>3.2 டிஜிட்டல் விடயங்களுடன் ஒருமித்துப் போதலும் மீள் இணைதலும்.<br>3.3 பதிப்புரிமை மற்றும் உரிமம்.<br>3.4 நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் |
| 4. பாதுகாத்தல் | 4.1 சாதனங்களை பாதுகாத்தல்<br>4.2 தனியாள் தரவுகளையும் தனியுரிமையையும் பாதுகாத்தல்<br>4.3 சுகாதாரம் மற்றும் நல்வாழ்வினைப் பாதுகாத்தல்<br>4.4 சூழலைப் பாதுகாத்தல் |
| 5. பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளல் | 5.1 தொழில்நுட்ப தடங்கல்களை தீர்த்துக் கொள்ளல்<br>5.2 தொழில்நுட்ப உதவிகள் மற்றும் தேவைகளை அடையாளம் காணல்<br>5.3 டிஜிட்டல் தொழில்நுட்பங்களை படைப்பாற்றல் மிக்கதாக பயன்படுத்தல்<br>5.4 டிஜிட்டல் தேர்ச்சிமட்ட இடைவெளிகளை அடையாளப் படுத்தல் |

நாம் எல்லோரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தேர்ச்சிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பது அர்த்தமில்லை, ஆனாலும் கல்வி, வியாபாரம், ஆளுகை மற்றும்  இன்னும் சில விடயங்கள் அடிக்கடி மாற்றம் பெறும் ஒரு விடயமாகும் என்பதால் இத்தகைய தேர்ச்சி நிலைகள் இன்னும் இன்னும் தேவைப்படும் ஒரு விடயமாகும் என்பதையும் இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
டிஜிட்டல் அறிவு என்பதன் பொருள் இதனைப் பயன்படுத்தும் அனைவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட வேண்டும் என்பது அல்ல. இந்த ஒத்த தன்மையை புரிந்து கொள்ளுங்கள். சொந்த வாகனத்தைக் கொண்டிருக்கும் மக்கள் - இது மோட்டார் சைக்கிளாகவோ, முச்சக்கர வண்டியாகவோ, காராகவோ அல்லது ஏனைய எந்தவொரு வாகனமாகவோ இருக்கலாம் - ஆனாலும் வாகனங்களை எவ்வாறு இயக்குவது, இவற்றில் ஏதாவது கோளாறுகள் ஏற்படாமல் எவ்வாறு கவனித்துக் கொள்வது, பாதைகளில் மற்ற வாகனங்களுக்கு இடம் கொடுப்பது எப்படி மற்றும் பாதசாரிகளை பாதுகாப்பது போன்ற அடிப்படை அம்சங்களை அறிந்திருப்பது எமக்கு மிகவும் முக்கியமான விடயங்கள் ஆகும். இதே போன்று வாகனப் பாவனையாளர்கள் அவர்களது வாகனத்தை நன்றாக மேற்பார்வை செய்து கொள்ளவும் அறிந்திருக்க வேண்டும் (உதாரணமாக சக்கரங்களை மாற்றிக் கொள்ளல் போன்றன) ஆனாலும் பெரிய திருத்த வேலைகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய தேவை இல்லை. ஏதாவது பெரிய திருத்த வேலைகள் ஏற்படின் அவை பற்றி திருத்த வேலைகளில் ஈடுபடுவோர்களிடம் சென்று பெற்றுக் கொள்ளலாம்.
இதே போன்றே டிஜிட்டல் சாதனங்களையும் சேவைகளையும் பயன்படுத்துபவர்கள் அவை பற்றி மிகவும் முக்கியமாக பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் பற்றிய விடயங்களை நன்றாக அறிந்திருக்க வேண்டும். அதே போன்று மற்றவர்களுக்கும் மதிப்பளித்து தேவையேற்படுமிடத்து யாரிடமிருந்து எத்தகைய உதவிகளை பெற்றுக் கொள்வது போன்ற விடயங்களையும் தெரிந்திருத்தல் வேண்டும். ஏதாவது வன்பொருள் அல்லது மென்பொருள் சம்மந்தமான பிரச்சினைகள் ஏற்படுமிடத்து தொழில்நுட்ப சேவை வழங்குநர்களை அணுகி அவை சம்மந்தமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



[1] Details at: https://web.eecs.umich.edu/~cscott/rsi.html

# பொறுப்பு மிக்க வீதிப் பாவனையும் டிஜிட்டல் பாவனையும்: ஒரு ஒப்பீட்டு நோக்கு

பல வீதிகள் ஒன்று சேர்ந்து அதைப் பயன்படுத்தும் மக்களை பௌதீக ரீதியில் ஒன்றிணைப்பது போல, இணைய தளங்களும் மக்களை இணைய வெளிகளில் ஒன்றிணைக்கிறது. பாதைகளானது ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான மக்களை பாதசாரியாக, பொதுப் போக்குவரத்து பயணிகளாக அல்லது ஒரு வாகனத்தை செலுத்தும் பயணியாகவோ இணைக்கிறது. இவற்றில் அநேகமான மக்கள் எத்தகைய இடைஞ்சலும் இன்றி தங்களது பயணங்களை வெற்றிகரமாக முடித்துக் கொள்கின்றனர், இருந்த போதும் இலங்கையில் இடம்பெறும் வீதி விபத்தக்களின் எண்ணிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது (2018 ஆம் ஆண்டு மட்டும் மொத்தமாக 3,164 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர், மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்தும் இன்னும் அநேகமானோர் அங்கவீனத்துக்கும் உள்ளாகியுள்ளனர்)

வீதி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான பிரதான காரணங்களாக சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனங்கள், வீதிக்கட்டமைப்புக்கள் சரியான நிலையில் காணப்படாமை மற்றும் அடிக்கடி வானிலையில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வீதிப் பாதுகாப்பு சம்மந்தமான நெறிமுறைகளும் நடைமுறைகளும் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறாமல் குறைப்பதில் பாரிய பங்களிப்பு செலுத்துகிறது (ஆனாலும் இவற்றை முழுமையாக இல்லாமல் செய்ய முடியாது). வீதிப் பாதுகாப்பு சட்டங்களும் தண்டனைகளால் மாத்திரம் இவற்றை நிறுத்த முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்: வீதிகள் நன்றாக செப்பனிடப்பட்டிருக்க வேண்டும், இந்நடைமுறைகள் பற்றிய சரியான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் அதே போன்று பொறுப்புமிக்க பாதசாரிகளாக நாம் மாற வேண்டும், இவ்வாறு இருக்குமிடத்து மாத்திரமே விபத்துக்களை நாம் குறைத்துக் கொள்ளலாம்.

விபத்தொன்று ஏற்படக்கூடிய வீதியயொன்றுக்குள் நுழையாமல் நாம் இருப்பதாக நினைத்துக் கொள்வோமா? இங்கு நாம் செய்தது அவதானமும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் குறைத்துக் கொண்டமை ஆகும். பாவிக்காமையால் ஏற்பட்ட நன்மை அதனால் ஏற்படவிருந்து ஆபத்துக்களை விட மேலானவை ஆகும்.

வீதி விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது எனும் காரணத்தால் வீதிகள் அனைத்தையும் அரசாங்கம் மூட உத்தேசிப்பதாக கற்பனை பண்ணிக் கொள்வோம். இவ்வாறு மேற்கொள்வது சில மணித்தியாலங்களுக்காவது ஒரு சரியான தீர்வாக அமையாது, இவற்றுக்கு பொறுப்பான அதிகாரிகள் தேவையான நேரத்தில் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இதற்கு சிறந்த தீர்வாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இணையதள சாதனங்களுக்கும் அதே விடயம் பொருந்தும். ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படலாம், ஆனால் அவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டுமாயின் சரியான நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை ஏற்படுத்தி விழிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் (உதாரணமாக மிக வலிமையான கடவுச் சொற்களை வழங்குதல் மற்றும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல கணக்குகளுக்கு இரு முனைப் பாதுகாப்புக்களை வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்)

அத்தோடு, ஆம் சில வேளைகளில் குற்றமிழைத்தவர்களும் எமது பாதைகளைப் பயன்படுத்தலாம். இதைப் போன்றே இணைய தளங்களும் சமூக விரோத மற்றும் இணையக் குற்றங்களை இழைப்பவர்களால் பாவிக்கப்படலாம். இதற்கான சரியான தீர்வு இணையதளத்தை பாவிக்காமல் விடுவதல்ல மாறாக பாவிக்கும் வேளையில் மிகவும் பாதுகாப்பாக இருந்து அவ்வாறான அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படுமிடத்து உரியவர்களிடம் முறையிட்டு அநுபவமிக்கவர்களிடம் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதே சிறந்தது ஆகும்.

## தவறான விடயங்களை எவ்வாறு அறிந்து கொள்வது

"பொய்யான செய்திகள்" என்பது மிகவும் பிரபல்யமான வசனமொன்று ஆகும். ஆனாலும் இவற்றை ஒருவரால் சரியாக புரிந்து கொள்வதென்பது மிகவும் கடினமானதொன்றாகும், காரணம் தவறான விடயங்கள் என்பது பல வடிவங்களிலும் பல முறைகளிலும் இடம்பெறலாம்.

- உருக்குலைந்த தகவல்கள (disinformation) (வேண்டுமென்றே தவறான விடயங்களை பரப்புதல்)
- பிழையான தகவல்கள (misinformation) (தெரியாமல் தவறான விடயங்களை பரப்புதல்) மற்றும்
- தவறான தகவல்கள் (mal-information) (சமூகத்துக்கு தீங்கு ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்றே தவறான விடயங்களை பரப்புதல்)

பிழையான மற்றும் திரிவுபடுத்தப்பட்ட படங்கள் இந்த நூற்றாண்டில் எங்கும் இலாபகமாக கிடைக்கக்கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் இந்த 21 ஆம் நூற்றாண்டின் இணையதளங்களின் வருகையினாலும் அதீத பாவனையாலும் பிழையான மற்றும் தவறான கருத்துப் பரிமாறல்களுக்கு ஒரு போதுமில்லாத அளவிற்கு கிராக்கி அதிகமாகக் காணப்படுகிறது. சமூக ஊடகங்களும் இணையதளங்களும் இவற்றை இன்னும் இலகுபடுத்துபவையாக உள்ளன. இவற்றில் சில உண்மையில் கடும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவைகளாக அமையலாம். பொதுச் சுகாதாரத்தை சீரழிக்கக் கூடியவைகளாகவும், சமூக விரோத - இன ரீதியான முறுகல்களை ஏற்படுத்தக்கூடிய, வாக்காளர்களை வாக்களிக்கும் வேளையில் குழப்பக்கூடிய வகையில் மற்றும் சமூக நல்வாழ்வுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவைகளாகவும் அமையலாம்.
இதில் முக்கியமான விடயமொன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்: தவறான பிழையான செய்திகள் பிரதான ஊடகங்கள் வாயிலாகவும் பரப்பப்பட்டிருக்கிறது. இலங்கையில் காணப்படும் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் இவ்வாறான தவறான செய்திகளை வேண்டுமென்றே அரசியல் இலாபமிக்க மற்றும் ஏனைய சித்தாந்தங்களை பரப்புவதில் நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.
எமக்குள்ள சவால் யாதெனில் இந்த தவறான கருத்தாடல்கள் இடம்பெறும் பிரதான மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பொது மக்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதாகும் (வதந்திகள் பரப்புவதனூடாகவும்)

[2] https://www.pewinternet.org/2012/02/29/millennials-will-benefit-and-suffer-due-to-their-hyperconnected-lives/

பிரித்தானியாவிலுள்ள பிரபல பத்திரிகையான The Telegraph பின்வரும் 10 நடைமுறைகளை பொய்யான செய்திகளை அறிந்து கொள்வதற்காக பயன்படுத்தலாம் எனக் குறிப்பிடுகிறது.

- சரியான கருத்தொன்றை தெரிவிக்காத செய்திகள் பற்றி அவதானமாக இருங்கள்: நடைமுறைச் சாத்தியமற்ற செய்தியாக இருப்பின் அது வதந்தி என்று அறிந்து கொள்ளலாம்.

- செய்தி பிரசுரிக்கப்பட்ட முகவரியை நன்றாக பரிசீலித்துக் கொள்ளுங்கள்: செய்தி பிரசுரிக்கப்பட்ட முகவரியைக் கொண்டு அந்த செய்தியின் தன்மை பற்றி எம்மால் புரிந்து கொள்ளலாம். உங்களுக்கு முன்பு தெரிந்தராத பரீட்சயமல்லாத இணைதளப் பகுதிகள் பற்றி மிகவும் அவதானமாக இருங்கள். எங்களுக்கு பரீட்சயமல்லாத இணையதளங்கள் செய்தி சேவைப் பகுதிகள் போன்று காணப்பட்டாலும் அவை பொய்யான நம்பத்தகாத செய்திகளை வழங்குபவைகளாக இருக்கலாம்.

- போலியான இணையதள முகவரிகள் பற்றி அவதானமாக இருங்கள்: சில இணையதள முகவரிகள் உண்மையான domain களைப் போன்று காணப்பட்டாலும் அவை அநேகமாக பிழையான முறையில் இயக்கப்படுபவை ஆகும்.

- செய்திகளின் தலைப்பிற்கும் விடயத்துக்கும் சம்பந்தமுள்ளதா என சரிபார்த்துக் கொள்ளுங்கள்: சரியான முறையில் தலைப்பிற்கும் செய்திக்கும் தொடர்புகள் காணப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அநேகமான போலியான செய்திகளின் செய்தித் தலைப்புக்கள் வாசகர்களைக் கவர்வதற்காக முகப்பெழுத்துக்களில் (Capital Letters) அமையப் பெற்றிருக்கும்.

- திகதிகளை நன்றாக சரிபார்த்துக் கொள்ளுங்கள்: சந்தேகத்துக்கிடமான திகதியாக இருந்தால் அவற்றை சரிபார்த்துக் கொள்ளுங்கள். போலியான செய்திகள் எப்பொழும் சம்மந்தமில்லாத திகதியிடப்பட்டவைகளாக காணப்படும்- செய்தி திகதிக்கும் சம்பவத்துக்கும் எத்தகைய தொடர்புகளும் காணப்படாத நிலையே காணப்படும். உதாரணமாக 2016 ஆம் Brussels இல் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு வழங்கப்பட்ட புகைப்படங்கள் உண்மையில் 2011 ஆம் ஆண்டு Moscow Domodedovo விமான நிலைய தாக்குதலின் போது எடுக்கப்பட்டவை ஆகும்.

- வழமைக்கு மாறான எழுத்துப் பிழைகள் அல்லது வேறு ஏதும் பிழைகள் உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்: போலியான செய்திகளை அறிந்து கொள்ளும் மற்றுமொரு விடயம் யாதெனில் அவை எழுத்துப் பிழைகளுடன் கூடிய, தரத்தில் குறைவானதாகக் காணப்படுவது ஆகும். எழுத்துப் பிழைகளுடன் முகப்பெழுத்துக்களை அதிகளவாகக் கொண்டு காணப்படும். உண்மையான ஊடகங்கள் இவ்வாறான எழுத்துப் பிழைகளையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்காக பதிப்பாசிரியர்களைக் கொண்டு காணப்படும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- கோபமூட்டக் கூடிய மூர்க்கத்தனமான செய்தி தலையங்கங்களிலிருந்து அவதானமாக இருங்கள்: போலியான செய்திகளின் மற்றுமொரு அடையாளம் யாதெனில் அவை கோபமூட்டக்கூடிய வகையில் தலைப்பிடப்பட்டிருப்பது ஆகும். நீங்கள் எந்தப் பக்கத்தை சார்ந்தவர் என்பதல்ல அவர்களது நோக்கம், மாறாக எரியும் நெருப்பில் பெற்றோலை ஊற்றி தப்பபிப்பிராயங்களையும் சமூகத்தில் பிழவுகளை ஏற்படுத்துவதுமே இவ்வாறான விடயங்களில் ஈடுபடுபவர்களின் நோக்கம் ஆகும்.

- பிரபலங்களின் கணக்குகள் போன்ற போலிக்கணக்குகளிலிருந்து வரும் ஏமாற்று விடயங்கள் பற்றி அவதானிக்கவும்: சில வேளைகளில் போலியான பிரபலங்கள் ஏமாற்று செய்திகளை வெளியிடலாம். இவை உண்மையான கணக்குகள் போன்று பிரபலங்களின் பெயர்களில் போலியாக உருவாக்கப்பட்ட கணக்குகள் ஆகும்.

- படங்களை கூகுள் படத்தேடல் (Google Image Search) மூலம் சரி பார்த்துக் கொள்ளுங்கள்: போலியான செய்திகள் எப்போதும் போலியான, புனைக்கப்பட்ட படங்களைக் கொண்டே காணப்படும். கூகுளின் படத்தேடல் மூலம் இத்தகையவை உண்மையானவையா அல்லது வேறு எங்கிருந்தாவது பெற்றுக் கொள்ளப்பட்டவையா என்பதை உங்களால் அறிந்து கொள்ளலாம்.

- உங்களுக்கு சந்தேகங்கள் ஏதுமிருப்பின் நம்பத்தகுந்த பகுதிகளில் அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: போலியான செய்திகள் அநேகமாக ஒரு இணையப் பகுதியில் மாத்திரமே காணப்படும், ஆகவே அதே செய்தியை ஏனைய பகுதிகளிலும் ஒப்பீட்டு ரீதியில் பார்க்குமிடத்து அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். “சந்தேகங்களேதும் இருப்பின் மீண்டும் மீண்டும் இரு முறை சரிபார்த்துக் கொள்ளுங்கள், குறிப்பாக சுகாதாரம், வாழ்வு பற்றிய விடயங்களாக இருந்தால் கட்டாயமாக இவற்றை சரிபார்த்துக் கெள்ள வேண்டும்”.





[3] https://www.telegraph.co.uk/technology/information-age/how-to-spot-fake-news/

## டிஜிட்டல் அறிவுக்கான ஒரு நோக்கு

நாம் முன்னர் இந்தப் பாடத்திட்டங்களில் குறிப்பிட்டதைப் போன்றே டிஜிட்டல் சாதனங்களை இயக்குவதற்காக திறமைகளை மட்டும் கொண்டிருப்பது போதுமானதாக அமையாது. டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் மற்றும் இணையங்களின் முழுமையான அநுகூலங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பாவனையாளர்களிடத்தே சரியான மனநிலையும், நல்ல நோக்கமும் காணப்பட வேண்டும். அவற்றைக் கவனத்தில் கொள்வது மாத்திரமல்லாமல் மற்றவர்களது கருத்தாடல்களுக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்துவதற்கும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இணையதள பாவனை பற்றி மக்கள் மத்தியில் பலவகையான தப்பபிப்பிராயங்கள் காணப்படுகின்றன – உதாரணமாக, சமூக ஊடகங்கள் மற்றும் ஆபத்துமிக்க பாதுகாப்பற்ற பகுதிகளை பார்வையிடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தனிநபர்களதும் சமூகத்தினதும் நன்மைக்காக எந்தவொரு தொழில்நுட்பமும் முழுமையாகப் பயன்படுத்தப்படலாம். அதே போன்று அதே தொழில்நுட்பம் பிழையான முறையில் வழிநடாத்தப்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு, மற்றவர்களுக்கு ஆபத்து விளைவிக்கவும் பிரச்சினைகளை உண்டு பண்ணவும் இவை பயன்படுத்தப்படலாம். சிலர் இவற்றைப் பிழையாக பயன்படுத்துகின்றனர் என்பதற்காக நாம் இவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்க முடியாது. மாறாக அவற்றுக்காக சமூகத்துக்கு தேவையான போதுமான பாதுகாப்பு பொறிமுறைகளை வகுக்க வேண்டும். பாவனையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை பிழையான முறைகளில் ஊடுருவுபவர்கள் பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும்.



## சம்பவக் கற்கைகள

### சம்பவக் கற்கை 01: இளைஞர்கள் மத்தியில் டிஜிட்டல் அறிவினை மேம்படுத்தல்

Sarvodaya-Fusion என்பது அபிவிருத்திக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் எனும் நோக்கில் "E- Empowerment of Rural Communities" எனும் இலக்கில் தனது நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்நிறுவனமானது சர்வோதய நிறுவனத்தின் இணை நிறுவனம் என்பதோடு சர்வோதயமானது இலங்கையில் 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மிகப் பெரும் இலாப நோக்கற்ற தொண்டு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.
கடந்த சில வருடங்களில் இத்திட்டத்தின் மூலம் பல வகையான நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு டிஜிட்டல் அறிவு, டிஜிட்டல் விடயங்களுக்கான நுழைவு மற்றும் டிஜிட்டல் அநுகூலங்கள் பற்றிய பல விடயங்கள் சமூகத்துக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டமான "IT Yahamaga (அல்லது தகவல் தொழில்நுட்பத்தின் சரியான பாவனை) இலங்கையிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் டிஜிட்டல் அறிவு சம்பந்தமான விடயங்களை பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் எடுத்துச் செல்கிறது. மேலும் இந்நிகழ்ச்சித்திட்டமானது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பாவனையை பாதுகாப்பான முறையில் பாவித்தல், டிஜிட்டல் உலகில் அவை தமக்கும் மற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாவித்தல் மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்தல் போன்றவற்றை ஊக்குவிக்கிறது.

IT Yahamaga நிகழ்ச்சித் திட்டமானது பாதுகாப்பான இணையதள பாவனை, ஆபத்துமிக்க இணையதளங்கள் மற்றும் பாவனைகளிலிருந்து எவ்வாறு எம்மையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்வது மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ளல் போன்ற தலைப்புக்களில் பல விடயங்களை உள்ளடக்கிய பயிற்சித் தொகுப்பொன்றினையும் உருவாக்கியுள்ளது. மேலும் இதில் மற்றவர்களைப் புரிந்து கொள்ளலும் அவர்களது உரிமைகளுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்கி அனைவருக்கும் பொதுவான பாதுகாப்பான சூழலொன்றை உருவாக்குதல் எனும் விடயத்தையும் உள்ளடக்கி இருக்கிறது.

கடந்த சில மாதங்களில், Fusion இன் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெறுப்பூட்டும் பிழையான தகவல்களை தடுக்கும் வகையிலான சமூக ஊடக நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அவர்களது முழுமையான செய்தி என்னவென்றால்: பகிர்வதற்கு முன்பு நீங்கள் சிந்தியுங்கள் என்பதாகும்.

Read more: https://fusion.lk/
https://www.facebook.com/sarvodaya.fusion/


DO NOT
EXCHANGE
YOUR PERSONAL
INFORMATION
WITH STRANGERS
ON SOCIAL MEDIA
fusion
Sarvodaya CT4D Movement


PAY ATTENTION & CAREFULLY
SELECT YOUR FRIENDS
ON SOCIAL MEDIA
fusion
Sarvodaya CT4D Movement

## சம்பவக் கற்கை 02: அடிமட்டங்களில் டிஜிட்டல் அறிவைக் கட்டியெழுப்புதல

மகாவிலாச்சிய எனப்படுவது அநுராதபுர மாவட்டத்தில் வில்பத்து தேசிய பூங்காவுக்கு அண்மையில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கியதொரு கிராமம் ஆகும். எவ்வாறு இருந்தாலும் இக்கிராமத்திலுள்ள சிறுவர்கள் இணையதளங்களில் அவர்களது சொந்த விடயங்களை உருவாக்குமளவிற்கு 2000 ஆம் ஆண்டுடிலிருந்தே பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர். இது அநேகமான பாடசாலைகளில் இவை அறிமுகப்படுத்துவதற்கு முதலே என்றுதான் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

இவை அனைத்தும் சாத்தியமாவதற்குக் காரணம் Horizon Lanka Foundation எனும் அமைப்பாகும். இவ்வமைப்பானது அடிமட்ட பிரதேசங்களில் தகவல் தொழில்நுட்பத்தை கட்டியெழுப்புவதில் பாரிய பங்களிப்பு செலுத்தி வருகிறது. 1998 ஆம் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது இலங்கையில் ஆயிரக்கணக்கான கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவு என்பவற்றை அதிகரிப்பதற்காக புதுமையான பல விடயங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது.

Horizon பாடசாலை நேரத்துக்கு பின்னரான வேளைகளில் மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு விருத்தி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு மேம்படுத்தலுக்காக பல கிராமப் புற பாடசாலைகளையும் அதன் சுற்றுப்புற சூழலையும் மையப்படுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது. அதன் ஸ்தாபகரான Nanda Wanninayaka ஒரு முன்னாள் ஆங்கில ஆசிரியர் என்பதோடு அவர் தனது தொழில் ஓய்விற்குப் பின்னரான காலப்பகுதியில் Horizon உடன் இணைந்து இந் நன்னோக்கத்திற்காக ஈடுபடுத்தி வருகிறார். இந்நிறுவனத்தின் வேலைத்திட்டங்களுக்காக பல உள்ளூர் மற்றும் வெளியூர் தனவந்தர்களிடமிருந்து உதவிகளையும் சேவைகளையும் பெற்று கிராமப்புற செயற்றிட்டங்களில் பல புதுமையான டிஜிட்டல் அறிவுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படத்தி வருகிறார்.

“இணையதளங்கள் பற்றிய பல தவறான விடயங்கள் ஊடகங்களிலும் ஏனைய சமூகத்தளங்களிலும் காணப்படுவதனால் பல ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து விலகி இருக்கின்றனர். சில குடும்பங்கள் அவர்களது பிள்ளைகள் இவற்றை பாவிப்பதிதலிருந்து தடுத்து வருகின்றனர். இந்த நிலைமையானது நாளைய தகவல் தொடர்பாடல் சமூகத்துக்கு அவர்கள் நுழைவதை தடுப்பதாக அமைகிறது என நான் நோக்குகிறேன் என்று இதன் ஸ்தாபகரான Nanda Wanninayaka குறிப்பிடுகிறார்”.

தேவையற்ற விடயங்களை விட்டுவிட்டு ஆரோக்கியமான நன்மை பயக்கும் டிஜிட்டல் சாதனங்களையும் இணையத்தளங்களையும் பாவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.

அதிகமான முன்னாள் Horizon மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டு தமது பட்டப்படிப்பினை தகவல் தொழில்நுட்பத்தில் தொடர்ந்து கொண்டு செல்கின்றனர். இன்னும் சிலர் தமது சொந்த வியாபாரத்தை கொண்டு நடாத்தும் அதேவேளை இன்னும் சிலர் வியாாபார நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளில் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

Horizon இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதன் கொள்கைளில் ஒன்றான "கிராமப்புறங்களையும் நகர்ப்புறத்தக்கு ஒப்பான தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் கண்ட ஒரு பிரதேசமாக உருவாக்கும் அதே வேளை அக்கலாசாரத்துக்குரிய விழுமியங்களையும் அவ்வாறே பாதுகாத்தல். ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினூடாக எமது மிகப் பெரும் வேலைதிட்டங்களை கொண்டு நடாத்துதல். அவற்றை அடைவதற்காக இலங்கையில் காணப்படும் இடைவெளிளை நிரப்பி அவற்றுக்கு வாய்ப்பினை வழங்குதல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. Horizon இதன் இன்னும் சில பாடசாலைகளையும் இலங்கையில் ஏனைய பாகங்களிலும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




Read more: http://www.horizonlanka.org/en/about-us/our-story/
https://www.facebook.com/horizonlankafoundation/

## கலந்துரையாடல் விடயங்கள்

வ்விடயங்கள் பற்றிய மேலதிக விடயங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு கீழ்வரும் கலந்துரையாடல் விடயங்களை அவதானித்துக் கொள்ளுங்கள்.

- DigiComp 2.0 இனது வரைவிலக்கணத்துக்கு அமைவாக உங்களிடம் காணப்படும் டிஜிட்டல் தேரச்சிகள் யாவை என்பதை சுயமதிப்பீடு செய்து கொள்ள முடியுமா?

- டிஜிட்டல் அடையாளம் என்பதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்வது யாது? உங்களது டிஜிட்டல் அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நீங்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பு முறைமைகள் யாவை? நீங்கள் சமூக வலைத்தளங்களில் அல்லது வேறெங்காவது ஒன்லைனில் இருக்கும் வேளையில் யாராவது ஒருவர் உங்களை முன்னிறுத்தியுள்ளனரா? அவ்வாறாயின் நீங்கள் எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்?

- எந்த வகையான தகவல் வளங்களை நீங்கள் நம்புகிறீர்கள்? ஏன்?. நீங்கள் ஏதாவதொரு விடயத்தின் மேல் சந்தேகம் கொண்டால் (அல்லது மிக உண்மை என்று எண்ணினால் கூட) எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்? எவ்வாறு அந்த தகவல்களை உறுதிப்படுத்தினீர்கள்?

- நீங்கள் டிஜிட்டல் உட்பொருள் (content) ஒன்றினை உருவாக்குகையில் அதற்கு பயன்படுத்தப்படும் புகைப்படங்களை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்? நீங்கள் சாதாரணமாக இணையதளப் பகுதியிலிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்கிறீர்களா? அல்லது பதிப்புரிமை பற்றி நிங்கள் சிந்தித்துள்ளீர்களா? (இவற்றை நாங்கள் அறிவுச் சொத்து என்றும் கூறுகிறோம்) அவ்வாறான நிலையில் அறிவுச் சொத்துக்கள் பற்றி நீங்கள் கவனத்தில் கொண்டிருக்கிறீர்களா?

- மாணவர்கள் வகுப்பறைக்குள் கையடக்க தொலைபேசியுடன் நுழைவதற்கு எல்லா அரச பாடசாலைகளிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? இளையவர்களை கையடக்க தொலைபேசியுடன் அனுமதிப்பு பற்றி நன்மை, தீமைகள் பற்றி கலந்துரையாடுக? (குறிப்பாக 18 வயதுக்கு குறைந்த)

- அரசாங்கம் அனைத்து உயர்தர மாணவர்களுக்கும் அவர்களது ஆசிரியர்களுக்கும் வயடிடநவ ஒன்றினை வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது. சிலர் இந்த முடிவினை வரவேற்கும் அதேவேளை இன்னும் சிலர் இதனை எதிர்க்கின்றனர். இந்த விடயத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றி கலந்துரையாடுங்கள், அத்தோடு இவற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றியும் சற்று அலசி ஆராயுங்கள்.

## கற்றல் பலன்கள்

இந்தப்பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்.

- கணனி அறிவு மற்றும் டிஜிட்டல் அறிவு ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை ஆனால் இவையிரண்டும் வேறு இரண்டு விடயங்கள் ஆகும்.
- டிஜிட்டல் அறிவு எனப்படுவது டிஜிட்டல் சாதனங்களை பாவிப்பது மற்றும் இணையத்தளப் பகுதிகளை சரியாக கையாள்வதற்கான திறன் விருத்தி பற்றியது ஆகும், இருந்தாலும் இது இன்னும் சற்று விரிவானது. இந்த சேவைகளை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது, மதிப்பளிப்பது மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கேற்ப ஒழுகுவது பற்றியதாகும்.
- இலங்கையில் டிஜிட்டல் அறிவானது இன்னும் குறைவான மட்டத்திலேயே காணப்படுகிறது. இந்த அறிவினைக் கொண்ட அநேகமானவர்கள் இள வயதுக் குழுவினர்களாகவே காணப்படுகின்றனர்.
- 21ஆம் நூற்றாண்டுக்கான மிக முக்கிய விடயமாக டிஜிட்டல் அறிவு காணப்படப் போகிறது, ஏனெனில் நாம் தகவல்கள், டிஜிட்டல் சேவைகள் மற்றும் இதன் சாதக பாதகங்களுடன் மிகவும் ஒன்றித்து எமது வாழ்வைக் கொண்டு செலுத்துவதனால் ஆகும்.
- டிஜிட்டல் அறிவு எனப்படுவது பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத்துடன் மட்டுப்படுத்தக்கூடிய ஒன்றல்ல, நபரொருவர் தனக்கு விருப்பமான மட்டத்தில் தனது அறிவினை வளர்த்துக் கொள்ளலாம். உண்மை யாதெனில் தொழில்நுட்பமானது நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கிறது, எனவே நாமும் எமது மனதைச் சற்றுப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

## மேலதிக வாசிப்புகளுக்கு

DigComp 2.0: பிரஜைகளுக்கான ஐரோப்பிய டிஜிட்டல் தேர்ச்சிக் கட்டமைப்பு (ஐரோப்பிய ஒன்றியம், 2016)
https://ec.europa.eu/jrc/en/publication/eur-scientific-and-technical-research-reports/digcomp-20-digital-competence-framework-citizens-update-phase-1-conceptual-reference-model

A Global Reference Framework on Digital Literacy Skills for Indicator 4.4.2 (UNESCO, 2018)
http://uis.unesco.org/sites/default/files/documents/ip51-global-framework-reference-digital-literacy-skills-2018-en.pdf

டிஜிட்டல் அறிவின் அடிப்படைகள் ( டிஜிட்டல் மற்றும் ஊடக அறிவுத் திறனுக்கான கனடா நிலையம்)
http://mediasmarts.ca/digital-media-literacy/general-information/digital-media-literacy-fundamentals/digital-literacy-fundamentals

போலியான செய்திகளை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது. British Council இன் வழிகாட்டல் நூல்
https://learnenglish.britishcouncil.org/intermediate-b1-reading/how-to-spot-fake-news

போலியான செய்திகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது? BBC இன் வழிகாட்டி
https://www.bbc.com/news/av/technology-46149888/what-is-fake-news-and-how-can-you-identify-it



MODULE 7

# டிஜிட்டல் செயல் முனைவு

# டிஜிட்டல் செயல் முனைவு

செயல் முனைவு (activism) எனப்படுவது ஒருவரோ அல்லது ஒரு குழுவோ பொது நன்னோக்கமொன்றுக்காக அமைதியான முறையில் செயற்படுவது ஆகும்.
இங்கு குறிப்பிடப்படும் பிரச்சினைகள் எனப்படுவது அரசியல், சமூக, சூழல் அல்லது பொதுச் சுகாதாரம் சார்ந்தவையாகவோ அல்லது பாதுகாப்பு சார்ந்தவையாகவோ காணப்படலாம். உண்மையில் இன்றைய கால செயற்பாட்டாளர்களுக்கு தற்போது காணப்படும் விடயங்களில் போதிய திருப்தி காணப்படாத நிலையொன்றும் உள்ளது, எனவேதான் அவர்கள் மாற்றங்களை வேண்டி நிற்கின்றனர். செயற்பாட்டாளர்கள் தாங்கள் வேண்டி நிற்கும் மாற்றங்களுக்காக சமூக மட்டத்திலும், உள்ளூராட்சி நிறுவனங்களுடனும், தேசிய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தையும் வேண்டி நிற்கின்றனர்.
டிஜிட்டல் செயல் முனைவு அல்லது இணைய செயல் முனைவு எனப்படுவது இணையத்தளம் மற்றும் ஏனைய டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி சமூக நன்னோக்கத்துக்காக அச்சமுகத்தை விழிப்புணர்வூட்டல், ஒன்று திரட்டல் மற்றும் செயற்பாடுகளில் முன்னிறுத்தல் போன்ற விடயங்களில் செயற்பாடு காட்டுதலைக் குறிக்கும். இதன் ஏனைய அனைத்து செயற்பாட்டு முனைவுடனும் சேர்ந்து அமைதியாக நெறிமுறை தவறாமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.
இந்த பாடப்பரப்பில் இலங்கையிலும் ஏனைய சில இடங்களிலும் பயன்பாட்டிலுள்ள பல்வகையான டிஜிட்டல் செயல் முனைவுகள் பற்றிக் கலந்துரையாடப்படும். இளைஞர் குழுக்கள் உட்பட சில சிவில் சமூக குழுக்கள் மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டாளர்கள் போன்றோர்களால் பயன்படுத்தப்படும் பொது மூலோபாயங்களை அடையாளப்படுத்துவதே இதில் எமது நோக்கம் ஆகும்.
ஒரே வகையான எண்ணப்பாட்டைக் கொண்ட குழுக்கள் இணையத்தளத்தினூடாக எவ்வாறு புதிய செயல் முனைவுகளை உருவாகக்குகின்றன என்பதையும் ஆராய்கிறது.
அதேநேரம், ஒரு வெற்றிகரமாக செயல்முனைவு எனப்படுவது ஒன்லைனில் மாத்திரம் இடம்பெறும் ஒன்றல்ல எனபதையும் நாம் உங்களுக்கு விளக்குகிறோம். இதற்கு ஆரோக்கியமான இணைய மற்றும் இணையமற்ற முறைமைகள் தேவைப்படுகிறது.

# முக்கிய சொற்கள்

பரிந்து பேசுதல் **(Advocacy)**: என்பது அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட தனிநபர் அல்லது குழுவொன்றின் செயற்பாடு ஆகும். பொதுக் கொள்கைகள், சட்டம், நடைமுறைகள் அல்லது பாதீடு போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த உண்மை நிலையை விளக்குதல், விவாதங்களை மேற்கொள்ளல், ஊடகங்களைப் பயன்படுத்துதல் அல்லது அதற்கு ஒப்பான விடயங்களினூடாக அரசாங்க மற்றும் பொது ஊழியர்களிடத்தே வேண்டி நிற்பதையும் இத்தகைய செயற்பாடாகக் கொள்ளலாம்.

செயல் முனைவு **(Activism)**: சமூக மற்றும் அரசியல் மாற்றத்துக்காக கொள்கைகள் அல்லது நடைமுறைகளைக் குறிக்கும்.

அரசியல் நோக்குச் செயற்பாடு (ஊடஉைஉமவளைஅ): (ழேவ டிழடனநன ை வாந ீனுக) இணைய வழிமுறைகளான சமூக ஊடகங்கள் அல்லது மனுக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒரு அரசியல் கட்சியையோ அல்லது ஏதாவதொரு குறிக்கோளுக்காகவோ செயற்படல்.

அரசியல் செயற்பாட்டு ஆதரவு **(Slacktivism)**: பங்குபற்றுபவருக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவகையில் மென்மையான முறையில் ஏதாவதொரு விடயத்துக்காகவோ அல்லது ஒரு பிரச்சினைக்காகவோ செயற்படல். இச்சொல்லானது ளடயஉமநச மற்றும் **activism** ஆகிய இரு சொற்களிலிருந்து உருவானதாகும். இதை சிலர் மிகவும் மெருதுவான எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாத விடயம் என விமர்சனமும் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Source: http://www.ictliteracy.info/

## செயல் முனைவு: இதுவரையுள்ள கதை

செயல்முனைவு எனப்படுவது கிட்டத்தட்ட நாகரீகத்தைப் போலவே பழமையான ஒன்றாகும். மாற்றத்துக்கான தேவையும், ஒன்றிணைந்து செயல்படுவதற்கான முற்போக்கும் ஆண், பெண் இருபாலாரையும் நூற்றாண்டுகளாக ஒன்றிணைத்துள்ளது. இது கிளர்ச்சியை விடவும் மேலானது. இருப்பினும் செயல்முனைவு என்பதன் உலக வரலாற்றை நோக்குமிடத்து அநேகமான செயற்பாட்டாளர்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றை மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்தும் கிரகித்துக்கொண்டும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இதற்குரிய பரிந்துரைகளை தொடர்பாடல்கள், அமைதியான ஊர்வலங்கள், நடைபவனிகள் மற்றும் சில வகையான எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற அமைதியான முறையில் நடைமுறைப்படுத்தியுமிருக்கின்றனர். அடிக்கடி இவ்வகையான செயற்பாட்டாளர்கள் மற்றவர்களுடன் கலந்துரையாடி தங்களையொத்த எண்ணமுடையவர்களுடனும் குழுக்களுடனும் ஒன்றிணைந்து அரசாங்கங்களுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுவர்.

மகாத்மா காந்தியினது வரலாறு (1869-1948) மிகவும் பெறுமதிமிக்க செயற்பாட்டு முனைவுக்கு வரலாற்று ரீதியான சிறந்த எடுத்துக் காட்டாகும். இங்கிலாந்தில் சட்டத்தரணியாக பயிற்றப்பட்ட காந்தி தென்னாபிரிக்காவில் கறுப்பு நிறத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சமூக விரோத செயற்பாடுகளுக்காக அமைதியான முறையில் சாத்வீக போராட்டங்களை ஆரம்பித்து மத மற்றும் பொருளாதார ரீதியான சமூக நீதிக்காகவும் பாடுபட்டார். இதன் பிற்பாடு 1914 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு திரும்பிய காந்தி இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிரான அமைப்பை தலைமை தாங்கி வழிநடாத்தினார்.

காந்தியின் செயற்பாட்டின் அடிப்படையாக அமைந்தவை வன்முறையற்ற விதத்தில் எதிர்ப்பினை வெளிக்காட்டல் (சத்தியாக்கிரகம்) மூலம் சமூக மற்றும் அரசியல் முன்னேற்றத்துக்காக ஒன்றுபடுதல் ஆகும். அவரின் பார்வையில் வன்முறையின்மை என்பது பௌதீக ரீதியான வன்முறைகள் மட்டுமல்ல. சுய ஆட்சி, திவிர ஜனநாயக செயற்பாடு போன்றவற்றின் மூலம் ஒவ்வொருவரும் ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளில் பங்குபற்ற வேண்டும், இதுவே சமூக இருப்புக்கு மிக முக்கியமானதொன்று எனக் கருதப்படுகிறது. தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக காந்தி ஒரு எழுத்தாளராக, ஒரு ஊடகவியலாளராக, ஒரு அமைதியான ஆர்ப்பாட்டக்காரராக மற்றும் ஒரு சிறந்த சொற்பொழிவாளராகவும் செயற்பட்டார். பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் சம்பாசனைகளில் ஈடுபடும்போது அவர் ஒரு போதும் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவில்லை.

சில வருடங்களின் பின், காந்தியை சந்தித்த மார்டின் லூதர் கிங் (1929-1968) அதே நடவடிக்கையை ஆபிரிக்க அமெரிக்க மக்களின் அரசியல் யாப்பு மற்றும் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த உரிமைகளை மீளப்பெறவும் பயன்படுத்தினார்.

இன்றைய கால செயற்பாட்டாளர்கள் மற்றும் உரிமைகளுக்காக போராடுபவர்களுக்கு காந்தியினதும் கிங்கினதும் அரசியல் மூலோபாயங்கள் ஒரு பெறுமதிமிக்க வழிகாட்டல்களை வழங்கலாம். மறைக்கப்பட்ட உண்மையையும் மறுக்கபட்ட நீதியையும் வெளிக்கொண்டுவர அமைதியான முறையில் போராடுவது ஒரு ஆரோக்கியமான விடயம் ஆகும் .

## மகாத்மா காந்தியிடமிருந்து கற்றுக் கொண்டவைகள்

மகாத்மா காந்தி ஐந்து வகையான வன்முறையற்ற வாழ்க்கை முறையில் வாழ்ந்தார்: அவையாவன மதிப்பளித்தல், புரிந்து கொள்ளல், ஏற்றுக்கொள்ளல், புகழ்தல் மற்றும் கருணை காட்டுதல் ஆகியவை ஆகும்.

“எம்மைப் போலவே காந்திக்கும் மனிதர்களிடம் காணப்படும் குறைபாடுகளும் காணப்பட்டன. ஆனாலும் இந்த ஐந்து விடயங்களையும் கடைப்பிடித்து தனது வாழ்வைக் கொண்டு சென்றார்” என அவரது பேரப்பிள்ளையான அருண் காந்தி 2015 ஆம் ஆண்டு தான் எழுதிய புத்தகமான “எனது பாட்டனாரான மகாத்மா காந்தியின் கோபத்தின் பரிசுகளும் ஏனைய கற்றுக் கொண்ட விடயங்களும்” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.




Read more at: https://www.beliefnet.com/inspiration/the-lessons-of-mahatma-gandhi.aspx

## செயல் முனைவும் தொடர் பாடலும்

தொடர்பாடல்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதானது செயல்முனைவுக்கு எப்பொழுதும் மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பிரதிபலனாக அதிகளவாக செயல்முனைச் சாதனங்கள் தற்போது பாவனையில் உள்ளன. சமூக மாற்றத்துக்கான கருத்தாடல்கள் மற்றும் பொது வெளிகளில் இடம்பெறும் பேச்சுக்களின் மூலமாகவே செயல் முனைவு உதயமாகிறது. இதன் விளைவாகவே சமூக மாற்றம் இடம்பெறுகிறது. பிரசுரங்கள், கையேடுகள் போன்றவற்றை அச்சிட்டுப் பிரசுரிக்கும் இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்களின் பின்னர் கருத்தாடல்களும் கொள்கைகளும் மக்களைச் சென்றடைவது மிக எளியதொரு விடயமாக மாறியுள்ளது.

பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் முதல் வானொலி, தொலைக்காட்சி வரையான வித்தியாசமான வெகுஜன ஊடகங்கள் உதயமானதால் செயற்பாட்டாளர்கள் தங்களது கருத்துக்கள் மக்களை சென்றடைவதற்கு இவற்றைப் பயன்படுத்த தொடங்கினர். எவ்வாறாயினும் வெகுஜன ஊடகங்கள் சில அரச நிறுவனங்களாக அல்லது அரச நிர்வாகத்தின் கீழ் (பத்திரிகை ஆசிரியர்களும்) காணப்படுவதானது செயற்பாட்டாளர்கள் இவற்றை அணுகுவதற்கு ஒரு சவாலாக காணப்படுகிறது. இங்கு பிரசுரிக்கப்படும் செய்திகள் எவ்வாறு, எப்படி அமையப் பெற வெண்டும் என்பதும் அவர்களாலேயே முடிவு செய்யப்படுகிறது.

செயற்பாட்டாளர்களின் கையேடுகளுக்கான மிக நாகரீகமான விடயமாக டிஜிட்டல் மற்றும் வெப்தள சாதனங்கள் காணப்படுகின்றன. எந்தவொரு பிரசுரிப்பாளருக்கும் எத்தகைய தடையுமின்றி தான் விரும்பிய விடயங்களை இணையதள உதவியுடன் பிரிசுரிப்பதற்கு ஏதுவாகவும் இது அமைகிறது. இந்த விடயமானது செயற்பாட்டாளர்களுக்கும் மாற்றத்துக்காக உழைப்பவர்களுக்கும் ஒரு வாய்ப்பாக தற்காலத்தில் அமைகிறது.

வெப்தளமென்பது இயற்கையாகவே அமையப் பெற்ற ஒரு சூழலாகும். மேலும் எல்லா செயற்பாட்டாளர்களும் அவற்றை புரிந்து கொள்ள வேண்டும். இதன் அர்த்தம் யாதெனில் பொது விவாதங்கள், விமர்சனங்கள் போன்ற இரு வழிக் கலந்துரையாடல்களிலும் நாம் ஈடுபட வேண்டும் என்பதாகும்.



[1] What Gandhi can teach today's protesters. The Conversation, 2 October 2017. http://theconversation.com/what-gandhi-can-teach-todays-protesters-83404

## இணையவழி செயல்முனைவு

டிஜிட்டல் மற்றும் இணைய வழி செயல்முனைவானது இணையத்தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் சமூக நடவடிக்கைகள், விடயங்களை பரப்புரை செய்தல் மற்றும் சமூகங்களை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களுக்காக செயல்முறைப்படுத்தப்படும் ஒன்றோடொன்று இணைந்த நிலையில் காணப்படும் இரு விடயங்களாகும். சில நேரங்களில் மக்களிடமிருந்து பொது நிதிகளைப் பெற்றுக்கொண்டு பொது விடயங்களில் செலவளிப்பதற்கான தூண்டுகோலாகவும் இது அமைகிறது (உதாரணமாக அனர்த்த நிவாரண வேலைத்திட்டங்கள் போன்றன)

இணையதளங்களின் ஆரம்ப காலகட்டமான 1990 களில், செயற்பாட்டாளர்கள் குறிப்பாக தகவல்களை மக்கள் மயப்படுத்துவதற்காக வித்தியாசமான நடைமுறைகளைப் கையாண்டிருந்தனர்: இணையதளமானது குறைந்த செலவில் முழு உலகையும் அடையும் வகையான வசதியினையும் வழங்கியது (அதன் பின்னர் Blog போன்றன வளரத் தொடங்கின).

2000 ஆண்டு காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் உருவானதன் பின்னர், டிஜிட்டல் செயல்முனைவானது மிகவும் குழப்பநிலையானதொன்றாக மாறியது. மக்களை வித்தியாசமான முறையில் அடையக்கூடிய வகைகளை இது ஏற்படுத்திக் கொடுத்தது- குறிப்பாக பெரும் நிகழ்ச்சித்திட்டங்கள், இணைய வழியிலான மனுக்கள், மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் மெய்நிகர் கலந்துரையாடல்கள் போன்றவற்றை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

சமூகத்தின் சில பாகங்களை அடைந்து கொள்வதற்காக பிரதான ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானவை என்றாலும் இணைய வழி முறைகளிலும் அதிகளவான செயல்முனைவுகள் இடம்பெறுகின்றன.

உலகளாவிய ரீதியில் இடம்பெறும் பிரசித்தி பெற்ற பிரச்சாரங்களான #BlackLivesMatter, #MeToo மற்றும் #ClimateStrike சமூக ஊடகங்களின் மூலமே பிரபல்யமடைந்தன. இருந்தாலும் இவை அனைத்துக்கும் சில பௌதீக ரீதியான நடவடிக்கைகளான வீதி ஊர்வலங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் போன்றன இன்னும் உறுதுணையாக அமைகின்றன.

இவ்வகையான நடவடிக்கைகள் அனைத்திலிருந்தும் நாம் கற்றுக்கொண்ட பாடம் யாதெனில் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் பிரபல்யம், வெற்றியடைய மிகப்பிரதான தூண்டுகோலாக அமைவது ஒன்லைன் மற்றும் ஒன்லைனற்ற இரு முறைகளையும் ஒன்றாக நடைமுறைப்படுத்துவதாகும். அமைதியான முறையில் இடம்பெறும் வீதி ஊர்வலங்கள், நடைபவனி மற்றும் பொது ஒன்று கூடல்கள் போன்றன சமூக ஊடகங்கள் மற்றும் பிரதான ஊடகங்கள் போன்றவற்றுக்கு தேவையான அளவுக்கு புகைப்படங்களை எடுத்து மக்கள் மத்தியில் அவை செய்தியாக பரப்பப்படுவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது.

எவ்வாறிருந்தாலும் சமூக ஊடகப்பாவனைகளுக்கும் சவால்கள் இருக்கத்தான் செய்கிறது - அவற்றை எப்படி மக்களை தொடர்ந்து கவர வைப்பது என்பதானது இதற்கான ஒரு சவால் ஆகும். ஒன்லைன் ஊடகங்கள் மக்களை வேகமாக கவரும் அதேவேளை அதே வேகத்தில் அவர்களது கவனத்தை சிதறடிக்கவும் செய்யலாம். ஒரே நேரத்தில் ஒரு விடயத்தை மட்டும் செய்தியாக தெரிவிப்பதென்பது மிகவும் சாத்தியமற்ற ஒரு விடயம் ஆகவே பல வகையான செய்திகளை முழு நேரத்துக்கும் ஏற்ப வழங்கப்படுகிறது - இவை சில நேரம் இவ்வகையான பல்தரப்பட்ட விடயங்கள் மக்களின் கவனத்தை வேறு வகையில் திசை திருப்பவும் செய்கிறது.

இறுதியாக ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், டிஜிட்டல் செயல்முனைவானது தொழில்நுட்ப பாவனையை விடவும் மேலான ஒன்றாகும். டிஜிட்டல் செயல்முனைவு என்பதன் பொருள் சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைக்கேற்ப தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பிரச்சாரம் ஒன்றுக்காக செயற்படுதல் ஆகும்.
டிஜிட்டல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு – வலையமைப்பு, குறியீடுகள், மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஆரம்ப நிலை என குறிப்பிடலாம். ஆனாலும் இவை நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளுக்கேற்ப மாறுபடக்கூடியவை, எனவே செயற்பாட்டாளர்கள் தாம் எந்தளவு, எவ்வகையான முறையில் தங்களுடைய நடவடிக்கைகளை முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும் - இதன் மூலமே அவர்களின் முழுமையான வெற்றியை அடைந்து கொள்ளலாம். எனவே கள நிலவரங்களை அறிந்து சரியான முறையில் பகுப்பாய்வு செய்து அதன்பால் செயற்படுவது இன்றிமையாததாகும்.



## இணையவழி செயல்முனைவு: அண்மைய உதாரணங்கள்

**#BlackLivesMatter** என்பது ஒரு சர்வதேச நிறுவனமாகும். ஆபிரிக்க – அமெரிக்க மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் அமெரிக்காவில் இடம்பெற்ற கறுப்பு நிற மக்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் இன ரீதியான ஒடுக்குதல்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்குகிறது. 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொலிஸாரின் கொடூரமான நடவடிக்கைகள் மற்றும் பாகுபாடு போன்றவற்றை இல்லாதொழிப்பதற்காக இந்த அமைப்பு தோற்றம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**#ClimateStrike** எனப்படுவது புவி வெப்பமாதலைத் தடுப்பதற்காக பாடசாலை மாணவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாகும். சுவீடன் நாட்டு பாடசாலை மாணவியான **Greta Thunberg** சுவீடன் பாராளுமன்றத்துக்கு வெளியில் 2018 ஆம் ஆண்டு எதிர்ப்பு நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தார். இந்த நடவடிக்கையானது உலகிலுள்ள அனைத்து இளைய சமூகத்தினரையும் கவர்ந்த ஒரு விடயமாக மாறியது.

**#MeToo** எனப்படுவது பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் சேட்டைகளை எதிரப்பதற்காக தோற்றம் பெற்ற உலக அமைப்பாகும். இதன் பின்னர் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் உலகம் பூராகவும் சதுரக் குறியீட்டுடன் பிரபல்யமடைந்தது.

(மேலதிக விபரம் சம்பவக் கற்கை 5 இல் வழங்கப்பட்டுள்ளது)

## இணையவழி செயல்முனைவின் மூலோபாயங்கள்


ஒரு வெற்றிகரமான இணையவழி செயல்முனைவின் மூலம் எதிர்பார்க்கப்படும் பரிந்துரைகளை அடைவதற்கு சில படிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் சில இங்கு உதாரணங்களாக வழங்கப்பட்டுள்ளன.

### HASHTAGS அல்லது சதுரக் குறியீடுகள்

ஒரு குறிப்பிடப்பட்ட விடயத்தை மற்றவர்களும் தொடர்ந்து பின்பற்றி பரப்புரை செய்வதற்காக பயன்படுத்தப்படும் அலகு அடையாள வகைகளில் இதுவும் ஒன்றாகும். Twitter, Instagram, Facebook, Reddit மற்றும் YouTube போன்றவற்றில் இவை மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு ஆரோக்கியமான சதுரக்குறியீட்டுக்கு அவை மிக எளிதாக, ஞாபகமூட்டக்கூடிய, வேறுபட்ட மற்றும் மற்றவர்களை கவரக்கூடிய வகையில் அமையப்பெற்றிருப்பது முக்கியம் ஆகும் (நீங்கள் ஏதாவது சதுரக்குறியீடொன்றை பயன்படுத்த முன்பு அவை ஏற்கனவே வேறு யாராவதால் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை சரிபார்த்து கொள்ளுங்கள்).

இலங்கை என்பதை தெரியப்படுத்துவதற்கான பல சதுரக்குறியீடுகள் ஏற்கனவே பாவனையில் உள்ளன, அவற்றுக்கு உதாரணமாக #lk, #lka, #sl மற்றும் #SriLanka போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதே போன்று கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களின் போது மக்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக #FloodSL, #FloodLK மற்றும் #SLFloods போன்ற சதுரக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட #PresPollSL ஆனது இன்னமும் பயன்பாட்டில் உள்ளது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் அவை பயன்படுத்தப்படலாம். அண்மையில் ஏற்படுத்தப்பட்ட 51 நாள் அரசியல் குழப்பநிலையின் போது (26 ஒக்டோபர் முதல் 16 டிசம்பர் வரை) #CoupLK எனும் குறியீடு பயன்படுத்தப்பட்டன (இதன் அர்த்தம் அதிகார மாற்ற முறை சட்ட ரீதியானதல்ல). அதேபோல #ConstitutionalCrisisLK மற்றும் #PoliticalCrisisLK போன்றனவையும் பயன்படுத்தப்பட்டன.




யாராவது ஒருவர் தனக்கு விரும்பிய சதுரக்குறியீட்டினை உருவாக்கிக் கொள்ளலாம், ஆனாலும் ஒரு சில மாத்திரமே பிரபல்யமடைகிறது. சதுரக்குறியீடுகள் சமூக வலைத்தளங்களில் மிகப்பிரபல்யம் அடைவது போல அவை மற்றைய டிஜிட்டல் சாதனங்களிலும் அதே விடயத்தை தொடர் கதையாக கொண்டு செல்வதற்கு ஏதுவாகவும் அமைகிறது.

## MEMES
அல்லது
அடையாளங்கள்

இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட Memes எனப்படுவது படங்கள், அசையும் உருவங்கள் அல்லது வீடியோக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நகைச்சுவையாக ஒருவரைப் போன்று அப்படியே செய்து காட்டல், சமுதாயத்தில் நடைபெறும் சீர்கேடொன்றை சீர்திருத்தும் நோக்கோடு எழுதுதல் மற்றும் நகைச்சுவையான விடயங்களை பிரதிபலித்தல் போன்றவற்றைக் குறிக்கும். இத்தகையவற்றை உருவாக்கியவர்கள் பற்றிய விடயங்கள் எப்பொழுதும் வெளிப்படுத்தப்படாமலே காணப்படும் அதேவேளை சில அடையாளங்கள் தொடர்ந்து இணையதளங்களில் உலா வந்துகொண்டே இருக்கும்.

Memes கள் கடினமானதாகவும் அழுக்கானதாகவும் இருக்கலாம், அல்லது அதி நவீன கலைப்படைப்புக்களான கிராபிக்ஸ் மூலம் உருவாக்கப்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஒரு விடயத்தை வழமையான முறையில் விளங்கப்படுத்துவதை விட இம்முறையில் விளங்கப்படுத்துவது மிகவும் சாதுரியமானதொன்றாகும்.

இப்படியான Memes கள் பல விடயங்களை எடுத்துக்காட்டுபவைகளாக அமையலாம். பால்நிலை சமத்துவம் முதல் லஞ்ச ஒழிப்பு வரை, நியாயமான தேர்தல் முதல் சூழல் மாற்றவியல் வரையான விடயங்கள் Memes இல் இன்றைய நாட்களில் மிகப் பிரபல்யமான விடயங்களாக மாறியுள்ளது. எது எவ்வாறாயினும் வெற்றிகரமான Memes ஒன்றுக்கு அதன் புதுமைத்தனமும் அது வழங்கப்படும் காலமும் மிகவும் செல்வாக்கு செலுத்துபவைகளாகக் காணப்படுகிறது.

இதற்கு சிறந்த உதாரணமாக இங்கு காட்டப்பட்டுள்ள உள்ளங்கை போன்ற வடிவத்தை “இனவாதத்துக்கு எதிராக நிற்போம்” எனும் பிரச்சாரமானது 2014 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக அளுத்கமையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத நடவடிக்கையினைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும். இதை உருவாக்கியவர்கள் யார் என்று இன்னும் தெரியாத ஒரு நிலை காணப்பட்டாலும், இனவாதத்தை எதிர்க்கும் நற்பிரஜைகள் இந்த விடயத்தை கருத்திலெடுத்து சமூக ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்கத்துக்கு இதனை ஒரு சிறந்த சாதனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.



**ஒன்லைன் மனுக்கள்**

அரசாங்கங்களினாலும் பொது நிறுவனங்களினாலும் பொதுமக்களின் மனுக்களை ஏற்றுக்கொள்ளும் சமூகங்களில் ஒன்லைன் மனுக்கள் ஒரு சிறந்த சாதனமாகக் காணப்படுகிறது.

ஒருவர் ஒன்லைன் மனுப்பகுதியை தரிசித்து தனது கருத்துக்களை பதிவிட வேண்டுமாயின் அவர் தன்னுடைய சில தனிப்பட்ட விடயங்களான பெயர், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை வழங்க வேண்டி நேரிடும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையையுடைய மனுதாரர்களின் கையொப்பங்கள் ஒன்றுதிரட்டப்பட்டதன் பின்னர் குறித்த மனுவானது அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் அல்லது நிறுவனங்கள் போன்ற பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு அது அனுப்பி வைக்கப்படும்

அநேகமான ஒன்லைன் மனுக்களை செயற்படுத்தக்கூடிய இணையதளங்கள் மக்களுக்கு அந்த பகுதிகளுக்கு உள் நுழையவும் புதிய மனுக்களை உருவாக்கவும் வாயப்பு வழங்குகிறது. சில பிரபல்யமான இணையத்தளங்களான change.org, avaaz.org, மற்றும் iPetitions.com போன்றன மனுக்களை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் வாய்ப்பு வசதிகளை வழங்குகிறது. Avaaz 2007 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இலாப நோக்கற்ற ஒரு அமைப்பாகும். இது மனித உரிமைகள், காலநிலை மாற்றம், உயிரினங்களின் உரிமைகள், ஊழல் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் வன்முறை ஒழிப்பு போன்றவற்றுக்காக உழைக்கும் ஒரு அமைப்பாகும்.

**தரவுகளை காட்சிப்படுத்தல்**

செயல்முனைவினை இன்னும் திறம்பட ஒத்துழைப்பானது அவற்றை சரியான முறையில் பகுப்பாய்வு செய்து குறிப்பிட்ட விடயங்கள் பற்றி மக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதாகும். ஆனால் சிலருக்கு சரியான முறையில் எண்ணிக்கைகளை வழங்குவது ஒரு சவால் நிறைந்த விடயமாகவே இன்னும் காணப்படுகிறது.

தகவல்களை காட்சிப்படுத்தல் என்பது தர்க்க ரீதியான ஒரு விடயத்தை அட்டவணை, graph மற்றும் படவிளக்கங்கள் போன்றவற்றுடன் நடப்பு விவகாரங்களை தெளிவாகவும் துல்லியமாகவம் தெரிவிக்கும் ஒரு புலக்காட்சி சம்மந்தமான விடயம் ஆகும். மிகவும் சக்தி வாய்ந்த தகவல் காட்சிப்படுத்தலானது எப்பொழுதும் மக்களை கவரக்கூடிய, பிரச்சார முறையினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தெளிவில்லாத மயக்க நிலையிலுள்ள அறிக்கைகளை தகவல் திரட்டு ஒன்றின் மூலம் மனிதர்களுக்கு வழங்குவதே தரவு காட்சிப்படுத்தலின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த முறையானது சரியாக திட்டமிட்டபடி காணப்படுமிடத்து அந்த தரவுகளின் அர்த்தங்களும் அதனால் மக்களுக்கு முன்வைக்க முனையும் விடயங்களும் சரியான ஒழுங்கில் சென்றடையும் என்பது திடம்.

“ஒன்றில் எமக்கு முழுமையாகவோ அல்லது குறைவாகவோ கிடைத்திருக்கலாம், தகவல்களின் தரத்தில்தான் அதன் விடயம் அமைந்துள்ளது, மற்றும் நாம் அவற்றை மற்றவர்களுடன் தொடர்பாடல் மேறகொள்ளும் முறையில்தான் அதன் வெற்றி அமைந்துள்ளது. செயற்பாட்டாளரான நாம் மற்றவர்களின் அறுபது பக்க அறிக்கைகள் வெளிவரும் வரை காத்திருக்க முடியாது. மற்றவர்களைக் கவர வேண்டுமானால் நாம் அவற்றை சரியான முறையில் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தும் அதேவேளை ஆதாரங்களுடனும் தெரியப்படுத்த வேண்டும். நேரத்துக்கேற்ற, நன்றாக தயார்படுத்தப்பட்ட தகவல்கள் செயல் முனைவுக்கு சிறந்ததொரு சொத்தாகும் ”

VISUALISING INFORMATION FOR ADVOCACY, 2013
BOOK BY TACTICAL TECHNOLOGY COLLECTIVE

## இலங்கையில் டிஜிட்டல் செயல்முனைவு

பல ஆண்டு காலமாக இலங்கையானது அரசியல், சமூக மற்றும் சூழல் சார்ந்த செயல்முனைவில் ஈடுபட்டு வந்திருக்கிறது. கடந்த சில காலமாக இலங்கையிலுள்ள சில சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் போன்றோர் அரசியல் உரிமைகள் மற்றும் சமூக நீதி என்பவற்றை மையப்படுத்தி வெப்தளங்கள், blogs, ஒன்லைன் மனுக்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் ஏனைய டிஜிட்டல் சாதனங்கள் போன்றனவற்றை பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஐக்கிய அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆய்வு நிறுவனமான Freedom House இனது As Freedom on the Net 2018 report on Sri Lanka அறிக்கையின்படி, “இலங்கையில் வலுவான டிஜிட்டல் செய்ற்பாடுகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு வழியை வெப் தளங்கள் வழங்குகின்றன. இதில் அநேகமான பிரச்சாரங்கள் பொருத்தமானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் காணப்படுகிறது. பலர் குறுகிய கால நிகழ்வுகள், அல்லது முடங்கிய அரசியல் செயற்பாடுகளுக்கும் ஆளாகின்றனர், அதன் விளைவாக பல செயற்பாட்டாளர்களுக்கு தாம் எண்ணிய விடயங்கள் மற்றும் நீண்ட கால இருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் இக்குறிப்பிட்ட அறிக்கைக் காலத்தில் (2017-2018) பல சமூக ஊடகங்கள் தமது பிரச்சாரங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகிறது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையில் டிஜிட்டல் செயன்முனைவானது பொதுவாக பகிரப்பட்ட சதுரக்குறியீடுகள் மற்றும் ஏனைய குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றில் சிலவற்றை இங்கு நாம் காணலாம்.

- #IVotedSL எனப்படும் குறியீடு மக்களை பிரதான இரண்டு தேர்தல்களில் பங்குபற்ற உற்சாகப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும். உதாரணமாக ஜனவரி 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2015 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 2018 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது இது சற்று புதுப்பிக்கப்பட்டு #LGPollSL ஆக மாற்றம்பெற்று இலங்கையில் முதற்தடவையாக வாக்காளர்கள் தங்களது புகைப்படங்களை பதிவேற்றம் செய்து பகிரக்கூடிய வகையில் அமைந்தது (அவர்களது விரல் அடையாளத்தைக் காட்டி வாக்களித்ததை உறுதிப்படுத்துவது போன்று).

- 2016 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் (Right to Information Act) ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட போது, இது 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரச்சாரம் ஒன்றினை நினைவு படுத்தியதாக அமைந்தது. அக்காலத்தில் காணப்பட்ட அதிகளவான பிரச்சார நடவடிக்கைகள் இணையதள வழிமுறையற்றதாகக் காணப்பட்டிருந்தாலும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அந்த விடயத்தை மீண்டும் வெளிக்கொண்டு வந்து பிரதான மற்றும் சமூக ஊடகங்களின் உதவியுடன் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் மீண்டும் ஆரம்பித்தனர். அதற்காக பயன்படுத்திய பொதுவான குறியீடாக #RTIsl காணப்பட்டது.

- #DisappearedSL எனும் குறியீட்டை மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகக் குழுக்களும் உபயோகித்து இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு நீதியும் நியாயமும் வேண்டி பிரச்சாரங்கள் மேற்கொள்வதற்குப் பயன்படுத்தினர். சர்வதேச மன்னிப்புச் சபையும் (Amnesty International) #StillNoAnswers எனும் குறியீட்டைப் பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

- இன மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல செயற்பாட்டாளர்கள் இணையதள மற்றும் இணையதளமற்ற முறையிலான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர், மேலும் இதுவே இவ்வகையான செயற்பாடுகளின் முக்கிய நோக்கமும் ஆகும்.

- பொதுப் போக்குவரத்து மற்றும் வேலைத்தளங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் எனும் பிரச்சாரத்துக்காக வழங்கப்படும் தரவுகள் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. இதன் எதிரொலியாக இணையதள மற்றும் இணையதள முறையற்ற பல பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA – United Nations population Fund) தங்களது உள்ளுர் அமைப்புக்களுடன் சேர்ந்து #DoesSheTravelSafe எனும் பிரச்சார நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. 2019 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதி முதல் Oxfam Sri Lanka தமது பங்குதாரர்களுடன் இணைந்து சூழேவழுஆெலடீரள மற்றும் #CreateAScene போன்ற சமூக ஊடக விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை ஆரம்பித்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய பிரச்சாரங்களை ஆரம்பித்தது.

டிஜிட்டல் செயல்முனைவில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு விடயங்களும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று குறிப்பிட முடியாது. உதாரணத்துக்கு கூறுமிடத்து, இலங்கையில் அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தத்துக்காக உருவாக்கப்பட்ட #NewConstSL ஆனது அச்சீர்திருத்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக இடையில் கைவிடப்பட்டது.

சில வேளைகளில் டிஜிட்டல் செயல்முனைவுகளானது சில கட்சிகளினது “செயற்பாடுகளை தகர்த்தெறிபவைகளாகவும்” அமையலாம். உதாரணமாக 2017-2018 ஆம் ஆண்டுகளில் ஜனநாயக ஊடகங்களான Groundviews, Vikalpa மற்றும் Maatram போன்றவற்றால் ஆரம்பிக்கபட்ட #Celebrate150years குறியீடானது இலங்கையில் இன்னும் எல்லாவற்றையும் இழந்த நிலையில் காணப்படும் மலை நாட்டு தமிழ் சமுதாயத்தினரது உரிமைகளை ஞாபகமூட்டும் நோக்கிலும் இலங்கையின் தேயிலைத் துறையின் 150 ஆவது ஆண்டினை நினைவுகூருவதற்குமாகவும் உருவாக்கபட்ட குறியீடுகளாகும். (சில நேரம் இவ்வாறு உருவாக்கப்பட்ட குறியீடுகளை அதனை எதிரப்பவர்கள் களவாடி மாற்று வழியிலும் பயன்படுத்தி தமது எதிர்ப்பை வெளிக்காட்டலாம்)

இன்னும் சில உதாரணங்களை கீழே கொடுக்கப்பட்ட சம்பவக் கற்கைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.



## டிஜிட்டல் செயல்முனைவு பற்றிய விமர்சனங்கள்.

டிஜிட்டல் செயல்முனைவு பற்றிய விமர்சனங்கள் உண்மையில் பெறுமதிமிக்கவைகளாகும்.

சமூக ஊடக அரசியல் செயற்பாடுகளானது அடுத்தவர் இடத்தில் தன்னை வைத்துப் பார்ப்பதை விட உணர்ச்சியற்ற ஒரு நிலையை தோற்றுவிக்கிறது. உண்மையான சமூக மாற்றம் என்பது பகிரப்படும் விடயங்களை like அல்லது share பண்ணுவதை விட மேலானது ஆகும். இன்னுமொரு விமர்சனத்தில் குறிப்பிடுகையில் இது ஒரு கிளிக்கில் ஒரு கும்பலை வாடகைக்கு விடுவது போல் “one-click rent-a-mob” அதாவது உண்மையான அரசியல் கலந்துரையாடல்களுக்குப் பதிலாக தவறான தகவல் பரிமாற்றங்கள் மற்றும் துண்டிக்கப்பட்ட உடனடி தொழில்நுட்ப தொடர்பே இதுவாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இன்னுமொரு விமர்சனத்தில் சமூக ஊடகங்களில் கிளிக் செய்வது மிகவும் இலகுவானதொரு காரியமாகக் காணப்பட்டாலும் ஒன்லைனில் இருந்து விலகியிருப்பதுவும் மிகவும் இலகுவான காரியமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் மற்றுமொரு விமர்சனத்தில் குறிப்பிடுகையில் இணைய வாயிலான மனுக்கள் சிக்கலான நெறிமுறைக் கேள்விகளை மேலும் மிகைப்படுத்தி விமர்சனப்படுத்தும் ஒரு விடயம் எனக் குறிப்ப-ிடப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கையில், சமூக ஊடகங்களும் வெப் தளங்களும் செயற்பாட்டாளர்களுக்கான மேலதிக சாதனங்களே தவிர இவை அவற்றோடு மாத்திரம் முடிவுறும் ஒரு விடயமல்ல எனக் குறிப்பிடுகின்றனர். ஆம் இவை முற்று முழுதாக சரியானதொரு சாதனம் அல்ல, ஆனாலும் இவை சரியான முறையில் நெறிமுறை தவறாமல் பயன்படுத்துகையில் அவை முழுமையான பலனை அடையக்கூடியவை ஆகும்.

அமெரிக்காவிலுள்ள சில தரவு பகுப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் நோக்கச் செயற்பாடுகள் தன்னார்வச் செயற்பாடுகளை இரண்டு மடங்காக்கவும், அதே போன்று நன்கொடைகளை இரட்டிப்பாக்கவும், மற்றவர்களை ஊக்குவிப்பதை நான்கு மடங்காகவும் காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரையில் இலங்கையில் மூன்றில் ஒரு பங்கினரே இணையதளத்தைப் பாவிக்கின்றனர். செயல்முனைவானது இணையம் மற்றும் இணையமற்ற இரு முறையிலும் இணைந்து காணப்பட வேண்டும்.

## டிஜிட்டல் செயல்முனைவின் நெறிமுறைகள்.

இணையதள மற்றும் இணையதளமற்ற முறையிலான செயல்முனைவானது பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறைகள் தவறாத வழியில் அமைய வேண்டும். நல்ல நோக்கங்களை மட்டும் கொண்டிருப்பது சந்தேகத்துக்குரிய மற்றும் சுய சேவை நடைமுறைகளை நாடுவதைத் தடுக்கும் என்பதை ஒருபோதும் நியாயப்படுத்தாது.

உதாரணமாக நிறுவனமொன்றினால் பாவனையாளர்களின் மின்னஞ்சல் கணக்குகள் பற்றிய விடயங்களை கையகப்படுத்திக் கொண்டு பின்னர் அவை இலாப நோக்கில் விற்பனை செய்யப்படுவதாக சில இணையவழி நிறுவனங்களுக்கு எதிராக மனுக்கள் கொண்டுவரப்பட்டன. சில இணையவழி நிதி சேகரிக்கும் பிரச்சார நிறுவனங்கள் நிதியினைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு தங்களது நிறுவன முகாமைத்துவ செலவுக்குப் பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள் தங்களது சொந்த அரசியல் கருத்துக்களுக்கும் கட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். ஆனாலும் பொதுமக்கள் நலனுக்காக இவற்றையும் தாண்டி ஒருபடி மேல்நின்று இயங்குவது மிக முக்கியமானதாகும். அரசியல் கட்சிகளோ அல்லது அக்கட்சி சார்ந்தவர்களோ தங்களது சுய தேவைகளுக்காக சமூக செயற்பாடுகளின் மேல் தாக்கம் செலுத்துவதானது ஒரு நெறிமுறை தவறிய விடயமாகும். அதே போன்று பொது விடயங்களுக்கு செயற்படுவதானது சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது வெறுக்கத்தக்க பேச்சுக்களைப் பயன்பத்துவது என்று பொருளாகாது.

> "தரநிர்ணயப்படுத்தப்பட்ட ஒழுக்க விழுமியங்களுக்கேற்ப இணையவழி செயல்முனைவுகள் அதன் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். அதன் நோக்கத்தை மறந்து "சமூக ஊடக போருக்கு" முன் நிற்பதானது அதன் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கும் பரிந்துரைகளுக்கு ஒரு சவாலாகும்.
>
> **ETHICS AND SOCIETY BLOG BY FORDHAM UNIVERSITY**

## செயல்முனைவு ஒரு தொடர் செயற்பாடாக

இறுதியாக நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், அதாவது செயற்பாட்டாளர்களின் இலக்குகள் முடிவுறும் ஒரு விடயம் அல்ல: இன்னும் அதிகம் அதிகம் செயற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் அவர்களுக்கு காணப்படுகிறது. செயல்முனைவானது நீண்ட கால நடவடிக்கைகளுக்காக நிலைத்த தன்மையான, உறுதியான மற்றும் திறன் மிக்கவையாகக் காணப்பட வேண்டும்.

மனித உரிமைகள், சமூக நீதி மற்றும் சுற்றுப்புறச் சூழல் போன்றவை நன்கு பிரபல்யமானதென அறியப்பட்ட விடயங்களாக இருப்பதைப் போலவே சில பிரச்சாரங்கள், கொள்கைகள், சட்டங்கள் அல்லது செயற்பாடுகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சுருக்கமாக வரையறுக்கப்பட்ட செயற்பாட்டாளர்களின் கோரிக்கைகள், சர்ச்சைக்குரிய சட்டமொன்றை இடைநிறுத்துதல் அல்லது சர்ச்சைக்குரிய சட்டமொன்றை மீளப்பெறுதல் போன்றவை – புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த நிலக்கரியை நம்பியிருப்பதைப் போன்ற கடினமான சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுப்பதைவிட இலகுவானதாகும்.

இது டிஜிட்டல் செயல்முனைவிற்கும் பொருந்தும் ஒரு விடயமாகும். செயற்பாட்டாளர்களின் வெற்றியை மதிப்பளித்து கொண்டாடும் அதேவேளை, செயற்பாட்டாளர்கள் சமூக. அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் அளவிற்கு ஒருமித்துக் காணப்பட வேண்டும். சில சீர்திருத்தங்களுக்கு பல காலமாக காத்திருக்க வேண்டியும் வரலாம், ஆகவே செயற்பாட்டாளர்கள் இந்த விடயங்கள் பற்றி நன்கு விளங்கி அறிந்து ஒழுக வேண்டும்.

அமெரிக்க எழுத்தாளரான Malcolm Gladwell கருத்துத் தெரிவிக்கையில் "செயல் முனைவானது நிலைமைக்கு சவால் விடும் நிலைமையாகும் - இவை ஆழமாக வேரூன்றி பிரச்சினைகளைத் தாக்கும் - இதயத்தின் மயக்கத்துக்கு அல்ல" எனக் குறிப்பிடுகிறார்.

## சம்பவக் கற்கைகள்

### சம்பவக் கற்கை 01: பிரித்தானிய பேரரசில் அடிமை வியாபாரத்தைத் தடுத்தல்

பழம்பெரும் பிரித்தானிய சமூக ஆர்வலர், தனவந்தர் மற்றும் சமூக நிறுவனமொன்றின் தலைவரான William Wilberforce (1759 – 1833), ஆபிரிக்க கறுப்பு இன மக்களை பிரித்தானிய கப்பல்கள் மூலம் அடிமை வியாபர முறையின் அடிப்படையில் கொண்டு வந்து மேற்கிந்தியத் தீவுகளில் விற்கப்பட்டமையை எதிர்த்து நின்றார்.
ஒரு செயற்பாட்டாளரான அவர் முதலில் சமூகத்தில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நன்றாக அவதானித்தார். தனது கண்களினூடாக இம்மக்கள் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டு விற்கப்படுவதை அவதானித்தார். இவற்றை அவதானித்த அவர் சொல்லாலும் எழுத்து மூலமும் இத்தகைய விடயங்களை தரவு, உண்மையின் அடிப்படையில் பிரித்தானியாவுக்கு தெரியப்படுத்தினார். தனது அயராத உழைப்பின் காரணமாக சாதாரண அடிமட்ட மக்கள் முதல் உயரிய மக்கள் வரையான சுமார் 300,000 பேர்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டு அடிமை வியாபரத்தை இல்லாமல் செய்ய மகஜர் ஒன்றினை சமர்ப்பித்தார். இருந்தாலும் இந்த விடயங்கள் சாதாரண பாமர மக்களால் அக்காலத்தில் நன்றாக புரிந்து கொள்ளப்படவில்லை.

முன்னேற்ற கிறிஸ்தவ தலைவர்கள், தேவாலயங்கள் ஊடாக தனது தகவல்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தினார். இதையொரு தனிப்பிரச்சினையாக பாராளுமன்றம் வரையும் கொண்டு சென்றார். பாவனையாளர் எதிர்ப்பு நடவடிக்கையொன்றினை அடிமைத்தனம் மூலம் மக்களைப் பயன்படுத்தும் சீனித் தொழிற்சாலை ஒன்றுக்கு எதிராகவும் மேற்கொண்டார்.

Wilberforce 20 வருட காலமாக இந்தப் பிரச்சாரத்தை தொடர்ந்து சென்றதன் விளைவாக பிரித்தானிய பாராளுமன்றத்தால் ஒழிப்பு மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டு அடிமை வியாபாரம் தடை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வாறு நிறைவேற்றப்பட்ட மசோதா நடைமுறையில் காணப்படுகிறதா என்பதை தொடர்ந்து அவதானித்தும் வந்தார். இதன் பலனாக பிரித்தானிய பேரரசில் அடிமை வியாபாரம் முற்றாக ஒழிக்கப்பட்டதை இவர் அறிந்து கொண்டார்.

2006 ஆம் ஆண்டின் பிரித்தானிய–அமெரிக்க சுயசரிதைத் திரைக்காவியமான Michael Apted இனால் இயக்கப்பட்ட Amazing Grace இல் William Wilberforce இனது வரலாறு சித்தரிக்கப்பட்டது.

200 வருடங்களுக்கு முன்பே William Wilberforce இனால் பயன்படுத்தப்பட்ட மூலோபாயங்கள் இக்காலத்துக்கும் பொருந்துபவையாகவே காணப்படுகிறது.

Read more: https://www.christianitytoday.com/history/people/activists/william-wilberforce.html

## சம்பவக் கற்கை 02: கருமை அழகானதே (DARK IS BEAUTIFUL)

இலங்கை உட்பட தெற்காசியாவின் பல பகுதிகளில் காணப்படும் நம்பிக்கைகளில் ஒன்றுதான் மக்களின் தோலின் அழகு, நிறத்தை அடிப்படையாக வைத்து அவர்களை அழகானவர்கள் என சித்தரிப்பது ஆகும். இந்தியா பிரித்தானியாவின் ஆளுகைக்கு கீழ் இருந்த காலப்பகுதியில் கறுப்பு நிறத்தவர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்னடைந்தவர்களாகக் காணப்பட்டனர். அதே காலணித்துவ கொள்கையான "நிறம்" பிரித்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்பும் சில காலம் தொடர்ந்து காணப்பட்டது.

அழகு நிலை மற்றும் நிறம் போன்ற விடயங்களால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படும் ஒரு கூட்டமாகக் காணப்படுகின்றனர். இந்த நிலைமையானது அழகு சாதன உற்பத்தி நிறுவனங்களுக்கு வெண்மையாக்கும் கிறீம்கள், தோலினை வெண்மையாக்கப்பயன்படுத்தப்படும் இரசாயணங்கள், கதிரியக்க சிகிச்சைகள், மற்றும் சில நரம்பு ஊசிகள் போன்றவற்றின் ஊடாக பல மில்லியன் கணக்கான தொகைகளை வருமானமாகப் பெற வழி வகுத்துள்ளது. இவ்விடயமானது பெண்களுக்கு பல விதமான சுகாதார சீர்கேடுகளையும், நோய்களையும் உருவாக்கும் காரணியாகவும் அமைகிறது.

"கருமை அழகானதே – Dark is Beautiful" எனும் பிரச்சாரமானது 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நிறம் சம்மந்தமான மக்களின் தப்பபிப்பிராயத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது நிறம், வடிவம் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஊடகங்கள் சமூகத்துக்கு கொடுக்கும் தப்பான எண்ணப்பாட்டை களைந்து மில்லியன் கணக்காக மக்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

Women of Worth (WOW) எனும் நிறுவனத்தைச் சேர்ந்த கவிதா இம்மானுவேல் என்பவராலே இந்த விழிப்புணர்வுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொலிவூட் திரையுலக நட்சத்திரமான நந்திதா தாஸ் என்வராலும் இவரது திட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்டது. ஊடக அறிவு, பாடசாலை மட்டமான நிகழ்ச்சித்திட்டங்கள், சுய மதிப்பு போன்ற விடயங்களும் இப்பிரச்சாரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தோலின் நிறம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் பற்றிய அநுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக blog ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. விடயங்களை மக்களிடத்தே கொண்டு செல்வதற்காக சமூக வலைத்தளங்களும் பாவிக்கப்பட்டிருந்தன.

இது ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளில் இந்த விழிப்புணர்வுத்திட்டமானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு அவை பல நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவின் விளம்பர தரநிலைச் சபை இவ்வாறான கறுப்பு தோல்களைக் கொண்ட மக்களை காட்டும் விளம்பரத்தினூடாக வியாபாரத்தை முன்னேற்ற முனையும் விளம்பரங்களைத் தடைசெய்தது. எவ்வாறிருப்பினும் அவ்வாறான சில தயாரிப்புகள் இன்னும் சந்தையில் விற்பனைக்குக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் தற்போது இந்நிலை பற்றி புரிந்து கொண்டிருப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பாகுபாடுகளை நாம் முற்றாக களைந்து புதிய சந்ததியினருக்கு இந்தியாவில் மாத்திரமன்றி முழு உலகிலும் நல்லதொரு சூழலை உருவாக்கலாம் என இம்மானுவேல் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

Read more: http://www.darkisbeautiful.in/
https://thewire.in/business/skin-lightening-industry

## சம்பவக் கற்கை 03: **HASHTAG GENERATION**

Hashtag Generation எனப்படுவது இளைஞர்களைக் கொண்ட மற்றும் இளைஞர்களுக்கான ஒரு அமைப்பாகும். 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனமானது «இலங்கையில் காணப்படும் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளியை நிரப்பும் நோக்கில் செயற்படும் ஒரு அமைப்பாகும».

சமூக ஊடகங்களின் மூலமே சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என எண்ணும் இந்நிறுவனம் புதுமையான, இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய, இளைஞர்களுக்கு விளங்க கூடிய வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் இணையவழியற்ற பல விடயங்களையும் செயற்படுத்த தொடங்கியது.

Hashtag Generation ஆனது எப்பொழுதும் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் தங்களது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்லும் ஒரு வேறுபட்ட நிறுவனமாகும். படங்கள். வரைபுகள் மூலம் பொதுத் தொடர்பாடல்களை மேற்கொண்டும் வருகிறது. எப்பொழுதும் முன்னணிச் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் இந்நிறுவனம் இளைஞர்களையும் அவர்களது பங்குபற்றுதலையும் எப்போதும் முன்னிறுத்தியே தேசிய விவாதங்கள் போன்ற வேலைத்திட்டங்களைக் கொண்டு செல்கின்றனர். நிலைமாறுகால நீதி, சமூக இணக்கப்பாடு, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (#HerSafeSpace) பாலியல் ரீதியான சிறுபான்மையினர்களது உரிமைகள், பெண்களின் அரசியல் பங்குபற்றுதல்களை ஊக்கப்படுத்தல் (குறிப்பாக பெண்களின் 25% பங்குபற்றுதல் எனும் சட்ட மாற்றத்தின் பிற்பாடான காலத்தில்) போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

Read more: https://www.facebook.com/hashtaggenerationsl/

## சம்பவக் கற்கை 04 : **BAKAMOONO.LK**

வித்தியாசங்களை மதித்தல், சுயமரியாதை போன்ற விடயங்களை மேம்படுத்துவதை நோக்ககாகக் கொண்டு Bakamoono.lk தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அவர்கள் தங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "உறவுகள், பால்நிலை, இனப்பெருக்க சுகாதாரம், HIV போன்ற விடயங்களில் புத்திசாலித்தனமாகவும் விவேகமாக இருத்தலே நாம் யாரென்பதை விளக்கும் விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர்".

The Grassrooted Trust, Positive Hopes Alliance, Lanka Plus, National Union of Seafarers in Sri Lanka (NUSS), National Union of Metal & Migrant Workers in Sri Lanka and volunteers போன்ற நிறுவனங்களின் ஒன்றிணைந்த செயற்பாடாகவே bakamoono.lk செயற்படுகிறது. இலங்கையிலுள்ள பல பாலினத்தவர்கள், சட்ட மற்றும் வைத்திய துறையிலுள்ளவர்களையும் இணைத்தே இந்நிறுவனம் தமது செயற்பாடுகளைக் கொண்டு செல்கிறது.

bakamoono.lk இனது முதலாவது வேலைத்திட்டமானது HIV பற்றிய விடயங்களான அவை எவ்வாறு, எந்நேரத்தில், எம்முறையில் பரவுகின்றன போன்ற விடயங்களை பிரஜைகளுக்கு சரியான முறையில் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. பாலியல் மற்றும் உறவு முறைகள் பற்றிய விடயங்களும் உள்ளடக்கபட்டிப்பிடிருந்தன. இவற்றில் பால்நிலை, இணைய சுரண்டல், வன்முறைகளைத் தடுக்க அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படடும் சேவைகள் போன்றவையும் அடங்கும்.

இலங்கையர் மத்தியில் காணப்படும் கேட்கப்படாத கேள்விகளுக்கு விஞ்ஞான அடிப்படையில் பதிலளிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது இந்நிறுவனம் ஆகும்.

Read more: http://www.bakamoono.lk/en

## சம்பவக் கற்கை 05: **#MeToo**

மிகவும் பிரபல்யமான சமூக ஊடகப் பிரச்சாரத்துக்கு உதாரணமாக “MeToo” விழிப்புணர்வுத் திட்டமானது பாலியல் வன்முறைகள், துன்புறுத்தல்கள் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் பாரிய பங்களிப்பை செலுத்துகிறது. சிறியதொரு சமூகவலைத்தள பதிவானது எவ்வாறு பெரியதொரு விடயமாக மாற்றம்பெற்று சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி உலக விடயமாக மாறியது என்பதை விளக்குவதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

அமெரிக்க நடிகையும், தயாரிப்பாளரும், செயற்பாட்டாளரும், பாடகருமான அலிஸ்ஸா மிலானோ (Alyssa Milano) என்பவர் twitter இல் ஒரு பதிவொன்றை பதிவிட்டிருந்தார். “நீங்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு அல்லது வன்முறைக்குட்படுத்தப்பட்டிருந்தால் எனக்கு தெரியப்படுத்துங்கள்” எனபதே அந்த பதில் ஆகும்.

இதன் பதில்கள் மிகவும் வேகமாக அமைந்தது. 24 மணித்தியாலங்களுக்குள் அவரது பதிவானது ஆயிரக்கணக்கான பதில்களையும் மீள் பதிப்புக்களையும் உருவாக்கியது. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பதிவிட்டனர். இவர் ஒருபோதும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு #MeToo பற்றிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனாலும் மக்கள் இதை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் விதத்தைக் கண்டு அவர் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார்.

இந்த MeToo இயக்கமானது அமெரிக்காவின் செயற்பாட்டாளரான Tarana Burke என்பவரால் 2006 ஆம் ஆண்டு நியூ யோர்க நகரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சமூகத்தில் இடம்பெறும் பாலியல் ரீதியான வன்முறைகளையும் இம்சைகளையும் ஒழிப்பதற்காக MeToo எனும் வசனத்தை இவர் பயன்படுத்தினார். அதன் பிறகு 2017 ஆம் ஆண்டு ஹொலிவூட் தயாரிப்பாளரான Hervey Weinstein என்பவர் இந்த MeToo இனை சதுரக்குறியீட்டினையும் இணைந்து #MeToo என்றமைத்து Milano இனது twitter பதிவுக்கு மேலும் வலுச் சேர்த்தார்.

இலங்கையிலும் கூட MeToo ஆனது பல சமூக ஊடகங்களினால் கவர்ந்தெடுக்கப்பட்டு பல நபர்கள் தங்களது சொந்த அனுபவங்களை இதில் பகிர்ந்து கொள்ள தொடங்கியுள்ளனர்.

(நீங்கள் இலங்கையில் வாழும் ஒரு நபராக இருந்து இவ்வகையான பாலியல் தொல்லைகளுக்கோ அல்லது இம்சைகளுக்கோ ஆளாக்கப்பட்டிருந்து உங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள விரும்பினால் Women In Neeed இனை அவர்களது இணையதளம் மூலமாகவோ அல்லது தொலைபேசி இலக்கமான 0114 718585 இன் ஊடாக தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்).

Read more: https://metoomvmt.org/about/
https://www.vox.com/identities/2018/10/9/17933746/me-too-movement-metoo-brett-kavanaugh-weinstein
https://www.bbc.com/news/world-asia-india-47025662

## கலந்துரையாடல் விடயங்கள்

இந்த விடயங்கள் பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ள பின்வரும் கலந்துரையாடல் விடயங்கள் உங்களுக்குப் பயனளிக்கும்.

- வரலாற்றில் மகாத்மா காந்தி சிறந்த அரசியல் செயற்பாட்டாளராக காணப்பட்டதற்கான காரணங்கள் யாவை? அவரது வன்முறையற்ற அணுகுமுறைகள் மற்றவர்களை குறிப்பாக மார்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றோரை எவ்வாறு கவர்ந்தது, இதற்கான காரணம் என்ன?

- இலங்கையில் இணையதளமற்ற செயல்முனைவு முக்கியமானது என்பதற்கான காரணம் என்ன? சமூக ஊடகங்களில் ஏன் எல்லா வகையான செயல்முனைவுகளும் பரிந்துரைகளும் சாத்தியமாவதில்லை?

- Memes, hashtag மற்றும் இணையவழி மனுக்கள் போன்றவற்றறைத் தவிர வேறேதாவது சாதனங்கள் அல்லது மூலோபாய வழிமுறைகள் டிஜிட்டல் செயல்முனைவில் பயன்படுத்தபடலாமா?

- கடந்த காலங்களில் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்திய டிஜிட்டல் செயல்முனைவுக்கு சில உதாரணங்களைக் குறிப்பிடவும்

- சமூக மாற்றத்துக்காக இணைய வழி மற்றும் இணையவழி அற்ற முறைகளைப் பயன்படுத்தும் சிவில் சமூகக் குழுக்கள் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா?

- நீங்கள் எப்போதாவது இணையவழி மனுக்களில் கையயொப்பம் இட்டுள்ளீர்களா? அவ்வாறாயின்இ அவை பற்றி மேலதிக விடயங்களை உங்களது குழுக்களுடன் கலந்துரையாடவும்.

- செய்பவர் திருப்தியடையும் நிலையைவிட இதனால் ஏற்படுத்தப்படும் விளைவு மிகவும் குறைவானதே- இதுவே டிஜிட்டல் செயல்முனைவுக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனம் ஆகும். இதுவே slacktivism என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் இதனை ஏற்றுக்கொள்கிறீர்களா? கலந்துரையாடவும்.

- மேற்கில் உருவான #MeToo இயக்கமானது உலகம் பூராகவும் பரவத் தொடங்கியது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவை பற்றி கலந்துரையாடி – குற்றமிழைத்தவரது பெயர்களையும் கூட குறிப்பிடுகிறது. #MeToo இந்தியாவில் வேகமாகப் பரவியது, ஆனால் இலங்கையில் அவ்வாறு இல்லை. இலங்கையில் இவ்வாறு வேகமாகப் பரவாததற்கான காரணம் என்னவென நீங்கள் நினைக்கிறீர்கள்?

## கற்றல் பலன்கள்

இந்தப் பாடத்திட்டத்தின் இறுதியில் நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவீர்கள்.

- செயல்முனைவு எனப்படுவது போராட்டத்தை விட மேலானது. சரியான செயற்பாட்டாளர் ஒருவர் விடயத்தை நன்கு அலசி, ஆராய்ந்து, மற்றவர்களிடம் கேட்டறிந்து பல்வேறு முறையில் அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முனைவர்.

- செயல்முனைவின் முக்கிய பாகம் ஆரோக்கியமான பொதுப் பேச்சு ஆகும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக அதிகளவாக செயல்முனைவு முறைமைகள் காணப்படுகின்றன. அச்சிடல், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றன அவற்றில் சில ஆகும்

- டிஜிட்டல் செயல்முனைவு எனப்படுவது இணைய செயல்முனைவு என்றும் கூறப்படுகிறது. இது தொழில்நுட்ப முறையினூடாகவும் இணையதள வாயிலாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்தை ஒன்றுதிரட்டும் முறையாகும்.

- ஏதாவதொரு செயல்முனைவு மிகவும் பயனுள்ளதாக வரவேண்டுமாயின் இதற்கு பல படிமுறைகளும் வழிகளும் உண்டு. அவையாவன Hashtag, memes, மற்றும் சமூக உண்மைகள் போன்றன ஆகும். இதன் விளைவாக உலகளாவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அடிமட்டங்களுக்கும் கொண்டு வரப்பட வேண்டும்.

- இரு முறைத் தகவல் பரிமாற்றங்கள் விழிப்புணர்வுச் செயற்பாட்டுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் மிகவும் முக்கியமானதாகும். எனவே செயற்பாட்டாளர்கள் இவை பற்றிய விடயங்களுடன் ஈடுபடும் மக்களுடனும் சிறந்த உறவு முறைகளைப் பேண வேண்டும்.

- இலங்கையில் சமூக, மனிதாபிமான, மற்றும் அரசியல் ரீதியான பலதரப்பட்ட சீர்திருத்தங்கள் தேவையென டிஜிட்டல் செயல்முனைவுகள் காணப்படுகின்றன. இதில் எல்லா வகையான விடயங்களும் சமமான முறையில் தேவையானதல்ல.

## மேலதிக வாசிப்புகள்

இணையத்தளத்தில் சுதந்திரம் 2018 இலங்கை அறிக்கை
https://freedomhouse.org/report/freedom-net/2018/sri-lanka

சமூக ஊடக காலத்தில் செயல் முனைவு
https://www.pewinternet.org/2018/07/11/activism-in-the-social-media-age/

செயல் முனைவும் சமூக ஊடகங்களும்: ஒரு வழிகாட்டி
https://ourdataourselves.tacticaltech.org/posts/23_guide_social_media/

Digital Activism Decoded: The New Mechanics of Change
https://www.opensocietyfoundations.org/publications/digital-activism-decoded-new-mechanics-change

The man behind Avaaz: Can we change the world, one click at a time? Ricken Patel, a young Canadian, thinks so. 1843 Magazine, May/June 2013.
https://www.1843magazine.com/content/features/robert-butler/man-behind-avaaz

Visualising Information for Advocacy, 2013 book by Tactical Technology Collective
https://visualisingadvocacy.org/

New Tactics in Human Rights website’s guide to visualization information
https://www.newtactics.org/conversation/visualizing-information-advocacy

Ethics in Online Activism: False Senses of Social Action or Effective Source of Change?
Fordham University Center for Ethics Education, 2016.
https://ethicsandsociety.org/2016/02/17/ethics-in-online-activism-false-senses-of-social-action-or-effective-source-of-change/

Was Kony 2012 Social Media Activism or Mere Slacktivism?
Media Ethics Initiative
https://mediaethicsinitiative.org/2019/02/27/the-ethics-of-online-activism/